# தமிழிலக்கிய அறபுச்சொல் அகராதி

டாக்டர். எம்.எம். உவைஸ்

பதிப்புத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

# தமிழ் இலக்கிய
# அறபுச் சொல் அகராதி

அறிஞர் ம். மு. உவைசு

பதிப்புத்துறை

மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

(c) பதிப்புத்துறை

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

மதுரை - 625 021.

பதிப்பு எண் : 72 விலை ரூ. 20

பதிப்பு விவரங்கள்
( Bibliographical Data )

1. நூலின் பெயர் ( Title of the Book ) : தமிழ் இலக்கிய அறபுச்சொல் அகராதி ( Dictionary of Arabic Words in Tamil Literature )

2. நூலாசிரியர் ( Author ) : அறிஞர் ம. மு. உவைசு, எம்.ஏ., பிஎச்.டி., ( Dr. M. M. Uwise, M.A., Ph.D., Professor of Islamic Tamil Literature, Madurai Kamaraj University ) பேராசிரியர், இசுலாமியத் தமிழ் இலக்கியத் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

3. பதிப்பு

அ) இடம் : மதுரை காமராசர் பல்கலைக்கழகம் Madurai Kamaraj University, Madurai - 625 021, Tamil Nadu.

ஆ) பதிப்பித்தோர் : பதிப்புத் துறை மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மதுரை - 625 021.

இ) ஆண்டு : 1983 ( முதற் பதிப்பு )

4. மொத்தப் பக்கங்கள் : 28 + 264

5. பொருள் : அகராதி

அச்சும் அமைப்பும் : திரீயெம் பிரிண்டர்சு, சென்னை.

# FOREWORD

**Prof. J. RAMACHANDRAN,** M.A., A.M., *(Chicago)*
Vice-Chancellor,
Madurai Kamaraj University,
MADURAI - 625 021,

4-2-1984

I am happy that Dr. M. M. Uwise, Professor of Islamic Tamil Literature, Madurai Kamaraj University, Madurai, has written one more book, this time a 'Dictionary of Arabic Words in Tamil Literature'. Besides, he has in an inimitable style compiled Arabic words as they appear in Tamil, giving at the same time grammatical connotations. The Arabic words given in Arabic script and giving of reference to context in literature with chapter number has made the dictionary purposeful and useful for ready reference. A scholar of repute as he is, no wonder his interest in the Arabic literature vis-a-vis Tamil has enabled him to make this literary contribution as to be of immense help and benefit to scholars and students alike in this field. Much hard work had gone into the preparation of this work which to say the least is not only worthy of a devoted teacher of great scholarship but also one of permanent value for generations of academic community. While appreciating his sincerity and steadfastness in whatever work he undertook, I compliment him for this yet one more worthy literary work which needless to state will take a legitimate and worthy place among the works of this specialised field of Arabic and Tamil Literature.

—J. RAMACHANDRAN

'தமிழண்ணல்'
டாக்டர் இராம. பெரியகருப்பன்,
தமிழியல் துறைத் தலைவர்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 21.

# அணிந்துரை

தமிழில் இலக்கிய வளம் பல்வேறு சமயங்களிலும் கிளைவிட்டு நிற்கின்றது. இதற்குச் சமயங்களின் செல்வாக்குக் காரணமா? அல்லது தமிழின் ஈர்ப்பாற்றல் காரணமா? என்பது சிந்தித்தற் குரியது.

சமயத்தின் செல்வாக்குக் காரணமாயின் பல்வேறு மொழிகளிலும் அவ்வச் சமய இலக்கியங்கள் பெருமளவில் தோன்றி இருத்தல் வேண்டும். பிற மொழிகளிலும் கூடுதலாகத் தமிழில் மட்டும் பல் வேறு சமய இலக்கியங்கள் பல்கிப் பெருகி இருப்பதற்குக் காரணம் தமிழின் ஈர்ப்பாற்றல் என்றே கொள்ள வேண்டும். தமிழில், பன் னெடுங் காலமாகத் தொடர்ந்து வந்த இலக்கிய வளம் பல்வேறு காலக்கட்டங்களில் சமய இலக்கிய வளர்ச்சிகளுக்குக் கால்கோ ளிட்டுள்ளது.

இசுலாமிய இலக்கிய வளர்ச்சியைக் கணித்தறியும் பொழுது, அஃதொன்றே தனிஒரு இலக்கிய வரலாற்றிற்கு வேண்டிய அளவு பல்வேறு கிளைகளாகப் பல்கி இருக்கிறது. இவ்விலக்கியப் பகுதிகள் சில அவ்வப்போது மாணவர்களுக்குப் பாடமாக வைக்கப்படு கின்றன. இலக்கிய ஒப்பீட்டறிஞர்கள் இசுலாமிய இலக்கியங் களைக் கற்க விழைகின்றனர். இச்சமயம் சார்ந்தார் தாமும் இவ் விலக்கியச் செல்வங்களைப் பயன்படுத்திக் கொள்ள விழைகின்றனர். ஆயின் இவர்களனைவருக்கும் அந்நூல்களைப் பயிலுங்கால் ஏற் படும் தடையொன்றுளது. பாடல்களிடையே இடம்பெறும் அறபுச் சொற்கள் எளிதில் பொருள் விளங்கிக் கொள்ள இயலாமையால் தொடர்ந்து படிப்பதற்குத் தடைக்கற்களாக அமைகின்றன. இந் நூல்களைப் பதிப்பிப்போரும் பொருள் விளங்காச் சொற்கள் பல வற்றை அப்படியே விட்டுவிடுகின்றனர். உரையாசிரியர்கள் நழுவி விடும் இடங்களும் உள,

இந்நிலையில் இசுலாமியத் தமிழ் இலக்கியங்களில் காணப்படும் அறபுச் சொற்களை எல்லாம் தொகுத்து அவற்றை அகர வரிசைப் படுத்தி அவற்றிற்குரிய பொருளையும், பொருள் விளக்கத்தையும் தருவோமாயின் அவ்வகராதி இருளிடைக் கைவிளக்கு என இவ் விலக்கியங்களைக் கற்போருக்குப் பெரிதும் பயன்படும் எனக் கருதப் பெற்றது. இதனை ஓர் ஆய்வுத் திட்டமாக எடுத்துக்கொண்டு முழுமைபெற்ற நூல் வடிவமாக ஆக்கிய பெருமை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் இசுலாமியத் தமிழிலக்கியத் துறைக்குரிய தாகும். டாக்டர் ம. மு. உவைசு அவர்கள் இசுலாமிய இலக்கியத் தின் ஆழமும், அகலமும் அறியக் கற்றுத் தேர்ந்தவர். அவ் விலக் கியத்தில் இளமை முதல் பயிற்சிபெற்றவர். இவ்விலக்கியங்களைக் கற்பதிலும், கற்பிப்பதிலும் தணியாத ஆர்வமும் ஈடுபாடும் கொண் டவர். தமிழில் அறபுச் சொற்கள் எடுத்தாளப்படும் முறைகளையும், நெறிகளையும் பல்கால் ஓதி உணர்ந்தவர். அத்தகைய பெருந்தகை யாளர் இவ்வகராதியினை உருவாக்கி இருப்பது இதன் நிறை பண்பு கட்கு நிகரற்ற சான்றாகும். ஆராய்ச்சித் துணைவர் டாக்டர் பீ. மு. அஜ்மல்கான் அவர்களும் அறிஞர் உவைசு அவர்களை அடி யொற்றி இசுலாமிய இலக்கியத் துறையில் பயிற்சிபெற்று வருகிறார். அன்னாரது அருந்துணையாலும் இந் நூல் செவ்வையுடன் உரு வாகி உள்ளது.

இவ்வகராதியின் அமைப்புக் குறிப்பிடத்தக்கதாகும். முதற்கண் தமிழ் இலக்கியத்தில் வரும் அறபுச் சொல் அகர வரிசைப்படி தரப் படுகிறது. அதனை அடுத்து அத்தமிழ்ச் சொல்லின் ஆங்கில ஒலி வடிவம் அமைகிறது. மூன்றாவதாக அச் சொல்லின் இலக்கண விளக்கம் குறிக்கப்படுகிறது. நான்காவதாக அதன் அறபு வடிவத்தின் ஆங்கில ஒலி வடிவமும் பின்னர் அறபு எழுத்துக்களிலேயே அதன் மூலவடிவமும் தரப்படுகின்றன. ஐந்தாவதாக அச்சொல்லின் பொருள் குறிப்பிடப்படுகிறது. இறுதியில் அச்சொல் இடம்பெறும் இசுலாமிய இலக்கிய மேற்கோள் அடி எடுத்துக் காட்டப்படுகிறது. அதனடியில் வருமிடமும் சுட்டப்பெறுகிறது. இத்தகைய நல்லமைப்புடைய அறபுத் தமிழ் அகர வரிசை ஒன்றை வெளிக்கொணர்வது மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்குப் பெருமை தருவதாகும். இசுலாமிய இலக்கியக் கல்வி வளர்ச்சிக்கு இந்நூல் பெரிதும் உதவும். இத்தகைய அடிப்படை நூல்களையும், மேற்கோள் நூல்களையும் உருவாக்குவதன் மூலம் இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவமுடியும் என்பதற்கு இந்நூல் தக்க சான்றாக அமைகிறது.

'ஏரகம்'
சதாசிவ நகர்,
மதுரை - 625 020.
20 - 12 - 1983.

தமிழண்ணல்

# நன்றியுரை

இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள திசைச் சொற்களைப் புரிந்துகொள்ள முடியாத ஒரே காரணத்தினால்தான் இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் முஸ்லிம் அல்லாதோர் மத்தியில் பெரு வழக்கைப் பெறவில்லை. ஆதலினால் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள திசைச் சொற்களான அறபு, பார்சி மொழிச் சொற்களின் கருத்துக்களை அறிந்து கொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்தும் முகமாக அத்தகைய சொற்களின் அகராதி ஒன்று இன்றியமையாததாகின்றது. மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்துறை தொடங்கப் பட்ட காலத்திலே இப்பணியின் முக்கியத்துவத்தை எமக்கு அப்போதைய துணைவேந்தராகக் கடமையாற்றிய அறிஞர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் உணர்த்தினார்கள். அத்தகைய அகராதியைத் தயாரிக்கும் பணியை மேற்கொள்ளுமாறு எம்மைப் பணித்தார்கள். அதன் பெரும் பேறே இந்த அகராதி. இவ்வகராதியைத் தயாரிப்பதில் எமக்கு எல்லா வகையிலும் உதவிபுரிந்த அறிஞர் வ. சுப. மாணிக்கம் அவர்களுக்கும் தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் ஜா. இராமச்சந்திரன் அவர்களுக்கும் எமது நன்றி.

இவ்வகராதிக்கு மெருகூட்டும் வகையில் ஓர் அரிய அணிந்துரையை வழங்கிய துணைவேந்தர் பேராசிரியர் ஜா இராமச் சந்திரன் அவர்களுக்கும், ஆக்கப் பணிகளில் ஊக்கம் அளித்துத் கொண்டிருக்கும் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவினருக்கும் எமது உளங்கனிந்த நன்றி.

இவ்வகராதியைத் தயாரிக்கும்பொழுது ஆலோசனைகள் வழங்கி எம்மை ஊக்குவித்த முன்னாள் தமிழியல்துறைத் தலைவர் அறிஞர் முத்து சண்முகம்பிள்ளை அவர்களுக்கும், தற்போதைய தமிழியல் துறைத் தலைவர் அறிஞர் இராம. பெரியகருப்பன் (தமிழண்ணல்) அவர்களுக்கும் நாம் கடமைப்பட்டுள்ளோம். அணிந்துரை வழங்கிய பேராசிரியர் தமிழண்ணல் அவர்களுக்கு நன்றி.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள அறபு, பார்சிச் சொற்களை வகைப்படுத்தி, இனம் பிரித்து, அட்டவணை தயாரித்து, ஆய்வட்டைகளை வரிசைப் படுத்தி, இவ்வகராதியை முழுமைப்படுத்துவதில் ஆக்கபூர்வமான உதவிகள் புரிந்த அறிஞர் பீ. மு. அஜ்மல்கான் அவர்களுக்கும் எமது நன்றி.

இந்நூல் உருவாக்கத்தில் எமக்கு உதவிய, பதிப்புத்துறைத் தலைவர், அறிஞர் கதிர் மகாதேவன் அவர்களையும் அவர்தம் துறையைச் சேர்ந்த அலுவலர்களையும் எம்மால் மறக்க முடியாது.

இதனை நல்லமுறையில் அச்சேற்றித்தந்த சென்னை திரீயெம் அச்சகத்தாருக்கும் அச்சுப்பிழைகளைத்திருத்தி இந்நூலின் பதிப்புக்குதவிய திருவாளர் எம். சையத் முகம்மது (ஹஸன்) அவர்களுக்கும் நன்றி.

ஆசிரியர்

# சுருக்க விளக்கம்

| | | |
|---|---|---|
| பெ. | ... | பெயர்ச் சொல் |
| இ. பெ. | ... | இயற் பெயர் |
| பெ. அ. | ... | பெயர் அடை |
| வி. | ... | வினைச் சொல் |
| வி. அ. | ... | வினை அடை |
| இட. பெ. | ... | இடப் பெயர் |
| தொ. | ... | தொடர் |
| வா. | ... | வாக்கியம் |
| பெ. பன். | ... | பெயர் பன்மை |

தமிழ் எழுத்துக்களுக்கேற்ற ஆங்கில எழுத்துக்களைக் குறிக்கும் அட்டவணை (Transliteration Table).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ | ... | a | ண் | ... | ṇ |
| ஆ | ... | ā | த் | ... | t |
| இ | ... | i | ந் | ... | n |
| ஈ | ... | ī | ப் | ... | p |
| உ | ... | u | ம் | ... | m |
| ஊ | ... | ū | ய் | ... | y |
| எ | ... | e | ர் | ... | r |
| ஏ | ... | ē | ல் | ... | l |
| ஐ | ... | ai | வ் | ... | v |
| ஒ | ... | o | ழ் | ... | l̲ |
| ஓ | ... | ō | ள் | ... | ḷ |
| ஔ | ... | au | ற் | ... | r̲ |
| ஃ | ... | k̲ | ன் | ... | n̲ |
| க் | ... | k | ஜ் | ... | j |
| ங் | ... | ṅ | ஷ் | ... | ṣ |
| ச் | ... | c | ஸ் | ... | s |
| ஞ் | ... | ň | ஹ் | ... | h |
| ட் | ... | ṭ | க்ஷ் | ... | ks |

அறபு எழுத்துக்கேற்ற ஆங்கில எழுத்துக்களைக் குறிக்கும் அட்டவணை (Transliteration Table).

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ا | ... | a | ض | ... | ḍ |
| ب | ... | b | ط | ... | ṭ |
| ت | ... | t | ظ | ... | z̲ |
| ث | ... | s | ع | ... | ʻ |
| ج | ... | j | غ | ... | g |
| ح | ... | ḥ | ف | ... | f |
| خ | ... | ḥ̱ | ق | ... | q |
| د | ... | d | ك | ... | k |
| ذ | ... | ẓ | ل | ... | l |
| ر | ... | r | م | ... | m |
| ز | ... | z | ن | ... | n |
| س | ... | s | ه | ... | h |
| ش | ... | š | و | ... | w |
| ص | ... | ş | ی | ... | y |

# முன்னுரை

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பர். அகத்தின் அழகினை முகம் பிரதிபலிப்பது போன்று மக்கள் வாழ்க்கையைப் பிரதிபலிப்பது இலக்கியம். எனவே மக்கள் பண்பாட்டியல்புகளை இலக்கியக் கண்ணாடியில் பார்க்கலாம். ஓர் இனத்தின் பண்பாடு பெரும்பாலும் அந்த இனம் பின்பற்றும் சமய நெறியையே அடிப்படையாகக் கொண்டிருக்கும். அந்த மார்க்கம் எந்த மொழியில் தோன்றி வேரூன்றி இருக்கிறதோ அந்த மொழியின் தாக்கத்தை அந்த மார்க்கத்தை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய வேற்றுமொழி இலக்கியங்கள் பிரதி பலிக்கக் காணலாம். அது அந்த இலக்கியத்தின் சிறப்பம்சமாகவும் அமைந்து விடுகின்றது.

பௌத்த மதத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழிலக்கியங்கள் தோன்றின. பௌத்த மதம் தோன்றிய மொழி பாளி. எனவே பௌத்த மத அடிப்படையிலான மணிமேகலை போன்ற தமிழ் இலக்கியங்களிலே பாளி மொழிச் சொற்கள் இடம் பெற்றுள்ளமை அவ்விலக்கியங்களின் சிறப்பியல்பாக அமைந்துள்ளது. மரக்கிளை என்னும் பொருளில் வரும் சாகை என்னும் சொல்லை இதற்கான எடுத்துக் காட்டாகக் கூறலாம்.

சமணசமயத்துக்குரிய மொழி பாகதம். எனவே சமணசமயக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய சீவகசிந்தாமணி போன்ற தமிழ் இலக்கியங்களிலே பாகத மொழியிலிருந்து வந்த சொற்கள் தமிழுருவில் காட்சி அளிப்பதைக் காணலாம். சிறுகட்டம் என்னும் பொருளில் வரும் குழு என்னும் பதத்தை ஈண்டு குறிப் பிடலாம்.

வைணவ மத அடிப்படையிலே தோன்றிய தமிழ் இலக்கியங்கள் மிகப்பல. வைணவ மதம் சங்கத மொழியுடன் நெருங்கிய தொடர் புடையது. எனவே வைணவ இலக்கியங்களுக்கு உரை கண்டவர்கள் தமது உரைநூல்களிலே ஏராளமான சங்கதச் சொற்களை உபயோகித் துள்ளனர். சில சமயங்களில் இத்தகைய வடமொழிச் சொற்களைக் கிரந்த எழுத்துக்களிலே வைணவ இலக்கியங்களின் உரைநூல்களிலே பயன்படுத்தி இருப்பதனுல் வடமொழி தெரியாத ஒருவர்க்கு இவை புரியாத மொழியில் எழுதப்பட்ட இலக்கியங்களாக மாறிவிடுகின்றன. ஏறத்தாழ சரிசமமாகவே தமிழ்ச் சொற்களுடன் சங்கதச் சொற்களும் இத்தகைய நூல்களில் கலந்துள்ளமையால் இந்த மொழிநடை மணிப்

பிரவாள நடை எனப் பெயர் பெறலாயிற்று. மணியும் பவளமும் கலந்து சேர்க்கப்பட்டது போல் இவ்வுரைநடை நூல்கள் அமைந்துள்ளன. ‘ பிரிக்க ’ என்னும் பொருளில் வரும் ‘ விபஜிக்க ’ என்னும் சொல்லை இதற்கான எடுத்துக்காட்டாகச் சுட்டலாம்.

இஸ்லாம் தோன்றிய மொழி அறபு. இன்றும் இஸ்லாத்திலிருந்து பிரிக்க முடியாத மொழியாக விளங்குகிறது அறபு மொழி. அது இஸ்லாத்தின் சமய மொழியாகத் திகழ்கிறது. பாரசீகத்தில் வழங்கிய மொழி பார்சி. அறபு எழுத்துக்களில் இன்று எழுதப்படும் பார்சி மொழி ஏறத்தாழ அறபு மொழியின் ஒரு கிளைமொழி என்று கூறக்கூடிய தன்மை வாய்ந்து உள்ளது எனக் கூறலாம். பார்சி மொழியும் இஸ்லாத்துடன் நெருங்கிய தொடர்புடைய மொழியாகும். எனவேதான் இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ் இலக்கியங்களிலே ஏராளமான அறபுச் சொற்களும் ஓரளவு பாரசீகச் சொற்களும் கலந்துள்ளன.

இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ் இலக்கியங்களிலே இஸ்லாமியக் கலைச் சொற்களையும் கருத்துக்களையும் சிறந்த முறையில் விளக்குவதற்கு அறபு, பார்சிச் சொற்கள் இன்றியமையாதன வாயுள்ளன. இஸ்லாமியக் கலைச்சொற்களை நேரடியாகத் தமிழில் பெயர்க்க முடியாது. பெயர்த்தாலும் அச்சொற்கள் அவற்றின் கருத்துக்களைப் பிரதிபலிக்கா. இறைவனைக் குறிக்கும் ‘ அல்லாஹ் ’ என்னும் அறபுச் சொல்லை எந்த மொழியில் பெயர்த்தாலும் அது அங்கு பொதிந்துள்ள கருத்தினைச் சுட்டாது. ஒரே சொல்லாகவும் அதனை மொழி பெயர்க்க முடியாது. எனவே அல்லாஹ் என்றே உபயோகிக்கப்படுகிறது.

தமிழ் அரிச்சுவடியில் உள்ள பகரத்துக்குச் சமமான எழுத்து அறபு மொழியில் கிடையாது. அதே போன்று பகர இனத்தைச் சார்ந்த வல்லொலி வல்லெழுத்தையும்(b) மெல்லொலி வல்லெழுத்தையும்(f) குறிக்கும் எழுத்துக்கள் அறபு மொழியில் உண்டு. பம்பரம் என்னும் சொல்லில் உள்ள இரண்டாவது பகரத்தையும் father என்னும் சொல்லில் வரும் பகரத்தையும் ஏறத்தாழக் குறிக்கும் இரண்டு எழுத்துக்கள் அறபு மொழியில் இருப்பதைக் காணலாம். இவ்விரண்டு ஒலிக் குறிப்பையும் சுட்டுவதற்கு தமிழில் உள்ள பகரத்தையே உபயோகிக்க வேண்டி இருக்கிறது. பகரத்தின் வல்லொலி வல்லெழுத்தின் ஒலிக் குறிப்பைக் கொண்ட ‘ நபி ’ என்னும் அறபுச் சொல்லையும் மெல்லொலி வல்லெழுத்தின் ஒலிக் குறிப்பைக் கொண்ட ‘ பனா ’ என்னும் அறபுச் சொல்லையும் ஈண்டு எடுத்துக் காட்டுக்களாகக் கொள்ளலாம். நபி என்னும் அறபுச் சொல்லைத் ‘தீர்க்கதரிசி’ என்று மொழி பெயர்த்தாலும் ‘பனா’ என்னும் அறபுச் சொல்லை நிலையற்றவை என்று மொழி

பெயர்த்தாலும் அவற்றுள் பொதிந்துள்ள இஸ்லாமிய எண்ணக் கருவை முழுமையாக அவை எடுத்துக்காட்டா. எனவே இஸ்லாமிய பரிபாஷைச் சொற்களாக அவை இரண்டும் அதே வடிவில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் இடம் பெறலாயின. அவ்விரண்டு அறபுச்சொற் களும் அவற்றிற்குரிய தமிழ் மொழிபெயர்ப்புச் சொற்களைவிட சீரமைப் பில் குறுகியவையாகவே உள்ளன. கவிதைக்கும் அதே உருவம் வாய்ப்பாக உள்ளது.

தமிழ் நாட்டில் இஸ்லாம் பரவியதும் இஸ்லாமிய மார்க்க மொழி யான அறபு மொழியின் தாக்கத்தையும் தமிழ் மொழி எதிர்நோக்க வேண்டி இருந்தது. இத்தகைய தாக்கத்தை எதிர்நோக்கிய மொழி தமிழ் மாத்திரம் அன்று. இஸ்லாம் எங்கு எங்கு பரவியதோ அங்கு அங்கெல்லாம் அவ்வம்மொழிகளில் அறபு மொழியின் செல்வாக்கு இடம் பெற்றிருப்பதைக் காணலாம்.

ஐபீரியக்குடா நாட்டில் இஸ்லாத்தின் ஆதிக்கம் பரவியதும் அக் குடா நாட்டின் மொழிகளான ஸ்பானிய, போர்த்துக்கேய மொழி களிலும் அறபு மொழியின் தாக்கம் ஏற்படலாயிற்று. இவ்விரு மொழி களிலும் பல அறபுச் சொற்கள் புகுந்து விட்டன. எல்லாவற்றையும் விட அறபு மொழியைப் பொறுத்த வரையிலேதான் இஸ்பானிய மொழி யின் கடப்பாடு கோடிட்டுக் காட்டப்படுகிறது. இஸ்பானிய மொழி யில் புகுந்துள்ள அறபுச்சொற்கள் பல, அறபு மொழியில் உள்ள 'அல்' என்னும் முன் அடையைக் கொண்டு அமைந்துள்ளன. அறபு மொழி யில் 'அல்-றுஸ்' (al-ruzz) என்பது அரிசியைக் குறிக்கிறது. அதே போன்று இஸ்பானிய மொழியில் 'அல் அரேஸ்' அதே கருத்தைக் கொண்டுள்ளது. நாளாந்த வாழ்க்கையில் பயன்படுத்தப்படும் பல அறபுச் சொற்கள் இஸ்பானிய மொழியில் அதே கருத்தினைக் கொண் டுள்ளமையைக் காணலாம். இஸ்பானிய மொழியில் 'கபான்' (qabān) என்பது மேலங்கியைக் குறிக்கிறது. இச்சொல் அதே கருத்தில் அறபு மொழியில் வழங்கப்படும் 'கபா' (qaba) என்னும் சொல்லிலிருந்து தோன்றி உள்ளது. இஸ்பானிய மொழியில் 'Xems' என்பது சூரியனைக் குறிக்கிறது. அம்மொழியில் 'X' என்பது 'sh' என்னும் ஒலிக்குறிப்பைக் கொண்டுள்ளது. அறபு மொழியில் 'ஷம்ஸ்' (shums) என்பது சூரியனைக் குறிக்கும் சொல்லாகும்.

நிறுவையைக் குறிக்கும் றுத்தல் என்னும் சொல் போர்த்துக்கேய மொழியில் 'அர்றத்தெல்' என வழங்கப்படுகிறது. இதற்கும் மூலச் சொல்லாய் அமைந்தது 'அல்றத்ல்' (al-ratl) என்னும் அறபுச் சொல் லாகும்.

பொயிமா டி யுசுப் (Poema de Yucuf) என்பது ஆசிரியர் யார் என அறியப்படாத ஒரு கவிதை நூல். இது அல்குர்ஆனில் உள்ள ஒரு

கதையைத் தழுவி எழுதப்பட்டது. இக்கவிதை நூலின் சிறப்பமிசமாவது இஸ்பானிய சொற்களைக் கொண்டு, பிரெஞ்சுக் கவிதை உருவில் அமைந்து, அறபு எழுத்துக்களில் எழுதப்பட்டிருப்பதுவேயாகும். ஐபீரியன்குடா நாட்டு மொழிகளில் ஏற்பட்ட அறபுக் கலப்பு அதன் சாயலையே மாற்றிவிட்டமையைக் காணலாம். இதிலிருந்து ஓர் இனத்தவரின் மொழியை அவ்வினத்தைச் சேர்ந்தோர் ஒழுகும் சமய நெறி, பின்பற்றும் பண்பாடு, கடைப்பிடிக்கும் பழக்கவழக்கங்கள் பாதிக்கின்றன என்பது புலனுகின்றது. முஸ்லிம்களையும் அவர்கள் பேசும் மொழிகளையும் பொறுத்த வரையில் இக்கூற்று முற்றிலும் உண்மையாகும்.

முஸ்லிம் மக்கள் அல்குர்ஆனை ஓதவேண்டியவர்களாவர். அவர்களின் தொழுகையில் அறபு மொழியே பின்பற்றப்படுகிறது. எனவே அறபுப் பயிற்சி அவர்களுக்கு இன்றியமையாததாகின்றது. அறபுச் சொற்களை உச்சரிப்பது அவர்களுக்கு மிக அவசியமாகிறது. இவை அல்குர்ஆனில் உள்ள சொற்களாக உள்ளன. சமயநெறி பற்றிய சொற்களாக உள்ளன. இஸ்லாமிய பண்பாட்டோடு நெருங்கிய தொடர்புடைய சொற்களாக உள்ளன. ஒரு முஸ்லிமின் நாளாந்த வாழ்க்கையில் இடம் பெறும் சொற்களாக உள்ளன. இந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது தமிழ்பேசும் ஒரு முஸ்லிம் அறபுச் சொற்களையும் அச்சொற்கள் மூலமாக அம்மொழியையும் அறிந்திருக்க வேண்டியவராகின்ருர்.

ஒருவன் இரு வெவ்வேறு மொழிகளில் தனது கருத்துக்களை வெளியிடும்பொழுது, ஒரு மொழியைப் பேசும்பொழுது தன்னை அறியாமலேயே மற்ற மொழியிலுள்ள சொற்களையும் சொற்ருெடர்களையும் உபயோகிப்பான் என்பர் ஜே. வான்றீஸ் என்பவர். எனவே இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட மொழிகளில் பாண்டித்தியம் பெற்ற ஒருவன் தான் அறிந்த இரண்டு மொழிகளிலிருந்தும் அல்லது எல்லா மொழிகளிலிருந்தும் சொற்களை அவனது உரையாடலிலும் எழுத்தோவியங்களிலும் பயன்படுத்துவது சர்வ சாதாரணமானதொன்ருகும்.

அறபுமொழி உட்பட இஸ்லாமிய முதுசொத்தைப் பெற்றவர்கள் உலக முஸ்லிம் மக்கள். எங்கு வாழ்ந்தாலும் முஸ்லிம் மக்களுக்கு இஸ்லாமிய நுண்கலைச் சொற்கள் அவசியமாகின்றன. இஸ்லாமிய மதக் கடமைகளை நிறைவேற்ற அவசியமாகின்றன. இம்மதக் கடமைகளும் ஒரு முஸ்லிமின் நாளாந்த வாழ்க்கையும் இரண்டறக் கலந்துவிட்டனவாகும். எனவே தமிழ் பேசும் முஸ்லிம் மக்களுக்கு அறபுச் சொற்களை அறிந்திருத்தல் இன்றியமையாததாகின்றது.

அறபில் வழங்கும் இஸ்லாமியப் பதங்களைத் தமிழில் மொழி பெயர்க்க இயலாது. அவற்றைத் தமிழுருவில் எழுதுவதனுல் அதன் சரியான கருத்துக்களைப் பெறமுடியாது. எனவே தமிழ் பேசும் முஸ்லிம்கள் இஸ்லாத்தைப்பற்றி அறிவதற்கு இஸ்லாம் பற்றிய அறபுச் சொற்களை அறிவது இன்றியமையாததாகின்றது. இதன் பயனுக அத்தகைய அறபுச் சொற்கள் அவர்கள் பேசும் மொழியில் ஒரு நிலையான இடத்தைப் பெற்றுவிட்டன. தமிழ் பேசும் முஸ்லிம் மக்களின் எழுத்து வழக்கிலும் இன்றியமையாதனவாகி விட்டன.

கலப்பு மொழி அல்லாத மொழிகள் இல்லை எனலாம். பல்வேறு மொழிகளில் உள்ள சொற்களைக் கொண்ட ஒரு மொழியாக ஆங்கிலம் அமைந்துள்ளது. ஆங்கில மொழியை ஒரு சர்வதேசச் சந்தையாகவும் உலகில் உள்ள பல்வேறு மொழிகளிலிருந்து பெறப்பட்ட சொற்களே அச்சந்தைக்கு வந்துள்ள விற்பனைப் பொருள்களாகவும் உருவகித்துள்ளார் மக்ஸ் முல்லர் என்னும் சொல்லாராய்ச்சி விற்பன்னர். அறபு மொழியைப் பொறுத்தவரையில் மக்ஸ் முல்லரின் இக்கூற்றின் மறுதலை ஏற்புடைத்தாய் அமைகிறது. முஸ்லிம் மக்கள் வாழும் உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டிலும் அவ்வந்நாட்டு மொழிகளில் இஸ்லாமிய மொழியாம் அறிவுச் சந்தையான அறபு மொழியில் உள்ள பண்டப் பொருள்களான சொற்கள் நிரந்தரமான ஓர் இடத்தைப் பெற்றுவிட்டன.

திசைச் சொற்கள் இல்லாத மொழி இல்லை எனலாம். எந்த மொழியிலும் திசைச் சொற்கள் இடம் பெற்று விடுகின்றன. ஏனெனில் எந்த மொழியும் இக்கால கட்டத்தில் தனிமையாக இயங்க முடியாது. பல்வேறு வகையான தொடர்புகள் மொழிகளுக்கிடையே ஏற்படுகின்றன. இவ்வாறு தொடர்பு ஏற்படுவதனுல் ஒரு மொழியின் சொற்கள் மற்ற மொழியில் இடம் பெற்றுவிடுகின்றன. ஜெர்மனியைச் சேர்ந்த மகா பிரடெரிக் என்பவர் பிரெஞ்சு மொழியைப்பற்றியும் ஜெர்மன் மொழியைப்பற்றியும் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்:

''நாம் பிறமொழியை (பிரெஞ்சு மொழியை) உபயோகிக்கும் பொழுது எமது தேசிய (ஜெர்மன்) மொழியிலுள்ள சொற்ருெடர்களைத் தவிர்த்துக்கொள்கிருேம். ஆனுல் எமது தேசிய (ஜெர்மன்) மொழியில் பேசும் பொழுது பிற (பிரெஞ்சு) மொழிச் சொற்களைத் தாராளமாக உபயோகிக்கிருேம்''.

திசைச் சொற்களைப் பற்றிய அடிப்படைக் கருத்தினை எப்.லின்டிஷ் என்பவர் இவ்வாறு விளக்கி உள்ளார்:

''ஓர் இனம், கற்கும் பிற மொழியினுல் அவ்வினத்தின் மொழி கலப்பு மொழியாவதில்லை. மாருக பிற மொழியின் செல்வாக்குக்கு

இலக்காகும் அந்த இனத்தின் சொந்த மொழியினுலேயே அம்மொழி கலப்பு மொழியின் தன்மையைப் பெறுகிறது.''

தமிழ் மொழியையும் அறபு மொழியையும் பொறுத்தவரையில் இக்கூற்று மிகப்பொருத்தமாக அமைகிறது. சில சமயங்களில் ஒரு மொழியின் வளம் பெருக திசைச் சொற்கள் இன்றியமையாதனவாகின்றன. எனினும் சொற்றெடர்பைப் பொறுத்தவரையில் மொழிகளுக்கிடையில் ஒன்றின் தாக்கம் மற்றதில் ஏற்படுகின்றது. இத்துறையில் ஒரு மொழியின் செல்வாக்கு மற்ற மொழியில் இடம் பெறுகின்றது. தமிழ் மொழியில் அறபு மொழியின் செல்வாக்கினுலேயே ஏராளமான அறபுச்சொற்கள் தமிழ் மொழியிலே இடம் பெறலாயிற்று.

அறபு நாட்டிலிருந்து முஸ்லிம் மக்கள் தமிழ் நாட்டுக்கு வந்து பண்டுதொட்டே தொடர்பு கொண்டிருந்தமையால் அறபுச் சொற்கள் தமிழ் மொழியிலே கலந்துவிட்டன. அவை அறபுச் சொற்கள்தானு என்று ஐயம் ஏற்படும் அளவுக்கு அவை தமிழ்ச்சொற்கள் போல் காட்சி அளிக்கின்றன. அவை சர்வசாதாரணமாகப் பொதுத் தமிழ்ப் பேச்சுவழக்கில் பயன்படுத்தப்படுகின்றன. தமிழிலே அவற்றிற்குப் பிரதி ஈடாகப் பயன்படுத்தக்கூடிய செந்தமிழ்ச் சொற்கள் இருக்கின்றபோதிலும் அறபு மூலத்திலிருந்து பெறப்பட்ட சொற்களே பயன்படுத்தப்படுகின்றன. விடை என்ற பொருளில் 'பதில்' என்னும் சொல்லும் நன்கொடை என்ற பொருளில் 'இனும்' (இன்ஆம்) என்னும் சொல்லும் பிரதிநிதி என்ற பொருளில் 'வக்கீல்' என்னும் சொல்லும் இவை போன்ற பிறவும் அறபு மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு வந்த திசைச் சொற்களாகும்.

இதே போன்று பல பாரசீகச் சொற்களும் திசைச் சொற்களாக வந்து பொதுத் தமிழ்ப் பேச்சுவழக்கில் இடம் பெற்றுள்ளன. காகிதம், சுமார், தராசு, தயார் என்பன பார்சி (பாரசீக) மொழியிலிருந்து தமிழில் புகுந்தவையாகும்.

இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ் இலக்கியங்களிலே அவ்விலக்கியத்தின் சிறப்பியல்பாக அமைந்துள்ள அறபு, பார்சிச் சொற்கள் தமிழ்ப் பொதுவழக்கிலே இடம் பெற்றுள்ள அத்தகைய சொற்களிலிருந்து வேறுபட்டவையாகும். அவற்றைவிட மேலதிகமாக தமிழ் மொழியில் சேர்ந்துள்ளவையாகும். அத்தகைய அறபுச்சொற்களுள் சில அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களாக அமைந்துள்ளன. வேறு சில அல்குர்ஆன் சொற்களாகவும் சொற்றெடர்களாகவும் திருவசனங்களின் பகுதிகளாகவும் இடம் பெற்றுள்ளன. மற்றும் சில இஸ்லாமிய மார்க்கக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு இன்றியமையாதனவாக அமைந்துள்ளன. இன்னும் சில சமூக, கலாசார நிகழ்ச்சி

களுடன் நெருங்கிய தொடர்புடையனவாக இடம் பெற்றுள்ளன. இடப்பெயர்களும் இயற்பெயர்களும் அறபு நாடுகளின் இடப்பெயர் களும் முஸ்லிம் பெரியாரின் இயற்பெயர்களும் அறபுப் பதங்களாக அமைந்துள்ள சந்தர்ப்பங்களும் உண்டு. தமிழ் மொழிக்குப் புறம்பான இயற்பெயர்களும் உள்ளன. அவை முஸ்லிம் அல்லாதாரைக் குறிப்பிடுவனவாக அமைந்துள்ளன. இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய இலக்கியங்களில் விவரிக்கப் பட்டுள்ள நிகழ்ச்சிகளில் சம்பந்தப்பட்ட முஸ்லிம் அல்லாதாரின் பெயர்களாகவே அவை அமைந்துள்ளன. அவை முஸ்லிம் அல்லாத பெயர்களாயிருந்த போதிலும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களிலே அறபு எழுத்துக்களில் எழுதப்படும் முறையிலேயே இடம் பெற்றுள்ளன. அறபு நாட்டிலே பல்கிப் பெருகி இருந்த எண்ணிறந்த குலங்களின், கோத்திரங்களின், கூட்டங்களின் பெயர்கள் அறபுச் சொற்களின் தொகுதியில் அடங்கும் மற்றெரு பகுதியாகும். முஸ்லிம் ஆட்சி சம் பந்தப்பட்ட அறபுச் சொற்கள் மற்றெரு தொகுதியில் அடங்கும். நல்லடியார்களையும் இஸ்லாமிய மார்க்கக் கோட்பாடுகளுக்குட்பட்டு இயங்கிவரும் பல்வேறு குழுக்களின் தலைவர்களையும் குறிப்பிடும் பொதுப்படையான அறபுச் சொற்கள் மற்றெரு தொகுதியைச் சார்ந் தனவையாக அமையும். ஆடை, அணிகலன்கள், பாதரட்சைகள் முதலியவற்றைக் குறிக்கும் அறபுச் சொற்கள் இன்னெரு தொகுதி யாக அமையும். அறபு இலக்கணத்தின் பல்வேறு பிரிவுகளைச் சுட்டும் அறபுச் சொற்களும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் இடம்பெறத் தவறவில்லை. சூபிகள் என வழங்கப்படும் முஸ்லிம் மெய்ஞ்ஞானிகள் தமது இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் பயன்படுத்தும் கலைச் சொற்கள் மற்றெரு தொகுதியாக அமையும். இஸ்லாமிய அடிப் படையில் தோன்றிய தமிழ் இலக்கியங்களில் இடம் பெற்றுள்ள அறபுச் சொற்களை இத்தகைய பல்வேறு தொகுதிகளாக வகுக்கலாம்.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள அறபு, பார்சி மொழிச்சொற்கள் காரணமாக அறபு, பார்சி மொழிச்சொற்களை அறியாதோர் அவ்விலக்கியங்களைப் படித்துப் புரிந்து கொள்வதில் பெரிதும் இடர்ப்படுவர். இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் எல்லோராலும் நயக்கத்தக்கனவாய் அமையாமைக் குரிய ஒரு காரணம், அத்தகைய நூல்களில் மலிந்துள்ள அறபு, பார்சி மொழிச் சொற்களேயாம். முஸ்லிம் அல்லாதோர் மாத்திரம் அன்றி முஸ்லிம் மக்கள்கூட இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தை முழுமை யாகப் படித்துப் பயன்பெற முடியாமற் போனமைக்கு இது ஒரு காரண மாகும். இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் உள்ள சீருப்புராணத்தை யும் மஸ்தான் சாகிபு பாடலையும் மாத்திரமே பெரும்பாலான தமிழ்

இலக்கியச் சுவைஞர்கள் அறிந்திருக்கின்றனர். ஏனைய இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் அத்தகையோரின் கவனத்தை ஈர்க்கத் தவறி விட்டன. அத்தகைய நூல்களில் இடம் பெற்றுள்ள அறபு, பார்சிச் சொற்களை தமிழ் இலக்கிய வல்லுநர்களால் இனங்கண்டு கொள்ள முடியவில்லை. அதற்காக அவர்களைக் குறைகூற முடியாது. அத் தகையோர் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தின் சிறப்பியல்பாக அமைந்துள்ள அறபு, பார்சிச் சொற்களைப் புரிந்து கொள்வதற்குத் துணையாக, அத்தகைய இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கருவூலங்களை முதுசொமாகக் கொண்ட முஸ்லிம்கள் அத்தகைய சொற்களை இனங் காட்டிக் கொடுக்காமல் இதுகாறும் வாளா இருந்து விட்டனர். முஸ்லிம்களின் முதுசொமான இஸ்லாமியத் தமிழ் இலக்கியமும் ஒரு சில அறிஞரைத்தவிர ஏனையோரால் புறக்கணிக்கப்பட்டு விட்டது. இது அவர்களின் குறையையே எடுத்துக்காட்டுகிறது. அவர்கள் தமது கடமையைச் செவ்வனே நிறைவேற்றி இருந்தார்களேயானால் இத் தகைய புறக்கணிப்பு ஏற்பட்டிருக்காது. அவ்விலக்கியங்களை எல்லோ ரும் படித்துப் பயன் அடைந்திருப்பர். ஆய்வுக்கு இலக்காக்கி இருப்பர்; விதந்து பாராட்டி இருப்பர்.

இஸ்லாமிய அடிப்படையில் தோன்றி, அறபு, பார்சிச்சொற்களைப் பெருமளவில் கொண்டுள்ள தமிழ் இலக்கியங்களைப் படித்துப்பயன் அடைவதில் உள்ள முட்டுக்கட்டையை பலரும் அறிந்திருந்தனர். ஆனால் இக்குறையை நீக்கும் முயற்சியை இதுகாறும் எவரும் மேற் கொள்ளவில்லை. இக்குறை நிறைவு படுத்தப்பட வேண்டும் என உணர்ந்தார் மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள். நாம் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்துறையில் பேராசிரி யராகக் கடமை ஏற்ற பின்னர் இக்குறையை நிறைவு செய்யுமாறு டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் எம்மைப் பணித்தார்கள். இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் சான்றோரின் ஆய்வுக்கு இலக்காக வேண்டுவதாயின் அவ்விலக்கியங்களில் உள்ள அறபு, பார்சிச் சொற்கள் இனங்காட்டப்படல் வேண்டும் எனஆலோசனை கூறினார்கள். அத்தகைய சொற்களுக்குரிய பொருள் விளக்கப்படல் வேண்டும் எனக் குறிப்பிட்டார்கள். இத்தகைய பணிப்பின் பயனாகவே இஸ்லாமியத் தமிழ் இலக்கிய அறபுச் சொல் அகராதி ஒன்றினைத் தயாரிக்கும் பணியை மேற்கொண்டோம். இம்முயற்சி எவ்வாறு மேற்கொள்ளப் படல் வேண்டும் எனத் துணைவேந்தர் அவர்கள் நெறிவகுத்துக் காட்டினார்கள். அப்பொழுது தமிழ், ஏனைய இந்திய மொழிப்புலத் தலைவராக இருந்த பேராசிரியர் டாக்டர் முத்து சண்முகம் பிள்ளை

அவர்கள் வகுக்கப்பட்ட நெறியை விளக்கினுர்கள். இப்போதைய பேராசிரியர் டாக்டர் பெரிய கருப்பனுர் (தமிழண்ணல்) அவர்கள் இப்பணியை நிறைவேற்ற உறுதுணையாக அமைந்தார்கள்.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள அறபு, பார்சிச் சொற்கள் அவற்றைப் பற்றி ஓரளவாவது பரிச்சயம் இல்லாதவர்களைத் திணற அடித்துவைக்க வல்லவையாகும். இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய தமிழ் இலக்கியங்களிலே பெருமளவில் பயன்படுத்தப்பட்டுள்ள ஓர் அறபுச் சொல் 'தீன்' என்பதாகும். தமிழ் மொழியில் சாதாரணமாகத் தீன் என்ருல் உணவு என்று பொருள்படும். சில சந்தர்ப்பங்களில் இச் சொல் 'தீன் பயிர்' எனச் சொற்ருெடராக அமைவதும் உண்டு. இத்தகைய சந்தர்ப்பங்களில் இச்சொல்லை அறபுச் சொல் என அறியாதவர்கள் 'உணவுக்கான பயிர்' எனப் பொருள்கொள்வதற்கு இடமுண்டு. ஆனுல் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களிலே இச்சொற்ருெடர் 'தீன்' என்னும் பயிர்' எனப் பொருள்பட வந்துள்ளது. அறபு மொழியிலே 'தீன்' என்பது இஸ்லாம் மார்க்கத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதே கருத்தில் இச்சொல் அல்குர்ஆனிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'தீன்' என்னும் அறபுச் சொல்லிலே உள்ள 'தகரம்' தமிழிலே 'வந்து' என்னும் சொல்லில் உள்ள தகரத்துக்கு ஏறத்தாழ சமமான ஒலிக் குறிப்பைக் கொண்டுள்ளது எனலாம். 'தீன்' என்னும் அறபுச் சொல் லில் உள்ள 'தகரம்' ஒலிப்புடைய வல்லெழுத்தாகவே உச்சரிக்கப் படுகின்றது.

'ஈமான்' என்பது மற்ருேர் அறபுச் சொல். இஸ்லாமியக் கோட் பாடுகளிலே மிக முக்கியமான ஒரு சொல் இது. நம்பிக்கை அல்லது விசுவாசம் எனப் பொருள்படும். இதனை அறபுச் சொல் என்று அறியாதோர் இதனை ஒரு சொற்ருெடராகக் கொள்ள வாய்ப்பு உண்டு. அவ்வாருயின் 'ஈ மான்' என இரண்டு சொற்களாக அவ்வறபுச் சொல் கொள்ளப்படும். அவ்வாறு கொள்ளப்படின் ஈமான் என்னும் அறபு சொல்லின் பொருளுக்கு நேர்மாருன கருத்தே பெறப்படும்.

இஸ்லாமிய மூல மந்திரம் 'கலிமா' என வழங்கப்படும். இந்த அறபுப் பதத்தின் பொருள் 'சொல்' என்பதாகும். 'வணக்கத்துக்குரிய நாயன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை; முகம்மது அவனின் தூதராவர்ர் என்று பொருள்படும் 'லா இலாஹ இல்லல்லாஹு முஹம் மது றசூலுல்லாஹ்' என்னும் அறபுச் சொற்ருெடரே முதலாவது கலிமாவாகும். ஆனுல் அறபு தெரியாத ஒருவர் அச்சொல்லை 'கலி மா' என்னும் இரண்டு சொற்களைக் கொண்ட ஒரு சொற்ருெடராகக் கொண்டு பொருள்கொள்ள முற்பட்டால் முஸ்லிம்களிடையே வழங்கும் கலிமா என்னும் அறபுச் சொல்லின் பொருளுக்கு நேர் மாற்றமான பொருளை உடையதாகப் புலப்படும்.

இத்தகைய அறபுச் சொற்களுள் மற்ருென்று ‘சலவாத்து’ என்பது. நபிகள் நாயகம் முகம்மது (சல்) அவர்களின்பேரில் கூறப் படும் வாழ்த்தினை இவ்வறபுச் சொல் குறிக்கும். ஆனல் முன்னைய சொற்களைப் போன்று இச்சொல்லையும் ‘சல வாத்து’ என்னும் இரண்டு சொற்களைக் கொண்ட அறபு அல்லாத ஒரு சொற்ருெடராகக் கொண்டால் அதன் கருத்து முற்றிலும் முரணுனதொன்ருகப் புலப் படும். இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தைப் பயிலும் முஸ்லிம் அல்லாதாரிடையே தோன்றக்கூடிய இத்தகைய மயக்கத்தையும் இன்னேரன்னவற்றையும் தவிர்க்கு முகமாகவே துணைவேந்தர் அவர் களின் ஆலோசனைக்கிணங்க இவ்வகராதியைத் தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள சில அறபுச் சொற்கள் தமிழ் இலக்கண விகுதிகளைக் கொண்டுள்ளன. ‘தீன்’ என்ற சொல்லையே எடுத்துக்கொள்வோம். உயர்திணைப் பலர்பால் விகுதிகளைக்கொண்டு பல்வேறு உருவங்களில் ‘தீன்’ என்னும் அறபுச் சொல் ஆளப்பட்டுள்ளது. ‘அர்’ என்னும் பலர்பால் விகுதியைப் பெற்று முஸ்லிம்கள் என்னும் பொருளில் ‘தீனர்’ என்றும் ‘ஓர்’ விகுதியைப் பெற்று ‘தீனேர்’ என்றும் ‘அ’ என்னும் இடைநிலையை யும் ‘அர்’ என்னும் விகுதியையும் முறையே பெற்று ‘தீனவர்’ என்றும் வந்துள்ளமையைக் காணலாம். இவ்வாறு தமிழ் விகுதிகளைப் பெற்று வந்துள்ள ‘தீனவர்’ என்று குறிப்பிடும்பொழுது தீனை (மார்க்கத்தை)ப் பின்பற்றுபவர்களாகிய அவர்கள் என்றும் கொள்ளலாம். மற்ருேர் அறபுச் சொல் ‘குபிர்’ என்பதாகும். முஸ்லிம் அல்லாத தன்மையை, நம்பிக்கையற்ருேர் என்னும் பண்பைக் குறிக்குமுகமாகவே ‘குபிர்’ என்னும் சொல் ஆளப்பட்டுள்ளது. இவ்வறபுச் சொல்லில் உள்ள ‘பகரம்’ ஒலிப்பில்லா வல்லெழுத்தாக அமைந்துள்ளமை ஈண்டு நோக்கற்பாலது. இச்சொல் ‘குபிர்’ என்றும் ‘குப்ர்’ என்றும் பயன் படுத்தப்பட்டுள்ளது. ‘அர்’ என்னும் பலர்பால் விகுதி பெற்றுக் குபிரர் என்றும் ‘ஓர்’ விகுதி பெற்றுக் ‘குபிரோர்’ என்றும் ‘அன்’ என்னும் ஆண்பால் விகுதி பெற்றுக் ‘குபிரன்’ என்றும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் ஆளப்பட்டுள்ளது. ‘நம்பிக்கையற்ருேராகிய அவர்’ என்னும் பொருளில் ‘குபிரவர்’ என்றும் வந்துள்ளது. இங்கே ‘குபிர்’ என்னும் அறபுச் சொல்லுடன் ‘அ’ என்னும் இடைநிலையும் ‘அர்’ என்னும் விகுதியும் ஒன்றன்பின் மற்ருென்ருக வந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

‘ஹக்’ என்ருல் உண்மை என்பது பொருள். ‘அல்ஹக்’ என்னும் அறபுச் சொல் அல்லாஹ்வின் பண்பைக் குறிக்கப் பயன்படுத்தப் படுகிறது. அவ்வறபுச் சொல் உண்மையானவன் என்னும் பொருளில் அல்லாஹ்வைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. அது அல்லாஹ் வின் அழகுத் திருநாமங்களில் ஒன்ருகவும் அமைந்துள்ளது. ஆனும்

அல்லாத பெண்ணுமல்லர்த அலியுமல்லாத எந்த ஒரு பொருளுக்கும் உவமிக்கவும் முடியாத அல்லாஹ்வையும் அல்லாஹ்வின் பண்புகளே யும் குறிக்க ஆண்பால் 'அன்' விகுதியையே பொதுவாக முஸ்லிம் மக்கள் பயன்படுத்துவர். வேறு விதமாகக் குறிப்பிட இயலாது. எனவே உண்மையானவன் என்று முஸ்லிம் புலவர்கள் அல்லாஹ்வை வருணிக்க முற்படும்பொழுது 'ஹக்' அல்லது 'ஹக்கு' என்னும் உண் மையைக் குறிக்கும் அறபுச் சொல்லுடன் 'அன்' என்னும் உயர்திணே ஆண்பால் விகுதியைச் சேர்த்து 'ஹக்கன்' என்றே குறிப்பிடுவர். இங்கு கிரந்த எழுத்தைப் பயன்படுத்த விரும்பாத முஸ்லிம் புலவர்கள் அதனேத் தமிழ் மரபுக்கியைய தமிழ்ப்படுத்தி 'கக்கன்' என்றும் 'அக்கன்' என்றும் குறிப்பிடுவர்.

மக்களேத் தீயவழியில் செலுத்துபவன் இபுலீஸ் அல்லது சாத்தான் என்று அழைக்கப்படுவான். அத் தீயவனேக் குறிக்க இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களிலே 'சூமன்' என்னும் சொல் பயன் படுத்தப் பட்டுள்ளது. இச்சொல் 'சூம்' என்னும் அறபுச் சொல்லாலும் தமிழில் உள்ள 'அன்' என்னும் விகுதியாலும் சேர்க்கப்பட்டு பெறப்பட்டுள்ளது. 'பாக்கியமற்றவன்', 'கலங்கிய சிந்தனே உடையவன்' என்னும் பொருள்களில் 'சூம்' என்னும் சொல் அறபு மொழியில் பயன்படுத்தப் பட்டுள்ளது. அதனேயே இஸ்லாமியத் தமிழ் புலவர்கள் சாத்தானேக் குறிப்பிடப் பயன்படுத்தி உள்ளனர்.

'சிஹ்ர்' என்னும் அறபுச் சொல்லின் பொருள் 'பில்லி சூனியம்' என்பதாகும். அதனே இஸ்லாமியத் தமிழ் புலவர்கள் தமிழ் மரபுக் கியைய தமிழ்ப்படுத்தி 'சிகுறு' என்று தமது தமிழ் இலக்கியப் படைப் புக்களில் ஆண்டுள்ளனர். 'பில்லி, சூனியம்' செய்பவனேக் குறிப்பிட 'சிகுறு' என்னும் சொல்லுடன் தமிழில் வரும் 'அன்' என்னும் ஆண் பால் விகுதியையும் சேர்த்துப் பயன்படுத்தி 'சிகுறன்' என்று அழைப்பர்.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களிலே பண்மையை உணர்த்து வதற்கு அறபுச் சொற்களுடன் 'கள்' என்னும் பன்மை விகுதி பயன் படுத்தப்படுகிறது. அல்குர்ஆன் வசனம் 'ஆயத்' என அறபில் அழைக்கப்படுகிறது. அதன் பன்மை 'ஆயத்துக்கள்' என 'கள்' என்னும் பன்மை விகுதி பெற்று வந்துள்ளது. இஸ்லாம் அல்லாத் தன்மையை, நம்பிக்கையற்ற தன்மையைக் குறிப்பிடும் 'குபிர்' என் னும் சொல்லேப் பன்மைப்படுத்துவதற்கும் 'கள்' என்னும் பன்மை விகுதியைப் பயன்படுத்திக் 'குபிர்கள்' என ஆளப்பட்டுள்ளதும் ஈண்டு நோக்கற்பாலது. வானவரைக் குறிக்கும் சொல் 'மலக்' அல்லது 'மலக்கு' என்பதாகும். அதன் பன்மை 'கள்' விகுதி பெற்று 'மலக்கு கள்' என வழங்கப்படுகிறது. மக்காவைச் சேர்ந்தவர்கள் மக்கிகள்

என்றும் மதீனுவைச் சேர்ந்தவர்கள் மதனிகள் என்றும் வழங்கப்படுவர். சில சமயங்களில் பன்மையாகவரும் அறபுச் சொற்களுக்கும் 'கள்' என்னும் பன்மை விகுதி சேர்க்கப்படுகிறது. நபி (தீர்க்கதரிசி) என்னும் அறபுச் சொல்லின் பன்மை 'அன்பியா' என்பதாகும். ஆனுல் அச்சொல்லும் 'கள்' விகுதி பெற்று 'அன்பியாக்கள்' என வருகிறது. இறைநேசச் செல்வர் 'வலி' என அறபில் வழங்கப்படுகிறது. 'வலி' என்பதன் பண்மை 'அவ்லியா' என்பதாகும். அச்சொல்கூட 'கள்' விகுதி பெற்று 'அவ்லியாக்கள்' என வருகிறது.

உயர்திணைப் பண்மையைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படும் மற்ருெரு பலர்பால் விகுதி 'மார்' என்பதாகும். நபி என்னும் சொல்லுடன் பலர்பாலைக் குறிக்கும் 'மார்' என்னும் விகுதியைச் சேர்த்து 'நபிமார்' எனவும் 'வலி' என்பதனுடன் 'மார்' என்பதனைச் சேர்த்து 'வலிமார்' எனவும் 'குறைஷி' என்னும் சொல்லுடன் 'மார்' என்னும் விகுதியைச் சேர்த்து 'குறைஷிமார்' எனவும் வழங்கப்படுவதைக் காணலாம். வானவர்கள் பண்மையில் 'மலாஇகத்' என அறபு மொழியில் வழங்கப்படுவர். எனினும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களிலே அவர்கள் 'மார்' விகுதி பெற்று 'மலாஇகத்துமார்' என அழைக்கப்படுகின்றனர். தோழர்களைக் குறிக்கும் 'அசுகாபி' என்னும் அறபுச் சொல்லும் 'மார்' என்னும் பலர்பால் விகுதிபெற்று 'அசுகாபிமார்' என வழங்கப்படுகிறது. 'அசுகாபிமார்கள்' என்றும் வந்துள்ளது. நபிமார்கள், வலிமார்கள், மலாஇக்கத்துமார்கள் என இரட்டைப் பன்மை விகுதிகள் பெற்று அவ்வறபுச் சொற்கள் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் பயன்படுத்தப்படுவதுமுண்டு.

சில அறபுச் சொற்கள் ஒரே கருத்தை உடையனவாய்ப் பல்வேறு உருவங்களில் வருவதுண்டு. தோழர்கள் என்ற பொருளில் சாஹிப் என்னும் சொல் இவ்வாறு வழங்கப்படும். சகுபி, சாகிபு, சகாபி, அஸ்ஹாபி, அசுகாபி, சகாபா என்பன அதற்கான உதாரணங்களாகும்.

அறபு இயற்பெயர்கள் சிலவற்றைக் கௌரவமாகக் குறிப்பிடும் முகமாக அப்பெயர்களுடன் 'அர்' என்னும் உயர்திணைப் பலர்பால் விகுதியைச் சேர்ப்பர். முகம்மது என்பது முகமதர் என்றும் அகுமது என்பது 'அகுமதர்' என்றும், மகுமூது என்பது மகுமூதர் என்றும் பெயர்கள் கௌரவமாக வழங்கப்படுவதும் உண்டு. இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் முஸ்லிம் இயற் பெயர்களைக் குறிப்பிடுவதற்கு 'ஆர்' என்னும் பலர்பால் விகுதியைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களைக் காணலாம். அலி என்னும் பெயருடன் 'ஆர்' என்னும் விகுதி சேர்ந்து புணர்ச்சியிலே உடம்படு மெய்யான யகரம் பெற்று அலியார் எனவும், ஹசன் என்னும் பெயருடன் 'ஆர்' விகுதி பெற்று ஹசனுர்

எனவும் ஹுஸைன் என்னும் பெயருடன் 'ஆர்'. விகுதி பெற்று ஹுஸைஞர் எனவும் வந்துள்ளது.

தமிழ் இலக்கண மரபுக்கியைய வரும் மற்ருெரு விகுதி 'இயர்' என்பதாகும். இதுவும் பன்மையை உணர்த்தும் விகுதியாகும். தோழர்கள் என்று பொருள்படும் அசுகாப் என்னும் அறபுச் சொல்லுடன் 'இயர்' என்னும் பலர்பால் விகுதி சேர்ந்து 'அசுகாபியர்' எனவும் வந்துள்ளது. இவ்வாறு குறைஷியர் என்னும் அறபுச் சொல்லும் 'இயர்' என்னும் பலர்பால் விகுதியைப் பெற்றுள்ளமை காண்க. மக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைக் குறிப்பிட மக்கியர் என்றும் மதிஞவைச் சேர்ந்தவர்கள் என்பதைக் குறிப்பிட மதனியர் என்றும் 'இயர்' என்றும் பலர்பால் பகுதி வந்துள்ளமை ஈண்டு குறிப்பிடத் தக்கது. அறபு அல்லாதார் அஜமி எனப்படுவர். 'இயர்' விகுதிகொண்டு 'அஜமியர்' என்று இச்சொல் இடம்பெறும். அபிசீனிய நாட்டு மக்களைக் குறிப்பிட அபசியர் என்றும் மிசுறு நாட்டு மக்களைக் குறிப்பிட மிசுறியர் என்றும் எமன்நாட்டு மக்கள் எமனியர் என்றும் இன்னோரன்ன பல சொற்கள் வந்துள்ளன.

'மஃகான் புள்ளிமுன் அத்தே சாரியை' என்கின்றது தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (145) உருபியல் (13). தமிழ் இலக்கண மரபுக்கியைய மகரமாகிய புள்ளியீற்றுச் சொல்முன் வரும் சாரியை அத்துச் சாரியையாகும். இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள மகரவீற்று அறபுச் சொற்களும் இதே விதிக்கிணங்கப் புணர்த்தப்பட்டுள்ளமையைக்காணலாம். மக்காவில் உள்ள புனித கஃபா, ஹறம் என அழைக்கப்படுகிறது. ஹறம் என்ருல் புனிதமான என்பது பொருள். இந்த ஹறம் என்னும் அறபுச்சொல்லே 'கறம்' என இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் ஆளப்பட்டுள்ளது. கறம் என்னும் அறபுச்சொல் 'இன்' உருபை ஏற்கும்பொழுது 'அத்து'ச் சாரியை பெறுகின்றது. கறம் + இன் = கறம் + அத்து + இன் = கறத்தின் என வரும். இவ்வாறு வந்த பல அறபுச்சொற்கள் உள்ளன. ஒசீவனம் என்ருல் உணவு, ஒசீவனம் + ஐ = ஒசீவனம் + அத்து + ஐ = ஒசீவனத்தை. இஸ்லாம் + இல் = இஸ்லாம் + அத்து + இல் = இஸ்லாத்தில். கலம் என்பது அறபில் எழுதுகோல். கலம் + ஆல் = கலம் + அத்து + ஆல் = கலத்தால். கியாமம் என்பது இறுதி. கியாமம் + நாள் = கியாமம் + அத்து + நாள் = கியாமத்து நாள் என வரும். இது இறுதி நாளைக் குறிக்கின்றது. சம்சம் என்னும் கிணற்று நீர் சம்சத்துநீர் என வருகிறது. சம்சம் + நீர் = சம்சம் + அத்து + நீர் = சம்சத்து நீர். மகரத்தை இறுதியில் கொண்ட இடப் பெயர்களும் மக்கத்து, மதீனத்து என்பன போன்ற அத்துச்சாரியை பெறுகின்றன.

அல்லாஹ்வின் தீர்க்கதரிசி என்ற பொருளில் நபியுல்லாஹ் என்றும் அல்லாஹ்வின் நண்பர் என்ற பொருளில் ஹபீபுல்லாஹ் என்றும்

அல்லாஹ்வின் தூதர் என்ற பொருளில் (இ)றசூலுல்லாஹ் என்றும் அல்லாஹ்வின் நேசர் என்ற பொருளில் வலியுல்லாஹ் என்றும் அல்லாஹ்வின் அலி என்ற பொருளில் அலியுல்லாஹ் என்றும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் வந்துள்ளமையைக் காணலாம்.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் அறபு, பார்சிச் சொற்களை எழுதும்பொழுது அச்சொற்களின் நேரடி உச்சரிப்பைக் காட்டுவதற்குத் தமிழில் போதிய அளவு எழுத்துக்கள் உள்ளனவா? அவற்றை எடுத்துக் காட்ட கிரந்த எழுத்துக்கள் அவசியம்தானு? இவ்வினுக்களுக்கு விடை அளித்தல் எளிதன்று. எனினும் இவற்றிற்குரிய விடைகளைக் காணல் இன்றியமையாததாகும். இஸ்லாமிய அடிப்படையில் தமிழ் இலக்கியங்களைப்படைத்த முஸ்லிம் புலவர்கள் நூல்களிலிருந்து இத்தகைய வினுக்களுக்கு விடையளிக்கமுடியும். நபிகள் நாயகம் முகம்மது (சல்) அவர்களின் வாழ்க்கையைப் பொருளாகக்கொண்டு உமறுப்புலவர் யாத்த சீருப்புராணம் என்னும் காப்பியத்தில் அறபுச்சொற்கள் தமிழில் எழுதப் பட்டுள்ள முறைமையைக்கொண்டு இவ் வினுக்களுக்கு விடையளிக்க முடியும்.

நபிகள் நாயகம் முகம்மது (சல்) அவர்கள் மக்கா மக்களின் கொடுமையைத் தாங்கமுடியாது மக்காவைத் துறந்து ஏறத்தாழ நானூற்றி ஐம்பது கிலோமீட்டர் தொலைவிலுள்ள மதீனமாநகருக்குத் தங்களது இணைபிரியாதத் தோழரும் பிற்கால மாமனுருமான அபூபக்கர் (றலி) அவர்களுடன் சென்ற பயணம் அறபு மொழியில் 'ஹிஜ்றத்' என வழங்கப்படுகிறது. இந் நிகழ்ச்சியிலிருந்தே முஸ்லிம்களின் ஆண்டான ஹிஜ்றி ஆண்டு ஆரம்பமாகி உள்ளது. இது இன்றைக்கு ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன் ஆரம்பமாகியது. கிரந்த எழுத்துக்களையும் பயன்படுத்தி 'ஹிஜ்றத்' என எழுதும்பொழுது அறபு மூல மொழியிலுள்ள நேரடியான உச்சரிப்பை ஓரளவு பெறமுடிகிறது. ஆனுல் இப்பொழுது எமக்குக் கிடைத்துள்ள இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களிலே இச் சொல் பல்வேறு விதமாக எழுதப்படுகிறது. ஹிஜுறத் என்றும் கிஜுறத் என்றும் கிஜ்றத் என்றும் கிசுறத் என்றும் கிசுறத்து என்றும் இசுறத் என்றும் ஹிஜரத் என்றும் ஹிஜுறத் என்றும் வெவ்வேறு விதமாக எழுதப்படுகின்றது. ஆனுல் உமறுப்புலவர் தாம் இயற்றிய சீருப் புராண மூலப் பிரதியில் 'கிசுறத்து' என்றே எழுதிஇருத்தல் வேண்டும். ஏனெனில் சீருப் புராணத்தை 1842இல் முதன்முதல் பதிப்பித்த சேகுனுப்புலவர் என்று வழங்கப்படும் செய்கு அப்துல் காதிறு நயினுர் லெப்பை ஆலிம் புலவர் அவர்கள் இச் சொல்லை 'கிசுறத்து' என்றே குறிப்பிட்டுள்ளார். இதன்பின்னர் பதிப்பிக்கப்பட்ட சீருப்புராணப் பிரதிகளில் பதிப்பாசிரியர்களின் விருப்பு வெறுப்புக்கிணைய இச்சொல்லும்

இத்தகைய வேறு அறபு, பார்சிச் சொற்களும் திரிக்கப்பட்டும் மாற்றப் பட்டும் இடம் பெற்றுள்ளமையைக் காணலாம்.

முஹாஜிரீன் என்பது இத்தகைய மற்ஞேர் அறபுச்சொல். மக்கா வைத் துறந்து நபிகள் பெருமானுர் முகம்மது (சல்) அவர்களைத் தொடர்ந்து மதீனமாநகருக்குச் சென்றவர்களே இவ்வறபுச் சொல்லால் அழைக்கப்பட்டனர். துறந்து சென்றவர்கள் என்பதுவே இவ்வறபுச் சொல்லின் பொருள். இவ்வறபுச் சொல்லும் முஹாஜிரீன் எனவும் முஹாசிரீன் எனவும் முகாசிரீன் எனவும் பல்வேறு விதமாக எழுதப்படு கிறது. ஆனுல் சேகுனுப்புலவர் அவர்கள் பதிப்பித்த சீருப்புராணத்தி லும், இயற்றிய காப்பியங்களிலும் 'முகாசிறீன்' எனவே இவ்வறபுச் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்குகூட ரகர, றகரங்கள் இடம் மாறுவதும் உண்டு. உண்மையிலே பார்க்கும்பொழுது அறபு அரிச்சுவடி யிலுள்ள றகரம் வல்லெழுத்துக்குரிய உச்சரிப்பைக் கொண்டதாக இருக் கிறது. அறபு மொழியிலுள்ள றகரத்தை வல்லெழுத்தாலே எழுதுதல் தான் ஏற்புடைத்தாகும். றகர ஒற்று வரும்பொழுது மாத்திரம் இடை யின ரகர ஒற்ருக எழுதுதல்வேண்டும். ஏனெனில் றகரத்தைப் பொறுத்தவரையில் வல்லின ஒற்றும் இடையின ஒற்றும் உச்சரிப்பில் வேறுபடுகின்றமையினுலேயாம். எனவே எப்பொழுதும் ஒற்று அல்லாத இடங்களில் அறபு றகரம் வல்லின றகரமாக இருந்தால் மாத்திரமே அறபு மொழியிலுள்ள அவ்வெழுத்தின் உச்சரிப்பு வேறுபடாது இருக் கும். இத்தகைய தமிழ் எழுத்து கிரந்த எழுத்து, வல்லெழுத்து, இடை யின எழுத்து வேறுபாடு காரணமாக இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் ஒரே கருத்துள்ள பல சொற்கள் ஒரு சொல்லுக்குப் பதிலாக, இவ் வகராதியில் இடம் பெற்றுள்ளன. இந்த உச்சரிப்பு வேறுபாட்டைக் கருத்திற்கொண்டு எதிர் காலத்தில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் படைப்புகளைப் பதிப்பிப்பவர்கள் பணியாற்றினுல் ஓர் அறபுச்சொல் தமிழில் எழுதப்படும்பொழுது ஒரே உருவத்தை உடையதாக இருக்க வழிபிறக்கும்.

இதே போன்ற மற்ருெரு சொல் ஸுஜூது என்பது. இது முஸ்லிம் மக்கள் நாள்தோறும் ஐந்து தடவைகள் நிறைவேற்றும் தொழுகையில் ஒருநிலை. முழந்தாளிட்டு நெற்றியால் நிலத்தைத் தொடும்நிலைக்கு ஸுஜூது செய்வதை ஒருவகையில் ஒப்பிடலாம். இந்தச் சொல் பல் வேறுவிதமாக இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளது. ஸுஜூது என்றும் சுஜூது என்றும் சுசூது என்றும் வந்துள்ளது. தனித் தமிழில் வரும் சுசூது என்ற ஒலிக்குறிப்பையே சேகுனுப்புலவர் தமது காப்பியங்களிலும் தாம் பதிப்பித்த சீராப்புராணம் என்னும் காப்பியத்திலும பயன்படுத்தி உள்ளார். இஸ்லாமியத் தமிழ்

இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள பெரும்பாலான காப்பியங்களை இயற்றியவர்களும் அவற்றை முதன்முதல் பதிப்பித்தவர்களும் தமது படைப்புகளில் அறபு எழுத்துக்களை எழுதத் தனித் தமிழ் எழுத்துக்களையே பயன்படுத்தி உள்ளனர் என்பது புலனாகின்றது. இனிமேல் வரும் பதிப்புக்களிலும் இம்முறை பின்பற்றப்பட்டால் இவற்றைப் படிப்போருக்கு ஏற்படும் சிக்கல்கள் பெருமளவு குறைந்து விடும். தேவைப்படின், அடிக்குறிப்புக்களாக அறபு, பார்சிச் சொற்களின் சரியான உச்சரிப்புக்குச் சமமான உச்சரிப்பைப் பெறுவதற்காகக் கிரந்த எழுத்துக்களைப் பயன்படுத்தி அச்சொற்களை இடம் பெறச் செய்யலாம். அந்த அடிக்குறிப்புக்களிலே அவற்றிற்குரிய கருத்துக்களையும் குறிப்பிடலாம்.

தகர ஒற்றைக் கொண்டு முடியும் சில அறபுச் சொற்களில் தகர ஒற்று உச்சரிக்கப்படுவதில்லை. அத்தகைய சந்தர்ப்பங்களில் இறுதித் தகர ஒற்றுக்கு முன்னதாக வரும் உயிர் எழுத்து நீட்டி உச்சரிக்கப் படுவது இயல்பாகும். இஸ்லாமிய மூலமந்திரத்தைக் குறிக்கும் கலிமா என்னும் சொல் அறபில் எழுதப்படும்பொழுது கலிமத் என்றே எழுதப்படுகிறது. ஆனால் அதனை உச்சரிக்கும் பொழுது அது கலிமா எனவே அறபு மொழியிலும் உச்சரிக்கப்படுகிறது. அமைதி என்னும் பொருளில் வரும் சலாமா என்னும் அறபுச்சொல் அறபில் சலாமத் என்று எழுதப்பட்ட போதிலும்கூட தகரவொற்றுவிடப்பட்டு, சலாமா என்றே உச்சரிக்கப்படுகிறது.

இன்னும் சில சந்தர்ப்பங்களில் சில சொற்களில் இவ்வாறு இறுதியில் வரும் தகரவொற்று விடுபடாது அத்தோடு துகரமும் பெற்று இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் ஆளப்பட்டுள்ளதைக் காணலாம். மஃறிபத் என்று அறபில் எழுதப்படும் அறபுச்சொல் அறபில் மஃறிபா என்று உச்சரிக்கப்படுகிறது. ஆனால் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் கவிதையில் வரும்பொழுது மஃறிபத்து என்றே வழங்கப்படுகிறது. கேடு என்ற பொருளில் வரும் முசீபத் என்பது முசீபத்து என்றும், பேறு என்ற பொருளில் வரும் நிஃமத் என்பது நிகுமத்து என்றும், உடல்நலம் என்னும் பொருளில் வரும் ஆபியத் என்பது ஆபியத்து என்றும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களில் வந்துள்ளன என்பது ஈண்டு குறிப்பிடத் தக்கது.

முஸ்லிம் மக்களிடையே அறபுமொழி பெற்றிருந்த முக்கியத்துவம் காரணமாக அதன் பயிற்சி இன்றியமையாததொன்றாக இருந்து வந்தது. அறபு மொழிப் பயிற்சி வளர்ச்சி அடைய வேண்டும் என்ற குறிக்கோளுடன் அறபு அகராதிகள் தமிழ் பேசும் முஸ்லிம் மக்களிடையே தோன்றலாயின. அத்தகைய அகராதிகளுள் ஒன்று 'துஹ்ற

பத்துஸ் ஸமதிய்யா பீ தர்ஜுமதில் அல்பாழில் அறபிய்யா' என்பதாகும். இங்கு அறபுச் சொற்களுக்குக் கருத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அத்தகைய தமிழ்க் கருத்துக்கள் அறபு எழுத்துக்களிலே எழுதப்பட்டுள்ளன. பொதுவாக முஸ்லிம் மக்களிடையே வழங்கும் அறபுத் தமிழ் நடையிலே இவ்வகராதி அமைந்துள்ளது. இதனை அறபு-அறபுத் தமிழ் அகராதி என அழைக்கலாம். இதனை இயற்றியவர் முதுகுளத்தூரைச் சேர்ந்தவர். அங்கிருந்த மத்றசது மன்பஉல் ஹஸனாத் என்னும் அறபுக் கல்லூரியில் போதனாசிரியராகக் கடமையாற்றியவர், மௌலவி அல்ஹாஜ் முஹம்மது இப்ராஹீம் என்பவர் இவ்வகராதியின் ஆசிரியர். இவர் ஹஸன் லப்பை ஆலிமின் புதல்வர். இவரின் மூதாதையர் சைகு லப்பை ஆலிம் இப்னு நயினா முஹம்மது லப்பை இப்னு முஹம்மது லப்பை இப்னு சுலைமான் லெப்பை. இவர்கள் அனைவரும் முதுகுளத்தூரைச் சேர்ந்தவர்கள். மேலப்பாளையத்தைச் சேர்ந்த மஹ்மூத் லப்பை என்பவர் அச்சுக்காக இதனைப் பிரதி செய்துள்ளார். இவ்வகராதி ஹிஜ்றி 1331வது வருடம் றபீஉல் அவ்வல் மாதம் இருபத்தொன்பதாம் திகதி அதாவது 1913ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஏழாம் திகதி வெள்ளிக்கிழமை நிறைவுற்றது.

அறபு-அறபுத் தமிழ் அகராதியில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு எழுத்தையும் அறிமுகம் செய்து வைக்கையில் அவ்வெழுத்தைப் பற்றிய விவரத்தை இவ்வகராதியில் ஆசிரியர் தந்துள்ளார். அல்குர்ஆனிலே இவ் அறபு எழுத்து எத்தனை தடவைகள் ஆளப்பட்டுள்ளன என்பதையும் குறிப்பிடுகிறார். எடுத்துக்காட்டாக அலிப் என்னும் அறபு அரிச்சுவடியின் முதல் எழுத்தைப் பார்ப்போம். இந்த அலிப் என்னும் முதல் எழுத்து பதின்மூன்று சூறத்து (அத்தியாயங்)களில் முதல் எழுத்தாக வருகின்றது. அல்குர் ஆனிலே அமைந்துள்ள அறபு எழுத்துக்களின் தொகை 3,35,992 என்றும் அவற்றுள் அலிப் எனும் முதல் எழுத்தின் எண்ணிக்கை 48,970 என்றும் குறிப்பிட்ட இவ்வகராதி ஆசிரியர் அலிபின் குணம் நெருப்பு என்றும், அதற்குச் சமமான எண் ஒன்று என்றும் அலிபு உச்சரிக்கப்படும் இடம் தொண்டையின் மேல் புறம் என்றும் விவரிக்கிறார். இதே போன்று அறபு அரிச்சுவடியில் உள்ள எல்லா எழுத்துக்களையும் வருணிக்கிறார். இந்த அகராதி இயற்றப்பட்டதன் குறிக்கோள் 'அறபுத் தமிழ் வாசிக்கும் பிள்ளைகள் அறபு நடையின் பழக்கத்தைப் பெறச் செய்வதே' என்றும் குறிப்பிடுகிறார், இதன் ஆசிரியர். இவ்வகராதி இரண்டு பாகங்களாலாயது. ஒரு தொகுதியாக வெளியிடப்பட்டுள்ளது.

இது வெளிவருவதற்கு எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 1905ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் மற்றொரு அறபு-தமிழ் அகராதி

வெளியிடப்பட்டது. தமிழ் பேசும் மக்களிடையே முதன் முதலில் வெளிவந்த அறபுத் தமிழ் அகராதி இது என்று கூறலாம். சஞ்சிகை களாக இவ்வகராதி வெளியிடப்பட்டுள்ளது. 504 பக்கங்களைக் கொண்டது இவ்வகராதி. ஆனால் இவ்வகராதி அறபு அரிச்சுவடியின் முதல் மூன்று எழுத்துக்களால் ஆரம்பிக்கும் சொற்களை முழுமையாகக் கொண்டும் நான்காவது எழுத்தால் ஆரம்பிக்கும் சொற்களின் ஒரு பகுதியைக் கொண்டும் அச்சிடப்பட்டுள்ளது. எல்லா அறபு எழுத்துக் களுக்கும் உள்ள சொற்களைக் கொண்டதாக இந்த அகராதி அமைய வில்லை எனத் தெரிகிறது. இதன் அமைப்பு மற்றையதைவிட மாறு பட்டிருக்கிறது. முதலில் அறபுச் சொல்லும் அதன் கருத்தும் அதன் அடிச்சொல்லும் (தாதும்) வரிசைக் கிரமமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் சிறப்பமிசம் என்னவெனின் அறபுச்சொல் அறபு எழுத்திலும் அதன் உச்சரிப்புத் தமிழிலும் அதன் அடிச்சொல் அறபு எழுத்திலும் தரப்பட்டுள்ளமையேயாம். ஒவ்வோர் அறபுச் சொல்லுக்கும் பல கருத்துக்கள் தரப்பட்டுள்ளன. பலசஞ்சிகைகளாக வெளிவந்து பின்னர் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளது, இந்த அகராதி. அறபு மொழியில் பாண்டித்தியம் பெற்றோரும் பெறவிரும்புவோரும் பயனடையும் நோக் கத்துடன் வெளியிடப்பட்டது இவ்வகராதி என்று இவ்வகராதியைப் பற்றி வெளியிடப்பட்ட ஒரு கருத்துக் குறிப்பிடுகிறது.

இவ்வகராதியை இயற்றியவர் ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாகிபு என்பவராவார். இவர் ஒரு யூனனி வைத்தியர். சென்னை மாநகரத்தைச் சேர்ந்தவர். பல யூனனி வைத்திய நூல்களின் ஆசிரிய ராகவும் திகழ்ந்தார் எனக் குறிப்பிடப்படுகிறது. இதனை மவுலவி ஹாஜி குலாம் றசூல் சாகிபு அவர்களும் நாகூர் மகாவித்துவான் குலாம் காதிறு நாவலர் அவர்களும் பரிசோதித்துள்ளனர். முன்னுரை எதுவுமே இவ்வகராதியில் இடம் பெறவில்லை.

மற்றொரு அகராதி இலங்கையில் இயற்றப்பட்டுள்ளது. இது 'காமூசுல் அறபி வ அர்வி' என அறபியில் அழைக்கப்படுகிறது. அறபு-தமிழ் அகராதி என்பது அதன் பொருள். இது இரண்டு பாகங்களைக் கொண்டதாக உள்ளது. முதலில் அறபுச்சொற்கள் அறபு எழுத்திலும் பின்னர் அறபுச் சொல்லின் தமிழ்க் கருத்து அறபு எழுத்துக்களிலும் தரப்பட்டுள்ளன. இதனையும் அறபு-அறபுத் தமிழ் அகராதி என்றே அழைக்கலாம். அறபு-அறபுத் தமிழ் அகராதியை அறபு எழுத்துக் களில் பயிற்சி இல்லாதவர்களால் பயன்படுத்த முடியாது. இதன் ஆசிரியர் ஸையது யாஸீன் மௌலானா என்பவராவார். இவரின் முழுப்பெயர் ஸையது யாஸீன் இப்னு ஸையிது முஹம்மது ஹஸனிய் யுல் ஹாஷிமிய்யி என்பதாகும். இவர் இலங்கையில் தென் மாகாணத் தில் உள்ள வலிகாமம் என்னும் நகரில் இருக்கும் வலிப்பிட்டி என்னும்

ஊரைச் சேர்ந்தவராவார். இவர் ஓர் ஆத்மீக ஞானி. இவருடைய ஆன்மீகக் கொள்கைகளைப் பின்பற்றுவோர் தமிழகத்திலும் உள்ளனர்.

இத்தகைய ஓர் அகராதியை இயற்றியதற்கான காரணத்தை இவ் வகராதி ஆசிரியர் இவ்வாறு கூறுகிறார்.

''சுத்தமான தமிழில் அறபி கற்றுக்கொடுக்கப்படாததால் அறபி அறிஞர்களில் அனேகரின் தமிழ் மொழி பெயர்ப்புக்களில் பெருந் தவறுகள் காணப்படுகின்றன. அத்தோடு அறபி வாக்கியங்களின் சுத்தமான கருத்துக்களும் மறைபட்டுவிடுகின்றன. தத்துவ, பூத, பௌதீக, சாத்திரங்களும், சரித்திரம், வானசாஸ்திரம், பூமிசாஸ்திரம், ஏகேச்சுவரவாதம், வைத்தியம், தர்க்கம், கலை, இலக்கியம், ஐந்திரம், ரஸாயனம் முதலான முக்கிய அறிவுகளும் மத்றசாக் (அறபுக்கல்லூரி) களில் போதிய அளவில் கற்றுக்கொடுக்கப்படாமல் இருத்தலால் அவை களில் காணப்படும் விசேஷச் சொற்களில் சில அர்த்தமற்றனவாய்ப் பயன்படுத்தப்படுவதுடன் இவ்வறிவுகளும் புறக்கணிக்கப்படுகின்றன. இக்காரணங்களால் அறபு பாஷா ஞானம், இயற்றலறிவு, இஸ்லாமிய தத்துவ போதனை, சாதனை, அனுஷ்டானம் இவைகள் மிக மிகக் குறைந்து காணப்படுகின்றமை கண்கூடு. ஆதலால் எம்மால் கூடிய பிரயாசையின் பேரில் மேற்கண்ட குறைகளில் ஒரு சிலவற்றையாவது சமாளிப்பான் வேண்டி அறிவுவகை விகற்பங்களால் பேதப்படும் அர்த் தங்களை அறபுச் சொற்களுக்குச் சுத்தமான தமிழில் அறபி லிபியில் எழுதுவதுடன் புதியவையும் புதிதாய் நுழைந்தனவுமான அநேக அறபுச் சொற்களின் அர்த்தங்களும் இதில் வரையப்படுகின்றன. இதனால் தமிழ் முஸ்லிம்களின் அறபு அபிவிருத்திக்கும் அறபுத் தமிழுக்கும் புத்துயிரளிப்பதுடன் இஸ்லாமிய கலையும் அபிவிருத்தி அடைய ஏதுவாகிறது. நாளடைவில் இதனைத் தமிழ் லிபியில் வெளியிடவும் கருதியுள்ளோம்''.

இதனை அச்சிடுவதற்காக அறபு லிபியில் எழுதியவர் சென்னை யைச் சேர்ந்த மஹ்மூத் லெப்பை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஹிஜ்றி 1356 முஹறம் மாதம் 19ஆந் திகதி சனிக்கிழமை முடிவெய் தியது.

முதலிரண்டு அகராதிகளையும் சையிது முகம்மது (''ஹஸன்'') அவர்களும் பின்னையதை ஆசிரியரின் மருகர் வலிகாமம் சையதுல் ஹாரிஸ் மௌலானா அல் ஹாஷிமி அவர்களும் தந்துதவினார்கள்.

இம்மூன்று அகராதிகளும் அறபி மொழி பயிற்சி இல்லாதாருக்குப் பயனற்றவை ஆகின்றன. இரண்டாவதில் தமிழ் உச்சரிப்புக் கொடுக் கப்பட்டிருந்த போதிலும் அது முழுமையானதாக இல்லை. எனவே எமது இம் முயற்சி இன்றியமையாததாகின்றது.

இஸ்லாமியத் தமிழ் இலக்கிய அறபுச்சொல் அகராதியில் இஸ்லாமிய தமிழிலக்கியங்களில் இடம் பெற்றுள்ள தனித்த அறபுச் சொற்களும், அறபுச் சொற்களுடன் தமிழ் வடிவம் இணைந்த சொற்களும், தொடர்களும் தமிழ் எழுத்துக்களின் வரிசைப்படி அமைக்கப் பட்டுள்ளன. கிரந்த எழுத்துக்களில் தொடங்கி அமைந்த அறபுச் சொற்களின் வரிசை கடைசியாக இடம் பெற்றுள்ளது. இவ்வகராதியில் ஓர் அறபுச்சொல் அல்லது தொடரின் விளக்கம் பின்வரும் வரிசைப் படி தரப்பட்டுள்ளது.

1. இஸ்லாமிய தமிழிலக்கியங்களில் இடம் பெற்றுள்ள அறபுச் சொல் அல்லது தொடர்.

2. அந்தந்த சொல் அல்லது தொடர்களுக்குரிய ஒலியனியல் குறியீடுகள் (Phonemic transcription).

3. இலக்கண விளக்கம்.

4. இஸ்லாமிய தமிழிலக்கியங்களில் இடம் பெற்றுள்ள அறபுச் சொற்களின் அறபு மூலம் ஒலியனியல் குறியீட்டில் இடம் பெறல்.

5. இடம் பெற்றுள்ள அறபுச்சொல் அல்லது தொடர்களின் நேரடியான தமிழ் பொருள்.

6. இஸ்லாமிய அடிப்படையில் தேவையான விளக்கங்கள்.

7. அறபுச்சொல் அல்லது தொடர் இடம்பெற்றுள்ள இஸ்லாமிய தமிழ் இலக்கியங்களிலிருந்து ஒரு எடுத்துக்காட்டு-நூலின் பெயர், படலம், பாடல் எண்ணுடன் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம் முறையின் கீழ்தான் இவ்வகராதியில் இடம் பெற்றுள்ள அறபுச் சொற்கள் விளக்கம் பெறுகின்றன. இது ஒரு பொது அமைப்பு முறையாகும். இவ் ஏழு பகுதிகளும் ஒவ்வோர் அறபுச் சொல்லிலும் இடம் பெறத்தவறினும் ஏழு பகுதிகளுள் ஒன்றோ இரண்டோ குறைந்து அமைந்திருக்கலாம். எனினும் இவற்றுள் 1,2,3,5,7, ஆகிய ஐந்து பகுதிகளும் இவ்வகராதியில் இடம் பெற்றுள்ள அனைத்து அறபுச் சொற்களுக்கும் தரப்பட்டுள்ளன.

இது முழுமையானது ஒன்று அன்று. எனினும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தை ஆய்வு செய்வோருக்கு அங்குள்ள அறபுச் சொற்களை இனங்கண்டு கொள்வதற்குப் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

**அக்கன்** akkan, பெ. பார். ஹக்கன்.

காதலால வையும் வேண்டாமெனவவன் கழற **அக்கன்** தூதரும்
சீறுப்புராணம் : 90 : 82.

**அக்கில்** akkil, பெ. <ȧql. عقل> கூரிய புத்தி.

அம்முறு மனத்தினுள் **அக்கிலும்** மாட்சியும்
இறவுசுல்கூல் படைப்போர் : 18 : 3.

**அக்கீக்கா** akkīkkā, பெ. <ȧqīqā. عقيقة>

ஒரு வகையான தர்மம். (ஒரு பிள்ளை பெற்றவுடன் தலையிலிருக்கும் உரோமத்தைக் களைந்து அந்த உரோமத்தின் எடைக்கு வெள்ளியை நிறுத்தெடுத்து, அதனைத் தர்மமாக ஏழைகளுக்கு அளித்த பின்னர், இரண்டு ஆடுகள் தர்மமாக வழங்கப்பட வேண்டும்).

கொறியி ரண்டறுத் துடன் **அக்கீக்கா** வினைக் கொடுத்து
சீறுப்புராணம் : 70 : 17

**அக்கீல்** akkil, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.
**அக்கீல்** என்பவன் பெறு
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் 28 : 29 (1209).

**அக்குபர்** akkupar, பெ. அ. பார். அக்பர்.

**அக்பர்** akpar. பெ. அ. <kubra كبر> பெரிய.

அக்கண நபி அல்லாகு **அக்குபர்** என்று ஒரு மூன்று ஓத
இக்கணம் சொல்லாயி லாகஇல் லல்லாஃ ஒல்லாகு
**அக்பர்** என்று அன்பின் தோன்றல் அறையவே பின் அல்லாகு
**அக்குபர்** ஒ லில்லாகில் கம்து என்றனர் அமரர் கோமான்
திருமணிமாலை 26 : 123.

**அக்யாறு** akyāṟu, பெ. <aḥyār اخيار> நன்மை.

அவரினும் வியந்துளோரீரைந்து **அக்யாறு**வானோர்
வண்ணக் களஞ்சியப் புலவா : குத்புநாயகம் 7 : 11.

**அகதியத்து** akatiyattu, பெ. <ahad. احديت> பார்.
மகுலியத்து. ஒன்றுய தன்மை.
மஸ்தான் சாகிபு பாடல் : வஸ்துதயத்திறனந்தம்.

**அகது** akatu, பெ. <ahad. احد> ஒருவனைவன்.

ஆதியாய் **அகதாய்** ஆலமடங்கலுஞ் சமதாய் நின்றே
இறவுசுல்கூல் படைப்போர் 9 : 37.

**அகது உகது வாகிது** akatu ukatu vākitu, தொ. 'ஒருவன்' என்பதைக் குறிக்கும் சொற்றொடர்.

ஆதியாயாண்டவன்ன **அகது உகது வாகிது** வாய்
சோதியாய் நின் மலமாய்ச் சூழ்ந்தாய் பராபரமே
மஸ்தான் சாகிபு பாடல் : பராபரக்கண்ணி : 2.

**அகபா** akpā, பெ.

மரு நகும் மேனி வள்ளல் மன நகும் *அகபாக்கையில்*

புதுகுஷ்ஷாம் : 23 : 234.

**அகமது** akamatu, இ. பெ. ஒரு கல்விமான்.

மலையுமான் சுலையுமான் சொல்
கல்விமான் *அகமதி*ன் சொல்

பனியகுமது மரைக்காயர் : சீருப் புராணம் : 1 : 10.

**அகாயித்** akāyit, பெ. <āqāid. عقائد>

இது 'கலாம்' என்றும் அழைக்கப்படுகிறது. இஸ்லாத்தின் 'ஈமான்' என்னும் நம்பிக்கைபற்றி விளக்கும் பகுதி. சிறந்த அறிவு.

கொள்ளவேண்டிய வுறுதியினிருணயங் கொளுவி
யுள்ளமேயறு வகையினும் பிறவினு முதித்துத்
தள்ளருந்தகைத் தாயிசுலாமுழித் தனித்த
வெள்ளலின்றுல வுற்றவாமுயரகா *யிதுவும்*

ஆரிபு நாயகம் : 8 : 22.

**அகீல்** akīl, பெ. பார். அக்கில்.

*அகீலொடு* புத்தியதற் கன்னைபிதா

ஞானபபுகழ்ச்சி : 664.

**அகுலாக்** akulāk, பெ. <aḥlāq.> நல்லொழுக்கம்.

*திருந்து சீரகு லாக்கெனு*ம் குணமுளர் *சிறப்ப*

நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 5 : 101.

**அகுமது** akumatu, பெ.

முகம்மது நபி (சல்) அவர்களின் மற்றொரு பெயர்.

குறைசி குலதில கமதின நகர் தனி
லரசு புரியும் *அகுமது* முகம்மதுநபி யிறசூலே

காசீம் திருப்புகழ் : 1.

**அகுமது லெப்பை ஆலிம்** akumatu leppai ālim, பெ.

காயல் பட்டணத்தில் வாழ்ந்த ஓர் அறிஞர். குத்பு நாயகம் என்னும் நூலியற்ற உரை வழங்கியவர்.

நீதமே வந்த ஞானி *அகுமதி லெப்பை ஆலிம்*

சேகுனாப்புலவர் : குத்பு நாயகம் : 1 : 2.

**அகுறசு** akuṟacu, இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியார்.

திருத்தும் உரை பொறித்த திருமுகம் *அகுறசு*
அருள் உமரு செங்கை நல்கி

புதுகுஷ்ஷாம் : 16 : 10.

**அச்சு** accu, பார். ஹஜ்.

தவங்கடந்தாயி னுறுமக்கத்து *அச்சு*நற் றண்டலைவர்
தவங்கடந்தாயி னங்காப் பேர்னம் மதீனத்தூந் தாரடியேத்
தவங்கடந்தாயி யைகூடாவகத்துனற் றுசனின் படி
தவங்கடந்தாயி டைப்பொன்பெறவேட்பது தாவத்தினே

திருமதீனத்தந்தாதி : 91.

**அச்சுமரு** accumarā, பார். ஹஜ்உம்ரு.

*அச்சுமரு* வெனுமரிய மாதவ
நிச்சயித் தைம்பது நிறைந்த வேதியர்
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 28 : 14.

**அச்சுவத்து** accuvattu, இ. பெ. ஒரு சேனைத் தலைவர்.

சேனைத் தலைவர் *அச்சுவத்தும்*
பனியகுமது மரைக்காயர் : சீறப்புராணம் : 12 : 76.

**அசது** acatu, பெ. ஒரு கூட்டத்தின் பெயர்.

அசையா உருமேறு எனமுழங்கும்
*அசதுக்* கூட்டத்து அறபிகளும்
பனியகுமது மரைக்காயர் : சீறப்புராணம் : 12 : 20.

**அசமி** acami, பெ. <ajmi. عجمي> அறபு அல்லாதவர்கள்.

பொன்றிலாப் புகழ்சேர் *அசமி*
பதுறுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 13 : 14.

**அசர் லுகர் பஜ்று** acar lukar pajru, பெ. <asr luhar fajr. عصر ظهر فجر> பிற்பகலின் நடுப்பகுதியிலும், நண்பகலிலும், அதிகாலை சூரிய உதயத்துக்கு முன்னரும் முறையே நிறைவேற்றப் படும் தொழுகைகள்.

பொருவில் *அசர் லுகர் பஜ்று*ளவும் பரிபூரணமாய்
ஞானமணி மாலை : 256.

**அசறு** acaru, பெ. <asr. عصر> பிற்பகல் நடுப்பகுதி நேரத் தொழுகை. இது ஐவேளைத் தொழுகைகளுள் ஒன்று.

ஆரணப் பொருளை ஓர்ந்த
அளவினில் *அசறு* தோன்ற
சீறப்புராணம் : 78 : 22.

**அசறு** acaṟu, عصر> பெ. காலத்தைக் குறிக்கும் ஒரு சொல்.

கணிக்கு மெய்ம்மறை *யசறி*னதானையும் காட்டி
புதுகுஷ்ஷாம் : 10 : 35.

**அசனா** acaṉā, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

துண்ணில் *அசனா* மகமுதலாம்
புதுகுஷ்ஷாம் : 41 : 161.

**அசனா** acaṉā, இ. பெ. ஒரு நகரத்தின் பெயர்.

போது அலர்த்த பொழில் *அசனா*புர துணர்ப்பசும்
பனியகுமது மரைக்காயர் : சீறப்புராணம் : 3 : 28 (91).

**அசனர்** acaṉār, இ. பெ. அலி (றலி) அவர்களின் புதல்வர்.

வென்றி அலியே *அசனே* அருள்
வேந்தே என்ன விளித் துரைப்பான்
பனியகுமது மரைக்காயர் : சீறப்புராணம் : 22 : 35.

**அசா** acā, பெ. <ʿasa. عصا> ஊன்றுகோல்.

*கையினில் அசாகோல் ஒன்றினைத் தாங்கி*
சீறாப்புராணம் : 74 : 39.

**அசாசில்** acācil, பெ. பார். அஜாசில்.

*செரியு மாத மொடசாசிலும் மருளிற் செப்பும்*
ஞானமணிமாலை : 177.

**அசாபு** acāpu, பெ. <ʿasāb. اعصاب> நெருங்கிய தகப்பன்வழி உறவினர்.

*ஆகையால் எனதுறும் அசாபுள் ளோர்களே*
பதுறுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 64 : 26.

**அசியம்** aciyam, இ. பெ. ஒரு ஆணின் பெயர்.

*வாலிய திறத்தர் அசியம் மகதனை*
புகுஷ்ஷாம் : 38 : 9.

**அசீசு** acīcu, இ. பெ. <aziz. عزيز>
ஆற்றல் மிக்கவன். அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். யாறகுமான்.
இராஜ நாயகம் : 36 : 37.

**அசீசுல் ஹக்கீம்** acīcul hakkīm, பெ. பார். அசீசு, கக்கீம்.

*கருவினுங் கருவெனக் காணு ணுதவன்*
*மருவினு மருவென வயங்கும் பல்லுயி*
*ருருவினு முருவென வுவந்து காத்தருள்*
*வெருவிலா வசீசுல் ஹக் கீமென் மேலவா*
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 35 : 80

**அசுஅரி** acuari, இ. பெ. ஒரு கோத்திரத்தின் பெயர்.

*மொய்ம்புடை அசுஅரிய்யர்*
புதுகுஷ்ஷாம் : 40 : 247.

**அசுதமு** acutamu, இ. பெ. பனீ கிவால் கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

*தடம்புயத் தக்கீபு கவாசின் அசுதமு*
பனியகுமது மரைக்கயார் : சீறாப்புராணம் : 27 : 2 (1084).

**அசுல்** acul, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*தண்டார் மசுலமா அருமைத் தனயர் அசுலும்*
புதுகுஷ்ஷாம் : 15 : 5.

**அசுலான்** aculān, இ. பெ. ஒரு ஆணின் பெயர்.

*வன் கரத்து ஐயில் சியாது வரும் மகன் அசுலான் தன்னின*
புதுகுஷ்ஷாம் : 23 : 114.

**அசுவது** acuvatu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*கடையினில் அசுவது நிற்பக் கண்டு*
பனியகுமது மரைக்காயா : சீறாப்புராணம் : 34 : 22 (1492).

**அசுநூச்** acunūcu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

களவன்றிற வுறுசேனைகள் கடலென்றணி வரவே
தளமொன்றிய வசுநூ சுயர் தலைவன்றிசை பாடுவான்

திருமணிமாலை : 5 : 63.

**அசுமா** acumā, இ. பெ. ஒரு பெண்ணின் பெயர்.

பேறுரை பெற்ற மேன்மைப் பெண்கொடி அசுமா என்னும்
தேறுரை யன்னை நோக்கித் திறவணி யெந்தை கொண்ட
வாறுரை மின்க ளென்றார் வடிவயில் அப்துல்லாவே

புதுகுஷ்ஷாம் : 27 : 4.

**அசுமா** acumā, பெ. ப. <ism. أسماء> பெயர்கள்.

புக்கு மாக்களை யொருவரி னெதிரி ரீஇப்புனிதமார் அசமாக்கள்
தொக்க வாகிய வொன்றெழி ஆயிரந் தொடர்பொடு நனியோதி

ஆரிபு நாயகம் : 10 : 8.

**அசுவர்** acuvar, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

அடல்புடைத்த வாசிமன்னர் ஐந்து நூற்றின் அசுவர்சேய்

புதுகுஷ்ஷாம் : 30 : 75.

**அசுறபி** acurapi, பெ. <asrufi (Parsi) أشرفی> ஒரு நாணயம்.

திறவலர் தம்மைக் கூவி யரியொளி நிகருந் தங்கத்
தசுறபி யிருபது ஈந்து

பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 27 : 4.

**அசுறாறு** acurāru, பெ. <asrār أسرار> இரகசியங்கள்.

கருணை அசுறாறு குந்தலம்

சாதுலி நாயகம் : 20 : 1.

**அசுஹது(க்) கலிமா** acuhatukkalimā, தொ. <ashad kalimā. أشهد كلمة > பார். கலிமா.

இரண்டாங் கலிமா அஷ்ஹது அன்லா இலாக இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதுர்றசூலுல்லாஹ் — வணக்கத்துக்குரிய நாயன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என சாட்சியம் கூறுகின்றேன். அவனது தூதர் முகம்மது என்றும் சாட்சியம் கூறுகின்றேன்.

வரிசையி னபியுல் லாமுகம்மதே உண்மைத் தூதென்று
அரசல ருரைத்தீ மான்கொண்டு அசுஹதுக்கலிமா இன்ப

நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 16 : 20.

**அசுஹாபி** acuhāpi, பெ. <ashāb. أصحاب> (நபிகளுடைய) தோழர்.

மக்க மாநகர் விடுத்துநன் மதீனமா நகரம்
புக்கு தற்கிட மெனவரு நெறியினிற் புறத்தி
லொக்க லோடசு ஹாபிக ளொவ்வொரு பெயரா

சீறாப்புராணம் : 52 : 2.

**அடவு** aṭavu, பெ. பார். அதபு.

அடவுட னோதி நின்றே னதுவன்றி நாற்பதரி நாள்

பதறுத்தீன் புலவா : முகியித்தீன் புராணம் : 14 : 10.

**அத்தகிய்யாத்து** attakiyyāttu, பெ. <attakiyāt. التحيات>
தொழுகையில் ஓர் இருக்கை.
அகற்றுமவ் விடங்கிடந்த சுசூது தீர்ந்து தன்மேல்
வகுத்த *அத்தகிய்யாத்*தினி லிருந்திடில் வந்து
பகுத்திடுந்து டைமீதினி லேறித் தன்படத்தை
முகத்தில் வைத்து மேற்கந்தர முற்றுஞ் சுற்றியதே
வண்ணக்களஞ்சியப் புலவர் : குத்பு நாயகம் : 10 : 5.

**அத்தகியாத்** attakiyāt, பெ. பார். அத்தஹிய்யாத்.
*அத்தகி யாத்தி*ஞர்ந்திடு பொருடான்
சுத்த மாகிய தூயநற் செயல்களும்
மிகுருசு மாலை : 593.

**அத்தர்** attar, பெ. <atr. عطر> வாசனைத் திரவியம்.
சவுரி *அத்தர்* புடை மல்க
புதுகுஷ்ஷாம் : 22 : 48.

**அத்தஹிய்யாத்** attahiyyāt, பெ. <attahiyyāt. التحيات>
என்றுமுள்ளமை.
*அத்தஹிய் யாத்*தென் றருணபி மொழிந்தார்
எத்து மதின்பொரு ளென்று முள்ளமையும்
மிகுருசு மாலை : 593.

**அத்தாசு** attācu, இ. பெ. ஒரு பெயர்.
அண்ணலு முரைப்பச் செவ்வி யகமகிழ்ந்த *அத்தா*சென்போன்
சீறாப்புராணம் : 4 : 25.

**அதபு** atapu, பெ. <adab. ادب> நன்னடத்தை.
அறிவு *அதபு* அறமுறை
சீறாப்புராணம : 6 : 1.

**அதர்வு** atarvu, இ. பெ. நபித் தோழர்களுள் ஒருவர்.
மருவும் *அதர்வு*என் பவர்க்கும்
பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம் : 32 : 17 (1357).

**அதல்** atal, இ. பெ. <adl. عدل> நீதியாளன். அல்லாஹ்வின்
அழகுதிருநாமங்களுள் ஒன்று. பார். யாறகுமான்.
இராஜநாயகம் : 36 : 37.

**அதவி** atavi, இ. பெ. ஒரு கோத்திரத்தின் பெயர்.
*அதவி*யின் கிளையவு
புதுகுஷ்ஷாம் : 30 : 106.

**அதனா** atanā, பெ. ஒரு திரை.
உரை *அதனா* வென்ற திரை
மிகுருசு மாலை : 560.

**அதா** atā, பெ. <ada. ஒருவன் பெயர்.
என்று எழுதிடுதல் வேண்டும் என்றனர் *அதா*வின் சொற்போல்
புதுகுஷ்ஷாம் : 31 : 76.

**அதாபன்** atāpaṉ, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.
யாவர்க்கும் மிக வெதுப்பம் புரிந்து நின்றனன்
*அதாபன்* எனும் பெயர் பொலிந்தான்
திருமணிமாலை : 21 : 22.

**அதாபு** atāpu, பெ. <ȧzāb. عذاب> தண்டனை.
*அதாபு* என்ருெரு பிணி பிடிக்கும்
சீருபபுராணம் : 27 : 120.

**அதி** ati, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவரின் பெயர்.
நாமமே நிறுத்தம் ஒற்றர் நாயகம் ஆமிறு ஈன்ற
மாமகன் *அதி* யென்ருேதும் மாதவர் விரைவின் வந்தார்
புதுகுஷ்ஷாம் : 15 : 65.

**அதிய்** atiy, பெ. ஓர் ஆணின் பெயர்.
ஆசிம் ருபிகும் *அதிய்யு* மெசீதும்
புதுகுஷ்ஷாம் : 36 : 124.

**அதின்** atiṉ பெ. <adn. عدن> ஒரு சுவர்க்கத்தின் பெயர்.
கதிர்போ லவேஇலங்கக் கண்டநடுச் சொர்க்கம்
*அதின்*என் றுரைத்தார் அறிந்து
மிகுருசு மாலை : 473.

**அதுறசூ** aturacū, இ. பெ. ஓர் இடத்தின் பெயர்.
இனத்தர்வாழ் *அதுற சூ* என்று இயம்பிய தலத்துளோரும்
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 33 : 43 (1405).

**அதுனன்** atuṉāṉ, இ. பெ. உதது என்பவரின் புதல்வர், நபிகள் பெருமானின் மூதாதையர்.
வெண்ணிலா விரிக்கு மொருதனிக் குடைக்கீழ்
வேந்துசெய் தருள்புரி *அதுனன்*
சீருப்புராணம் : 4 : 57.

**அந்தலத்** antalat, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.
கசறச்சாவும் *அந்தலத்தும்*
புதுகுஷ்ஷாம் : 37 : 3.

**அப்தால்** aptāl, பெ. <abdāl. ابدال> ஒருவகை மனிதர்.
உறுமக் காநா வேழப்*தால்* உயர்நிலை
சாதுலிநாயகம் : 16 : 17.

**அப்து** aptu, பெ. <abd. عبد> அடிமை.
வேலையர்க் கூவார் *அப்துகட்* குறும்பணி பணியார்
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 27 : 16.

**அப்துத்தார்** aptuttar, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.
சீரணி *அப்துத்தாரின்* செல்வராம் யெகுவா வென்பார்
புதுகுஷ்ஷாம : 57 : 67.

**அப்துல்லா**[1] aptullā, இ. பெ. நபிகள் நாயகம் (சல்) அவர்களின் தந்தையார். அப்துல் முத்தலிபு என்பவரின் புதல்வர்.

கிம்புரிக் கோட்டுக் கடமலை துளைத்துக்
கிளைத்திடும் வேற்கரர் ஹாஷிம்
அம்புவிக் கரசாய்ப் பெற்றெடுத் துவந்த
வருமணி அப்துல் முத்தலிபு
நம்பிய தவப்பே றெனவிருந் திலங்கி
நறைகமழ் அப்துல் முத்தலிபு
தம்பெயர் விளக்கக் குவலயத் துதித்த
சந்ததி *அப்துல்லா* வென்போர்

சீறப்புராணம் : 4 : 67.

**அப்துல்லா**[2] aptullā, இ. பெ. <abdulla. செவிலித்தாய் அலிமாவின் புதல்வர்களுள் ஒருவர்.

சேட்டிளஞ் சிங்க மென்னுந் திறலுறை *அப்துல்லா*

சீறப்புராணம் : 7 : 3.

**அப்துல்லா**[3] aptullā, இ. பெ முகியித்தீன் ஆண்டவரின் மூதாதையருள் ஒருவர்.

பதித்தலத் துதித்த *அப்துல்லா* தரும் பாலனுேர்

பதறுத்தீன புலவர் : முகியிததீன புராணம் : 4 : 8.

**அப்துல்லா**[4] aptullā, இ பெ. ஓர் ஆணின் பெயர்.

காணருங் கவன வாசிக் காவலன் குறுத்தின் தோன்றல்
ஆணருஞ் சிங்கமன்ன *அப்துல்லா* கொண்டு நாளும்

புதுகுஷ்ஷாம் : 26 : 33.

**அப்துல்லா**[5] aptullā இ பெ ஓர் ஆணின் பெயர்.

தரித்த வெம்சிலைத் தாணுவின் *அப்துல்லா*

பனியகுமது மரைக்காயர் : சீறப்புராணம் : 3 : 7 (75).

**அப்துல்லா**[6] aptullā, இ. பெ. கதறு என்பவரின் புதல்வர்.

கதறின் தனையன் *அப்துல்லா*

பனியகுமது மரைக்காயர் : சீறப்புராணம் : 24 : 123 (1028).

**அப்துல்லா**[7] aptullā, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவர்.

செருமுகத் தினில் *அப்துல்லா* எனும் திறல் அரசை

பனியகுமது மரைக்காயர் : சீறப்புராணம் : 21 : 8 (691).

**அப்துல்லா இபுனு முகைது** aptullā ipuṉu mukaitu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*அப்துல் லாஇபுனு முகைது* மலத்தார்

புதுகுஷ்ஷாம் : 35 : 123.

**அப்துல்லா இபுனு சகுபர்** aptullā ipuṉu cakupar இ. பெ. <Abdullah ibn Jahfar. சகுபர் என்பவருடைய புதல்வர் அப்துல்லா.

அப்துல் லாதமய னரருள் சேய்சேய்
*அப்துல் லாஇபுனு சகுபர்* அடைந்தார்

புதுகுஷ்ஷாம் : 35 : 123.

**அப்துல்முத்தலிப்** aptul muttalip, இ. பெ. நபிகள் நாயகம் (சல்) அவர்களின் பாட்டனார். ஹாசீம் என்பவரின் புதல்வர்.

புவியிடை மழைபொழி யாத நோவினல்
*அப்துல்முத் தலிபெனு மரசர் நாயகர்*
சீருப்புராணம் : 8 : 49.

**அப்துல் முனப்** aptul munāp, இ. பெ. நபிகள் நாயகம் (சல்) அவர்களின் மூதாதையர் குசை என்பவரின் புதல்வர்.

வில்லுமிழ் வயிரத் தொடைபுரண் டசைந்த
விறற்புயர் குசைதரு மதலை
செல்லென விரங்குஞ் சினந்துவே ருங்கும்
*செழுங்கரர் அப்துல் முனபு*
சீருப்புராணம் : 4 : 66.

**அப்துல்லா கிபுனு ருபிகு** aptullā kipunu rāpiku, <Abdullah Ibn Rabih. இ. பெ. ருபிகு என்பவரின் புதல்வர் அப்துல்லா.

*அப்துல் லாகிபுனு ருபிகு* மாள்வல்
புதுகுஷ்ஷாம் : 35 : 123.

**அப்துல் றகுமான்** aptul ṟakumāṉ, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

நன்மன ஹமீதின் தோன்றல் நனி*அப்துல் றகுமான்* சொல்லில்
புதுகுஷ்ஷாம் : 26 : 31.

**அப்துற்றகீம்** apturrakīm, இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியாரின் பெயர்.

நறைப்புய வாகை *அப்துற்றகீம்* அலர்ப் பதமுட் கொள்வாழ
திருமணிமாலை : 1 : 20.

**அப்துற்றகுமான்**[1] apturrakumāṉ, இ. பெ. முகம்மது நபி (சல்) அவர்களின் நெருங்கிய தோழர்களுள் ஒருவர்.

உரிய *அப்துற் றகுமான்* என்று உரைக்கும் நாமம் பெற்றேரே
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 12 : 156 (400).

**அப்துற்றகுமான்**[2] apturrakumāṉ, இ. பெ. முகியத்தீன் ஆண்டவர் காலத்தில் வாழ்ந்த ஒரு பிரமுகர்.

ஒன்றலுள *ரப்துற்றகு மானெ*ன உயர்ந்தோர்
சேகுனுப்புலவர் : குத்பு நாயகம் : 23 : 10.

**அப்பாசு**[1] appācu, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவரின் பெயர்.

உமறுடன் உதுமான் வெற்றி உயர் அலி*அப்பாசு*
புதுகுஷ்ஷாம் : 36 : 41.

**அப்பாசு**[2] appācu, இ. பெ. மிறுத்தாசு என்பவரின் புதல்வன்.

வடிவுறும் *அப்பாசு* என்னும் மைந்தனை விளித்துச் சொல்வான்
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 26 (1073).

**அப்பாசு**[3] appācu, இ. பெ. நபி முகம்மது (சல்) அவர்களின் சிறிய தந்தையார்.

*சிறிய தந்தைஅப் பாசமுன் தீன்நிலே சேர்ந்து*

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 24 : 22 (928).

**அப்பாது** appātu, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவர்.

*தல கறுத்தராம் காலிது நவுபல் அப்பாது*

புதுகுஷ்ஷாம் : 15 : 148.

**அப்பார்** appār, இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியார்.

*யாவு மிருந்து மாயுதமொன் றில்லார்க் கேதுண்டமராடு*
*மாவலு பாயமென அப்பார் மகளார் அபீஹத்திவை கூற*

புதுகுஷ்ஷாம் : 20 : 82.

**அப்பான்** appāṉ, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*சீருடை அப்பானும்*

புதுகுஷ்ஷாம் : 38 : 7.

**அபசிய்யா** apaciyyā, حبشية பெ. கோத்திரத்தின் பெயர்.

*......ஆர்க்கும் அபசிய்யர்*

புதுகுஷ்ஷாம் : 40 : 230.

**அபஷி** apasi, حبشي பெ. அபிசீனியாவைக் குறிக்கும்.

*உறைந்த மாந்தருக்கு அபஷியரசெனு*

சீருப்புராணம் : 35 : 11.

**அபாசுபியான்** apācupiyāṉ, இ. பெ. இஸ்லாத்தை ஆரம்பத்தில் எதிர்த்த குறைஷிகளின் தலைவர்களுள் ஒருவர். மக்கா வெற்றி கொண்டதன் பின்னர் இஸ்லாத்தைத் தழுவினர்.

*ஈனன் அபாசுபியானு மின்பமு*
*மானமுந் தவிரபூ ஜகுலும் வன்கொலேக்*
*கான பஞ்சரசபு வானு மாண்டொரு*
*தானமீ தமர்ந்து நின்றவர்கள் சாற்றுவார்*

சீருப்புராணம் : 58 : 8.

**அபாமுகம்மது ஜாவறல் முகல்லீ** apā mukammatu jāwaṟal mukallī, ஒரு முஸ்லிம் பெரியாரின் பெயர்.

*வண்மையாம் விடைகொள் அபா முகம்மது ஜாவறல்முகல் லீவரன் மவுல்வாம்*

நவமணிமாலே (முகியததீன புராணம்) : 34 : 1.

**அபாமூசா** apāmūcā, இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியார்.

*அதிக வீரம் கொண்டு ஓங்கிய புகழ்அபா மூசா*

பனியகுமது மரைக்காயர் ; சீருப்புராணம் : 27 : 91 (1163).

**அபா யெஜீது** apā yejītu, இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியாரின் பெயர்.

*இடனமர் நிலேய அபா யெஜீதென் றோங்கிய*
*கடனிகருள வர்கழல்களேத் துவாம்*

ஆரிபுநாயகம் : 1 : 17.

**அபித்தாலிபு** apittālipu, இ. பெ. பார். அபுத்தாலிபு.

அம்மொழி கேட்டடபித் தாலிபு ஆகிய
மும்மதக் கரியுயிர் முகம்மதுக்கு

சீறப்புராணம் : 8 : 57.

**அபித்தாலீபு** apittālīpu, இ. பெ. அலி (றலி) அவர்களின் தந்தை.

அயர்விலா துரைத்த சொற்கேட் டருளுறை *அபித்தாலீபு*

சீறப்புராணம் : 22 : 39.

**அபியப்துலா** api aptulā, இ. பெ. முகியித்தீன் ஆண்டவரின் மூதாதையருள் ஒருவர்.

அவமொரு நாளும் பேசார் *அபியப்துலா* வென்போரே

பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன புராணம் : 4 : 9.

**அபீக்கபுசா** apīkkapucā, இ. பெ. பெருமானாரின் (சல்) தந்தையார் அப்துல்லாஹ் (றலி) அவர்களை குறைஷிகள் இத்தகைய பட்டப் பெயரால் அழைத்தனர்.

அரச னஞ்சிய வச்சத்தான் *அபீக்கபு சாதன்*

புதுகுஷ்ஷாம் : 5 : 58.

**அபீகுகாபா** apīkukāpā, இ. பெ. அபூபக்கர் (றலி) அவர்களின் மறுபெயர்.

புல்லியல் *அபீகுகாபாப்* புதல்வனப்துல்லா

புதுகுஷ்ஷாம் : 13 : 19.

**அபீசகீது** apīcakītu, இ. பெ. முகியத்தீன் ஆண்டவர் அவர்களின் ஆசிரியருள் ஒருவர்.

தவநெறி பிழைபடாச் சறகி னேர்மைகள்
நவமுறப் பலன்றரும் பிகுகி னூட்டுநூல்
அபுல்வபா அபுல்கிதாப் *அபீசகீது* எனும்
இவர்கள் பாலுவகையின் இயல்பின் ஓதினர்

சேகுனைப்புலவர் : குத்பு நாயகம் : 11 : 16.

**அபீபல்த்தா** apīpalttā, இ. பெ. காத்தபு என்பவரின் தந்தை.

.........மக்கம் வாழும்
குறைசிகளுக்கு உணர்த்தவென *அபீபல்த்தா*
ஈன்றதிருக் குமரன் காத்தபு

பனியகுமது மரைக்காயர் : சீறப்புராணம் : 23 : 12 (887).

**அபீறத்** apīṟat, இ. பெ. ஒரு பெண்ணினுடைய பெயர்.

அப்பார் மகளார் *அபீறத்*

புதுகுஷ்ஷாம் : 20 : 82.

**அபீரு** apīṟū, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

ஓதும் புகழோங் கும்*அபீ ரூ*வே

புதுகுஷ்ஷாம் : 41 : 21.

**அபு** apu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

மடங்கல் எனவந் துதித்த *அபு*என்போன்
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 27 : 2 (1084).

**அபு ஆமிறு** apu āmiṟu, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவர்.

இகல்செறு நருக்கு அரி*அபு ஆமி*றென் பவர்க்கு
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 27 : 69 (1151).

**அபுகுதாதா** apukutātā, இ. பெ. நபிகள் நாயகம் (சல்) அவர்களின் தோழர்.

நேய *அபுகு தாதா* ஓர்கூசு நிரம்பப் புனல் எடுத்து
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 12 : 144 (388).

**அபுகுறைறு** apukuṟaiṟā, இ. பெ நபி முகம்மது (சல்) அவர்களின் நெருங்கிய தோழர்களுள் ஒருவர்.

விடுத்துக் குபிரை *அபுகுறைறு*
என்னும் வேந்தர் வந்து கண்டார்
பனியகுமது மரைக்காயர் : சீருபபுராணம் : 12 : 155 (399).

**அபுசி** apuci, حبشي இ. பெ. அபிசினியா நாட்டு அரசன்.

கருணையிற் சிறந்த *அபுசி* மன்னர்
புதுகுஷ்ஷாம் : 23 : 7.

**அபுத்தா** aputtā, இ. பெ. மக்காவின் அதிபதி.

துய்யநன் மக்க நகர்க்கிறை *அபுத்தா*
உடன்துலக் காக்களும் உவந்தே.
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 38 : 21 (1608).

**அபுத்தாபு** aputtāpu, இ. பெ. உசைது என்பவரின் புதல்வர். முகம்மது நபி (சல்) அவர்களால் மக்காவுக்கு அரசு என நியமிக்கப் பட்டவர்.

தொடைப்புயத் திறசூல் நபிஉ சைதருள் சுதன்நல்
அடல்திறத் *தபுத்தா பி*னைஅ ரசென வைத்தார்
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 29:10 (1268).

**அபுத்தாலிபு** aputtālipu, இ. பெ. நபிகள் நாயகம் முகம்மது (சல்) அவர்களின் பெரிய தந்தையார்.

மலையெ னத்திரட் புயர் *அபுத் தாலிபு* மனையி
லலைக டற்புடை வருமுழு மணியகு மது
சீருப்புராணம் : 9 : 1.

**அபுபாரிசு** apupāricu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

பாச மன்னும்*அபு பாரிசு*ம் சைதும்
புதுகுஷ்ஷாம் : 36 : 124.

**அபுல் கனுயிம்** apul kaṉāyim, இ. பெ. முகியித்தீன் ஆண்டவர் அவர்களின் ஆசிரியர்களுள் ஒருவர்.

அருளபூ காலிபும் *அபுல் கனுயிமு*ம்
பொருளபுல் காசிமும் புணர்த்தி ஞர்களால்
சேகுனுப்புலவர் : குத்பு நாயகம் : 11 : 17.

**அபுல்காசிம்**[1] apul kācim, இ. பெ. முகியித்தீன் ஆண்டவர் அவர்களின் ஆசிரியர்களுள் ஒருவர்.

*பொருளபுல் காசிமும் புணர்த்தினர்களால்*

சேகுனப்புலவர் : குத்புநாயகம் : 11 : 17.

**அபுல்காசிம்**[2] apulkācim, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*காசி மான அபுல்காசி மருஞ்சீர்*

புதுகுஷ்ஷாம் : 36 : 125.

**அபுல்கிதாப்** apul kitāp, இ. பெ. முகியித்தீன் ஆண்டவர் அவர்களின் ஆசிரியருள் ஒருவர்.

*அபுல்வபா அபுல்கிதாப் அபுசகீதெனும்*

சேகுனப்புலவர் : குத்புநாயகம் : 11 : 16.

**அபுல் கௌல்** apul kevl, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*என்ன உரைத்திட் டபுல்கௌலும் எழுந்தார்*

புதுகுஷ்ஷாம் : 52 : 100.

**அபுல் முலப்பர்** apul mulappar, இ. பெ. ஒரு வணிகரின் பெயர்.

*............உயர் செல்வமும் தொழிலும்*
*நிதியும் பலபொருளும்தவ நிலைகொண் டதொரு வணிகர்*
*முதிரும் குணநய முங்கபுல் முலப்பரென்ப வரே*

சேகுனப்புலவர் : குத்புநாயகம் : 19 : 3.

**அபுல்வபா** apulvapā, இ. பெ. முகியித்தீன் ஆண்டவர் அவர்களின் ஆசிரியருள் ஒருவர்.

*அபுல்வபா அபுல்கிதாப் அபூசகீது எனும்*

சேகுனப்புலவர் : குத்புநாயகம் : 11 : 16.

**அபுவ்வு** apuvvu, < عفو இ. பெ. குற்றங்கள் எழுதப்பட்ட தாள் களிலிருந்து அவற்றை அழிப்பவன். அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். ளாகிர்.

இராஜநாயகம் : 36 : 40.

**அபுவா** apuvā, இட. பெ. ஓர் இடத்தின் பெயர்.

*கொடியிடை யாமினு வென்னுங் கோதையோர்*
*பிடியென வனமெலாம் பெருக மான்மதக்*
*கடிகமழ் முகம்மதோர் கன்றும் போலவே*
*யடவிவிட் டகன்றபு வாவி லாயினர்*

சீறாப்புராணம் : 8 : 35.

**அபுவு** apuvu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*புலங்கொள் ஒண்புய அபுவு என்பவனுடன் சிலரும்*

பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம் : 27 : 59 (1141).

**அபுறேசு** apuṟēcu, இ. பெ. பாரசீக நாட்டு மன்னர். நபிகள் நாயகம் (சல்) அவர்கள் காலத்தில் வாழ்ந்தவன்.

*கொடுங்கோல் புவிநாட்டிய மத்தமா அபுறேசு எனும் மன்னன்*

பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம் : 3 : 2 (70).

**அபூகாலிப்** apūkālip, இ. பெ. முகியித்தீன் ஆண்டவர் அவர்களின் ஆசிரியருள் ஒருவர்.

*அருள் அபூகாலிபும் அபுல்கஹையிமும்*
*பொருள் அபுல் காசிமும் புணர்த்தி ஞர்களால்*
சேகுனப்புலவர் : குத்பு நாயகம் : 11 : 17.

**அபூ குபைசு** apū kupaicu, இ. பெ. ஒருவரின் பெயர்.

*பிரிசமுற் றனிவளர் பெருமை தாங்கிய*
*தரைசெறி யபூகுபை சென்னுந் தாவரும்*
திருமணிமாலை : 31 : 54.

**அபூகுறைறு** apūkuṟayṟā, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவரின் பெயர். நபிகள் நாயகம் (சல்) அவர்களின் நெருங்கிய தோழர்.

*ஆரிதொரு ஆசிமும விருறபூகுறைறு*
புதுகுஷ்ஷாம் : 38 : 7.

**அபூசகல்** apūcakal, இ. பெ. பார். அபூஜகில்.

*தெரியும் தலைமை அபூசகல் தன் செல்வக் குரிசில் நெறிவழியே*
*உரிய மறையில் பொருள் விரித்த உணர் இக்ரிமா*
புதுகுஷ்ஷாம் : 15 : 3.

**அபூசாலிகு** apūcāliku, இ. பெ. முகியித்தீன் ஆண்டவர் அவர்களின் தந்தையார்.

*தழை செறி துருக்க மாலையம் புயத்திற்*
*றுங்கு அபூசாலி கென்பவரே*
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 4 : 14.

**அபூசுபியான்** apūcupiyāṉ, இ. பெ. இஸ்லாத்தைத் தழுவுவதற்கு முன்னர் இஸ்லாத்தின் பரம விரோதியாக இருந்தவர்.

*என்றனர் இனைய எல்லாம் எழிலபூசுபியானன்றே*
புதுகுஷ்ஷாம் : 36 : 96.

**அபூதல்கா** apūtalkā, இ. பெ. ஓர் அறிஞரின் பெயர்.

*தகைசேர் முதிய அபூத்தல்கா என்னும் சான்றோர்.*
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 12 : 122 (366).

**அபூதற்று** apūtaṟṟu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*ஒருமதி அம்றும் அபுதற்றுடன் எசீதும்*
புதுகுஷ்ஷாம் : 38 : 7.

**அபூதற்றுல் கப்பார்** apūtaṟṟul kappār, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*............பாய்மா*
*மேய் அபு தற்றுக் கப்பா றுவணிமீ நகைக்குமம்மாசு*
புதுகுஷ்ஷாம் : 27 : 78.

**அபூதறுதா** apūtaṟutā, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவர்.

*வீர வீட்டியர் அபுதறுதாவோடு*
புதுகுஷ்ஷாம் : 15 : 115.

**அபூலுபானத்** apūlupāṉat, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*......அபூலு பானத்* தென்பவரும் பண்பி னெழுந்தார்

புதுகுஷ்ஷாம் : 36 : 127.

**அபூபக்கர்[1]** apūpakkar, இ. பெ. ஆரிபு நாயகம் அவர்களின் தாயாரின் தந்தையார்.

புன்னிலே யறுத்துயர் புனைய *பூபக்கர்*
வென்னிலே மகளென விளங்கி

ஆரிபுநாயகம் : 7 : 16.

**அபூபக்கர்[2]** apūpakkar, இ. பெ. இவருடைய பழைய பெயர் அப்துல் காபா. நபி நாயகம் முகம்மது (சல்) அவர்கள் இப்பெயரை அப்துல்லாஹ் என மாற்றினர். அபீக்குஹாபா என்பது இவரது தந்தையாரின் பெயர். அவருடைய நேர்மைக்காக அவர் சித்தீக் என வழங்கப்பட்டார். 'கன்னியின் தந்தை' என்று பொருள்படும் அபூபக்கர் என்று பின்னர் இவர் வழங்கப்பட்டார். காரணம் நபிகள் நாயகத்தின் (சல்) மனைவியருள் ஆயிஷா மட்டுமே கன்னியாக இருந்தவராவார். எனவே ஆயிஷாவை பெற்றெடுத்ததால் இவரது தந்தை 'கன்னியின் தந்தை' என்ற பொருளில் அபூபக்கர் என வழங்கப்பட்டார். நபி நாயகத்தின் பின்னர் இவர் முதல் கலிபாவாகப் பதவி ஏற்ருர். முதன் முதல் இஸ்லாத்தை தழுவிய பெரியோருள் இவர் முதலாமானவராவார்.

மனுமுறை நெறிவழுவா *அபூபக்கர்*

சீருப்புராணம் : 26 : 6.

**அபூபக்கர் லெப்பை ஆலிம்** apūpakkar leppai ālim, இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியாரின் பெயர்.

அழகொழுகிய சொல்வல்ல *அபூபக்கர் லெப்பை யாலீம்*

திருமணிமாலை : 1 : 24.

**அபூலுபா** apūlupā, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

தகுத்திருந்தவன் *அபுலுபா* என்பவன்

பனியகுமது மரைக்காயா : சீருபபுராணம : 36 : 1 (1556).

**அபூஜகில்** apūjakil, இ. பெ. <Abu Jahl. இஸ்லாத்தின் பரம விரோதி. முன்பு இவனுடைய பெயர் அபுல்ஹிகம் (அறிவின் தந்தை). பின்னர் அஞ்ஞானத்தின் தந்தை எனப் பொருள்படும் இப்பெயரால் அழைக்கப்பட்டான்.

கட்கொலே படிறு நிந்தை களவுடன் கொடிய பாவ
முட்பட வளர்த்த மெய்யா னுறுமொழி யறுதி யில்லா
னட்பினைப் பகைத்துச் செய்த நன்றியைக் கொன்று நஞ்சார்
மட்படு கலமே யன்ன மனத்தபூ ஜகிலும் போனுன்

சீருபபுராணம் : 22 : 7.

**அபூஜாகில்** apūjākil, பெ. பார். அபூஜஹல்.

*வீரமழித் தபூ ஜாகிலே* வென்று

கௌதுநாயகா காரணப்புராணம : 7 : 1.

**அபூஷஹீதுல் முபாறக்கீ மஷ்ஹூம்** apūsahītul mupārakki mashhum, இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியாரின் பெயர்.

மானமும் கல்விப்பேறு மகிமையும் தவமு வாய்ந்தோர்
ஆனநல் லபூஷ *ஹீதுல் முபாறக்கீ மஷ்ஹூம்* என்றே
கௌது நாயகர் காரணப்புராணம்: 10 : 41.

**அம்பர்** ampar, பெ. <ànbar. عنبر> வாசனைத் திரவியம்.

சந்தனங் குங்குமந் தகர் *அம்பர்* பல்
கந்தமு நரந்தமுங் காயும் வேரும்
திருக்காரணப்புராணம்: 46 : 57.

**அம்பியா** ampiyā, <انبياء பெ. பார். அன்பியா.

இவ்விதம் *அம்பியா* வல்லி யாக்களிற்
செவ்விய ரிவர் பெயர் செப்பும் வாய்மை
பத்றுத்தீன் புலவர்: முகியித்தீன் புராணம்: 21 : 51.

**அம்மா** ammā, பெ. <amma. عم> அல்குர்ஆனின் 78-வது அத்தியாயம் இவ்வாறு தொடங்குகிறது.

*அம்மா* வெனும் ஸூறத்தில்
ஞானக்குறம்: கைகுறி கூறல்.

**அம்மாறு** ammāṟu, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவர்.

எறுழ் *அம்மாறும்*
புதுகுஷ்ஷாம்: 38 : 7.

**அம்று**[1] amṟu, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவரின் பெயர்.

இணங்கும் ஆசுசொல் *அம்றெனும்* ஏந்தலை விடுத்தார்
பனியகுமது மரைக்காயர்: சீறாப்புராணம்: 29 : 4 (1549).

**அம்றிப்னு மகுதீக்கரீபிச் சபீதி** amṟipṉu makutīkkarīpic capīti, இ. பெ. ஒரு தலைவரின் பெயர்.

ஆளோ டாடுஞ் சிரங்களெழுந்தூ ளோடாடுஞ் சூலமுயிர்
வாளோ டாடும் *அம்றிப்னு மகுதீக் கரீபிச் சபீதிய்யே*
புதுகுஷ்ஷாம்: 29 : 115.

**அம்று**[2] amṟu, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவர்.

நீக்கினர் ஒன்னலர் நேர்வரக் கண்டார்
ஆக்கு மலர்க்கிறை யாகிய *அம்றே*
புதுகுஷ்ஷாம்: 40 : 100.

**அமல்** amal, பெ. <àml. عمل> செயற்பாடு (இச்சொல் சிறப்பாக முஸ்லிம்கள் தொழுகை நிறைவேற்றுதலைக் குறிக்கின்றது).

ஒருத்தனு யகனவற் குரிய தூதெனு
மருத்தமே யுரைகலி மாவந் நிண்ணயப்
பொருத்தமீ மானடை புனைதலாம் *அமல்*
சீறாப்புராணம்: 26 : 2.

**அமான்** amāṉ, பெ. <amān. امان> பாதுகாப்பு.

என்திரு மகனுங் கவுதை உன்னிடத்து *அமானம்*
பத்றுத்தீன் புலவர்: முகியித்தீன் புராணம்: 10 : 23.

**அமானம்** amāṉam, பெ. <amān. امان> அம் விகுதி பெற்றுள்ளது இவ்வறபுச் சொல். அடைக்கலம் என்பது இதன் பொருள்.

அழிவிலானீயே யானுன் *னமானம்*
ஞானப்புகழ்ச்சி : 217.

**அமானிதம்** amāṉitam, பெ. பார். அமான்.

அவ் *அமானிதம்* உமக்கு அளித்தேன்
இராஜ நாயகம் : 17 : 29.

**அமிறு** amiṟu, இ. பெ. குஜாயத் என்னும் கோத்திரத்தைச் சேர்ந்த சாலீம் என்பவரின் புதல்வர்.

வென்றி உறும்சா லீம்தவத்தால்
விரும்பிப் பயந்த *அமிறு* என்போன்
பனியகுமது மரைக்காயர் : *சீறுப்புராணம்* : 22 : 5 (835).

**அமீறு** amīṟu, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவர்.

திரைபோல் மீட்ட சல்மாவைப்
பயந்த சீர்த்தி *அமீறு* என்போர்
பனியகுமது மரைக்காயர் : *சீறுப்புராணம்* : 12 : 81 (325).

**அமீறுல் மூமினீன்** amīṟul mūmiṉīṉ, பெ. <amīr-al-mū'minīn. امير المؤمنين> நம்பிக்கையாளர்களின் தலைவர்.

நெறிபடும் *அமீறுல் மூமினீன்* எமர் அருளே
புதுகுஷ்ஷாம் : 27 : 8.

**அமீற்** amīr, இ. பெ. <amīr. امير> தலைவர்.

ஒன்று சிந்தையான் வினவலும் *அமீறலர்*
ஒருவரும் வரத்தகை யரன்று
புதுகுஷ்ஷாம் : 42 : 37.

**அமீனு** amīṉā, இ. பெ. அன்சார்ப் பெண் ஒருத்தியிடம் பணிபுரிந்த ஒருவன்.

பொற்புஉலாம் எனதுதாசன்
புகல்பெயர் *அமீனு* என்போன்
பனியகுமது மரைக்காயர் : *சீறுப்புராணம்* : 20 : 3 (652).

**அமீன்** amīṉ, பெ. <amīn. امين> நம்பிக்கைக்குரியவர்கள்.

சித்திநந் நயினர் வாக்கால் *அமீன்* எனச் சிறந்து நின்றார்
புதுகுஷ்ஷாம் : 23 : 193.

அ-3

அமீனுல் உம்மத் amīṉul ummat, இ. பெ. சமுதாயத்தின் நம்பிக்கைக்குரியவர். இது அபி உபைதா (றலி)விற்கு வழங்கப் பட்ட சிறப்புப் பெயர்.

*அமீனுல் உம்மத்தின் உரைபோல் இயைந்தனர் மகிழ்ந்தனர்*
*வள்ளல்*

புதுகுஷ்ஷாம் : 20 : 17.

அமுசா amucā, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவர்.

.................வல்லாண்மை துலக்கிய *அமுசா* தோன்றல்
மன்னவர் கருபை நீங்கா மனத்தொடு

புதுகுஷ்ஷாம் : 50 : 53.

அமுறு amuṟu, இ. பெ. இஸ்மாயீல் நபி அவர்களின் மாமனார்.

.................நன்மணி *அமுறு* என்றோதும்
பொன்குடியாளன் பெற்றப் பூங்கொடி ஆயிலாவை
மன்குடி வேண்டி நின்றார் மனைக்குடி வேண்டினாரே

திருமணிமாலை : 30 : 40.

அய்ப் ayp, பெ. <aib. عيب> மறைக்க வேண்டியவை.

*அய்ப்*பில்லா தெதிர்சொல் வார்யான்
சொன்ன வைக்கையங் கொள்வார்

நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) :- 6 : 84.

அய்யூப் ayyūp, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

நாம வேலமுறு நாதர் *அய்யூ*பும்

புதுகுஷ்ஷாம் : 36 : 126.

அயிசாச ayicāca, இட. பெ. ஓர் நகரின் பெயர்.

அடுவான் பதிய *யிசாசா*வ னகர் புக்கின வன்றே

திருமணிமாலை : 5 : 64.

அயின் ayiṉ, பெ. <'ain. ع> அறபு அரிச்சுவடியில் ஓர் எழுத்து.

சோதியான *அயி*னுமாம்

ஞானமணிமாலை : 170.

அல்கந்து லில்லாகி யொச்சுக்று லில்லாகி alkantu lillāki yoccukṟu lillāhi, தொ. <alhamdu lillāhi waśukrulillāhi. الحمد لله والشكر لله > அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அல்லாஹ்வுக்கே நன்றியும்.

*உன்னுமல் கந்து லில்லாகி யொச்சுக்று லில்லாகி*

நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 18 : 44.

**அல்காலா** alkālā, இ. பெ. கூசு என்பவரின் இரண்டு புதல்வர்களுள் மூத்தவன்.

வெங்கொடுமை செய்பவன் விளங்கு பய னென்ன
வங்ஙனனி முன்னவ னரும் பெய ரல்காலா
மிங்குவரு காரண மிசைந்து வரு பின்னேன்

திருமணிமாலை : 4 : 29.

**அல்பத்துகு அல்பத்துகு** alpattuku alpattuku, பெ. <alfathu alfathu. الفتح الفتح> வெற்றி, வெற்றி.

*சீர்வேல் அல்பத்துகு அல்பத்துகென்றே செருகுற்ருர்*

புதுகுஷ்ஷாம் : 40 : 230.

**அல்பத்துகொன்னசுறு** alpattukonnacuru, பெ. தொ. <alfathu van nasru. الفتح والنصر> வெற்றியும், உதவியும்.

*மீனமில் அல்பத்து கொன்னசு றென்றே யெறும்பூண்டார்*

புதுகுஷ்ஷாம் : 40 : 231.

**அல்லாகும்ம அகுயினீ சகீதன் வஅமித்தநீ சகீதன்** allākumma akuyinī cakītan vaamittanī cakītan, தொ. <allahumma ahyinī śahīdan wa amittanī śahidan. اللهم احيني سعيدا وامتني سعيدا> ஒரு பிரார்த்தனை.

*சங்கைஅல் லாகும்ம அகுயினீ சகீதன் வஅமித்த நீசகீதன்*
*இங்கிது துஆவா மெனத்*

நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 8 : 65.

**அல்லாகுலில்லாகி** allāku lillāki, தொ. <allāhu lillāhi. الله لله> அல்லாஹ்வைக் குறிக்கும் சொற்றொடர்.

*அல்லாகு லில்லாகி ஆதியா னவனே*

ஞானப்புகழ்ச்சி : 47.

**அல்லாஃவகுலம்** allāk vakulam, தொ. <allāh a'lam. الله أعلم> அல்லாஹ்தான் அறிவான்.

*சுந்தரத் தென்னக் கேட்டான் சொற்றல் லாஃவகுலமென்றே*

நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 4 : 31.

**அல்லாஹ்** allāh, பெ. இறைவன்.

*தீதிலா மறைபொருளாய்த் திகழொளியாய் நிறைந்த அல்லா*

சீருப்புராணம் : 84 : 5.

**அல்ஹக்கு** alhakku, பெ. <alhaq. الحق> உண்மையானவன்.

*ஆதியானது சோதியானது அல்ஹக்கு றப்பில் ஆலமீன்*

ஞானக்குறம் : 4.

**அல்ஹம்து** alhamtu, பெ. தொ. <alhamdu. الحمد> எல்லாப் புகழும் (அல்லாஹ்வுக்கே). இங்கே அல்ஹம்து என ஆரம்பிக்கும் அல்குர்ஆன் ஆயத்தைக் குறிக்கிறது.

விண்டுரை பகரு நாவின் மேவி *அல் ஹம்தை* யோதி

சீருப்புராணம் : 4 : 9.

**அல்ஹம்து லில்லாகி** alhamtulillāki, தொ. <alhamdu lillāhi. الحمد لله> எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே.

*அல்ஹம் துலில்லா கியனைத்* தும்பு கழ் வதைக்கபூல் செய்

ஞானப்புகழ்ச்சி : 665.

**அலாவுத்தீன்** alāvuttīṉ, இ. பெ. பகறு இராச்சியத்துக்கு அனுப்பப்பட்ட தூதுவர்.

மதிஅறிவு ஒருங்கு கூட்டி வைத்ததோர் அறையாம் என்னத்
துதிதரும் இதையம் மன்னும் தூய்நெறி *அலாவுத்தீன்* தன்

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 9 : 3 (206).

**அலானிய்யத்** alāṉiyyat, பெ. <álaniyyat. علانية> பிரகடனம்

இசுமது மேதோ வென்னி னியல்பெறும் பிஸ்மில் லாஹி
வசமுற *அலானிய் யத்தி* னப்துல்காதிறுவே

பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 17 : 10.

**அலியுல்லா** aliyullā, பெ. அல்லாஹ்வின் அலி.

.................நடனவாம் பரியின் மீது
வல்லியம் *அலியுல்லா*வும் வானவர் வாழ்த்தப் போந்தார்

சீருப்புராணம் : 60 : 163.

**அலி** ali, இ. பெ. நபிகள் நாயகத்தின் பெரிய தந்தை அபுத்தாலிபு அவர்களின் புதல்வர். நபி அவர்கள் தம் புதல்வியின் மணாளர். சிறுவர்களுள் முதன்முதலில் இஸ்லாத்தை தழுவியவர். நான்காவது கலிபாவாகப் பதவி வகித்தவர்.

அந்தமி ஞயகன் தூதர்க் கன்புறுஞ்
சிந்தையர் புகழபுத் தாலிப் சேய்களிற்
சுந்தரப் புலி *அலி* யென்னுந் தோன்றலும்
வந்தனை செய்துதீன் வழியிலா யினர்

சீருப்புராணம் : 26 : 17.

**அலிப்** alip, பெ. <alif. ا> அறபு அரிச்சுவடியில் உள்ள முதல் எழுத்து.

கோலது *அலிபாம்* பீடங் குதறத்தைப் பொருந்து வோர்க்கே

ஞானப்பால் : 1.

**அலிபு லாம் மீம் ஹே தால்** alipu lām mīm he tāl, <alif lam mim hē tāl. ا ل م ح د> அல்ஹம்து என்னும் சொற்றெடரில் உள்ள ஐந்து அறபு எழுத்துக்கள். புகழ் என்பது அதன் பொருள்.

அஞ்செழுத்து *அலிபுலாம் மீம் ஹேயுந்* தாலுமாக வந்து

ஞானமணிமாலை : 165.

**அலிமா** alimā, இ. பெ. குலையின் பிரதேசத்தைச் சேர்ந்த பெண்மணி. நபிகள் நாயகம் முகம்மது (சல்) அவர்களைப் பாலூட்டி வளர்த்த செவிலித்தாய்.

..................இறையோன்
மன்ற லங்குழலாள் *அலிமா* வெனு மடந்தை

சீருப்புராணம் : 6 : 5.

**அலீமு** alīmu, இ. பெ. <alīm. عليم> அறிந்தவன். அல்லாஹ்வின் அழகுத்திருநாமங்களுள் ஒன்று. பார். யாறகுமான்.

இராஜ நாயகம் : 36 : 37

**அலீய்யு** alīyyu, இ. பெ. <alī. علي> உயர்ந்தவன். அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். ருபிகு

இராஜநாயகம் : 36 : 38.

**அலுபத்து** alupattu, இ. பெ. ஓர் ஆண்ணின் பெயர்.

*அலுபத்து* தரும் திருமைந்தன்

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 31 : 5 (1321).

**அலைகிஸ்ஸலாம்** alaikissalām, தொ. <alaihissalām. عليه السلام> (அல்லாஹ்வின்) சாந்தி அவர்மீது உண்டாவதாக.

மல்லவிழ் புயத்தப் பாசு மைந்தனுர் கிலிறென் றேது
நல்லவர் *அலைகிஸ் ஸலாமு* நயந்துளத் தென்பால் வத்தார்

பத்றுத்தீன் புலவா : முகியித்தீன் புராணம் : 14 : 23.

**அவ்லியா** avliyā, பெ. <vali. اوليا> இறைநேசச் செல்வர் (மெய்ஞ்ஞானி).

உரமுறு தீன்பா ரெல்லா மொளிரவே விளக்கஞ் செய்யும்
துரமுறும் *அவுலி* யாவாய்த் தோன்றின பேர்க்கு மேலாம்
வரமுறு முகியித் தீன்

சீருப்புராணம் : 1 : 16.

**அவ்வல்**[1] avval, இ. பெ. <awwal. اوّل> முதல்வன். அல்லாஹ்வின் அழகுத்திருநாமங்களுல் ஒன்று. பார். மசீது.

இராஜநாயகம் : 36 : 39.

**அவ்வல்**[2] avval, பெ. <awwal. اوّل> தொடக்கம்.

*அவ்வல்* ஆகிறம் தோன்றிடா தவன்றனை யகத்தில்

தீன் விளக்கம் : 11 : 2.

**அவ்வாது** avvātu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

சாலி முதவும் அவ்வாதும்

புதுகுஷ்ஷாம் : 32 : 19.

**அவாசின்** avācin, பெ. ஒரு கூட்டத்தின் பெயர்.

நீ ஈருவார் அவாசினின் தொகையும்

புதுகுஷ்ஷாம் : 20 : 23.

**அவுக்கலா** avukkalā, பெ. <hawqalat. حوقلة> 'லாகவுல வலாகுவ்வத்த இல்லா பில்லாகில் அலிய்யில் அளீம்' என்னும் கலிமாவைக் குறிக்கிறது. (பார். லாகவுக).

துணுக்கியுள்ள பூவுபைதா அவுக்கலாச் சொல்லி வெற்றி

புதுகுஷ்ஷாம் : 40 : 37.

**அவுசா** avucā, இ. பெ. இபுருஹீம் நபி அவர்களின் தாயார்.

மருபேர் அவுசா மனே யெய்தினவே

திருமணிமாலை : 12 : 51.

**அவுசு** avucu, பெ. மதீனுவில் வாழ்ந்த ஒரு கூட்டத்தாரின் பெயர்.

போதலர் மதீனமா புரத்தி னுடொறுங்
கோதுருது அவுசெனுங் கூட்டத்தார்

சீருப்புராணம் : 38 : 8.

**அவுசு** avucu, பெ. ஒரு கோத்திரத்தின் பெயர்.

...........பவற்கம்
மேவி யாடு அவுசக்கிளையவர்களும் விளங்க

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 29 : 8 (1266).

**அவுத்தாசு** avuttācu, இ. பெ. ஓர் இடம்.

அலங்கி ஓடினர் வளஅவுத் தாசெனும் பதியில்

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 27 : 59 (1141).

**அவுத்தாது** avuttātu, பெ. <autād. أوتاد> முஸ்லிம் மெய்ஞ் ஞானிகளின் கருத்துக்கிணங்க உலகின் நான்கு மூலைகளையும் தாங்கிக்கொண்டிருக்கும் நால்வர்.

நான்கு அவுத்தாது ஆனோர்

வணணக் களஞ்சியப் புலவர் : குத்புநாயகம் 7 : 12.

**அவுதற்கய்சு** avutaṟkaycu, பெ. ஒரு கோத்திரத்தின் பெயர்.

உவரி சூழ்புவி யில்புகழ் ஓங்கிய
அவுதற் கய்சு என்று அறையும் அக்கூட்டத்தில்

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 19 : 1 (594).

**அவுதா**[1] avutā, இ. பெ. ஓர் அரசன் பெயர்.

தீக்குழி அதனில் ஊழும் தீய்பவன் அவுதா என்ன

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 7 : 1 (187).

**அவுதா²** avutā, பெ. ஓர் இனத்தினர்.

திருமலர்ப் பதத்தினிற் சேவை செய்திடு
மரிநிகர் திறல் அவுத்தாக்க ளென்றனர்
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 18 : 28.

**அவுதால்** avutāl, இ. பெ. ஒருவரின் பெயர்.

நலத்துறு மவுதா லென்னு நாதரு முவந்த கேட்பார்
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 52 : 9.

**அவுபு¹** avupu, இ. பெ. மாலிக்கு என்பவரின் புதல்வன்.

இஞ்சியின் உறைந்த மாலிக்கென் பவன்சொல்
இளவலாம் அவுபு என் பவர்க்கு
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 28 : 53 (1233).

**அவுபு²** avupu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

அதலியின் கிளை அவுபுதவும்
புதுகுஷ்ஷாம் : 30 : 106.

**அவுலாத்** avulāt, பெ. <aulād. اولاد> பிள்ளைகள்.

திரிய வாலவு லாதுறசூலெனும் ஜெத்தாம்
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 5 : 37.

**அவுலுல் கவுதர்** avulul kavtar, பெ. பார். ஹவுலுல் கவுதர்.

துன்னிய அவலுல் கவுதர் தூயிடஞ் சத்திப் பாகி
புதுகுஷ்ஷாம் : 36 : 110.

**அவுருது** avurātu, பெ. <aurād. اوراد> அனுஷ்டானம்.

அன்னவேளைநம் பீர்கௌதல் லகுலமங் கஞ்சீர்
மன்ன வோதுறு நல்வவு ருதுகள் வளமை
என்ன ஓதல் போல்
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 15 : 8.

**அவூதுபில்லாஹி** avūtupillahi, தொ. <a'utu billāhi. اعوذ بالله>
அல்லாஹ்விடம் அடைக்கலம் தேடுகின்றேன்.

அவூதுபில்லா கியென்ற டைக்கல மானே னடியேன்
ஞானப்புகழ்ச்சி : 461.

**அழீமு** alīmu, இ. பெ. <aḍim. عظيم> மனிதனின் அறிவுக் கெட்டாதவன். அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். ருபிகு.

இராஜநாயகம் : 36 : 38.

**அற்றகீம்** arrakīm, பெ. பார். யாறகீம்.

முதலபுது லாகு மார தீர
உபையமெழு ஞால வால சூர்ய
முகம்மதுற்ற சூலுல்லா அற்றகீம் இறசூலே
காசீம் திருப்புகழ் : 141.

**அற்றபீகுல் லகுலா** arrapikul lakulā, தொ. <arrafīqul a'alā. الرفيق الاعلى> இத்தோழன் மிகவும் உயர்த்தியானவன்.

...........அணிகரம் உயர்த்தி உண்மை
அளவியல் *அற்றபீகுல் லகுலா* வென்றிசைப் பரின்பத்
தெளிவடு போதின் எல்லாம் திருநபி முகம்ம தன்றே

புதுகுஷ்ஷாம் : 10 : 9.

**அறபு** arapu, பெ. <arab. عرب> ஒரு மொழியின் பெயர்; இஃது இம்மொழி வழங்கும் நாட்டிற்கும் பெயராக உள்ளது.

மெய்தரு மாக்க ளியாரும் *அறபி*னின் முதிர்ந்த நாவார்

சேகுனை புலவர் : குத்பு நாயகம் : 18 : 17.

**அறபாத்** arapāt, பெ. <'arafāt. عرفات> ஒரு மலைப்பகுதி மக்காவுக்கு அருகாமையில் உள்ளது. மக்காவுக்குப் புனித யாத்திரை மேற்கொள்பவர்கள் இங்கு தங்குவது கட்டாயக் கடமையாகும்.

மறுமதி யகடு தொடுமுடி *யறபா*
மலையினி லிருவருஞ் சேர்ந்தார்

சீறாப்புராணம் : 4 : 35.

**அருக்கு** arākku, இட. பெ. ஓர் இடம்.

தடவயல் *அருக்கெ* ரேதும் தலத்திடை செல்லும் போழ்தில்

பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம் : 24 : 46 (951).

**அறுக்காயில்** arukkāyil, இ. பெ. ஒரு மலக்கின் (வானவரின்) பெயர்.

ஆட்டப் பரிவீரர்ச்செல் *அறுக்காயில்* தம்முடனே

மிகுருசு மாலை : 196.

**அறுசு** arucu, பெ. <arsh. عرش> அல்லாஹ்வின் ஆசனம்.

வான் *அறுசு* ஏறி

பனியகுமது மரைக்காயா : சீறாப்புராணம் : 12 : 29.

**அறுபகுசது** arupakucatu, இ. பெ. நூகு நபியின் புதல்வர் சாம் என்பவரின் புதல்வன்.

சாமுதன் மதலை *அறுபகுசது* மன்.

சீறாப்புராணம் : 4 : 46.

**அறுபுசா** arupucā, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

மருந்தி னைத்த நற்றிரு முகம்*அறு புசா* மலர்க்கை
யருந்தவத் தினெம்மாண் டகையளித்தனுப் பினரால்

புதுகுஷ்ஷாம் : 45 : 42.

**அறுவாகு** aṟuvāku, பெ. பன். <rūḥ. ارواح> ஆன்மாக்கள்.

*ஆல மடங்கும் அறுவாகு*
*மதனுள் அடங்கும் பல்லுயிரும்*

பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 46 : 26.

**அறூல்** aṟūl, பெ. பார். அறூள்.

எழுத்திறேடைசை சீர்தளை யடிதொடை யிவற்றின்
வழுத்த புந்தகை காட்டுபு கவித்தொடர் வனேவான்
பழுத்த பல்விதி யாவன வொருங்ககப் பட்டன்
றழுத்த மூங்கிய நூல்களிற் சிறந்தவ *றூலும்*

ஆரிபு நாயகம் : 8 : 12.

**அறூள்** aṟūḷ, பெ. <arūḍ. عروض> யாப்பு.

*சீர்தளை அடிதொடை சிதைவின் மோனேயுஞ்*
சேர்தரும் இனங்களும் பண்ணுஞ் செப்பலு
மார்தரு துறைபல அமையுஞ் செய்யுளி
னேர்தரும் *அறூள்* என நிகழ்த்து நூல்களும்

சேகுனப்புலவர் : குத்பு நாயகம் : 11 : 9.

**அன்அம்த** aṉamta, தொ. <an'amta. انعمت> நீயருட் புரிந்த.

*அன்அம்த* வென்று ஒலிமார்க்கு

ஞானப்புகழ்ச்சி : 674.

**அன்அம்த அலைகிம்** aṉamta alaikim. தொ. <an'amta 'alaihim. انعمت عليهم> நீ அவர்கள்மீது அருள்புரிந்தாய்.

*அன்அம்த அலைகிமெ*னவே அவுலியாக்களொடு

ஞானப்புகழ்ச்சி : 674.

**அன்சார்** ancār, பெ. <anṣār. انصار> உதவி புரிந்தவர்கள்.

*மக்காவிலிருந்து சென்ற முகம்மது நபி அவர்களை வரவேற்று உபசரித்து ஆதரவு அளித்தமையால் மதீனவாசிகள் அன்சார் என்று அழைக்கப்பட்டனர்.*

இடராறுத் தடைந்தமு ஹாஜி ரீன்களு
மடலுறும் வேற்கையன் *சாரி* மார்களு
முடனுவந் தொருவருக் கொருவ ரவ்வயி
னிடனுறக் காந்தமு மிரும்பு மாயினர்

சீறாப்புராணம் : 52 : 22.

**அன்பியா** aṉpiyā, பெ. பன். <nabi. انبيا> தீர்க்கதரிசிகள்.

மறுளறு *அன்பி யாக்கண்* மன நிகர் மாசிலாது

வண்ணக்களஞ்சியப் புலவர் : முகியித்தீன் புராணம் : 7 : 9.

**அன இல்லாகூ வலாகுவ இல்லா அஞ** aṉa illākū valākuva illā aṉā, <ana illāhu va lā huva illā anā. انا إلا هو ولا هو إلا انا>

அவனன்றி நானில்லை நானின்றி அவனில்லை.

ஹக்குகல்க் காகவும் தான்கல்க் குஹக்கா கவுஞ்சா
லக்கலா *அனஇல் லாகூ வலாகுவ இல்லா அஞ*வென்று

நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 8 : 98.

**அனசு** aṉacu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

வருமனக் கொடியர் சேனை மலிவுகண் *டனசு* தோன்றல்
ஒரு மனத் தப்துல்லா

புதுகுஷ்ஷாம் : 27 : 80.

**அனமின்னூ றில்லாகி வகுல்லி ஷெய்யிம் மின்னூறி** aṉamiṉṉūṟ illāki vakulli ṣeyyim miṉṉūṟi, வா. <ana min nūrillāhi vakulli šayin minnūri. انا من نور الله وكل شيئ من نوري> நான் அல்லாஹ் வின் ஒளியில் நின்றும் உள்ளேன். அனைத்துப் பொருட்களும் என் ஒளியில் நின்றுள்ளவையே.

*அனமின் னூறில் வாகிவகுல்லி ஷெய்யிம் மின்னூறி*
என்றருளும் திருப்பொருளார் ஒளிவிற் பிரந்த

கௌதுநாயகர் காரணப்புராணம : 4:3.

**அனல் மவுஜூத்** aṉal mavujūt, பெ. <anal mawjūd. انا الموجود
நான்தான் படைப்புக்கள்.

ஓது நாம *மனல் மவுஜூ*தென்றே

ஞானக்குறம் : நாட்டுவளங் கூறுதல் : 24.

**அனுசிர்** aṉācir, பெ. <'anāsir. عناصر> சாராம்சம்.

அரிய *அனுசிரு*னவெலாம்

சாதுலி நாயகம் : 20 : 7.

**அஃலல் உலா** aklal ulā, தொ. <aalal ulā. اعلى العلى>
மிக உயர்ந்த.

*அஃலல் உலா*வான ஆலமலக் கூத்திலோ

மஸ்தான் சாகிபு பாடல் : வஸ்துதயத்திறனந்தம்.

**அஃலுஸ் சுன்னத்** aklus cuṉṉat, பெ. <ahlul sunna. اهل السنة>
(முகம்மது நபி (சல்) அவர்களின்) வழி முறையைப் பின்பற்றுபவர்கள்.

எனத்திருத் தமுஞ்செய் *யஃலுஸ்சுன் னத்*தோ ரிடருரு

நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 8 : 47.

**அஃறுபு** akṟupu, இ. பெ. எசுறபு என்பவரின் புதல்வர்.

பிடிநடை மடவாள் பெற்றெடுத் துவந்த
பிள்ளை*யஃறுபு*வயினிருந்து

சீறுப்புராணம் : 4 : 54.

**அஜ்மீர்** ajmīr, இ. பெ. ஒரு இஸ்லாமிய புண்ணிய தலம். இது வட இந்தியாவில் உள்ளது. இங்கு முஸ்லிம் பெரியார் குவாஜா முகினுத்தீன் சிஸ்தி என்பவர் அடங்கியுள்ளார்.

அருள் சிறந்தமைந்தார் வாக்கினணி நகர் *அஜ்மீர்* வாழ்வார்
ஆரிபுநாயகம் : 1 : 21.

**அஜ்ஜாசு** ajjācu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

அரிதினில் பெரும் தந்தை *அச் ஜாசு*
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 19 : 14 (607).

**அஜாசீல்** ajācīl, பெ. <'azāzīl. عزازيل> சாத்தானுக்குரிய பெயர்.

வானவர் செய்யு மந்த வணக்கத்தின் முறை செய் யாமற்
போனத னுல் *அஜாசீல்* பொறை நிறை யறிவு போக்கி
சீருப்புராணம் : 4 : 16.

**அஸ்ஸலவாத்** assalavāt, தொ. <assalavāt. الصلوات> எல்லாத் தொழுகை.

அழகிய நன்மொழி *அஸ்ஸல வாத்தின்*
எழில்செறி பொருளுள வெல்லாத் தொழுகையும்
மிகுருசு மாலை : 593.

**அஸ்ஸலாமு அலைக்க வஐயுஹன்னபிய்யு வறகுமத் துல்லாஹி வபறக் காத்துகு** assalāmu alaikkava ai yuhannapiyyu varakumat tullāhi vaparak kāttuku, வா. <assalāmu alaikka va aiyuhan na biyyu varahmatullāhi vabarakkātuku. السلام عليك ايها النبي ورحمة الله وبركاته> நபியே உமக்கு என் சலாம் (சாந்தி) உண்டாவதாக.

அதபாய் *அஸ்ஸலாமு அலைக்கவஐ யுஹன்னபிய்யு*
*வறகுமத் துல்லாஹி வபறக் காத்துகு*
மிகுருசு மாலை : 593.

**அஸ்ஸலாமு அலைஞ வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன்** assalāmu alainā vaalā ipātillāhis sālihīn, வா. <assalamu alainā va'alā ibādillāhi sālihīn. السلام علينا وعلى عباد الله الصالحين> இந்த சலாம் எங்கள் இறைவனை வணங்கும் நல்லடியார்களுக்கே.

அம்மொழி *அஸ்ஸ லாமு அலைஞ*
*வஅலா இபாதில் லாஹிஸ் ஸாலிஹீன்*
மிகுருசு மாலை : 593.

**அஷ்ஹத்** aṣhat, பெ. பார். அசுகதுக்கலிமா.

தோயவார்த் *தஷ்ஹ* தோதியே குளிப்பித்து புனித நீர்
கௌது நாயகர் காரணப் புராணம் : 19 : 33.

**அஹதுல்லா** ahatullā, பெ. <ahadullah. احد الله>
ஒருவனான அல்லாஹ்.
அருபமோடுன்றன் துணையருள் நீ *அஹதுல்லா*வே
ஞானப்புகழ்ச்சி : 242.

**ஆ** ā பெ. அல்லாஹ்வைக் குறிக்கும் ஒரு சொல்.
*ஆ*வென்றும் ஈயென்றும் ஊவென்றும் நின்றவுனை
ஞானப்புகழ்ச்சி : 130.

**ஆகிர்** ākir, பெ. பார். ஆகிறம்.
வெந்திற்ற *ஆகிர்*மட் டாயிருப் பேனில் வெளியி னின்றே
மிகுறுசு மாலை : 522.

**ஆகிர்** ākir, இ. பெ. <āhir. آخر> இறுதியானவன்.
அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். மசீது.
இராஜநாயகம் : 36 : 39.

**ஆகிறம்** ākiram, இ. பெ. <āhir. آخر> முடிவு (இறுதி நாளைக் குறிப்பிடுகிறது).
இச்சையாம் புவியின் வாழ்க்கை இதமெனும் கடலில் ஆழ்ந்து
மிச்சமாம் *ஆகிறத்*தின் மிதமிலாச் சுகத்தை விட்டார்
பத்றுத்தீன புலவர் : முகியித்தீன் புராணம் : 12 : 35.

**ஆசர்** ācar, இ. பெ. <āzar. آزر> இப்ருஹீம் நபி அவர்களின் தந்தை.
பொன்னொடு மணியினோடும் பொருளொடு நிலங்களோடு
மின்னொடு மமைச்சர்க் கெல்லா மன்னவனுக்கிப் பின்னர்
தன்னொடு மிருப்பச் செய்தா *னசரை*த் தலைவ னன்றே
திருமணிமாலை : 6 : 44.

**ஆசறு** ācaru, இ. பெ. நாகூறு என்பவரின் புதல்வர்.
வண்டணி மலர்த்தார் *ஆசறு* த்வத்தால்
வருமொரு வடிவுறு மதலை
சீறுப்புராணம் : 4 : 50.

**ஆசா** ācā, பெ. <'asā. عصا> ஊன்றுகோல்.
சொல்லொணுதவா *சா*வையு மளித்தனர் தொகுத்து
பத்றுதீன புலவர் : முகியித்தீன் புராணம் : 11 : 31.

**ஆசிம்**[1] ācim, பெ. <hācim. حاشم> ஒரு குலத்தின் பெயர்.
நிலமிசை *ஆசிங்* குலம்பெயர் விளங்க
சீறுப்புராணம் : 6 : 87.

**ஆசிம்**[2] ācim, இ. பெ. உத்பாவின் தகப்பன்.
............*ஆசி* மருள் வென்றியுத்பாத்தமை மருவின்
புதுகுஷ்ஷாம் : 32 : 27.

**ஆசிம்**[3] ācim, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*அருள் அடை கிடந்த செங்கண் ஆசிம்*

பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 8 : 3 (196).

**ஆசியா** āciyā, பெ. பெயர். தலை சிறந்த பெண்கள் நால்வருள் ஒருவராகக் கருதப்படுபவர். முகம்மது நபி (சல்) அவர்களின் பிரசவத்தின்போது உதவியவர்.

செவ்விவீற் றிருந்து முகமதி யிலங்குந்
திருந்திழை *ஆசியா* தமையு

சீறுப்புராணம் : 5 : 81.

**ஆசிறு** āciṟu, இ. பெ. ஓர் அரசன்.

வேழ மனைய *ஆசிறெனும்* வேந்தன்
செவியில் கேளாமுன்

பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 12 : 89 (333).

**ஆசிக்கீன்** ācikkīṉ, பெ. <'iśq. عشق> (அல்லாஹ்வின் மீது) மிக்க அன்புடையவர்கள்.

ஆரிபீன்களுக்கும் *ஆசிக்கீன்களுக்கும்* அரசெனுமாண்டகை

ஆரிபுநாயகம் : 7 : 58.

**ஆசு**[1] ācu, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவர்.

இணங்கும் *ஆசு*சொல் அம்று எனும் ஏந்தலை விடுத்தார்

பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 29 : 4 (1262).

**ஆசு**[2] ācu, இ. பெ. ஓர் அறிஞன்.

வழுவின்றி நியதி சொல்லு மாதவர் *ஆசு* கூறும்
விழுமிய செல்வத்தோடும் வேந்தனே யென்னி னன்று

திருமணிமாலை : 4 : 66.

**ஆசு**[3] ācu, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவர்.

*ஆசருள்* அரசர்

புதுகுஷ்ஷாம் : 50 : 2.

**ஆசுளன்** aculan, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*ஆசுள* ேைடு விழுந்தது அழன்று

புதுகுஷ்ஷாம் : 27 : 125.

**ஆசுரு** ācuṟā, பெ. <āshūrā. عاشورا> ஒரு மாதத்தினுடைய பெயர். முதலாவது இஸ்லாமிய மாதமாகிய முஹர்ரம் மாதம் ஆசுரு மாதம் என்று வழங்கப்படும். இம்மாதத்தில் அனுஷ்டிக்கப் படும் நோன்பு 'ஆசுரு நோன்பு' என்றும் வழங்கப்படும்.

நுதிதரும் வேலீர் *ஆசுரு* நோன்பு
நோற்பதைத் நோக்குவீ ரெனவும்

சீறுப்புராணம் : 55 : 9.

**ஆசூசு மாசூசு** ācūcu mācūcu, பெ. <yājūj mājūj. ياجوج ماجوج>
இவர்களின் வருகை இறுதி நாளின் அடையாளங்களில் ஒன்றாகும்.
மண்டிவரும் *யாசூசு மாசூ* சவரிடத்தில்
மிகுறுசு மாலை : 672.

**ஆத்** āt, இ. பெ. ஒரு ஆணின் பெயர்.
*ஆதின்* மகன் சத்தாது
புதுகுஷ்ஷாம் : 57 : 64.

**ஆத்தீக்** āttik, பெ. ஒரு மலக்கின் (வானவரின்) பெயர்.
வல்ல தண்டமா மிரும்*ஆத் தீக்*கதை மற்றென்று
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 17 : 23.

**ஆதபன்** ātapaṉ, இ. பெ. ஒருவரின் பெயர்.
புரிந்து நின்றன் *ஆதபன்* என்னும் பெயர் பொலிந்தான்
திருமணிமாலை : 21 : 22

**ஆதம்** ātam, இ. பெ. முதல் மனிதன்; முதல் நபி (தீர்க்கதரிசி).
பரிவுறு மனு *ஆதத்*தைப் படைக்கமண் ணெடுத்து வாவென்
றுரைதர இசுறுயீலு முவந்துமண் ணெடுத்துப் போந்தார்
சீறாப்புராணம் : 4 : 2.

**ஆதமி** ātami, பெ. பார். ஆதம். ஆதத்தை உடைய.
தகுதாய் நல்ல *ஆதமி*யாய் தாயான ஹவ்வாவாய்
ஞானக்குறம் : மலைவளங்கூறுதல்.

**ஆத (மலை)** āta, பெ. இலங்கையில் உள்ள ஒரு மலையின் பெயர்.
adam's peak என ஆங்கிலத்தில் வழங்கப்படுகிறது.
ஆசுகவி வாணர்கற்ப தாருவறியோர்கடெப்பம்
*ஆதமலை* மீதினிற்கும் இறசூலே
காசிம் : திருப்புகழ் : 40.

**ஆபிதிர்** āpitir. இ. பெ. தாபிது என்பவரின் மகனை மாபிதில் என்பவரின் மனைவி.
தாபிது நன்று நின்றன் தவத்தொடு மரிதிற் பெற்ற
மாபிதிர் மகவை யென்பான்மண முடித்தளித்தி யேலென்று
*ஆபிதிரா*ளைக் கொண்டோ னனுப்பினன் முடங்க லொன்றே
திருமணிமாலை : 4 : 63.

**ஆபிதீன்** āpitīṉ, பெ. <ābidīn. عابدين> அடியார்.
உறுதி அடியார் என்றசிறப் போங்கும் *ஆபிதீன்*க ளெல்லாம்
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 8 : 82.

**ஆபிது** āpitu, பெ. <ābid. عابد> தொழுகையில் ஈடுபடுபவர்.
*ஆபிது*க் கண்மணி யான ஆல் நபியிறசூலை
ஞானக்குறம் : வாசல் வளங்கூறுதல்.

**ஆபியத்** āpiyat, பெ. <āpiyat. عافية> உடல் நலம்.

இரணப் பொலிவுநல் *லாபியத்தும்*

ஞானப்புகழ்ச்சி : 131.

**ஆபு** āpu, பெ. <āb. آب> Persian. நீர்.

நறிய *ஆபுசம் சத்து*நீர் யாவர்க்கும் நல்க

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 24 : 23 (928).

**ஆபுஸம்சம்** āpusamcam, பெ. பாரசீகச் சொல். ஆபு என்பது நீரினைக் குறிக்கும்; ஸம்சம் என்பது மக்காவில் உள்ள புனிதக் கிணற்றினைக் குறிக்கும்.

அற்புதமாய் விண்ணவரும் புகலரிய *ஆபுஸம்சத்* தரிய நீரை

சீருபபுராணம் : 23 : 33.

**ஆம்** ām, இ. பெ. <hām. هام> நூகு நபியின் மூன்று புதல்வர்களுள் ஒருவர்.

கொடுநிலை கொண்டான் *ஆம்*வந்தீன்ற கோமகன்
வருமர பிசைப்பாம்

திருமணிமாலை : 4 : 4.

**ஆமிறு**[1] āmiṟu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

பலன்கொளு *மாமி றென்*போர் கரத்தி லீந்தார்

புதுகுஷ்ஷாம் : 26 : 43.

**ஆமிறு**[2] āmiṟu, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவர்.

ஆள்திறல் சிங்கம் என்னும் *ஆமிறு* கரத்தின் ஈந்தார்

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 4 : 2 (111).

**ஆமிறு**[3] āmiṟu, இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியார்.

வழுவிலாப்புகழ் படைத்திடும் *ஆமிறை* மனதில்

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 31 : 1 (1317).

**ஆமிறு**[4] amiṟu, இ. பெ. உம்மானுக்கு அனுப்பப்பட்ட தூதர்.

*சீயக் குருளையாம் ஆமிறு*......

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 8 : 3 (186).

**ஆமீன்** amin, வி. அடை. <āmin. آمين> அப்படியே ஆகுக.

இறைவ னைத் தொழு திருகையு மேந்திய *வாமீன்*
முறைமு றைப்படிக் கூறிய வோசையு முழங்கும்

சீருப்புராணம் : 3 : 22.

**ஆமீன் யாறப்ப லாலமீன்** āmin yāṟappa lālamīn, தொ. <amin yā rabbal ālamin. آمين يا رب العالمين> அப்படியே ஆகுக எல்லா உலகங்களுக்கும் அதிபதியே.

....................................சொர்க்கத்
தின்னருள் வாழி *யாமீ னியாறப் பல்லாலமீன*

புதுகுஷ்ஷாம் : 61 : 88.

**ஆமீனல்லாகு ஆமீன்** āminallāku āmin, தொ. <āminallahu āmin. آمين الله آمين> ஆமீன், அல்லாஹ், ஆமீன் என மூன்று சொற்கள் இடம் பெற்றுள்ளன.

அய்யரென் னுளத்தில் வாழ்க *ஆமீனல் லாகு ஆமீன்*

ஞானப்புகழ்ச்சி : 429.

**ஆமினல்லாகும்ம ஆமினல்லா** āminallākumma āminallā, தொ. <āmin allāhumma āmin allāh. آمين اللهم آمين الله> அப்படியாகுக அல்லாஹ் அப்படியாகுக.

எமக்குள் *ஆமினல்லாகும்ம ஆமினல்லா*வே

ஞானப்புகழ்ச்சி : 685.

**ஆமினு** aminā, இ. பெ. முகம்மது நபி (சல்) அவர்களின் தாயார்.

அயிலுறை செழுங்கரத் தப்துல் லாவெனும்
பெயரிய களிறுக்கோர் பிடியும் போலவர்
உயிரென விருந்தசைந் தொசிந்த பூங்கொடி
மயிலெனும் *ஆமினு* வென்னு மங்கையே

சீறுப்புராணம் : 5 : 9.

**ஆயத்** āyat, பெ. <āyat. آيت> அல்குர்ஆன் வசனங்கள்.

நெறியொடும் புறுக்கா னன்னோர் நிகழு மவ்வருடந் தன்னிற்
பெறுகதி றமலா லென்னப் பெருகிய நோன்பு தன்னை
யுறுதிகொண் டெவர்க்குஞ் செவ்வி யுறுபறு லாக்கினேனென்
றிறையவ னருளின் *ஆயத்* திறங்கிய தெவர்க்கு மன்றே

சீறுப்புராணம் : 65 : 1.

**ஆயிசா** āyicā, இ. பெ. அகமது கபீறு றிபாயி ஆண்டகை என்னும் ஆரிபு நாயகம் அவர்களின் தாயார்.

பெருமையி னொளிநனி பிறங்கு மாறெழி
லொருமையில் *ஆயிசா* வுதர மேயதே

ஆரிபு நாயகம் : 7 : 19.

**ஆயிலிபுனு குதைமுல் அசுஅரீ** āyilipuṉu kutaimul acuari, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*பாயு மடையார் சிரந்தோறும் பதிக்கும் குரம்வெம் முகந்தோறும்*
*தோயு மியத்தின் கணந்தோறும் துவைக்கும் விருதி னிடந்தோறும்*
*காயு மடரும் படைதோறும் கடிக்கு முரநெஞ்சகந் தோறும்*
*ஆயி லிபுனு குதைமுல் அசுஅரியின் வேகப் பரியம்ம*

புதுகுஷ்ஷாம் : 29 : 116.

**ஆயிஷா** āyiṣā, இ. பெ. கலீபா அபூபக்கர் அவர்கள் புதல்வி. நபிகள் பெருமானாரின் மனைவியருள் ஒருவர்.

*பெரிய முலைச் சிறியவிடைப் பவளவிதழ்த்*
*தரளநகைப் பிறழும் வாட்கட்*
*கரியகுழற் பிடியினிடைச் சிலையினுதற்*
*செழுமைதருங் கணிப்பின் மாத*
*ரிருபுறத்து மடைப்பைமணிச் சிவிறிமறை*
*நறும்பேழை யினைய வேந்தப்*
*பொருவரிய வழகுமயில் ஆயிஷா*
*வெனுங்கொடியும் போனா ரன்றே*

சீறாப்புராணம் : 80 : 10.

**ஆயிலா** āyilā, இ. பெ. இஸ்மாயில் நபி அவர்களின் மனைவி.

*பொன்குடி யாளன் பெற்றப் பூங்கொடி ஆயிலாவை*
*மன்குடி வேண்டி நின்றார் மனைக்குடி வேண்டினாரே*

திருமணிமாலை : 30 : 40.

**ஆரிது**[1] āritu, இ. பெ. செவிலித்தாய் அலிமாவின் கணவர்.

*ஆரிது மனையலி மாகண் டுஞ்சிட*

சீறாப்புராணம் : 6 : 20.

**ஆரிது**[2] āritu, இஸ்மாயில் நபி அவர்களின் மூதாதையருள் ஒருவர்.

*முன்குடி நிறைந்த செல்வ முதிர்குடி யொழுக்கங்கொண்ட*
*நன்குடி ஆரிது ஈன்ற நன்மணி யமுறென்றோதும்*
*பொன்குடி யாளன் பெற்றப் பூங்கொடி யாயிலாவை*
*மன்குடி வேண்டி நின்றார் மனைக்குடி வேண்டினாரே*

திருமணிமாலை : 30 : 40.

**ஆரிது**[3] āritu, இ. பெ. பறுக்கா நாட்டு மன்னன்.

*மதிகெடும் மிசுறு பெற்ற மைந்தன்ஆரீ தென்று ஓதும்*

பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம் : 6 : 1 (179).

**ஆரிபீன்** āripiṉ, பெ. பன். <ārif. عارف> ஞானிகள்.

*பொங்கிய நகரில் தாசுல் ஆரிபீன் புகழ் பெற்றோங்கு*

நாயகர் சுவன நாடு புனைந்தோர்
தாய ரானக*தி சா*தம யன்சேய்
தூய சீரணிசு பெறுமெ ழுந்தார்

புதுகுஷ்ஷாம் : 36 : 119.

**கதிது**[1] katitu, பெ. பார். ஹதீஸ்.

ஆண்டு அபுசாலிகின்பால் *கதிது*க ளனைத்துங் கற்றூர்

வண்ணக் களஞ்சியப் புலவர் : குத்புநாயகம் 8: 57.

**கதிது**[2] katītu, இ. பெ. ஓர் இடம்.

அலர்த்த டாகங்கள் புடைபடும் *கதிதெ*னும் அந்தத்
தலத்தின் வந்தனர்

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 24 : 36 (941).

**கதீது** katītu, பெ. <hadīs. حديث> முகம்மது நபி (ஸல்) அவர்களின் மணிமொழிகள்.

சொல்ல ரும்புகழ் தூதர் *கதீது*கள்

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 39 : 155 (1792).

**கதீமுல் அமா** katīmul amā, பெ. <qadīmul amā. قديم الامى> நிரந்தர மறைவான. பார். மகுலியத்து.

மஸ்தான் சாகிபு பாடல் : வஸ்துதயத்திறனந்தம்.

**கதீம்** katīm, பெ. <qadīm. قديم> பூர்வீகமானது. பார். மகுலியத்து.

மஸ்தான் சாகிபு பாடல் : வஸ்துதயத்திறனந்தம்.

**கதீஜா** katījā, இ. பெ. <ḥadījā. خديجة> நபிகள் நாயகம் (சல்) அவர்களின் முதல் மனைவியினுடைய பெயர்.

வானகத் தமர ராலு மானில மக்க ளாலுந்
தானவ யவத்தின் செவ்வி தனையெடுத் தின்ன தின்ன
தானநன் குவமை யென்ன வளவறுத் துரைக்க வொண்ணுத்
தேன்மொழி கதிஜா வென்னுந் திருப்பெயர் தரித்த பாவை

சீறாப்புராணம் : 10 : 16.

**கதுமத்து** katumattu, இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியார்.

தூய உத்தம னும்கது மத்து தந்த
சுதன்அசது என்பவர் கிணற்றின்
வாயுற்ற புனலைக் குடங்களில் மொண்டு
வந்தனர் மறைநெறி முதியோர்

பனியகுமது மரைக்காயா : சீறாப்புராணம் : 39 : 169 (1806).

**கதுமு** katumu, இ. பெ. ஒரு கோத்திரத்தின் பெயர்.

பாவியாம்கது முக்கிளை யார்களும்

பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம் : 29 : 8 (1266).

**கதுறு** katuṟu, பெ. பார். கதர். அல்லாஹ் விதித்தது.

கலாவும் கதுறும் மிகப் பேசி கனியோன் இடத்தில்

பத்றுத்தீன புலவர் : முகியித்தீன் புராணம் : 46 : 27.

**கந்தகூசு** kantakūcu, இ. பெ. முகியித்தீன் ஆண்டவரின் மூதாதையருள் ஒருவர்.

கருமலை நிகரா யுலவு முன்றிலினர்
கந்தகூ செனும் பெயருடையோர்

பத்றுத்தீன புலவா : முகியித்தீன் புராணம் : 4 : 13.

**கப்பார்** kappār, இ. பெ. <gaffār. غفار> மன்னிப்பவன். அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார் யாறகுமான்.

இராஜநாயகம் : 37 : 36.

**கப்று** kapṟu, பெ. <qabr. قبر> நல்லடக்கம் செய்யப்படும் குழி.

..............கலி மாவுரை யொலிப்பத்
தன்னி லியாவருந் துன்புறக் கபுறில் வைத்தனரால்

சீறாபபுராணம் : 77 : 11.

**கபசி** kapaci, இ. பெ. அபிசீனியாவைக் குறிக்கும் சொல்.

நிறைதரு கபசி நாட்டில் நிலைபெறு முசுலீம்ஆன

பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம் : 4 : 1 (110).

**கபன்** kapaṉ, பெ. <kafan. كفن> ஒரு முஸ்லிமின் உயிர் பிரிந்தபின்னர் நல்லடக்கத்திற்காக அணியப்படும் சாதாரண வெள்ளாடை.

மனப்பயம் அதனு லின்னோர் மதிப்பினி ராட்டித் தூய
கனப்படு துகில் மூன்ருலுங் கடி *கபன்* செய்து வாச
நனிப்பொடி தூவிச்சேட தறுந்துகிற் பொதிந்து மேன்மை
யனைத்துள பாரிவைத்தார் அகமது நபியை யன்றே

புதுகுஷ்ஷாம் : 11 : 84.

**கபா** kapā, பெ. <qaba'. قبا> மேலங்கி.

ஏந்திய கரத்தினு லெழிற்*கபா*யினை
வேந்தர் கோன் முகியித்தீன் மெய்யிற் பூட்டினர்

பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன புராணம் : 35 : 85.

**கபீசு** kapīcu, பெ. ஒரு வகைப் பிசாசு.

பசாசு பூதங் காய்ப்புறு *கபீசு*ந் தீர்ந்து காரணந்
தோன்றிற்றன்றே

தீன் விளக்கம் : 21 : 31.

**கபீப்** kapīp, பெ. பார். ஹபீப்.

கண்ணிடங்களித்தன *கபீபி*ன் சோதியே

புதுகுஷ்ஷாம் : 7 : 76.

**கபீபிறசூ லுல்லா** kapīpiracūlullā, பெ. <habīb rasūl ullāh. حبيب رسول الله> பார். ஹபீப், இறசூல், அல்லாஹ்.

கம்பொறித்து இட்ட நாம *கபீபிறசூலுல் லா*வும்

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 13 : 21 (440)

**கபீபு** kapīpu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

நசையு லாவுள மசுலமா நன்மகக் *கபீபை*
மிசைய வாக்கிவிட் டெழுந்தனர் விரிபடைநாதர்

புதுகுஷ்ஷாம் : 29 : 11.

**கபீபுல்லா** kapīpullā, பெ. பார். ஹபீப்.

காரணக் குருவின் வாய்ந்த *கபீபுல்லா* தம்மின் மிக்கு

புதுகுஷ்ஷாம் : 11 : 92.

**கபீழு** kapīḻu, இ. பெ. <hafīd. حفيظ> பாதுகாவலன். அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். ருபிகு.

இராஜநாயகம் : 36 : 38.

**கபீறு** kapīṟu, இ. பெ. <kabīr. كبير> பெரியவன். அல்லாஹ்வின் அழகிய திருநாமங்களுள் ஒன்று. பார். ருபிகு.

இராஜநாயகம் : 36 : 38.

**கபீறு** kapīṟu, இ. பெ. <ḫabīr. خبير> அறிந்தவன். அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். ருபிகு.

இராஜநாயகம் : 36 : 38.

**கபுகாபு** kapukāpu, இ. பெ. ஓர் அறிஞன்.

புந்தியி னுவகை கூரப் போற்றிநற் புராணந் தேர்ந்து
நந்தலில் *கபுகாபு* என்னு நாமமு நவின்றிட்டாரால்

சீறாப்புராணம் : 53 : 13.

**கபுசு** kapucu, பெ. பாதரட்சை.

அறுஷினுக் கியல்வீ றுயர்தர *கபுசோ* டம்புய பதநடை புரிந்தீர்

தீன் விளக்கம் : 5 : 10.

**கபுல்** qabul, பெ. <qabl. قبل> முன். பார். மகுலியத்.

மஸ்தான் சாகிபு பாடல் : வஸ்துதயத்திறனந்தம்.

**கபுறு** kapuṟu, பெ. <qabr. قبر> புதைகுழி.

விடங்கொ ளித்தரவு தேளு ருதுடன்
எரிந்தி டக்*கபுறு*அ தாபு ருதெழில்
விளங்கு சொற்கமண வாடை வீசருள் புரிவீரே

காசீம் திருப்புகழ் : 131.

**கபுறுஸ்தான்** kapuṟustāṉ, பார். கபுறு. சடலம் நல்லடக்கம் செய்யப்படும் புதைகுழிகள் உள்ள இடம்.

நேசமுறும் வாசல்பசு கென்னும் *கபுறுஸ்தான்*

பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 58 : 27.

**கபூல்** kapūl, பெ. <qabūl. قبول> ஒப்புக்கொள்ளுதல்.

தூதென உதித்த முகம்மதின் துஆவைத்
துய்யவ னுறக் *கபூலாக்க*

சீறாப்புராணம் : 33 : 15.

**கபூறு** kapūṟu, இ. பெ. <gafūr. غفور> மன்னிப்பவன். அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். ருபிகு.

இராஜநாயகம் : 36 : 38.

**கபூறுற்றகீம்** kapūṟuṟṟakīm, பார். கபூறு, றகீம். அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் இரண்டு.

ஆதரம் பெறுநம் பிமுகி யித்தீ னவர்பூம்
பாத தாமரை சிரஞ்சுமந் திந்நூல் பகரத்
தீது ருநல வரிசைசெய் செய்குமுகம்ம
தேதந் தீர்த்தரு ளருளெம் *கபூறுற் றகீமே*

நவமணிமாலை (முகியித்தீன புராணம) : 17 : 51.

**கம்தான்** kamtāṉ, இட. பெ. இருக்கில் உள்ள ஒரு நகரம்.

என்னுடை நகர் *கம்தான்*

சேகுனாப்புலவர் : குத்புநாயகம் : 9 : 6.

**கமால்** kamāl, பெ. <kamāl. كمال> பரிபூரணம். பார். மகுலியத்து.

மஸ்தான் சாகிபு பாடல்: வஸ்துதயத்தினனந்தம்.

**கமாலியத்** kamāliyat, பெ. <kamāliyat, كماليت> பூரணத்துவம்.

*இற்று ருதுவிட் டிறங்குநு சூலதா லுடலெய்*
*தற்ற மற்றவிந் நிரப்பங் கமாலி யத்தாகும்*

நவமணிமாலை (முகியித்தீன் புராணம்): 8 : 18.

**கமாலுலெக்கீன்** kamālulekkīn, பெ. <kamālul yaqīn.كمال اليقين>

பூரணமான சத்தியம்.

அம்பி யாக்களு மலா யிக்கத் துகளா னபேரும்
வம்பறப் பொருந்தெந் நாளும் *கமாலு லெக்கீ னி*ற்சாயூச்
சம்பெற..............

நவமணிமாலை (முகியித்தீன புராணம்): 8 : 94.

**கமீஸ்** kamīs, பெ. <qamīs. قميص> சட்டை (கமிஸ்).

காயத்தில் நின்றஓர் சத்தம் நன்னபிமெய்க்
*கமீசு*டன் கூவலில் தெளிந்த
தோயத்தை ஊற்றி முழ்கிவித் திடுமின்
எனும்தொனி கேட்ட அப்போது

பனியகுமது மரைக்காயர்: சீறப்புராணம்: 39 : 169 (1806).

**கமீது**[1] kamītu, இ. பெ. <hamīd. حميد> புகழுக்குரியவன்.

அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். மசீது.

இராஜநாயகம்: 36 : 39.

**கமீது**[2] kamītu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*கமீதின்* சேய் அருள் நிருப மணிமதில் வாயில்கள் தோறும்

புதுகுஷ்ஷாம்: 23 : 15.

**கமுகா** kamukā, பெ. ஒரு வாளின் பெயர்.

கலைதே ரிறகு லுமக்களித்த
*கமுகா* என்னும் வடிவாள்

கனகாபிஷேக மாலை: 28 : 16.

**கமுசு**[1] kamucu, பெ. ஒரு கோட்டையின் பெயர்.

கண்ஆர் அகழி புடைஅகலாக் *கமுசத்* துருக்கம் கொள

பனியகுமது மரைக்காயர்: சீறப்புராணம்: 12 : 27 (271).

**கமுசு**[2] kamucu, பெ. பார். கமீஸ். கமிசு (சட்டை).

நிறைவிலைக் கலிங்கங் கொண்டு நிறை சட்டை *கமுசைச்* செய்து
பொறையுட னணியு மென்று பொருத்தமா யறி வித்தானே

பத்றுத்தீன புலவர்: முகியித்தீன் புராணம்: 27 : 3.

**கரிபு** karipu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

மகுதிக் *கரீபு* சேயும்

புதுகுஷ்ஷாம்: 38 : 7.

**கரீமு** karīmu, இ. பெ. <karim. كريم> கண்ணியமிக்கவன். அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். ருபிகு.

இராஜநாயகம் : 36 : 38.

**கயாத்து** kayāttu, பெ. பார். ஹயாத்து.

*கடத்து மவுத்தாக்கிய விறையோன் கயாத்தாக்கு*
*வனுமவனெனவே*

வண்ணக்களஞ்சியப் புலவர் : குத்பு நாயகம் : 14 : 18.

**கயிசு** kayicu, இ. பெ. ஓர் அரசன்.

*கருத லர்க்கரி கயிசெனும் அரசர்கோன்*

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 37 : 15 (1587).

**கயிலான்** kayilāṉ, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*இஞ்சியிற் றையினில் அகப்படில் தகீபுக்*
*கிளையினில் உதித்தெழும் கயிலான்*

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 28 : 29 (1209).

**கயிறு** kayiṟu, பெ. அ. <ḫair. خير> நன்மையான.

*வானூர்மதி யனையீர்மன மகிழ்ந்தே கயிறுக*

சீருப்புராணம் : 80 : 51.

**கயினுக்காகு** kayiṉukkāku, பெ. ஒரு கோத்திரத்தின் பெயர்.

*கோதுறுங் கயினுக் காகெனும் அவர்கள் கூட்டத்தின் காரணமாக*

சீருப்புராணம் : 66 : 4.

**கல்காயீல்** kalkāyīl, இ. பெ. ஒரு மலக்கின் (வானவரின்) பெயர்.

*கல்லிஜம்ஹா யிலும்கல் காயிலை அழைத்தார்*

மிகுருசு மாலை : 179.

**கல்கு** kalku, பெ. <ḫalk. خلق> படைப்பு.

*உமதுட லழகைக் கண்டு முவந்திடுங் கல்கிலுற்ற*
*கமையுறு மனசா றென்றே கருதிய மொழியைக் கேட்டு*

பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 15 : 59.

**கல்ப்** kalp, பெ. <qalb. قلب> இதயம்.

*...............தங்கள்*
*கல்பினிற் கசடு நீத்து*

சீருப்புராணம் : 46 : 7.

**கல்லாக்குல் ஆலம்** kāllākkul ālam, பெ. <ḫallāqul ālam. خلاق العالم> எல்லா உலகங்களையும் படைத்தவன்.

*ஆருடன் கேட்பதென் னரிய வாய்மொழி*
*காரிய நீயேகல் லாக்குல் ஆலமென்*
*றேரிய புகழ்சில வியம்ப நன்னபி*

பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 35 : 82.

**கல்வத்** kalvat, பெ. <ḥalwat. خلوت> ஏகாந்த தவச்சாலை; யோக நிட்டை.

காலமிகவாது *கல்வத்*தெனும் யோக
கோலமொழுகு மஃதொன்று குறை தீர்ந்தான்
ஆரிபு நாயகம் : 7 : 50.

**கலப்** kalp, இட. பெ. ஒரு இடத்தின் பெயர்.

*கல பின்* மன்ன என்று
புதுகுஷ்ஷாம் : 59 : 103.

**கலபு** kalapu, இ. பெ. ஒரு கோத்திரத்தின் பெயர்.

உருத்தி ருத்திய வொத்தெனும் புத்தினை உவந்து
கருத்து வைத்தினிது இறைஞ்சினர் *கலபெ*னும் குலத்தார்
பனியகுமது மரைக்காயா : சீறுப்புராணம் : 29 : 5 (1263)

**கலம்** kalam, பெ. <qalam. قلم> எழுதுகோல்.

நிறைமணிக் *கலத்*தைக் கூவி நிறுத்திடுஞ் சவரை நீத்துக்
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன புராணம் : 16 : 39.

**கலறத்** kalarat, பெ. பார். ஹலரத். சமுகம்.

எனக்குரிய தோழரிடஞ் சென்றவர்தம் மெழிலாவி யினிதின் வாங்கிக்
கனக்கு முயர் *கலறத்தி*ற் கொடு வருதிய யவருதவில் கருத்திலாரேல்
புதுகுஷ்ஷாம் : 11 : 7.

**கலறல் மவுத்** kalaral mavut, இட. பெ. அறபு நாட்டில் உள்ள ஒரு பிரதேசம்.

புரமாம் *கலறல் மவுத்*தினரும்
புதுகுஷ்ஷாம் : 15 : 13.

**கலறமிய்யி** kalaramiyyi, இட. பெ. ஓர் இடத்தின் பெயர்.

நனிபுகழ் *கலறமிய்யி*ற்கு
புதுகுஷ்ஷாம் : 20 : 15.

**கலா[1]** kalā, பெ. <qaḍā. قضا> தவறியவை. (தொழுகை, நோன்பு முதலியன)

அன்றுபக லிகல்குபிர ராலசறு
வணக்கங் *கலா* வான தென்ன
சீறுப்புராணம் : 82 : 89.

**கலா[2]** kalā, பெ. <qaḍā. قضا> முன் அளப்பு (விதி).

*கலா*வும் கதுறும் மிகப் பேசி
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 46 : 77.

**கலாக்கத்துறு** kalākkatturu, பெ. பார். கலா[2]. கத்று.

*எதிர்த்தால் கிறையைக் கலாக் கத்துறும்*
*இசையும் அளவும் உசும்பாமல்*
பத்றுத்தீன புலவர் : முகியித்தீன் புராணம் : 46 : 32.

**கலாசு** kalācu, பெ. <ḫallas. خلاص> முடிவு.

*கருநிறக் கடல்வங் கமுங்கவி மூது*
*காட்சியாய்க் கலாசபெற் றதுவே*
சீருப்புராணம் : 4 : 41.

**கலாம்** kalām, இ. பெ. கல்வி.

*தெள்ளருள் கலாமை யோதிச் சிறப்புட னறிவு சொல்வார்*
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 34 : 19.

**கலால்** kalāl, பெ. பார். ஹலால். சட்டப்பூர்வமானவை.

*வலியணி யளவி லானுக் களித்துள வாய்மை நீங்கி*
*நலிதலன் றவன்மீ தாணை நமக்கிது கலாலன் றென்ன*
வண்ணககளஞ்சியப் புலவர் : குதபு நாயகம் : 12 : 14.

**கலாஹ சாத்து** kalāha cāttu, தொ. பார். கலாஹாஜாத்து.

*புறங்கொளுங் கலாஹ சாத்துப் போவதற் கடுத்த தன்றே*
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 43 : 4.

**கலாஹா ஜாத்து** kalahā jāttu, தொ. <qaḍa hājat. قضاحاجت> மலம் கழித்தல்.

*வருந்திய கலாஹா ஜாத்துக் கிருந்தனர் வடிவின் மிக்கார்*
பத்றுத்தீன புலவா : முகியித்தீன் புராணம் : 43 : 9.

**கலிபத்துல் லகுபறு** kalipattul lakuparu, தொ. <ḫalīfatul akbar. خليفة الاكبر> ஒரு முஸ்லிம் பெரியார்.

*வளர்கலிபத்துல் லகுபறென் றெருமுதியவரி ருந்தனர்*
நவமணிமாலை (முகியத்தீன் புராணம) : 7 : 41.

**கலிபா** kalipā, பெ. <ḫālif. خليفة> அடுத்து வந்தவர். முகம்மது நபி (ஸல்) அவர்களின் மறைவுக்குப் பின்னர் அபூபக்கர் (றலி) அவர்கள் ஆட்சி பீடத்தில் அமர்ந்தார்கள். அவருக்குப் பின்னர் ஆட்சி புரிந்தவர் உமர் (றலி) அவர்கள். அவரைத் தொடர்ந்து உதுமான் (றலி) அவர்களும், அலி (றலி) அவர்களும் முறையே ஆட்சி புரிந்தார்கள். இவர்கள்தாம் முதலில் கலிபா என அழைக்கப் பட்டனர். குலபாஉ ருசிதீன் எனச் சிறப்புப் பெயரால் இவர்கள் அழைக்கப்பட்டனர். இதன் பின்னர் இஸ்லாமிய அரச பீடத்தில் அமர்ந்தவர்கள் பொதுவாக கலிபா என அழைக்கப்பட்டனர்.

*போரெழில் கலிபா தோன்றற் புனிதவான் தகிய்யத் தண்ணல்*
புதுகுஷ்ஷாம் : 5 : 4.

**கலிமா** kalimā, பெ. <kalimat. كلمة> சொல். இஸ்லாத்தின் மூல மந்திரத்தைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. 'லாஇலாக இல்லல்லாகு முகம்மதுர் ரசூலுல்லாகி' என்று ஆரம்பிக்கும் முதல் கலிமாவுடன் வேறு நான்கு கலிமாவும் உண்டு. சுட்டு விரலைக் குறிக்க கலிமா விரல் என்ற சொற்றொடர் பயன்படுத்தப்படுகிறது.

ஒருத்தனை யகனவற் குரிய தூதெனு
மருத்தமே யுரைக*லி* *மா*வந் நிண்ணயப் பொருத்தம்
சீறப்புராணம் : 26 : 2.

**கலிமா அசுஹது** kalimā acuhatu, பெ. பார். அசுஹது கலிமா.
கவையற் றுயர்க*லி* *மா*அசு ஹதுசொல் லியுள்ளீமான்
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 23 : 94.

**கலிமா (விரல்)** kalimā (viral), பெ. பார். கலிமா.
விறல்புரி யாதம் வலதுகைக் *கலிமா*
*விர*லகத் திடத்தில்வைத் தனனே
சீறப்புராணம் : 4 : 29.

**கலீமு** kalīmu, இ. பெ. <halīm. حليم> மென்மையானவன். அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். ருபிகு.
இராஜநாயகம் : 36 : 38.

**கலுப்** kalup, பெ. பார். கல்ப்.
எந்தன் *கலுப*து துடிக்கச் சென்னி களைந்து திரத்தைக் காட்டி
இறவுசுல்கூல் படைப்போர் 4 : 28.

**கலிறு** kaliṟu, இ. பெ. ஒரு நபியின் பெயர்.
நலமெலாம் பெருகத்தோன்று *கலிறு* நந்நபியைக் கண்டேன்
வண்ணக் களஞ்சியப் புலவர் : குத்பு நாயகம் : 7 : 2.

**கலீல்** kalīl, இ. பெ. ஓர் அரசன்.
வரிசை மிக்குடையர் வல்லோன்
வண்மைகொள் *கலீ*லென் றோங்கும்
அரசர் வந்திறைஞ்ச மெய்மை
அருள்நபி இபுறு கீந்தம்
பிரிச மேலிசு மாயீலின்
பிள்ளைகண் மரபி ைறரே
திரைசெய் வாருதி சூழ்வைய
மேத்திய தீப மன்னர்
புதுகுஷ்ஷாம் : 57 : 58.

**கலீலுல்லா** kalīlullā, பெ. <ḥaliullāh. خليل الله> அல்லாஹ்வின் தோழன்; இபுறுகிம் நபி (அலை) அவர்களைக் குறிக்கும் சொற்றொடர்.
ஆதிதன் *கலீலுல் லா*இபு றுகீம்
அழகிய மக்காமினிற் போந்தாங்கு
பனியகுமது மரைக்காயர் : சீறப்புராணம் : 38 : 25 (1612).

**கலுறத்** kalurat, பெ. பார். ஹலறத்.

*ஆதியும் நடுஈ றில்லான் கலுறத்தில் ஆக வேண்டி*

பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 39 : 1 (1638).

**கவ்ம்** kavm, பெ. <qaum. قوم> மக்கள்.

*கதிமறை மூசா நபிகவும் அவரை*
*இதனினும் பழங்கண்நோய் செய்தார்*

பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 28 : 68 (1248).

**கவ்ல்** kavl, பெ. பார். கவுல். ஒப்பந்தம்.

*தேடற்கரிய நபிகவுலில்*

பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 22 : 3 (833).

**கவாசின்**[1] kavāciṉ, இ. பெ. ஒரு கோத்திரத்தின் பெயர்.

*மிண்டார் கவாசின் கிளை வீரர்*

புதுகுஷ்ஷாம் : 15 : 5.

**கவாசின்**[2] kavāciṉ, இ. பெ. பனீகிலால் கோத்திரத்தைச் சேர்ந்தவன்.

*தடம்புயத் தக்கீபு கவாசின்*

பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 27 : 2 (1084).

**கவாபிய** kavāpiya, பெ. பார். காபியா.

*தொடை விகற்பமா மோனையுளடங்குபு தொக்க*
*கடைவிகற்பமே யிற்றெ‌ன விரிவொடு காட்டு*
*நடை விகற்பமு மற்றவுமாம் வகை நனிசே*
*ரிடை விகற்பமில் கவாபி யென்றோதிய விலைதும்*

ஆரிபுநாயகம் : 8 : 13.

**கவியு** kaviyu, இ. பெ. <qawī. قوي> வல்லமை உள்ளவன்.

அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். மசீது.

இராஜநாயகம் : 36 : 39.

**கவுக்கலா** kavukkalā, இ. பெ. பார். அவுக்கலா.

*ஐயர் ஓர்ந்தனர் திருமொழி கவுக்கலா வறைந்தார்*

புதுகுஷ்ஷாம் : 39 : 21.

**கவுதாரியா** kavutāriyā, இட. பெ. ஒரு நகரின் பெயர்.

*இப்பதி தனக்குக் கவுதாரிய வெனும்பேர்*
*செப்பதிக காரண திறத்கொடு மளித்தார்*

திருமணிமாலை : 4 : 26.

**கவுது** kavutu, பெ. <ghawthu. غوث> நடுவர்.

*கவுது அவரழைப்பக் கேட்ட கலைவலரினிதி னேடு*

பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 16 : 53.

**கவுமலு** kavumalu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*பகரும் சூரக் கவுமலுவும்*

புதுகுஷ்ஷாம் : 32 : 02.

**கவுல்** kavul, பெ. <qaul. قول> உடன்பாடு.

சொல்லிய விறையா மல்லா தூதரா முகம்ம தென்றுங்
கல்விசீ ருடைய வள்ளல் *கவுல்*கொடுத் திட்ட வாறென்று
சீறுப்புராணம் : 90 : 81.

**கவுலத்** kavulat, இ. பெ. ஒரு பெண்ணின் பெயர். மாலிக் என்பவரின் புதல்வி.

மும்மையு முணர வல்ல முழுமதி யிறசூ லுல்லா
தம்மை நீராட்டும் போதிற் சார்ந்தனள் *கவுலத்* தன்றே
சீறுப்புராணம் : 89 : 4.

**கவுலா** kavulā, இ. பெ. ஒரு பெண்ணின் பெயர்.

பொறுத்தா ளசுவர் தவத்தன்ன பூங்கொம்பன்ன *கவுலா*வே
புதுகுஷ்ஷாம் : 41 : 175.

**கவுலான்** kavulāṉ, இ. பெ. ஒரு கோத்திரத்தின் பெயர்.

ஊக்கமு றுங்கவு *லான்*குல முள்ளங்
புதுகுஷ்ஷாம் : 39 : 109.

**கறுபிபுனு காசிம்** kaṟupipuṉu kācim, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

எரிகண் மடங்க லனைய *கறுபி புனு காசீம்*
புதுகுஷ்ஷாம் : 15 : 4.

**கறுபு** kaṟupu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

கதிக்கும் வென்றியின் வேல்*கறு* புதவுசேய்
புதுகுஷ்ஷாம் : 35 : 38.

**கவலுல் கவுதர்** kavalul kavutar, பெ. பார். ஹவ்லுல் கவுதர். எண்ணற்ற நன்மைகளைக் கொண்ட ஆறு இது; சொர்க்கத்தில் உள்ளது.

அறுசொடு குறுசும் போற்று மழகிய கலமும் லவுகும்
சிறைபடு *கவுலுல் கவுதர்* சிதுறத்துல் முந்தகாவும்
புதுகுஷ்ஷாம் : 1 : 4.

**கற்றூபி** kaṟṟūpi, பெ. நெருங்கிய உறவு.

சுடர்முடிக் *கற்றூ பியா* னவரும்
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன புராணம் : 52 : 18.

**கற்னு தஆலிப்** kaṟṉu taālip, இட. பெ. ஒரு தலத்தின் பெயர்.

படர்ந்துவண் டினந்தே னுண்டு செல்வழி பாடுங் கஞ்சத்
தடந்திகழ் *கற்னு தஆலி*ப் பென்னுமத் தலத்தை நீந்தி
சீறுப்புராணம் : 43 : 1.

**கறம்** kaṟam, பெ. பார். ஹறம்.

முற்றிய மதிதோய் *கறத்*தகம் புகுந்து
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 38 : 74 (1611).

**கரும்** karām, பெ. பார். ஹரும்.

தீண்டிடிற் றூய்மை மாண்டிடா ரிருவர்
தொடர்தரத் திருமணம் புணர்த்திட்
டாண்டிடல் *கரு*மென் றறிகிலாய்
புதுகுஷ்ஷாம் : 46 : 125.

**கருமத்** karāmat, பெ. <karāmat. كرامة> அற்புதம்.

ஆரணக் கடலை யுண்டங் கமுதமே பொழியுங் கொண்மூ
நேரெனக் கலையீரேழு நெறியுடன் மொழிய வல்ல
காரணக் கடலே யன்ன *கருமத்து*
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 11 : 13.

**கருமாத்**[1] karāmāt, பெ. <karāmāt. كرامات> நன்மை பயக்கும் நிகழ்ச்சிகளைப் புரியும் அதிசயம்.

மனத்துறு நினைவை யெல்லாம் மௌனத்திற் றெரிந்து சொல்லுங்
கனத்துறுத் திருட்டாந் தத்துக் கருத்துறுங் *கருமாத்* தற்றுத்
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 12 : 34.

**கருமாத்**[2] karāmāt, பெ. பார். கருமத்.

இன்னிலத் தொலிமார்க் கெல்லாம் மெழிலுறும் வரிசையுண்டா
மன்னிய ஹிதாயத் தோடுங் *கருமாத்து*ஞ்சொல்லொ ணுதே
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 35 : 106.

**கறுக்காயீல்** kaṟukkāyīl, இ. பெ. ஒரு மலக்கின் (வானவரின்) பெயர்.

செங்கைக் *கறுக்காயீல்* எனும்சேர் மலக்கைக் கூவினரே
மிகுருசு மாலை : 180.

**கறுக்கர்** kaṟukkar, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*கறுக்கர்* என்பவன் உரைகணங்கள் கூட்டியே
புதுகுஷ்ஷாம் : 16 : 49.

**கறுகு** kaṟuku, இட. பெ. ஓர் இடம்.

வெறியின்ஏறினர் *கறு*கெனும் பொழில்வன வெளியே
சேகுனுப்புலவர் : குத்பு நாயகம் : 17 : 13.

**கறுதிய்யா** kaṟutiyyā, இ. பெ. ஒரு கோத்திரத்தின் பெயர்.

..............*கறுதிய்யா*ங்
கிளையின் ஓங்கிய
சேகுனுப்புலவர் : குத்புநாயகம் : 21 : 10.

**கறுது** kaṟutu, நூகு நபி அவர்களின் புதல்வர் ஆம் என்பவரின் புதல்வன்.

புன்னலி கொடுங்கோ லியற்றிய திறத்தான் புரிதருங் *கறு*தெனும் பெயரா
னன்னவ னடத்து மவந்தரு மொழுக்கா லகந்தையிற் புவனங்கணமைப்பான்
திருமணிமாலை : 4 : 5.

**கறுபு** karupu, இ. பெ. அபாசுபியான் தந்தையார்.
இருநிதிச் செல்வர் நாற்ப திலக்குறுந் தலைவர் சூழ
மருமலர்த் தொடையல் வேய்ந்த வரைப்புயன் *கறுபு* மைந்த
னருளறம் பயிலாச் சிந்தை யபாசுபி யானு மாகத்
தெரிவருஞ் செம்பொற் குப்பைத் திரளொடும் வருகின் றூரால்
சீறாப்புராணம் : 65 : 7.

**கறுனி முகல்லின்** karuṉi mukalliṉ, இட. பெ. ஓர் இடம்.
முருகம் பொழில் *கறுனிமு கல்லினிடத்து*
பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம் : 28 : 7 (1187).

**கன்அம்** kaṉam, இ. பெ. ஒரு கூட்டத்தாரின் பெயர்.
...............தடக்கையினர் *கன்அம்* எனத்தகும் இனத்தினர்
புதுகுஷ்ஷாம் : 40 : 157.

**கன்சாயில்** kaṉcāyil, இ. பெ. ஒரு மலக்கின் (வானவரின்) பெயர்.
எண்ணுன தின்றிக் கிருபைசெய் தானிங் கிறையுமக்கென்று
உண்ணேக்கி நின்றபின் *கன்ஸாயில்* வானரங் குற்றனரே
மிகுருசு மாலை : 260.

**கன்சு** kaṉcu, பெ. <kanz. كنز> புதையல். பார். மகுலியத்து.
மஸ்தான சாகிபு பாடல் : வஸ்துதயத்திறுநந்தம்.

**கன்சுல் அபுஹத்** kaṉcul apuhat, ஒரு நூலின் பெயர்.
கனிவொடு முரைத்த தாய்க் *கன்சுல் அபுஹத்தி* லுண்டே
கௌது நாயகர் காரணப் புராணம் : 17 : 37.

**கன்சுல் மகுபி** kaṉcul makupi, தொ. <kanzul maḥfi. كنز المخفي>
மறைபொருளான புதையல். பார். மகுலியத்து.
மஸ்தான் சாகிபு பாடல் : வஸ்துதயத்திறுனந்தம்.

**கன்னாசு** kaṉṉācu, இ. பெ. சைத்தான், சாத்தன்.
பொன்னால் சிற்பக் கன்னாக்கும் புத்தோடுங்
*கன்னா சாளுந்* துன்னாருக்கே கதிபேறு
புதுகுஷ்ஷாம் : 33 : 73.

**கன்னான்** kaṉṉāṉ, இ. பெ. கூசு என்பவரின் இரண்டு புதல்வர்
களுள் இளையவன்.
கங்கணி நெடும்படை *கன்னான்*எனு மறத்தான்
திருமணிமாலை : 4 : 29.

**கனானத்** kaṉāṉat, இ. பெ. ஒரு கோத்திரத்தின் பெயர்.
பதித்த உள்ளினர் *கனானத்துக்* கிளையினர் படர்ந்தார்
புதுகுஷ்ஷாம் : 13 : 43.

**கனூ**[1] kaṉāṉā, இ. பெ. நபிகள் நாயகம் (சல்) அவர்களின் மூதாதையர்; குசைமா என்பவரின் புதல்வர்.

நரபதி யெனுங்குசை மாமன்
புகழெனத் தோன்றி வருதுறை *கனூப்*
பூபதி யிடத்தின் வந்திருந்த
சீறுப்புராணம் : 4 : 60.

**கனூ**[2] kaṉāṉā, இ. பெ. சபியா அம்மையாரை முதலில் மணம் முடித்தவன்.

*கனூ* என் பவனுக்கு இன்பத் துணைவி
பனியகுமது மரைக்காயர் ; சீறுப்புராணம் : 12 : 128 (372).

**கனீ** kaṉī, இ. பெ. <gani. غني> எவ்வித குறையுமில்லாத செல்வந்தன். அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். ளாகிர்.

இராஜநாயகம் : 36 : 40.

**கஸ்தி** kasti, பெ. பெரும்பாடு.

துட்டக் குபிரர்கள் அடர்சேனை தத்திக் *கஸ்திப்பட்டு* அழிதர
காசீம் திருப்புகழ் : 11.

**கஹ்ஹார்** kahhār, இ. பெ. <qahhar. قهار> அடக்குபவன். அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களில் ஒன்று. பார். யாறகுமான்.

இராஜநாயகம் : 36 : 37.

**கஜ்ஜு** kajju, பெ. பார். ஹஜ்.

பொறைதரு புனித மேபொருதுமா றதாச்
சிறவுயர் *கஜ்ஜது* செய்திட் டாரரோ
சாதுலி நாயகம் : 14 : 5.

**காகா** kākā, பெ. ஓர் இடத்தின் பெயர்.

நகர் *காகா* முதல்வன் மனையாட்டி மகவைமண நாட்டி இறசூலே
முனம்வதுவை வேட்ட
காசிம் திருப்புகழ் : 61.

**காகிறு** kākiṟu, கெய்ரோவைக் குறிக்கும் இவ்வறபுச் சொல்லால் காயல்பட்டணம் அழைக்கப்படுகிறது.

அறபுவள நாடு கோடி கோடி
புடைகொணகர் *காகி றூ*ரில் வாழும்
காசிம் திருப்புகழ் : 141.

**காகு** kāku, பெ. ஒரு பூந்தோட்டத்தின் பெயர்.

மக்கத்து அதரின் உரை *காகு* என்றேபேர்
சொலும் பொழிலின் அருகுசெலும் சாரு என்பவள்
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 23 : 15 (890).

**காசிம்[1]** kācim, திருப்புகழ் பாடிய புலவரைக் குறிக்கின்றது.

*திசுமும் காசிம் புலவர்தமை*

சாதுலி நாயகம் : 1 : 27.

**காசிம்[2]** kācim, இ. பெ. ஓர் ஆண்.

காசி மான அபுல்*காசிம்* அருஞ்சீர்

புதுகுஷ்ஷாம் : 36 : 125.

**காத்தபு** kāttapu, இ. பெ. குறைஷிகளுக்காக உளவு பார்ப்பதில் ஈடுபட்டவர். அபீபல்த்தா என்பவரின் புதல்வர்.

*காத்தபு* என்போர்

பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம் : 23 : 1 (876).

**காத்திபு** kāttipu, பெ. <kātib كاتب> எழுத்தாளன்.

தானவர் அமச்சர் மிக்காந் தனத்தினர் ஒலிகள் *காத்தி*
பானவர் காபி லானோர் அகுலு சுன்னத்தாமெய்நந்
தீனவர்...........

நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 28 : 3.

**காத்திம்** kāttim, பெ. <ḫādim. خادم> ஊழியம் புரிவோன்.

அவருட னீயுமன்ன மயிலுமென் றருளிச் செய்யக்
கவரற மனத்தி னுற்றுக் *காத்திமுங்* கருதிச் சொல்வார்

பத்றுதீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 34 : 24.

**காத்திமுல் நபி** kāttimul napi, பெ. ḫātimunnabi. خاتم النبي>
இறுதி நபி (இறுதித் தீர்க்கதரிசி).

அனந்த லத்தவல் லபத்துறுந் தூதுவர்க் கரசே
கனந்த ருங்கவி கைக்குறுங் *காத்திமுல் நபியே*

பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 35 : 64.

**காத்திமுல் அம்பியா** kāttimul ampiyā, இ. பெ. ḫātimul anbiyā. خاتم الانبياء> நபிமார்களுள் இறுதியானவர்.

அந்த நன்னபி *காத்திமுல் அம்பியா*
சொந்த தீனது நானெனச் சொல்லியும்
பிந்த நாளும் பெலனற்று நோயுமா
யிந்த நாளும்மைக் கொண்டு யிராகவே

பத்றுத்தீன் புலவா : முகியிததீன் புராணம் : 25 : 19.

**காதி** kāti, பெ <qāḍi. قاضي> நீதிபதி.

*காதி*யு மிருப்ப விருத்திறத் தவருங்
களிப்பொடுங் கலந்திருந் தனரே

பத்றுதீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 20 : 181.

**காதிம்** katim, பெ. <ḫādim. خادم> சேவை புரிபவன்.

பிரிசத் திற்செய் திசைபெரு குங்கா *தி*மென்று
உரைசொலப் பெற்றனர் தமது டம்பினே

நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 14 : 22.

**காதிர்** kātir, இ. பெ. <qādir. قادر> ஆற்றல் மிக்கவன். அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். மசீது.

இராஜநாயகம் : 36 : 39.

**காதிரிய்யத்துச் சத்தாரிய்யா** kātiriyyattuc cattāriyyā, தொ. <qādiriyyatul Sattāriyya. قادريّة الشطارية> ஒரு தறீக்காவின் (ஆன்மீக பாதையின்) பெயர்.

*உய்யத் தேடினர் பல்வழி தனிலுயர் காதி*
*ரிய்யத் துச்சத் தாரிய்யத்தி னெறியி லென்ன*

திருக்காரணப்புராணம் : 10 : 14.

**காதிரிய்யா** kātiriyyā, பெ. <qādiriyyā. قادرية> முஸ்லிம்கள் பின்பற்றும் (சூபிப்) பாதைகளுள் ஒன்று. முகியத்தீன் அப்துல் காதிர் (றலி) அவர்களை முன்னோடியாகக் கொண்ட பாதை.

*..............உலகிற்*
*பெருகென் காதிரிய் யாத்தரீக் குற்ற பேர்களும்*

நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 6 : 36.

**காதிரியா** kātiriyyā, பெ. <qādiriyya. قادريّة> முகியித்தீன் அப்துல் காதிர் அவர்கள் நிறுவிய தறீக்கத்.

*வல்லமை யுடுத்த வரிசைபெறும் காதிரியா*

பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 69 : 48.

**காப்** kāp, பெ. <qaf. ق> அறபு அரிச்சுவடியில் உள்ள ஓர் எழுத்து.

*காரணமான குழியஞ்சு காபொரு லாமுடனே*

ஞானப் பூட்டு : 12.

**காப கவுசைனி அவ்வதனா** kāpa kavucaiṉi avvatṉā, தொ. <qāba qausaini aw adanā. قاب قوسين او ادنى> அல்லாஹ்வுக்கும் தங்களுக்கும் உள்ள நெருக்கத்தைக் குறிப்பிட சூபியாக்கள் இச் சொற்றொடரைப் பயன் படுத்துவர்.

*...............காப*
*கவுசைனி அவ்வதனுக் கண்ணுந் தலமே*

மிகுருசு மாலை : 621.

**காபர்** kāpar, பெ. பார். காபிர்.

*தூற்றப்படு காபர்க டங்கிய*
*கார்க்கட்டழல் சேர்நர கங்குடி புகுதாதே*

காசீம் திருப்புகழ் : 54.

காபிசு kāpicu, இ. பெ ஓர் ஆணின் பெயர்.

..............தோமறு *காபிசு* மகிழ்வின்
பெறுமகன் இக்கிறவு உடன் இவர் நால்வர்

பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 28 : 61 (1241).

காபிர் kāpir, பெ. <kāfir. كافر> நம்பிக்கையற்றவர் (முஸ்லிம் அல்லாதவர்).

வன்மனக் கொடிய *காபிர்* மனத்தறு சூழ்ச்சி

சீறுப்புராணம் : 19 : 40.

காபியா kāpiyā, பெ. <qāfiyah. قافية> செய்யுள் வழக்குப் பற்றிய கொண்டுகூட்டுப் பொருள்கோள்.

அடிமறி சீர்மறி யசையி ஞமறி
தொடைமறி பொருண்மறி தொடரந் தாதியுங்
கடைபடு மியை பிஞற் காட்டு மீரிடத்
திடைபடுங் *காபியா* வென்னு நூல்களும்

சேகுனாப்புலவர் : குத்புநாயகம் : 11 : 10.

காபில் kāpil. இட. பெ. ஓர் இடத்தின் பெயர்.

மண்டிய *காபில்* சுமாரணியமும் விடுத்து நீங்கலாக

பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 10 : 74.

காபிலா kāpilā, பெ. <qāfilā. قافلة> பயணி.

முன்சென்ற *காபிலாக்கண்* முதன்மையி னடந்து செல்ல

பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன புராணம் : 23 : 39.

காபிலு[1] kāpilu, பெ. <ḫāfiḍ. خافض> தாழ்த்துகின்றவன். அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். ருபிகு.

இராஜநாயகம் : 36 : 38.

காபிலு[2] kāpilu, இ. பெ. <qābiḍ. قابض> தடுப்பவன். அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். யாறகுமான்.

இராஜநாயகம் : 36 : 37.

காபிறூன் kāpiṟūṉ, பெ. பன். பார். காபிர். பார். குல்யா அய்யுஹல் காபிறூன்.

ஏதமில் குல்யா அய்யுஹல் *காபிறூன்* என்னும் சூறத்தும்

பனியகுமது மரைககாயர் : சீறுப்புராணம் : 38 : 25 (1612).

காபுறு kāpuṟu, பெ. அம்பருத் தூணியின் பெயர்.

பெய்சரக் *காபுறு* என்னுந் தூணியிற் புறத்திற் சேர்ந்தார்

சீறுப்புராணம் : 65 : 19.

**காபு ஹாயா அய்ன் சாது** kāpu hāyā ayn cātu, தொ. <kāf hā yā 'ain 'ṣād. كهيعص> தனி எழுத்துக்கள் ஐந்தினைக் கொண்டு ஆரம்பிக்கும் அல்குர்ஆனின் ஒரே அத்தியாயம். (அல்குர்அன்: 19).

*அஞ்செழுத்து காபு ஹாயா அயினும் சாது மாயெழுந்து*
ஞானமணிமாலை : 165.

**காமத்** kāmat, பெ. பார். இக்காமத்.

*கத்தனைக் கருதி பாங்குடன் இனிய*
*காமத்தும் சொலித்தொழு தனரால்*
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 38 : 32 (1619).

**காமில் முகம்மல்** kāmil mukammal, பரிபூரணம்.

*கத்தனருள் சேர் காமிலெனும் காமில்முகம்மில் அபுல் ஹசனே*
சாதுலிநாயகம் : 20 : 4.

**காயிக்கு** kāyikku, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*மாண்வர லாறினை வசங்கொள் காயிக்கு*
*காண்வர லாறினைக் கழறு வாமரோ*
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 14 : 1.

**காயிப்** kāyip, வி. அ. <gaib. غائب> இரகசியமாக.

*தாயருந் தந்தை சுற்றஞ் சகலரு மகிழ்ந்தன் பாகக்*
*காயிபாய்ச் சின்கொண்டேகுங் கன்னியை மீட்கச் செய்த நாயகர்*
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 35 : 105.

**காயில்** kāyil, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*..............ஆரிதும் காயிலும் சாபிலும்*
புதுகுஷ்ஷாம் : 42 : 134.

**காரிது** kāritu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*மெய்ப்புள கெறிக்கும் தீந்தேன்*
*விழைகனி யெமனி னுண்மை*
*தைப்புள காரிது..............*
புதுகுஷ்ஷாம் : 29 : 45.

**காரீது¹** kārītu, இ. பெ. அபாசுபியானின் தந்தை.

*கவின் முகம்மது பெரிய தந்தையர் எனும் காரீது*
*உவகை மைந்தன் அபாசுபியான்*
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 24 : 27 (932).

**காரீது²** kārītu, இ. பெ. நக் என்பவனின் தந்தை.

*முரண்மிகு காரீது*
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 28 : 34 (1214).

**காலிக்** kālik, இ. பெ. <ḫālik. خالق> படைப்பவன்.

அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். யாறகுமான்.

இராஜநாயகம் : 36 : 37.

**காலிபு** kālipu, இ. பெ. நபிகள் நாயகம் (சல்) அவர்களின் மூதாதையர் பிஃறு என்பவரின் புதல்வர்.

குரிசிலென் றுயர்ந்த பிஃறெனு மரசர்
குறைஷியங் குலத்துறு மதலே
விரிதிரை யுவரி நடுநிலம் புரந்த
வேந்தர் *காலிபு* வயின் இலங்கி

சீறாப்புராணம் : 4 : 63.

**காலிறு** kāliṟu, பெ. பார். ஹாலிர். சமுகமளித்துள்ளவர்.

அன்பு கொண்டுள *காலிறு*

ஞானக்குறம் : நாட்டுவளங் கூறுதல் : 36.

**காலிஜா** kālijā, பெ. ஆரும் வானத்தின் பெயர்.

மாசகல அதின்பெயர் *காலிஜா* எனவு மாமே

மிகுருசு மாலே : 374.

**காலிது** kālitu, இ. பெ. ஒரு முஸ்லிம் தளபதி. காலித் இப்னு வலீத் என்பது இவரின் முழுப்பெயர்.

உரியுரை இழந்தால் என்கொல்
உழுவைநேர் *காலிது* என்னும்

பனியகுமது மரைக்காயா : சீறாப்புராணம் : 21 : 112 (795).

**காலீது** kālītu, இ. பெ. உம்மு கபீபு அம்மையாரின் ஒலி (சட்ட பூர்வமான உறவினரும், பிரதிநிதியும்).

படியினில் செய்ய தீன்நல் பாலகன் *காலீது* என்றன்

பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம் : 4 : 17 (126).

**காவா** kāvā, இட. பெ. ஓர் இடத்தின் பெயர்.

ஒருமாடு ஒட்டை நிரைமுன்னம்
ஓங்கும் *காவா* எனும்தலத்தில்

பனியகுமது மரைக்காயா : சீறாப்புராணம் : 12 : 81 (325).

**காவியா** kāviyā, பெ. <hāviyat. حاوية> ஏழு நரகங்களுள் ஒன்று.

*காவியா* வினில்விழுந் தழுந்து மாக்கடும்
பாவியா கியநசு ருக்கள்

பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன புராணம : 52 : 17.

**காவின்** kāviṉ, பார். காவீன்.

இறையறுசி லேக லால்பெ ணுக
செயினபெனு மாதையாதி *காவின்*
எழிதியொதி யேவ வீடு கூடு மகுமூதே

காசிம திருப்புகழ் : 141.

**காவீன்** kāviṉ, பெ. திருமண வைபவம். பெரும்பாலும் திருமணப் பதிவை இச்சொல் குறிக்கிறது.

கருமுகில் அனைய கோதைக் கனிஉம்மு கபீபுஎன் போரை
இருநிலம் அறியக் *காவீன்* எமக்கு எனஎழுத வேண்டும்
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 4 : 8 (117).

**காறூன்** kāṟūṉ, இ. பெ. <hārūn. هارون> ஒரு நபி.

முதுக்கு றைபொருள் மூசா நபிக்குமுன்
உதித்த *காறூன்* நபியை
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 33 : 21 (1383)

**கானகாப கவுசைனி அவ்வத்னு** kāṉakāpa kavucaiṉi avvatṉā, பெ. <kāna qāba qausaini aw adnā, كان قاب قوسين او ادنى>

இது அல்குர்ஆனின் 53-வது அத்தியாயத்தில் உள்ள 9-ஆம் வசனமாகும். (வளைந்த) வில்லின் இரு முனைகளைப்போல் அல்லது அதைவிடச் சமீபமாக அவர் நெருங்கினார்.

*கானகாப கவுசைனி அவ்வத்னுவா* கலிதே
ஞானக்குறம் : வாசல் வளங்கூறுதல்.

**கானிம்** kāṉim, இ. பெ. ஒரு பெண்ணின் பெயர்.

ஏதம்முற்றிருக்கும் அபுஉபைதாமுன் எறுழ்வலி *கானிமின்* மகனார்
போதலர் தடம் சூழ் மதீனமா நகரின் பூபதி நிருப
மோடடைந்தார்
புதுகுஷ்ஷாம் : 56 : 18.

**காஜத்** kajat, பெ. <hājat. حاجت> விருப்பம்.

காணொ ணுவகைப் புறத்தினில் விதந்தங்
*காஜத்* தாற்படி வரென்றுரைத்த
நவமணிமாலை (முகியிததீன் புராணம்) : 4 : 220.

**காஜறத்து** kājarattu, இ. பெ. <hājara, هاجرة> இபுருகீம் நபி அவர்களின் மனைவியார் இசுமாயீல் நபி அவர்களின் தாயார்.

கங்குலிற் குழலுந்தூய கதிர்பிறை நுதலுந் தண்ணத்
திங்களின் முகமுங்கொண்ட செழுங்கொடி *காஜறத்து*
நங்கையுந் தாயார் பால்
திருமணி மாலை : 25 : 58.

**காஜறு** kājaṟā, இ. பெ. பார். காஜறத்து.

தேந்தரும் அமுதச் சொல்லிற் சேயிழை *காஜறு*
திருமணிமாலை : 26 : 27.

**கிசாசி** kicāci, இட. பெ. அறபு நாட்டில் உள்ள ஒரு பிரதேசத்தின் பெயர்.

*கிசாசி* யமன் அகத்தர் புறத்தார் முறமை யொடு
புதுகுஷ்ஷாம் : 15 : 6.

**கிசுறத்** kicuṟat, பெ. பார். ஹிஜ்றத்.

பொழில்படு மதீனம் போந்த புகழ்வளர் *கிசுறத்*தாண்டு

புதுகுஷ்ஷாம் : 22 : 94.

**கிசுறு**[1] kicuṟā இ. பெ. நபிகள் நாயகத்தின் காலத்தில் பாரசீகத்தை ஆட்சி புரிந்த மன்னன் பெயர் நெருப்பை வணங்கியவன்.

கீழ்படத் தழலைத் தாமும் தேவெனக் *கிசுறு* மன்னன்
தாழ்பட நபியின் வாக்கால் அரசொடு தகுதி எல்லாம்
பாழ்படக் காடு கொண்ட பதியினைப் படர்ந்து

சேகுனைப்புலவர் : குத்புநாயகம் : 15 : 5.

**கிசுறு**[2] kicuṟā, இ. பெ. பாரசீக நாட்டு மன்னன் குலம் 'Chosroes' என ஆங்கிலத்தில் பாரசீக மன்னர் அழைக்கப்பட்டனர்.

அத்தி நேர்கிசு றுவெனும்

பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம் : 3 : 2 (70).

**கித்தா** kittā, இட. பெ. மக்கத்துக்கு மேற்கே உள்ள ஓர் இடம்.

..............பைம்பொழில் மக்க மேல்பால்
ஏர்குடி இருக்கும் *கித்தா* எனும் தலத்து இறங்கும் என்றார்

பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம் : 24 : 93 (998).

**கிந்தில்** kintil, பெ. <qindīl. قنديل> விளக்கு.

அங்கு நின்று மித்துனியா வாலமதை நந்நயினார்
செங்குவளைக் கண்ணுற் றெரிசித்தா—ரங்கே
சுருக்கமாய்க் *கிந்தி*லொன்று தோன்றுவது போல
இருக்கின்ற திப்பூ விடம்

மிகுறுசு மாலை : 322.

**கித்தாப்** kittāp, பெ. <kitāb. كتاب> புத்தகம்.

குறியறிந் தறிவு சொல்லுங் குருவுடன் *கிதா*பை யோதி

பத்றுத்தின் புலவர் : முகியித்தின் புராணம் : 12 : 3.

**கிதுமத்** kitumat, பெ. <ḫidmat. خدمت> சேவை.

மங்கிலாத் தமது பாலின் மருவிய *கிதுமத்* தானை

பத்றுத்தின புலவா : முகியித்தின புராணம் : 47 : 30.

**கிபத்** kipat, பெ. <ḥibā. هبة> பரிசு.

காவலர் இறசூல் *கிபத்து*எனக் கொடுத்து

பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம் : 28 : 31 (1231).

**கிப்ரியா** kibriyā, பெ. <kibriyā. كبرياء> மகத்துவம்.

பார். மகுலியத்து.

மஸ்தான் சாகிபு பாடல் : வஸ்துதயத்திறனந்தம்.

**கிபுத்து** kiputtu, பெ. <qibt, قبط> எகிப்து நாட்டின் பூர்வ குடிமக்கள்.

துறுக்கி சறுமிக் *கிபுத்தி*யர் றூமிக் கிளைபல்லர்

சாதுலி நாயகம : 19 : 29.

**கிபுலத்** kipulat, பெ. பார். கிபுலா.

உனது நாயக னபிநெறி *கிபுலத்தி* மாமொத்து

நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 17 : 17.

**கிபுலத்தயின்** kipulattayin, பெ. <qiblatine. قبلتين> இரண்டு கிபுலாக்கள் என்பது இதன் பெயர். இரண்டு கிபுலாக்களின் அடையாளங்கள் இடப்பட்ட பள்ளிவாசல் மதீனாவில் உள்ளது. பார். கிபுலா.

பீடமா னவைக டெரிந்திரந் தேத்திய
பிறழ்கிபு *லத்தயின்* நகர்ச்சீர்
கோடமும்...............

நவமணிமாலை (முகியத்தீன் புராணம்) : 35 : 20.

**கிபுலா** kipulā, பெ. <qiblah. قبلة> தொழும்பொழுது சிறப்பாக எதிர்நோக்க வேண்டிய புனித கஃபா உள்ள திசை.

செல்லாறிசுலாம் நெறியாகச் சிறந்த கசுபாக் *கிபுலாவாய்*

புதுகுஷ்ஷாம் : 17 : 135.

**கிம்யரிய்யி** kimyariyyi, இ. பெ. ஒரு கூட்டத்தாரின் பெயர்.

*கிம்ய ரிய்யாம்* கூட்டத்தவர்

புதுகுஷ்ஷாம் : 22 : 93.

**கிமியரி** kimiyari, இ. பெ. ஒரு கூட்டத்தின் பெயர்.

வல்ல பசாரிக் கிளைபதியும் *கிமியரிய்யர்* மன்னவரும்

புதுகுஷ்ஷாம் : 32 : 18.

**கியாமம்** kiyāmmam, பெ. <qiyama. قيامة> இறுதித் தீர்ப்பு நாள்.

தேக்கிய *கியாம* நாளிற் செய்வன புரிக நும்பர்

புதுகுஷ்ஷாம் : 11 : 30.

**கில்அத்துல் விலாயத்** kilattul vilāyat, தொ. <ḥil atul vilāyat. خلعت الولايت> இறைநேசருக்குரிய கௌரவமான மேலங்கி.

*கில்அத்துல் விலாயத்* தென்னக் கிளர்ந்து பசிய வண்ணம்

சேகுனாப்புலவர் : குத்பு நாயகம் : 23 : 52.

**கில்லா** killā, பெ. <qilā. قلعة> பாதுகாப்பான இடம்; கோட்டை.

கொற்ற மிட்டிரு *கில்லாவினிற்* புகுந்து
குழந்தை முதற்கிழ மளவும்

வண்ணக் களஞ்சியப் புலவர் : குத்பு நாயகம : 16 : 35.

**கிலா** kilā, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

காவென உதவும் செங்கைக் கஃபுடன் *கிலாமுருதுஇம்* மூவரும்

பனியகுமது மரைககாயர் : சீருப்புராணம் : 33 : 93 (1461).

**கிலாபத்** kilāpat, பெ. <ḫilāfat. خلافت> கலீபாவின் பதவி.

மன்னிய *கிலாபத்* துந்தம் மகிழ்வொடும் புரிந்தா ரன்றே
வண்ணக்களஞ்சியப் புலவர் : குத்பு நாயகம் : 12 : 21.

**கிலாப்** kilāp, இ. பெ. ஒரு ஆணின் பெயர்.

கோலினர் *கிலாபொ*டு
புதுகுஷ்ஷாம் : 15 : 108.

**கிலாபு** kilāpu, இ. பெ. நபிகள் நாயகம் (சல்) அவர்களின் மூதாதையர். முறத்து என்பவரின் புதல்வர்.

கொந்தலர்ந் திருண்ட கருங்குழன் மடவார்
கொங்கையிற் றடம்புய மழுந்துஞ்
சுந்தரர் முறத்து மதலையாய் நிலத்திற்
றோன்றிய மதிமுகக் *கிலாபு*
சீறாப்புராணம் : 4 : 65.

**கிலாம்** kilām, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

வருணக் *கிலாமு*ம்
புதுகுஷ்ஷாம் : 37 : 3.

**கிலால்** kilāl, இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியார். பெருமானார் (சல்) அவர்களுடன் போர்க்களத்தில் புகாது பின்தங்கி விட்டவர். அதனால் இறைவன் கட்டளைக்கும், இறசூலின் கட்டளைக்கும் மாறு செய்து விட்ட தம் பெரும் பிழையை உணர்ந்து வருந்தியவர்.

கற்றவர் ககுபு மேன்மை கணித்தவர் *கிலால்*
புதுகுஷ்ஷாம் : 8 : 8.

**கிலுறு** kiluṟu, இ. பெ. ஒரு நபியின் பெயர்.

வருந்திலா தூழியத்தின் வகை பல விளக்கி நாளும்
பொருந்திய *கிலுறு* என்றோதும் பெயரினர் பொருந்தச் சொல்வார்
பதறுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 55 : 3.

**கிலுறலைகிஸ்ஸலாம்** kiluṟalaikissalām. பார். கிலுறு.

கடலொடு கரையு மற்ற கானக வரைக டவிற்
றிடருறு மலையி னின்ற சிறப்புறு மேலோர்க் கெல்லாங்
கடமையா யுணவு மீந்து கடத்தினன் மார்க்கங் காட்டு
மடற்*கிலு றலைகிஸ்ஸலாம்* மவர் தமைத் தினமுங் காண்பேன்
பத்றுத்தீன் புலவா : முகியித்தீன் புராணம் : 57 : 13.

**கிளிர்நபி** kilirnapi, <ḫiḍr. خضر> இவர் நபிகளுள் ஒருவர்.

உறைந்திடு மபுலப்பா சுறுந்த வத்தினிற்
பிறந்திடுங் *கிளிர்நபி* யென்றும் பேசினர்
பத்றுத்தீன் புலவர் : முகியிததீன் புராணம் : 18 : 31.

**கிழுறு** kiluṟu, பெ. பார். கிலுறு.

கடற்கலை யுடுத்த தடக்கிடக் கையினிற்
கலைமறக் காரணர் *கிழுறு*ம்
கௌதுநாயகர் காரணப்புராணம் : 5 : 54.

**கிறக்கில்** kiṟakkil, இ. பெ. உரோமப் பேரரசன் "Heraclius" என ஆங்கிலத்தில் அழைக்கப்பட்டான்.

உறக்கிலா முரசம் பொங்கும்
உறூமெனும் பதியைக் காக்கும்
*கிறக்கில்* என்பவர்க்குத் தீட்டும் காகிதம்
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 2 : 18 (18).

**கிறா** kiṟā, பெ. இது ஒரு மலை. இங்குள்ள குகையிலே முகம்மது நபி (சல்) அவர்கள் தியானத்தில் ஈடுபட்டிருந்தார்கள். இங்கே தான் ஜிபுறீல் (அலை) அவர்கள் திருக்குர்ஆனைக் கொணர்ந் தருள ஆரம்பித்தார்கள்.

வரிசைக்குங் கதிக்கு முதற்றிருத் தலமாய்
மதித்திட வருங் *கிறா* மலையி
லுருசிக்குங் கனிவாய் மடமயிற் கதீஜா
வுடன்வர முகம்மது எழுந்து
சீறுப்புராணம் : 25 : 7.

**கிறுத்தாசு** kiruttācu, பெ. <qirṭās. قرطاس> கடதாசி.

தருதி என்னவே கேட்கவு நான்*கிறுத் தாசு*ம்
கருதிக் கையினுல் எழுதிடுங் கலமொடு மையுங்
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 17 : 7.

**கிஜுறத்து** kijuṟattu, பெ. பார். ஹிஜுறத்.

வந்த தெண்ணிய *கிஜுறத்து* நான்கெனும் வருடம்
சீறுப்புராணம் : 77 : 1.

**கீமிய** kīmiya, பெ. <kīmiyā. كيميا> இரசாயனம்.

ஆமி யாம்புகழின் அரும்பொருள் அண்ணூல்
அருந்தவர்க் கெவையும் பொன்னுக்கும்
*கீமிய*வுடனும்
திருக்காரணப்புராணம் : 33 : 34.

**கீமியா** kīmiyā, பெ. <kīmiya. كيميا> இரகசியம்.

..............பிறர்விழிக் கெய்தா *கீமியா*வுடன்
திருக்காரணப்புராணம : 33 : 34.

**கீல்** kīl, பெ. <kīr, قير> மெழுகு.

சீதமொழி தாவூத் நபிக்கு இரும்பைக்
*கீலா*க்கு விதம் நீ கொடுத்த பேறும்
ஞானப்புகழ்ச்சி 103.

**கீறுன்** kīṟāṉ, இட. பெ. ஓர் இடத்தின் பெயர்.

நிலைதரு *கீறு*னென்னு நெடும்பதி
திருமணிமாலை : 25 : 4.

**குசி** kuci, பெ. <khushī. خوشی> மகிழ்ச்சி.

..............மகிழ்வின்
குண்டாழ்ந்தனர் பின்மூவருங் குசியா யவனின்றே
இரவுசுல்கூல படைப்போர் : 31 : 96.

**குசாம்** kucām, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

..............சீர்தழைக்கும்நல் குசாம் என்போன்
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 24 : 48 (953).

**குசாமத்து** kucāmattu, இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியார் சயிது (றலி) அவர்களின் புதல்வர்.

தாரணி இறசூல் உரிமைவிட் டவரில்
சயிதுசொல் குசாமத்துஎன் பவரும்
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 39 : 169 (1807).

**குசை[1]** kucai, பெ. நபிகள் நாயகம் (சல்) அவர்களின் மூதாதையர் கிலாபு என்பவர் புதல்வர்.

மந்தர மனைய தடம்புய ரிடத்தில்
வந்திருந் தவர்தரு மதலே
கந்தடர் தறுகட் கரடமா லியானைக்
காவலர் குசையிடத் துறைந்த
சீறுப்புராணம் : 4 : 65.

**குசை[2]** kucai, இ. பெ. மக்காவைக் கைப்பற்றப் போகுமுன்னர் மதீனவை ஆள நியமிக்கப்பட்ட குல்தூம் என்பவரின் தந்தையார்.

அகமி சூழ்எயின் மதீனமா நகர்ப்புறத்து ஆளப்
புகரி யானைநேர் குசையின்நல் தவத்தினில் போந்து
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 24 : 6 (911).

**குசைமா[1]** kucaimā, இ. பெ. நபிகள் நாயகம் (சல்) அவர்களின் மூதாதையர் முதுறகா என்பவரின் புதல்வர்.

முகம்மது நயினு ரொளிவிருந் திலங்கு
மன்னவர் முதுறக்கா மதலே
செகமகிழ் குசைமா வயினுறைந் தரசர்
சீறுப்புராணம் : 4 : 60.

**குசைமா[2]** kucaimā, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

குசைமா மிசைவெண் சிங்கமென
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 12 : 20 (264).

**குத்துபா** kuttupā, பெ. <ḫuṭbat. خطبة> போதனை.

அத்தலத் துறைந்துபி னடுத்த வெள்ளிநா
ளுத்தமத் தமரொடவ் வுறைந்த பேர்கட்கு
மித்தலத் தின்றுதொட் டீறு நாண்மட்டுங்
குத்துபா வெனநபி குறித்துக் காட்டினர்
சீறுப்புராணம் : 52 : 37.

**குத்துபியத்துல் குபுரு** kuttupiyāttul kupṟā, பெ. <quttubiyatul kubrā. قطبية الكبرى> குத்பு (தலைவர்)களுக்கெல்லாம் பெருந் தலைவர்.

வலகுத் துபியத் குல்குபு ருவென வருதல்

நவமணிமாலை (முகியித்தீன புராணம்): 4 : 70.

**குத்தூஸ்** kuttūs, இ. பெ. <quddūs, قدّوس> தூயவன்.

அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். யாறகுமான்.

இராஜநாயகம் : 36 : 37.

**குத்பு** kutpu, பெ. <quṭb. قطب> முதன்மை.

குருமுகம்மது தம் பேரர் குதுபுகள் புயத்தில் வைக்கு

வண்ணக களஞ்சியப் புலவர் : குத்புநாயகம் : 5 : 1.

**குத்பு செய்யிது முகம்மது** kutpuceyyitu mukammatu, இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியாரின் பெயர்.

தீஞ்சொலினுயர்ந்தார் குத்பு செய்யிது முகம்மதென்பார்

ஆரிபு நாயகம் : 1 : 20.

**குத்துபு(கள)க்பர்** kuttupu (kal) akpar, பெரிய குத்பு (குத்புகளுக்குத் தலைவர்) குத்பு+அக்பர் என்னும் இரண்டு சொற்களாலாயது. இடையிலே கள் என்னும் தமிழ் விகுதி இடம் பெற்றுள்ளது.

குத்புகளக்பர் கோமாஞெலிகளிற் சீமான் குணப் பூமான்

சாதுலி நாயகம் : 19 : 12.

**குதம்** kutam, இ பெ. அப்பாசு (றலி) அவர்களின் புதல்வர்களுள் ஒருவர்.

......... .....அப்பாசு...............அன்றே ருதலிய குதமும்

புதுகுஷ்ஷாம் : 11 : 79.

**குதறத்து** kutaṟattu, பெ. <qudrat. قدرت> சர்வ வல்லமை.

அண்டமும் அவனி மற்று மலைகட லனைத்துங் காத்துக்
கொண்டவன் பெரிய நாயன் குதுறத்தினுதவி தன்னால்

பதறுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 14 : 6.

**குதா** kuta, பெ. <ḫud. خدا> (பாரசீகம்) பாரசீக மொழியில் அல்லாஹ்வைக் குறிக்க உபயோகப்படும் சொல்.

குசைநாலரி விடவாசி குதா ஏவலினாலே
விசை நாலடி படியோர் பிடி கொளா ஏவிய மேலோர்
உசைனார்

இறவுசுல்கூல் படைப்போர் : 1 : 22.

**குதாகு** kutāku, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

துதி வழியான் குதாகு என்னும் அறபியுடன் விடுத்து
புதுகுஷ்ஷாம்: 16 : 18.

**குதுகுது** kutukutu, பெ. <hud hud. هد هد> கொண்டலாத்திப் பறவை. ஆங்கிலத்தில் "hoopoe" என அழைக்கப்படுகிறது.

வகுக்குமித் தலத்திற் சேர்ந்தபின் சுலையு
மான பிகுதுகுதைக் கூவி
இராஜநாயகம்: 31 : 18.

**குதுபானியாக்குபுரு** kutupāṉiyākkupṟā, பெ.

கனக டற்புவி மீதினில் காளை சேர்வயதில்
தினமும் என்னிடம் திகழ்குது பானியாக்குபுரு
மனமு வந்திட வந்துபோ மென்பதை வகுத்து
சாதுலிநாயகம்: 18 : 10.

**குதுபினி லகுதாப்** kutupinil lakutāp, தொ. <qutb ul aqtāb. قطب الاقطاب> முதன்மையானவர்களுள் முதன்மையானவர்.

குவ்வினில் எனது செய்கு குதுபினி லகுதாப் என்னும்
முவ்வுலக கெவரும் போற்றும் முகியித்தீன் என்பீர் அம்மா
பத்றுத்தீன் புலவர்: முகியித்தீன புராணம்: 65 : 8.

**குதுபுபின் முகியா** kutupupiṉ mukiyā, இ. பெ. முகியித்தீன் ஆண்டவரைக் குறிக்கும் சொற்றொடர்.

மூமினனவர் புகழ்தரு குதுபுபின் முகியா
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்): 12 : 4.

**குதுபுல்லகுத்தாப்** kutupulakuttāp, பெ. <qutbul aqtāb. قطب الاقطاب> குதுபு மார்களுக்கெல்லாம் குத்பானவர். ஆன்மிகத் தலைவர்களுக்கெல்லாம் தலைவரானவர்.

கவுதெனுங்குது புல்லகுத் தாபெனும்
மபுதுல் காதிர் ஜெயிலானி யென்றுரர்களே
பத்றுத்தீன் புலவர்: முகியித்தீன புராணம்: 36 : 21.

**குத்பு றப்பானி** kutpu ṟappāṉi, பெ. <qutb rabbāniyy. قطب الربانی> முஸ்லிம் பேரறிஞர்களுள் தூய்மையானவர்.

தருநலக் குருவாம் குதுபு றப்பானி
தகிய்யுந் தீனில் புகைரிய்யே
சாதுலிநாயகம்: 11 : 2.

**குதூம்** kutūm, பெ. qudūm, قدوم> மேலானது.

குறியா தெழுககு பாவை குதூமாம்வலஞ் செய்தார்
திருக்காரணப்புராணம்: 18 : 31.

**குதைபத்துல் யமானி** kutaipattul yamāṉi, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*குன்றினு முயர்ந்த மற்றோேள் குதைபத்துல் யமானி என்போர்*
புதுகுஷ்ஷாம் : 45 : 12.

**குதைபா** kutaipā, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*பானத்துள்ள குதைபாவும்*
புதுகுஷ்ஷாம் : 36 : 127.

**குதைபியா** kutaipiyā, பெ. ஹுதைபியா என்னும் பெயரை உடைய ஓர் இடம்.

*வரையும் அறுதி உடன்படிக்கை*
*வழங்கும் குதைபியா அதிலும்*
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 23 : 30 (905).

**குதையில்** kutaiyil, இ. பெ. ஒரு கோத்திரத்தின் பெயர்.

*திறன்மிகு குதையில் கிளைஞர்கள் தமக்கு*
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் . 28 : 10 (1190).

**குதைலு** kutailu, இ. பெ. ஒரு கோத்திரத்தின் பெயர்.

*அணங்குறும் குதைலுக் கிளையார் அனுதினமும்*
பனியகுமது மரைககாயா : சீருப்புராணம : 29 : 4 (1262).

**குப்பத்துல் அவுலியா** kuppattul avuliyā, இட. பெ. ஓர் இடம்.

*திண்கொள நமதிடம் செலுமென் றேகினர்*
*அங்குள குப்பத்துல் லவுலியாவுக்கே*
வண்ணககளஞ்சியப் புலவர் : குத்பு நாயகம் : 18 : 42.

**குப்பா** kuppā, பெ. <qubbat. قبّة> விதான கலசம்.

*சுந்தர மணிக் குப்பாத் துலங்க*
இரவுசுல்கூல் படைப்போர் : 5 : 91.

**குப்பாயம்** kuppāyam, பெ. <jubbat. جبّة> மேல் அங்கி.

*மெய்யணி குப்பா யத்தை வியன் பெற மெய்யிற் சேர்த்தான்*
சீருப்புராணம் : 32 : 10.

**குப்பு** kuppu, பெ. <ḥub. حب> நட்பு.

*நட்பாங் குப்புடன் வணங்கும்*
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 4 : 184.

**குபல்** kupal, இ. பெ. மக்காவில் கஃபத்துல்லாஹ்வில் இருந்த ஒரு சிலையின் பெயர். இஸ்லாம் தோன்றுவதற்கு முன்னர் இங்கு 300-க்கும் மேற்பட்ட சிலைகள் இருந்தன.

*குறித்துயிர்க் குயிராய் நின்ற குபலெனுந் தம்பி ரானை*
*வெறுத்தழற் குழியில் வீழும் வீணர்களாவே மென்றார்*
சீருப்புராணம் : 65 : 47.

குபா kupā, இட. பெ. மதீனுவுக்கு அணித்தாயுள்ள ஓர் இடத்தின் பெயர். முகம்மது நபி (சல்) அவர்கள் முதற் பள்ளிவாசலை இங்கு தான் அமைத்தார்கள்.

*வரிவராற் பகடுகள் வனச வாவியுஞ்*
*சொரிமதுச் சோலையுங் கதலிச் சூழலுந்*
*தெரிதரக் கண்டுசென் றின்பச் செல்வமே*
*தருகுபா வென்னுமத் தலத்தை நண்ணினர்*

சீருப்புராணம் : 52 : 25.

குபிர் kupir, பெ. <kufr. كُفر> முஸ்லிம் அல்லாத தன்மை.

*தறத்துட னெழுந்து நெஞ்சிற் றருக்கொடுங் குபிரர் போற்றும்*

திருமணிமாலை : 20 : 32.

குபிரிய்யத் kupiriyyat, பெ. பார். குபிர்.

*கன்றுதீய்மைக் குபிரியற்கைக் கானநின்ற யெவ் வினைக்கு*
*நன்றிபுரியு மொருவனுக்கு மாரு நடத்தை யூருருய்*

புதுகுஷ்ஷாம் : 57 : 80.

குபிறு kupiṟu, பெ. பார். குபிர்.

*பொய்க்கும் குபிறென்னை அணுகாமலே*

ஞானப்புகழ்ச்சி : 157.

குபைசு kupaicu, பெ. மக்காவில் உள்ள ஒரு மலைக்குன்றின் பெயர்.

*குறைசிக ளுக்குவி ருந்தே வியனுலகு*
*அமரர்க ளுக்கு மருந்தே உயர்வுள*
*குபைசுமலைக்கணி ருந்தே தவமுயல் இறசூலே*

காசீம் திருப்புகழ் : 22.

குபைரீது kupairitu, இ. பெ. நபிறு என்பவரின் புதல்வன்.

*நபிறு உதவும் குபைரீது*

பனியகுமது மரைக்காயர் : சீருபபுராணம் : 74 : 123 (1028).

குபைறத் kupaiṟat, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*மறலி போற்சின குபைறத்து மதலையாய் கைசென்*

புதுகுஷ்ஷாம் : 13 : 32.

குபைறு kupaiṟu, இ. பெ. முருதியம் கூட்டத்தாரின் தலைவர்.

*நானி லம்புகழ் முருதி யங்கிளையி னயகர்*
*கானவர்ந் தருகுபைறு வருந்தனையர் கைசு*

புதுகுஷ்ஷாம் : 38 : 55.

கும்பியதி னில்லாஹி kumpiyati nillāhi, தொ. <qum biyadinillāhi. قم باذن الله> அல்லாஹ்வின் உத்தரவைக் கொண்டு எழும்.

*நிதியா மவர்கும் பியதி னில்லா ஹியெனத்தாம்*

நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 19 : 17.

**கும்பியிதினீ** kumpīyitiṉī, தொ. <qum biyidini. قم باذني>
என் உத்தரவுக்கு இணங்க எழும்.

*உந்தற் பொடுகும் பியதி னீயென்ன உரைத்தார்*

நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 19 : 20.

**குமைறு**[1] kumairu, இ. பெ. ஒரு கோத்திரத்தின் பெயர்.

*படுமதாபுடைக் குமைறுவங் கிடத்தவர் பணிந்தார்*

பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 29 : 6 (1264).

**குமைறு**[2] kumairu, இ. பெ. ஒரு ஆணின் பெயர்.

*சலா மென்பார் அருள் மகன் குமைறு*

புதுகுஷ்ஷாம் : 13 : 43.

**குர்ஆன்** kurāṉ, பெ. <qurān. قرآن> முஸ்லிம்களின் வேதநூல்.

*இதத்தநன் மொழிய தாய்ப்பன் னிருவரு முரைத்த மாற்ற*
*மதித்துமா மறையிற் றேர்ந்த முசுகிபை வள்ளல் கூவி*
*விதித்தநன் னெறிவ ழாமற் குருனேயும் விரித்துக் காட்டிப்*
*பதித்தலத் திவர்க்குற் றோர்க்கும் நல்வழிப் படுத்து மென்றார்*

சீறுப்புராணம் : 46 : 9.

**குர்பான்** kurpāṉ, பெ. <qurbān. قربان> தியாகம்.

*விந்தையாய் குறுபான் செய்ய வொட்டக மேவ லாலே*

சீறுப்புராணம் : 90 : 71.

**குரிசி** kurici, பெ. பார். குறுசு. இருக்கை.

*பத்தியினு றைந்தார் அண்ணல் குரிசி விட்டி ழிந்தார்*
*பண்பாய்*

வண்ணக்களஞ்சியப் புலவர் : குத்பு நாயகம் : 19 : 19.

**குல்குவல்லா** kulkuvallā, பெ. <qulhuvallāh. قل هو الله> அவன் அல்லாஹ் என்று கூறுவீராக! அல்குர்ஆனின் 112 - வது அத்தியாயம் இவ்வாறு ஆரம்பிக்கின்றது.

*துதியினெப்புறத்துங் குல்குவல்லாவை யோதிய*
*தூய்நிலை பெற்றார்*

புதுகுஷ்ஷாம : 7 : 130.

**குல்தூம்** kultūm, இ. பெ. மக்கா நகரைக் கைப்பற்றச் செல்வதற்கு முன்னர் மதினா நகரை ஆள முகம்மது நபி (சல்) அவர்களால் நியமிக்கப்பட்டவர்.

*செகம் விளங்கு குல்தூம்எனும் செம்மலை வைத்தார்*

பனியகுமது மரைக்காயார் : சீறுபபுராணம : 24 : 6 (911).

**குல்யா அய்யுஹல் காபிறூன்** kulyā ayyuhal kāpirūṉ, தொ. qul yā ayyuhal kafirūn. <قل يا ايها الكافرون> (நீர்) கூறும் நிராகரிப்போரே. அல்குர்ஆனில் 109 - வது ஆயத்தின் முதல் சொற்றொடர்.

*ஏதமில் குல்யா அய்யுஹல் காபி*
*றூன்எனும் சூறத்தை இயல்பாய் ஓதி*

பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 38 : 25 (1612).

**குல்லா** kullā, பெ. <kulah. (Persian) كلاه> தலையிலணியும் தொப்பி.

*கறுத்துடற் கமீசையுங் கழற்றிச் சென்னியிற்*
*பறித்த குல்லாவையுங்*

பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 28 : 229.

**குல்லு** kullu, பெ. <kullu. كل> எல்லாம். பார். குல்லுநபுசுன்.

*கோதில் வேதத்தில்குல் லுநபு சுன்என*

பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம : 39 : 143 (1780).

**குல்லுநபுசுன்** kulluṉapucuṉ, பெ. <kullunafsin, كل نفس> 'எல்லா ஆத்மாக்களும் (ஒவ்வோர் உயிரும்) மரணத்தைச் சுகித்தே தீரும்' என்கின்றது அல்குர்ஆன் (3 : 185).

*கோதில் வேதத்தில் குல்லுநபு சுன்என*
*ஓதும் ஆயத்தை ஓதி எவ் ஆக்கையும்*
*ஆதி கற்பனை யாலிறந்து ஆவிநீத்து*

பனியகுமது மரைக்காயா : சீறுபபுராணம் : 39 : 143 (1780).

**குல்ஹு** kulhu, வி. <kulhu. كله> எல்லாம்.

*குல்ஹு மா மக்க நாடெங்க நாடே*

ஞானக்குறம் : நாட்டுவளங்கூறுதல் : 24.

**குலபா** kulapā, பெ. <ḫulafā. خلفاء> கலீபா என்பதன் பன்மை.

*அண்ணல் ஆண்டகை அபுல்ஹஸன் சாதலி அவர்தம்*
*பண்ணி வர்ந்தமேம் புகழ்குல பாக்களின் பயனுல்*

சாதுலிநாயகம் : : 10 : 25.

**குலாசத்துல் முபாகிறு** kulācatul mupākiṟā, பெ. ஒரு நூலின் பெயர்.

*உலகில் குலாசத் துல்முபா கிறுவென்றே துங்கித்தாப்*
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 1 : 35.

**குலாம்** kulām, பெ. <gulām غلام> ஏவலாளர்.

*பாவள ரவர்கு லாமு லப்பறும் பரிவின் வீட்டின்*
நவமணிமாலை (முகியிதத்தீன் புராணம்) : 20 : 33.

**குலாம்காதிறு** kulāmkātiṟu, இ. பெ.
ஆரிபு நாயகம், நாகூர் புராணம் என்னும் காப்பியங்களையும், வேறுபல சிற்றிலக்கியங்களையும் எழுதிய நூலாசிரியரின் பெயர்.

*வண்டாடுந்தட நாகூர் மருவு குலாம்காதிறு நாவலனென் பானே*
ஆரிபுநாயகம் : 2 : 20.

**குலாமியா** kulāmiyā, பெ. ஏழாம் வானத்தின் பெயர்.

*அந்த வானத்தின்பெயர் குலாமியா*
மிகுறுசு மாலை : 383.

**குவாஜா முஇனுத்தீன் சிஸ்தி** kuvājā muiṉuttīṉ cisti இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியாரின் பெயர். இவர் வட இந்தியாவில் உள்ள அஜ்மீர் நகரில் அடங்கியுள்ளார்.

*தெருள் சிறந்தெழுகுவாஜா முகினுத்தீன் சிஸ்தியின்பப்*
*பொருள் சிறந்துதவும் பாதப்புதுமலர் போற்றுவாமால்*
ஆரிபுநாயகம் : 1 : 21.

**குவியத்** kuviyat பெ. <huviyat هويت> உள்ளமை.
பார். மகுலியத்து

மஸ்தான் சாகிபு பாடல : வஸ்துதயத்திறனைநதம.

**குவைலத்து** kuvailattu, இ. பெ. ஒரு பெண்ணின் பெயர்.

*பொறைநெறி ஒழுக்கம் வாய்மைநல் நலனும்*
*பொருவற ஒருவடி வாகி*
*நிறைவளர் குவைலத்து எனும்பெயர் அன்னை*
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 28 : 28 (1208).

**குவைலிது** kuvailitu, இ. பெ. நபிகள் நாயகம் (சல்) அவர்களின் மனைவி கதீஜா அம்மையாரின் தந்தையார்.

*குன்றினி லிட்ட தீபங் குவைலிது வென்னும் வேந்தன்*
சீறுப்புராணம் : 10 : 9.

**குருன்** kuraṉ, பெ. பார். குர்ஆன்.

*களிபெறப் பொய்மெய் யிரண்டினைப் பிரிக்குங் கதியருள்*
*குருனெனச் சிறந்த*
புதுகுஷ்ஷாம் : 17 : 66.

குறுஆன் kuṟuāṉ, பெ. பார். குர்ஆன்.

விருப்புற்ற குறுஆன் முற்றும் பயிற்றினர்

வண்ணக்களஞ்சியப் புலவர் : குத்பு நாயகம் : 5 : 8.

குறுசு kuṟucu, பெ. <kursiyy كرسى>

அல்லாஹ்வின் சிம்மாசனம்.

கடன்மலை நதிபா தாளங் கதிர்குறு சறுசு சொர்க்கம்

பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன புராணம் : 16 : 44.

குறுசூன் kuṟucūṉ, பெ. மரத்தின் வயிரத்தினுல் ஆன ஒரு தண்டாயுதம்.

குறுசூனுந் தண்ட மேந்திக் குலக்கொழுந் தனைய கற்பிற்

சீறாப்புராணம : 65 : 20.

குறுத்து kuṟuttu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

காணரும் சுவன வாசிக் காவலன் குறுத்தின் தோன்றல்
ஆணரும் சிங்க மன்ன அப்துல்லா கொண்டு நாளும்

புதுகுஷ்ஷாம் : 26 : 33.

குறுவான் kuṟuvāṉ, பெ. பார். குர்ஆன்.

இருகதிக் குறுவான் அதையும் உன்னிடமே இறக்குவன்

இராஜநாயகம : 20 : 7.

குறைசி kuṟaici பெ. பார். குறைஷ்.

அறுவகை சனயிகள் திமிர தினகர
குறைசி குலதிலகம்...

காசிம திருப்புகழ் : 1.

குறைஷ் kuṟayṣ, <quraish قريش> குறைஷ் என்னும் பெயரையுடைய கோத்திரம்.

குரிசிலென் றுயர்ந்த பிஃறெனு மரசர்
குறைஷியங் குலத்துறு மதலை

சீறாப்புராணம : 4 : 63

குன் kuṉ, வினை <kun كن> ஆகுக.

வல்லோ னுவலுங் குன்னென் றீரெழுத்தால் நோக்கி
யெழுந்த வுலகுயிரே

புதுகுஷஷாம : 46 : 82.

குன்யத் kuṉyat பெ. <ghunyat غنية> திருப்தியான மனம்.

சீரணி முகியித்தீனர் சிறந்த குன்யத் ததாச்சொல்

நவமணிமாலை (முகியிததீன் புராணம்) 4 : 161.

குனைத்து kuṉaittu, இ. பெ. ஓர் ஆணின் பெயர். வழிப்பறியில் ஈடுபட்டுள்ளோன் (கள்வன்).

..........................................வெள்ளைக்
கோட்டுடைக் கரிபோல் வந்த குனைத்து என்போன்
பனியகுமது மரைக்காயா : சீறுப்புராணம் : 16 : 3 (460).

குனைமின் kuṉaimiṉ பெ. அசுஅரி கோத்திரத்தின் மன்னன்.

......மொய்ம்புடை அசுஅரிய்யர் மன்னவர் குனைமின்
புதுகுஷ்ஷாம் : 40 : 247.

குனைன் kuṉaiṉ, இ. பெ. அறபு நாட்டின் ஒரு பகுதி.

கனைக டற்றிரை யாடைசூழ் பாரினிற் கவின்கொண்
டனைய நாட்டினி லறபெனும் வளமா நாடதனுள்
குனையினென்றொரு பதியலி மாகுடி யிருந்தார்
சீறுப்புராணம் : 6 : 7.

குஸ்தி kusti, <kushti كشتى > (Persian)

புலியொடு குக்கற் பொருந்திற மென்னில்
வலியொடு குஸ்தி வருத்திய தல்லாற்
சொலிவிழை யாட்டத் தோலுட னேவும்
புலியொடு நின்று பொரும்புரை யாமால்
பத்றுத்தீன புலவர் : முகியித்தீன புராணம் : 36 : 54.

குஜாயத்து kujāyattu, பெ. ஓர் இனத்தவர்.

தேடற்கரிய நபிகவுலில்
சேர்ந்து குஜாயத்து எனும் இனத்தார்
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 22 : 3 (833).

கூக்குஜாயீல் kūkkujāyīl. இ. பெ. ஒரு மலக்கின் (வானவரின்) பெயர்.

கூக்குஜா யீலெனவே கூறுமவர் தேசி
வாக்கான வெம்பரிமேல் வந்தார்
மிகுருசு மாலை : 231.

கூசு kūcu இ. பெ. கறுது என்பவரின் இரண்டு புதல்வர்களுள் ஒருவர்.

கூவிரமு மதமு மளவிய மனத்தின் வீறுறுங் கூசெனு மொருவன்
திருமணிமாலை : 4 : 6.

கூது kūtu பார். ஹூது. ஒரு நபி.

நன்னபி கூது
புதுகுஷ்ஷாம : 57 : 70.

கூபா kūpa, இ. பெ. ஓர் இடத்தின் பெயர். இருக்கில் உள்ளது. அலி (றலி) அவர்கள் இங்கேதான் தமது தலைநகரை அமைத்துக் கொண்டார்.

மேவு மாவள தேச கூபா வெனவிளங் கியபதிப் பாலில்
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) 15 : 34.

**கூவத்** kūvat, <quwwat قوّة> ஆற்றல்.
நிவத்தொடு வலுவைக் கொண்டு
நிறுத்தினன் கூவத்தாக.
பத்றுத்தீன புலவர் : முகியித்தீன் புராணம : 59 : 23.

**கூவத்து** kūvattu, பெ. பார். கூவத். ஆற்றல்.
கூவத்து வேண்டுமென்று உறுபதைப் பார்க்க
ஞானமணி மாலை : 82.

**கூறுல்ஹீன்** kūṟulhīṉ, பெ. <ḥuril'īn حور العين>
கண் அழகிகளாகிய கன்னிகள். விண்ணக மகளிர்.
நிதிமனைக்குரிய கூறுல்ஹீனனையார்
நிரைமணிப் படிக்கமேந் தினரே
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 20 : 177.

**கூறுலீன்** kūṟulīn, பெ. பார். கூறுல்ஹீன்.
விண்ணக மகளிர்.
துலக்குவெண் டரள மூரற் றுடியிடைக் கரிய கூந்தன்
மலக்கமில் கூறு லீன்கள் வந்துநின் றேவல் செய்ய
சீறாப்புராணம் : 85 : 11.

**கைசத்** kaicat, பெ. ஒரு மலையின் பெயர்.
புடையினன் கைசத்தென்னும் பொருப்பினின் இனத்தவன்மை
மடையனார்க் கதிபனின்ன வாசக முணர்த்த மன்னன்
திருமணிமாலை : 20 : 56.

**கைசு** kaicu இ. பெ. ஓர் ஆணின் பெயர்.
தைப்புளகாரி தீன்ற தகுலபா தோன்றல் கைசு
புதுகுஷ்ஷாம் : 29 : 45.

**கைதாக்** kaitāk, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.
கிஸ்ஸாம் அருள் வள்ளல் வாழ் வளத்துடைய கைதாக்
புதுகுஷ்ஷாம : 23 : 14.

**கைதூம்** kaitūm, பெ. இரண்டாம் வானத்தின் பெயர்.
மக்கநபி தாமுமுயர் வானவர்கள் கோனுமிரும்
பாவமைசெய் வான மதனுட்
புக்கினரவ் வான்பெயர்கை தூ மென்று சொல்லினர்
புகழ்ச்சி நபிபாலில் ஜிபுரீலே
மிகுறுசு மாலை : 330.

**கைப்** kaip பெ. <gaib. غيب> இரகசியம்.
பெருந்தகை கைபி னின்றும் செலவிடும் பின்னு நாடில்
சாதுலிநாயகம்: 8 : 11.

**கைபர்** kaipar, இட. பெ. ஓர் இடத்தின் பெயர்.
மைப்படி கவிப்ப ஒற்றை வலம்புரி முழக்கக் கைபர்
பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம் : 4 : 45 (154).

**கையூம்** kaiyūm இ. பெ. <qaiyūm, قيوم>
நிலையானவன். அல்லாஹ்வின் அழகிய திருநாமங்களுள் ஒன்று. பார். மசீது.
இராஜநாயகம் : 36 : 39.

**கைறுன்** kairān, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.
சொன்னிதி *கைறுன்* றேன்றல் அறிவெழு சுகுதா ஜேடே
புதுகுஷ்ஷாம் : 51 : 86.

**கைறில் மகுலூப்பி** kairil makulūppi, தொ. உன் கோபத்துள்ளானவர்களுடையதும் அல்ல.
*கைறில் மகுலூப்பி* யென்றும் காப்பவனே
ஞானப்புகழ்ச்சி : 677.

**கொத்துபா** kottupā, பெ. பார். குத்துபா.
கொள்ளிய வணக்கத்திற் குரிய *கொத்துபாப்*
பள்ளியொன் றியற்றுவான் பணித்திட் டாரரோ
புதுகுஷ்ஷாம் : 47 : 49.

**கோரி** kōri, பெ. உருது. முஸ்லிம் பெரியாரின் கல்லறைக்கு மேலாகக் கட்டப்படுவது.
தந்தையர் மகுபருவிற் றரித்திடு *கோரி* கட்டி
தீன் விளக்கம் : 21 : 2.

**கௌதுல் அஃலம்** kautul aklam, இ. பெ.
நடுவர்களுள் தலைவர். இது பெரும்பாலும் முகியித்தீன் ஆண்டவர்களைச் சுட்டவே பயன்படுத்தப்படுகிறது.
காணகும் புதுமைசெய் *கௌதுல் அஃலமும்*
வேணருஞ் சிலமொழி விளம்பன் மேயினுர்
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன புராணம் : 27 : 25.

**கௌக்கலா** kaukkalā, பெ. பார். அவுக்கலா.
.........விறற்றருங் *கௌக்க லாவும்*
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 31 : 35.

**கௌதுத் தகலயின்** kautut takalayin பெ. <qaus us saqalain, غوث الثقلين> மனிதன், ஜின் அனைவருக்கும் உதவி அளிப்பவர்.
தாரணிக் குதவுங் *கௌதுத் தகலயினி*ன்ன முந்தான்
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 4 : 161.

**சக்காத்** cakkāt, பெ. பார். ஸக்காத். கட்டாய கொடை.
புரிகடனெனுஞ் *சக்காத்துப்* பொருளலாற் பொருளாமின்மைப்
பரிவுறுமெளியோர் பக்கீர் பலர் தமக்குரிமையாக
வண்ணக்களஞ்சியப புலவர் : குத்புநாயகம் : 24 : 3.

சக்கு cakku பெ. <sakk. شك > சந்தேகம்.

*சக்கி லாதிறை தன்னகஞ் சார்ந்தனன்*
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 5 : 89.

சக்பு cakpu பெ. ஒரு குதிரையின் பெயர்.

தாவிடின் மனத்தை யொக்குந் தாக்கிடி னிடியே ரெக்கு
மேவிடிற் றிகிரி யொக்கு மெதிர்ந்தவர்க் கெரியை யொக்கும்
பூவிடத் தடலின் வங்கூழ் போன்றிடும் *சக்பு* என்றோது
மாவினைக் கொணர்மி னென்ன முகம்மது சரணம் வைத்தார்
*சீறுப்புராணம்:* 65 : 21.

சகபறு cakapaṟu, இ. பெ. அபீத்தாலிப் அவர்களின் புதல்வர் களுள் ஒருவர்.

தாட்டிறத்து அலிக்கு முன்னோர் தடம்புயச் *சகபறு* என்னும்
சேட்டிளம் புலியும்...
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 4 : 8 (118).

சகறு cakaṟu, பெ. <sahar سحر > நோன்பு காலத்தில் வைகறைக்குச் சற்று முன்னர் உணவு உண்கும் வேளை.

தவத்தொடு குறுஆன் ஓதத் துவக்கிரா *சகறு* நேரம்
வண்ணக் களஞ்சியப் புலவர் : குத்புநாயகம் : 12 : 32.

சகாதத்து cakātatu, பெ. <šahādat. شهادة > சான்று பகருதல்.

*தலைபணிந் தீமான் கொண்டு சகாதத்துக் கலிமாச் சொன்னார்*
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 26 : 11 (1082).

சகீத் cakīt, பெ. <šahīd. شهيد > வீரமரணம்.

*சது சதத் திருபானாறு பேர் சகீத் ஆயினாரால்*
புதுகுஷ்ஷாம் : 22 : 93.

சகீது[1] cakītu, பெ. ஓர் ஆணின் பெயர்.

தஞ்ச மகனார் *சகீது*
புதுகுஷ்ஷாம் : 23 : 55.

சகீது[2] cakītu, பெ. <sahīd شهيد> சான்று பகர்பவன்.

*அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். மசீது.*
இராஜநாயகம : 36 : 39.

சகீது[3] cakītu, பெ. ஓர் ஆணின் பெயர்.

நேரமிக் காயு மேயா நிலையறிந் தாமி றீன்ற
சூரவாள் *சகீது* நெஞ்சம் துளக்கிய எழுந்து சென்றார்
புதுகுஷ்ஷாம் : 29 : 27.

சகு caku, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

பெற்ற நாமம் சகுஎன்போன்

பனியகுமது மரைக்காயர் : *சீருபபுராணம்* : 12 : 33 (277).

சகுசு cakucu, இ. பெ. நபிகள் நாயகம் (சல்) அவர்களின் மனைவியருள் ஒருவரான செய்னபு அம்மையாரின் தந்தையார்.

பரிவுட னேந்தா மாண்டிற் பண்புறுஞ் *சகுசு* என்றோது
முரியவன் மகளை வேட்டற் குற்றதோர் தூது விட்டார்

*சீருப்புராணம்* : 85 : 1.

சகுத் cakut, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

...............*சகுதின்* தோன்றல் கயாசினையும்

புதுகுஷ்ஷாம் : 36 : 63.

சகுபான் cakupāṉ, பெ. <šaban شعبان>

எட்டாவது இஸ்லாமிய மாதத்தின் பெயர்.

புகழொடுந் தீனெறி புரந்து வைகுநாட்
டிகழ் *சகுபான்* என விளங்குந் திங்களில்

*சீருபபுராணம்* : 57 : 3.

சகுபி cakupi பெ. பார். அசுகாபி.

நபிகள் கோமா னேற்றினம் புடைசூழ்ந்தென்ன
*சகுபி* களினிது மேவ

ஆரிபு நாயகம் : 7 : 27.

சகுபறு cakupaṟu, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவரின் பெயர்.

ஆதரம் பெருகும் கல்வி அணிஅபீத்தாலி பீன்ற
சீதரச் *சகுப* றென்னும் திறவணி வாகைத் தோளின்
பூதர மனையர் பெற்ற பொற்பினிற் சிறந்த தோன்றல்
காதர மகன்ற உள்ளக் கருணையின் அப்துல்லாவே

புதுகுஷ்ஷாம் : 27 : 2.

சகுபறு cakuparu, இ. பெ. பார். சகபறு.

தறுகண் நால்வாய்ப் புகர்முகத்துத்
தடக்கை மலைநேர் *சகுபறுக்கும்*

பனியகுமது மரைக்காயா : *சீருபபுராணம*: 12 : 103 (347).

சகுல் cakul இ. பெ. உமர் என்பவரின் புதல்வர்.

உமர் என்போர் தருசேய் *சகுலும்*

புதுகுஷ்ஷாம் : 15 : 4.

சகுலாவா cakulāvā பெ. ஓர் ஆற்றின் பெயர்.

தரையருகே வந்து *சகுலாவா* மாற்றின்
கரையருகே வைத்தார் களித்தே

மிகுறுசு மாலை 650.

**சகுவான்** cakuvāṉ, இ. பெ. ஓர் இடம்.
ஏர்க்கி லோத்திடும் சீர்ச்சகு வான்எனும் இடத்தில்
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 24 : 22 (927).

**சகுலு** cakulu இ. பெ. ஓர் ஆணின் பெயர்.
தாம மார்பினணி சகுலும் எழுந்தார்
புதுகுஷ்ஷாம் : 36 : 126.

**சகுறு** cakuṟu, பெ. பார். சகறு.
சகுறெருகுத் தடுத்தால் விரதமே தொடுத்துத்
தளர்விலா முலேயமு தருந்தார்
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 6 : 20.

**சகுறன்** cakuṟāṉ, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவர்.
கேட்டிடா ருதுமா னவுசும் கெழுசீர் சகுரு னங்ஙன்
புதுகுஷ்ஷாம் : 11 : 80.

**சகுனா** cakuṉā, இட. பெ. ஓர் இடம்.
..............மக்கா புரமதின் மேல்பால் ஓங்கும்
பொழில்திகழ் சகுனா என்னும் தரையினில்
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 24 : 102 (1007).

**சகூன்** cakūṉ, இட. பெ. ஓர் இடம்.
பரித்திரள் நடத்தி ஒல்லே சகூன்எனும் பாடி போந்து
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 24 : 103 (1008).

**சசதா** cacatā, பெ. பார். சுசூது.
விதிமறையின் முழக்கமற முதியோர் சூழ வீட்டிருக்கும்
வள்ளல் முனம் சசதாச் செய்வான்
புதுகுஷ்ஷாம் : 28 : 61.

**சத்தாது** cattātu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.
மதிநிறை பவுசுபெற்ற மாமணி சத்தாத் என்னும்
புதுகுஷ்ஷாம் : 26 : 14.

**சத்தாரு புனு அவுசு** cattāru puṉu avucu இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியார்.
விண்தாவும் துரகமைஞ்ஞிரு சத்தாரு புனு அவுசை யன்றே
புதுகுஷ்ஷாம் : 14 : 145.

**சத்து** cattu பெ. <'saddu, شدّ> இரட்டித்தல்.
விரிந்தே இலங்கிடும் மத்தொடு சத்துடன்விரி றம்சு ஜெசுவும்
பீர்முகம்மது சாகிபு : நினைவுப் பதிப்பகம் : 57.

**சத்தூம்** cattūm, இட. பெ. லூத் நபி அவர்களின் நகர் எனப்படுகிறது.
தற்பறுங் கொடிய சத்தூ மைந்நக ரதனிற் செல்லுஞ்
சொற்பெறு மிறகுலென்னுந் தூதெனுந்தகையு மீந்தான்
திருமணிமாலை : 25 : 10.

**சதக்கா** satakkā, பெ. <sadaqāt صدقة> தர்மம்.

மாற்றி அங்குஅது *சதக்கா* வழங்குவர்
ஏற்று அமைந்தொகுத்து இவ்விடத்தில் ஈகுவர்
வண்ணக் களஞ்சியப் புலவா : குத்பு நாயகம் : 31 : 79.

**சதாமத்து** catāmattu, இ. பெ. முகல்லம் என்பவனின் தந்தை.

தாறு பாய்மத கரிநிகர் *சதாமத்து* மைந்தன்
ஈறி லாக்கரும் கோடத்தான் முகல்லபென் பவனே
பனியகுமது மரைக்காயார் : சீருப்புராணம : 31 : 6 (1322).

**சந்தக்** cantak, பெ. பார் சந்தூக்.

பழுதறு கபனுஞ்செய் தெடுத்துப் பண்பொடு
வழிதரு *சந்தக்கின்* மீது வைத்தனர்
வணணககளஞ்சியப் புலவா : குத்பு நாயகம் : 36 : 22.

**சந்தூக்** cantūk, பெ. <sandūq. صندوق>

பெட்டி. உயிர் பிரிந்த பின் நல்லடக்கத்திற்காகச் சடலம் வைக்கப் பட்டு எடுத்துச் செல்லப்படும் பெட்டி போன்ற ஒரு கொள் கலம்.

மணந்த சந்தன மலர்பனி னீரொடும் வதிந்து
குணந்த ரும்படி *சந்தூக்கி* லேற்றியே கொடுபோய்த்
தணந்த ருங்கபு றடியினி லிறக்கியே தாழ்த்தங்
கிணங்கி யாவருந் தொழுதடக் கிணர்மணி லியைந்தே
பத்றுத்தீன் புலவா : முகியித்தீன புராணம் : 49 : 54.

**சந்தூக்கு** cantūkku, பெ. <sandūk. صندوق>

முஸ்லிம்களின் சடலத்தை நல்லடக்கம் செய்வதற்காக அதனை வைத்து எடுத்துச் செல்லப்படும் பெட்டி போன்றதொன்று.

வகுத்த*சந் தூ க்கில்* வைத்தனர் சொர்க்க
மணிவிளக் கெனும்நபி தமையே
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 39 : 173 (1810).

**சப்பாகு** cappāku, இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியார்.

வேற்றடக் கயின் *சப்பாகு*
புதுகுஷ்ஷாம் : 20 : 60.

**சப்பாபது** cappāpattu பெ. <sabābat. سبابة> சுட்டுவிரல்.

தீட்டு கைக்கிறுத் தாசெனத் துணிகபன் சீலே
மாட்டெ டுத்துன் *சப்பா பத்து* விரல்கல மாக்கித்
தோட்டுன் வாயினீர் மையென் ருக்கெழு தெனச்சொல்லி
காட்டிக் கேட்டிடும் வானர்க் கப்போ னரர் கபுறுள்
நவமணிமாலே (முகியித்தீன் புராணம்) : 17 : 8.

அ-14

**சப்பு** cappu, பெ. <saff صف> வரிசை.

*சருக்க மாய் நிரை சப்புசப் பாக வந்*
*திருக்கச் சூலமுஞ் செங்கதிர் வாட்களும்*
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 15 : 6.

**சப்பு சப்பு** cappu cappu, பார். சப்பு. வரிசையாக, நிரை நிரையாக.

*சருக்க மாய்நிரை சப்புசப் பாகவந்*
*திருக்கச் சூலமுஞ் செங்கதிர் வாட்களும்*
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 15 : 6.

**சபு**[1] capapu, பெ. <sabab سبب> காரணம்.

*மெல்லிவர வின்சபபை விள்ளுக வென்றேயோ*
*ரல்லினெழு வானறு சடைந்தவ ரறைந்தார்*
இரவுசுல்கூல் படைப்போர் : 36 : 117.

**சபு**[2] capapu இ. பெ. யமனில் உள்ள ஒரு நகரைக் குறிக்கிறது. இராணி பல்கீசு ஆண்ட தலைநகரம்.

*இசைப்பெறு சபுபென்றேசொல் லிடுமொரு நகர மன்றே*
இராஜநாயகம் : 29 : 2.

**சபர்** capar பெ. <safar. سفر> பிரயாணம்.

*தங்க டோழர் கள்சபர் செலவினுவிடில்*
*அங்கு நல்லுத் தரமருள் வருய்துஆச்*
*சங்கையிற் செய்வர்*
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 7 : 62.

**சபறு** caparu, பெ. <safar. صفر> இரண்டாவது இஸ்லாமிய மாதம்.

*கோதறு மிருப துடன் பதின் மூன்றுங்*
*குறைவற நிறைந்தபின் சபறென்*
*றோதிய மாதம் பிறைபதி னுலி*
*னெழுகுமங் காரக னிரவில்*
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம : 18 : 2.

**சபல்** capal, இ. பெ. ஒரு ஆணின் பெயர்.

*சபல் அருளும் மகாதும்*
புதுகுஷ்ஷாம் : 22 : 41.

**சபவு** capavu, இ. பெ. ஒரு ஆணின் பெயர்.

*நிறுத்தினர் எகுறபீன்ற வலத்துடை சபவும்*
புதுகுஷ்ஷாம் : 57 : 64.

**சபா** capā, பெ. மக்காவில் உள்ள ஒரு மலையின் பெயர். சபா மருவா என்னும் மலைகளுக்கு இடையில் ஹஜ்ஜின்போது 'தொங் கோட்டம்' என்னும் 'சயி' நிறைவேற்றுவர்.

தருமுகிற் கவிகை யிலடங்கிடச் சிறந்த
*சபா*மலை யிடத்தினிற் சார்ந்தார்
சீறாப்புராணம் : 27 : 111.

**சபாஅத்** capāat பெ. <śafā'at شفاعة>
பரிந்து பேசுதல். இறுதி நாளன்று முகம்மது நபி (சல்) அவர்கள் தங்களுடைய உம்மத்தவர்களுக்காகப் பரிந்து பேசுவார்கள்.

நன்நபி முகம்மதின்ப நனி*சபா அத்து* வேண்டி
புதுகுஷ்ஷாம் : 61 : 82.

**சபாத்து** capāttu, பெ. பார். சபாஅத்.

நீண்ட கியாமத்தின் எல்லாவும் மத்தையு நீதியுடன்
தாண்டிச் *சபாத்து* செயக் கொடுத்தேன்...
மிகுறுசுமாலை : 130.

**சபியா**[1] capiyā, இ பெ.
முகம்மது நபி (சல்) அவர்களின் மனைவியருள் ஒருவர்.

வேணு நிகர்தோட் *சபியா*வை
வேட்டு மணமே உறநினைத்தார்
பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம் : 12 : 121.

**சபியா**[2] capiyā, இ. பெ. உயை என்பவரின் புதல்வி.

மறைஆர் நாமம் உயைஎன்போன் மகளார் *சபியா*
பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம் : 12 : 32 (276).

**சபியுல்லா** capiyullā, பெ. <safiyullāh. صفى الله>
ஆதம் நபி (அலை) அவர்களுக்குரிய சிறப்புப் பெயர். அல்லாஹ் வால் தெரிவு செய்யப்பட்டவர் என்பது இதன் பொருள்.

*சபியாதமுல்லா* ஃதம்மோடரிய ஹவ்வா
ஞானபபுகழ்ச்சி 49.

**சபீதி** capīti, இ. பெ. ஒரு கோத்திரத்தின் பெயர்.

சொல்லும் *சபீதி* இனத்தரசும்
புதுகுஷ்ஷாம் : 32 : 18.

**சபீது** capītu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

சகீதொடு *சபீது* வேந்தும்
புதுகுஷ்ஷாம் : 33 : 102.

**சபுவான்** capuvāṉ, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

சுலைமெனும் கிளையி னுமி றுதவிய தோன்றல் வேத
நிலையுணர் *சபுவான்* தம்மை
புதுகுஷ்ஷாம் : 28 : 5.

**சபுவான்** capuvāṉ, இ. பெ. உமையா என்பவரின் மைந்தன்.

மாலை மார்பு உமையா ஈன்ற
மைந்தனும் *சபுவான்* என்போர்
பனியகுமது மரைககாயர் : சீருப்புராணம் : 25 : 2 (1063).

**சபுறயில்** capuṟayil, இ. பெ. பார். ஜிபுருயீல்.

உலகடங்கத் தனியரசு செலுத்தும்
பெரியவனருளா லுயர்வா னீந்தி
யலகில்கதிர்ச் *சிறைச்சபுற யீல*கும
துறைந்தகுவ டடுத்தன் பாக
சீருப்புராணம் : 38 : 29.

**சபுறு** capuṟu, பெ. <sabr صبر> பொறுமை.

அருள் செய்வான் *சபுறு*று மென்று பல்லுறுதி
மெய்யாரலி சொல நல்லவர் கேட்டங்கு விரைந்தே
இரவுசுல்கூல் படைப்போர : 16 : 82.

**சபூகு** capūku, பெ. தலைச்சோடு.

தண்ணொளி விலசிவீசுஞ் *சபூ*கெனுந் தலைச் சோடிட்டு
சீருப்புராணம : 65 : 16.

**சபூர்** capūr பெ. <zabūr زبور> தாவூத் நபி (அலை) அவர்களுக்கு அளிக்கப்பட்ட வேதம்.

விருப்புறு *சபூ*ரெனு மறையும்
இராஜநாயகம் : 6 : 4.

**சபூறு** capūru, இ. பெ. <sabūr. صبور> பொறுமையாளன். அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். பத்தீகு.
இராஜநாயகம் : 36 : 41.

**சபூறு** capūṟu, பெ. <Zabūr. زبور> தாவூதுநபி அவர்களுக்கு அல்லாஹ்வால் அருளப்பட்ட ஒரு வேதம்.

வருந்திறத் தாவுது நபிக்கன் றீய்ந்திடும்
பொருந்திய *சபூறி*னில் பொலிந்த ராகமே
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 52 : 12.

**சம் சம்** cam cam பெ. <zam zam>
மக்காவில் உள்ள புனிதக் கிணறு; ஹாஜரு அம்மையாருடைய கிணறு என்றும் அழைக்கப்படுகிறது.

வரத்தினிற் சிறந்த கருபத்துல் லாவி
ளுபுசம் சத்தினீர்
சீருபபுராணம் : 65 : 255.

**சம்சாயீல்** camcāyīl, இ.பெ. ஒரு மலக்கின் (வானவரின்) பெயர்.

நாற்பத் தாரும் படியி னண்ணலே *சம்சாயீல்*
தீர்ப்புற் றுளிவிடும் வாட்செங்கை கொண்டு
மிகுருசுமாலை : 270.

**சம்தாயீல்** camtāyīl, இ.பெ. ஒரு மலக்கின் (வானவரின்) பெயர்.

மால்சென் றிடுநபி முன்பினில் வானின் றுயர்*சம்தா*
*யீல்*வந்தனர் நாலாம் வெளியிமை யோர்கள் முன்னி
மிகுருசுமாலை : 279.

**சம்ஹாயில்** camhāyīl, இ.பெ. ஒரு மலக்கின் (வானவரின்) பெயர்.

இருபத் தைந்தெனு மேனிப் படிதனிற்
றுருமச் செங்கரர் சாரச் *சம்ஹாயிலாம்*
பெரும லக்கவர் பின்ன ரிறங்கியே
மிகுருசுமாலை : 209.

**சமத்** camat இ. பெ. <samad صمد> அறிவுக்கு எட்டாதவன்.

அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். மசீது.
இராஜநாயகம் : 36 : 39.

**சமதானி** camatāṉi ஒரு சிறப்புப் பெயர்.

திடங்கொண் டெழுந்தார் கவுது
*சமதானி* முகியித் தீன் உரைத்தார்
வண்ணக்களஞ்சியப் புலவர் : குத்பு நாயகம் : 14 : 18.

**சமது** camatu, பெ. <samad صمد>

(எவருடைய) தேவையும் அற்றவன்.

ஆதியாய் அகதாய் ஆல மடங்கலுஞ் *சமதாய்* நின்றே
இறவுசுல்கூல படைபபோர் : 9 : 37.

**சமதுல்லா** camatullā, பெ. <samadullah صمدالله>

தேவையற்றவனாகிய அல்லாஹ்.

தருணமறிந்துன் தலீல் செய்யாய் *சமதுல்லா*வே
ஞானப்புகழ்ச்சி : 241.

**சமாஅத்** camāat, பெ. <jamā'at جماعت>

பொதுவாக ஒரு பள்ளிவாசலைச் சார்ந்த கூட்டத்தினரைக் குறிக்கும்.

இமாமுஞ் *சமாஅத்து*ந் தொழுதே துஆவுமே யிரந்தின் பின்னர்
தீன விளக்கம் : 5 : 27.

**சமாதுல் அவ்வல்** camātul avval, பெ. <jamadul avval جمادالاول> ஐந்தாவது இஸ்லாமிய மாதத்தின் பெயர்.

மொழிபதின் மூன்று திங்கள் முற்றிய *சமாதுல் அவ்வல்*
புதுகுஷ்ஷாம் : 22 : 94.

**சமாதுல்லாகிர்** camātutlākir, பெ. <jamādulāhir. جمادىالآخر>

ஆருவது இஸ்லாமிய மாதத்தின் பெயர்.

கண்ணீர்மா மனி முகம்மது நபி செழும் கதிபுகு மூன்ருண்டின்
எண்ணில் திங்கள் *சமாதுல்லாகிரில்* இருபதிற்றென்றின் உயர்
வல்லோனின்

புதுகுஷ்ஷாம் : 23 : 169.

**சமீகு** camīku, இ. பெ. <samī'u سميع> கேட்பவன்.

அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களில் ஒன்று. பார். ருபிகு.

இராஜநாயகம் : 36 : 38.

**சமுஊன்** camuūṉ, இ. பெ. மாரியத்து என்பவரின் தந்தையார்.

மட்டி லாப்புகழ் வளர்*சமுஊன்* தவத்துதித்த
வட்ட பால்மொழி மாரியத்து...

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 5 :16 (173).

**சயிது**[1] cayitu இ.பெ. பனீ கிலால் கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

தடம்புயத் தக்கீபு கவாசின் அசுதமு *சயிது*
எனும்பேர் தரித்த நான்கு

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 27 : 2 (1084).

**சயிது**[2] cayitu, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவர். உபாதா என்பவரின் புதல்வர்.

அகன்மதில் மதீனம் வாழன் சாரிகட் கரசாய் வந்தோர்
தகுதிசேர் உபாதா ஈன்ற *சயிது*எனை விரித்து ரைத்தார்

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 24 : 83 (988).

**சயித்**[3] cayit, இ. பெ. ஒரு ஆணின் பெயர்.

*சயி*தருளும் ஆரிதையும்

புதுகுஷ்ஷாம் : 36 : 63.

**சயிது**[4] cayitu, பெ. உரிமைவிடப்பட்ட அடிமை.

தாரணி இறசூல் உரிமைவிட் டவரில்
*சயிது*சொல் குசாமத்து என்பவரும்

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 39 : 170 (1807).

**சயிபத்** cayipat, இ. பெ. ஓர் ஆணின் பெய.

வீக முத்திரை *சயிபத்து* என்பவன் வினைவிளைப்ப

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 27 : 35 (1117).

**சயீது** cayītu, இ. பெ.

முஸ்லிம் தலைவர்களுள் ஒருவர்.

நிருபமொன் றெழுதிக் கல்வி
நிறைத்தெழும் *சயீ*தொடு

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 10 : 2 (215).

**சர்பு** carpu, பெ. <sarf صرف > எழுத்தியல் இலக்கணம்.

நகுவு *சர்பு*டனே யிரண்டையுந் தேறி
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன புராணம் : 6 : 20.

**சரீஅத்** cariat, பெ. பார். சரீகத்.

தாரணி விளக்கும் *சரீஅத்து* முதலாய்ச்
சாற்றிய நால்வகை சிவண
பனியகுமது மரைக்காயர் : சீருப்புரா்ணம் : 32 : 11 (1345).

**சரீகத்** carīkat, பெ. <'sarī'at شريعت >

இஸ்லாமிய மார்க்கச் சட்டம்.

முடக்கி லாதொரு குணக்கிலா முரணிலா துயர்நேர்
கடக்கிலாதெமர் *சரீகத்தி* னதிவழி
புதுகுஷ்ஷாம் : 31 : 32.

**சரீகத்து** carīkattu, பெ. பார். சரீகத்.

இழிவென அகற்றும் நெஞ்சும் *சரீகத்* துக்கேற் றிருக்க
வண்ணக்களஞ்சியப் புலவர் : குதபுநாயகம் : 12 : 28.

**சரீது அபூ ஆமிறு** caritu apū āmiṟu இ. பெ.

இஸ்லாத்தைத் தழுவிய பின்னர் அபாமூஸா என்பவருக்கு முகம்மது நபி (சல்) இட்ட பெயர்.

இடுகுறிப் பேர்*சரீது அபூஆமிறெ*ன்று இனிதின் இட்டார்
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 27 : 98 (1180).

**சரீபீன்** caripin இ. பெ.

ஒரு நகரின் பெயர்.

அந்நவர் பரிந்தும் மாணை ஆடுமா மருதஞ் சூழ்ந்த
நன்னகர் *சரீபீன்*...
சேகுனாபுலவர் : குத்புநாயகம் : 28 : 2.

**சரீபு¹** caripu, பெ. <sarif شريف > கண்ணியமிக்கவர்.

தமதுளத் துணர்ந்தித் தினமெனப் பகர்வீ
ரென்றனர் *சரீபு*கள் வீரர்
தீன் விளக்கம் : 5 : 31.

**சரீபு²** caripu, இட. பெ. ஓர் இடத்தின் பெயர். மக்கத்தி லிருந்து இரண்டு காதம் தூரத்தில் உள்ளது.

வீழ்புனல் புலராப் பண்ணை மிகுபல வளமும் வாய்ந்து
வாழ்வுறு *சரீபு*என்று ஓதும் தலத்தில் வந்து இறுத்தார் அன்றே
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 18 : 9 (520).

**சருபந்து** carupantu பெ. <sarband سربند> (உருது) தலைக் கவசம்.

குவிதருங் கசருபத்தின் குடுமி யுற்றவக்
கவினெனச் *சருபந்து* கம்மிற் சூட்டினர்
இரவுசுல்கூல் படைபபோர் : 17 : 44.

**சருவந்து** caruvantu, பெ. பார். சருபந்து.

சீத வொண்சரு வந்துஞ் சிறப்பித்தார்
திருக்காரணப்புராணம் : 46 : 92.

**சல்கா** calka, இ. பெ. காட்டிலே கன்னை எதிர்த்துப் போராடி மாண்ட வேடனின் மனைவி.

தன்பூங் கூந்தல் *சல்கா* வென்னுந் தகை
திருமணிமாலை : 4 : 58.

**சல்தி** calti, வி. பார். ஜல்தி.

சிரற்றினிற் சுடலாற் *சல்தி* செலவென்றால்
இரவுசுல்கூல் படைப்போர் 12 : 7.

**சல்மா** calmā, இ. பெ. ஒரு பெண்ணின் பெயர்.

தண்ணார் கமல ஆனனச் *சல்மா*
தாள்ஒன் றொடிய எறிந்தனனால்
பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம் : 12 : 27 (271).

**சல்மாயிபுனுகபீபு** calmāyipuṉukapīpu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*சல்மா* இப்னு *கபீபும்* விறல்
புதுகுஷ்ஷாம் : 32 : 20.

**சல்மான்** calmāṉ, பாரசீகத்தைச் சேர்ந்தவர். முகம்மது நபி (சல்) அவர்களின் தோழர்.

பாரிசென் றுரைக்கும் வளமை நாடுடுத்த
புரிசைசூழ் பதியினிற் பிறந்தோன்
நேரிசைந் தீன்று ரிருவருள் *சல்மான்*
எனவிடும் பெயரினன் சிறியேன்
சீறாப்புராணம் : 56 : 4.

**சலவாத்** calavāt, பெ. <salawat صلوات> நபி புகழ்.

நாட்டிய புகழ்சேர் மக்க முகம்மது நபிதம் பேரிற்
சூட்டிய *சலவாத்* தீரைந் துரைமென விறைவன சொன்னன்
சீறாப்புராணம் : 4 : 22.

**சலாகுதீன்** calākutīṉ, இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியார்.

*அறபுவள நாடு கோடி கோடி*
*புடைகொணகர் காகி றூரில் வாழும்*
*அதிபதிச லாகு தீனு தார மகவாஞேர்*

காசீம் திருபபுகழ்: 141.

**சலாத்** calāt, பெ. <salāt. صلوة > தொழுகை.

*தனித்தி ருந்து சலாத் தஞ்சையும் தொழுது*

பனியகுமது மரைக்காயர்: சீருப்புராணம்: 19 : 12 (605).

**சலாத்துல் லுஸ்தா** calātul lustā பெ. <salatul wusta صلوةالوسطى > பார். அசர். பிற்பகலின் நடுப்பகுதியில் முஸ்லிம் மக்கள் நிறைவேற்ற வேண்டிய தொழுகை.

*ஆயச லாத்துல் லுஸ்தா வாமச ரெருகுத்தி னங்கே*

நவமணிமாலை (முகியித்தீன் புராணம்): 18 : 21.

**சலாம்**[1] calām, பெ. <salām. سلام > அமைதி. பெரும்பாலும் ஒரு முஸ்லிம் மற்ருெரு முஸ்லிமைச் சந்திக்கும்போது முகமன் கூறும்பொருட்டு 'உம்மீது அமைதி உண்டாகுவதாக (அஸ்ஸலாமு அலைக்கும்)' என்று கூறுதல் மரபாகும்.

*நன்னெறிக் குரிசிற் கென்றன் சலாமையு நவிலு மென்ருர்*

சீருப்புராணம்: 16 : 45.

**சலாம்**[2] calām, இ. பெ. ஒரு ஆணின் பெயர்.

*சலாம் மென்பார் அருள் மகன் குமைறு*

புதுகுஷ்ஷாம்: 13 : 43.

**சலாமத்**[1] calāmat, பெ. <salamat سلامت >
பரிபூரண பக்குவ நிலை.

*அரிதிற் காண்கினு மிறக்கினு மும்மத்தி னவராய்ப்*
*பெருகுந் தீனில்ச லாமத்துப் பெறுபவர்கள் என்றே*

சீருப்புராணம்: 56 : 35.

**சலாமத்**[2] calāmat, பெ. <salamat سلامة > அமைதி.

*எல்லாப் பறக்கத்தும் சலாமத்தும்*

ஞானபபுகழ்ச்சி: 131.

**சலாமா** cālāmā, இ. பெ. ஒரு பெண்ணின் பெயர்.

*...............சலாமா மைந்தர் உசைதும்*

புதுகுஷ்ஷாம்: 32 : 19.

**சலீசு** calicu, இ. பெ. ஓர் அறிஞர்.
நகையுளார் *சலீசென்*றோது நல்லறிவாளர் சொன்னார்
புதுகுஷ்ஷாம் : 59 : 74.

**சலீத்து** calittu, இ. பெ. ஒரு தூதன்.
தடப்புயச் *சலீத்துக்* கையில்
பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம் : 7 : 1 (187).

**சலீப்** calip, இ. பெ. ஓர் ஆணின் பெயர்
கொழுஞ் *சலீபின்*
புதுகுஷ்ஷாம் : 36 : 78.

**சலீபு** calipu, இ. பெ. ஒரு கோத்திரத்தின் பெயர்.
உனதுதொல் கிளையாய் வந்த *சலீபெனும்* கூட்டத்து உற்றார்
பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம் : 26 : 7 (1078).

**சவ்வாது** cavvātu பெ. <zabād. زباد >
வதியுஞ் *சவ்வாது* சந்தனமு மொன்றென்று மன
வைத்து நிகழ் வது சமாதி
மஸ்தான் சாகிபு பாடல் : முகியிததீன சதகம் : 5 : 6.

**சவ்வால்** cavvāl, பெ. <'sawwāl. شوال >
பத்தாவது இஸ்லாமிய மாதம்.
சொன்மதி *சவ்வால்* வெள்ளி துலங்குநாள் இவரும் உற்ற
புதுகுஷ்ஷாம் : 28 : 36.

**சவர்** cavar, பெ. பாரசீகம்.
'அ' உச்சரிப்பைப் பெறுவதற்காக அறபு எழுத்துக்களின் மீது இடப்படும் குறி. அறபில் இது பதஃகு என வழங்கப்படும்.
ஏட்டிலக் கணத்தின் வாய்மை யெழுத்திவை *சவ*ரென்றுரே
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 16 : 22.

**சவாப்** cavāp. பெ. பார். ஜவாப்.
மருவி வந்த மசலாவி தாமெனக்
கருவி சொல்லும் *சவாபினைக்* காண்என
பதறுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 68 : 29.

**சவாபு** cavāpu, பெ. <savab ثواب >
தொனிபெறச் *சவாபு* மீயுந் துன்பெலா மகற்று மென்றும்
இரவுசுல்கூல படைப்போர் : 33 : 28.

**சவுகர்** cavukar, இ. பெ.
பெருமையி னெழுந்தான் *சவுகர்* பெறுமகன்
பல்குஎன் போனே
திருமணிமாலை : 4 : 86.

**சவுகறு** cavukaṟu, இ. பெ. சுவைத் என்பவரின் புதல்வன்.

*நிணதிசை சுவைதின்றேன்ற னெடுமுடி சவுகறு என்போன்*
*கணதிசை யிகலிவெம்போர் கடந்தருஞ் சிறைகள் வாரி*

திருமணிமாலை : 4 : 60.

**சற்றுகு** caṟṟāku, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*வழிபுனே சேனே யோர்க்கு வகைபுனே தலைமை பூண்டு*
*கழிபுனே யாது செய்யும் காப்புடை உதவி செய்யா*
*தொழிபுனே துயிறல் கொண்டீர் சற்றுகினி துதவு பால*
*பழிபுனே யாது போதிர் காலிது பாலின் என்றே*

புதுகுஷ்ஷாம் : 29 : 131.

**சறகு** caṟaku, பெ. < 'sar' شرع >

இசுலாமிய தெய்வீகச் சட்டம்.

*சறகினன் னெறிவ ழாமற் றுங்கிய செங்கோல் வேந்தர்*

பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 4 : 1.

**சறுகு** caṟāku, இ. பெ. நபித் தோழருள் ஒருவர்.

*தருநேர் அசுகா பிகள்தம்மில்*
*சறுகு தனேயன் அவர்தமக்கும்*

பனியகுமது மரைக்காயார் : சீறுப்புராணம : 32 : 17 (1351).

**சறுகபீல்** carukapīl, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவரின் பெயர்.

*தன்னகந் தெரிச றுகபீ லவரைத் தவாகின்*
*என்னும் வாயிலில் வைத்தனர்*

புதுகுஷ்ஷாம் : 31 : 43.

**சறுகாயீல்** carukāyīl இ. பெ.

ஒரு மலக்கின் (வானவரின்) பெயர்.

*..............இன்பச் சறுகாயிலா மலக்கும்*

மிகுறுசு மாலை : 288.

**சறுசறு** caṟucaṟu, பெ. ஒரு முஸ்லிம் தலைவரின் பெயர்.

*வீரவேடமணி யுட்டிற மழற்ற நிறைமேவிருதினே*
*டார வேரிகமழ் மற்புய விறல் சறுசறு ஆர்த்தனனரோ*

புதுகுஷ்ஷாம் : 41 : 35.

**சறுசீசு** caṟucīcu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*தீவழி கண்சறு சீசென் பானவன்*
*மேவிய பழிகொல்வான் விரும்பு நெஞ்சினன்*

புதுகுஷ்ஷாம் : 42 : 70

**சறுதாறு** caṟutāṟu, இ. பெ. <sardār سردار > தலைவர்.

*புன்மை குடிகொண்ட கெச போக்கிரிகள் சறுதாறு*
*போலு முன்னே றுவம்பன்*

மஸ்தான் சாகிபு பாடல் : முகியித்தீன் சதகம் : 6 : 3.

**சறுபால்** carupāl, பெ. < sirwāl, sarūwil سروال >
கால்சட்டை.
வண்ணவெண் *சறுபாற்* றெட்டு மருங்கினிற் சுருக்கி வீக்கி
சீறுப்புராணம் : 65 : 16.

**சறுபு** carupu, பெ. பார். சர்பு. எழுத்தியல் இலக்கணம்.
உடலுயிர் சார்புமற் றெடுக்க மாதியி
னடைபெறல் விகாரமும் புணர்வு நாதமு
மடவுரு மெழுத்தின தாக்க முங்கிய
தொடருள *சறுபெ*னச் சொல்லு நூல்களும்
சேகனாப்புலவர் : குத்பு நாயகம் : 11 : 8.

**சனது** canatu, பெ. < sanad سند >
அதிகாரபூர்வமான ஒரு பத்திரம்.
*சனது* முறையோடு
ஞானப்புகழ்ச்சி : 649.

**சனா** canā, பெ. < zinā زنا > விபச்சாரம்.
தூயவன் இன்னும் உரைத்தனன் அவற்குத்
துதிமறை இறக்குவன் தொழுகை
நேயமுற்று ஐந்து வேளை ஆக்குவன்
மே னெறி தரு விரதமும் கச்சு
மாய்தரு பறுல தாக்குவன் பகைமேல்
அமர்பொரல் விதிப்பன் கள்ளுண்ணல்
மாய்வினை *சனா*வும் கருமெனச் செய்வன்
வரிசை பல்லருளுவ னெனவே
புதுகுஷ்ஷாம் : 17 : 65.

**சனாசா** canācā, பெ. பார். ஜனாஸா.
*சனாசா* வுய்ந்தக தைச்சொலு குவமே
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 31 : 1.

**சனுஆ** canuā, பெ. எமன் நாட்டின் அப்போதைய தலைநகர்.
பக்கமார் எமன்தேயத்தில் பகர்சனு ஆவின் மட்டும்.
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 39 : 42 (1679).

**சஜ்ஜாத்தா** cajjāttā, பெ. < sajjada سجاده >
அல்லாஹ்வைத் தொழுவதற்கு உபயோகிக்கப்படும் தொழுகை விரிப்பு.
ஓதினர் மறுத்தும் வள்ளல்
ஓதுவர் *சஜ்ஜாத் தா*வும்
பாதுகெண் டிகையு மென்பாற்
படுத்துதி றெனவும் சொற்றார்
சாதுலிநாயகம்: 10 : 34.

**சஜதா** cajatā, பெ. பார். சுஜுது.
ஈரடி யினுஞ் *சஜதாச்* செய் தேத்தி
சீறுப்புராணம் : 63 : 37.

**சாகத்** cakat, பெ. < sa'at ساعة > வேளை.
விண்ணருஞ் *சாகத்* துற்று விருப்புட னிருக்கு நாளில்
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 14 : 31.

**சாகிபு** cākipu, பெ. < sāhib صاحب > தோழர்.
இந்த வேலையிலே நல்லவிபுருஹீம் *சாகிபு* என்னு
மந்தரா சலப்பு யத்தார் நாருசா வழங்க லுற்றார்
தீன் விளக்கம் : 22 : 13.

**சாகில்கிமானி** cākilkimāṉi, இ. பெ.
ஒரு கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள்.
புருடர் *சாகில் கிமானி*களும்
புதுகுஷ்ஷாம் : 15 : 13.

**சாகிறு** cākiṟu, பெ. < śā'ir شاعر > கவிஞன்.
தந்திரக் கவியிற் சொல்லிச் *சாகிறுத்* திறனுங் கூற
இரவுசுல்கூல் படைப்போர் 14 : 11.

**சாகூறு** cākūṟā, இ. பெ. கறுது என்பவரின் இரண்டு புதல்வர்களுள் ஒருவர்.
சூரமுந் திறனு மாண்மையின் *சாகூ* றுவெனுந் துங்கவ னொருவன்
திருமணிமாலை : 4 : 6.

**சாகை** cākai, பெ. தங்குமிடம்.
என்றவர் கேட்டலு மிறைவன் தூதுவர்
நன்றெென வளித்தனர் நடத்திச் *சாகை* போய்த்
இரவுசுல்கூல் படைப்போர் : 40 : 32.

**சாத்** cāt, பெ. <sa'ad سعد > ஒரு குலத்தின் பெயர்.
*சாத்* எனுங்குலத் தாரலி மாவுறத் தழுவி
சீறுப்புராணம் : 7 : 91.

**சாத்தூக்** cāttūk, இ. பெ. மிசுறு நாட்டு மன்னன்.
புல்வழி யவ்வூர் போற்றும் புரவலன் *சாத்தூக்* என்போன்
திருமணிமாலை : 25 : 23.

**சாதாத்** cātāt, த. பெ. <sādāt سادات > தலைவன்.
நன்னெறி யுடையீர் நீவிர் நனியறபிகளின் மேன்மை
மன்னிய *சாதாத்* தாகி மாநிலஞ் சிறக்க வந்தீர்
புதுகுஷ்ஷாம் : 40 : 56.

**சாதாத்து** cātāttu, பெ. <sādāt سادات >
பிரபு; சய்யிது என்பதன் பன்மை. பாத்திமா (றலி) மூலமாக வந்த நபிகள் பெருமானாரின் வழித்தோன்றல்களின் சிறப்புப் பெயர்.

வள்ள லென்னு முகம்மதர் மாமர
புள்ள *சாதாத்தி* லுற்றவர் தொன்மறை
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 19 : 9.

**சாது** cātu இ. பெ. <sa'ad سعد >
செவிலித்தாய் அலிமா பிறந்த குலத்தின் பெயர்.

*சாதெ*னுங் குலத்தினென் றுயுந் தந்தையு
மோதுமென் பெயரலி மாவென் றோதினர்
சீறுப்புராணம் : 6 : 32.

**சாபிறு**[1] cāpiṟu இ. பெ. ஒரு முஸ்லீம் பெரியாரின் பெயர்.

தனிமழ வரியே றன்னார் *சாபிறெ*ன் றோதுந் தக்கோர்
நனிபுகழ் தழுவி நின்ற நபிமு னம்வந்து சொல்வார்
சீறுப்புராணம் : 79 : 1.

**சாபிறு**[2] cāpiṟu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

..................சல்மா உதவும் *சாபிறு*வும்
புதுகுஷ்ஷாம் : 32 : 19.

**சாம்** cām, இ. பெ. <sām. سام >
நூகு நபியின் மூன்று புதல்வர்களுள் ஒருவர்.

புரிநடு நிலையை யறபிக டந்தைப் புகழ்தருஞ்
*சாமி*னுக் களித்தார்
திருமணிமாலை : 4 : 3.

**சாம்** cām பார். ஷாம்.

மன்றலங் கழனி மணியொடு விளையு
மகரிபு தேயத்திற் *சாம்*ஊர்
இராஜநாயகம் : 39 : 14.

**சாமித்** cāmit, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

முறைதரு முகம்ம தென்னும்
முழுமதி யலர்ந்த சிந்தை
பொறைதரு *சாமித்* தீன்ற
புதல்வரை விடுதி ரென்றார்
புதுகுஷ்ஷாம் : 36 : 25.

**சாயறுயாயீல்** cāyaṟuyāyil, இ. பெ.
ஒரு மலக்கின் (வானவரின்) பெயர்.

*சாயறு யாயீ*லும்... வந்தார்
மிகுறுசுமாலை : 288.

சாயிபு cāyipu, பெ. <sāhib صاحب > தோழர்.

*சாயிபு* பதமலர் வருந்த

சீறாப்புராணம் : 60 : 197.

சாலகு calaku இ. பெ. அறுபகுசது புதல்வர்.

அறுபகுசதுமா மதலைசா *லகு*வயி னடைந்த

சீறாப்புராணம் : 4 : 46.

சாலிகு[1] cāliku இ. பெ. ஒரு நபி.

நன்னபி கூது *சாலிகு* இவர் முதனபிமார் செய்நூல்

புதுகுஷ்ஷாம் : 58 : 70.

சாலிகு[2] cāliku பெ. <sālih صالح > நல்லடியார்.

*சாலிகா* னவராய்த் தனியுமா யடுத்தார்

பத்றுத்தீன புலவர் : முகியித்தீன புராணம் : 13 : 11.

சாலிகு[3] cāliku பெ. <sālik. سالك >

இறைஞானப் பாதையில் செல்பவர்.

துறவலர் *சாலிகா*ன துய்யவ ரொலிமா ரெல்லாம்

பொறையிலாக் காரணத்தின் புரவியை முந்தற் போட்டால்

பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 21 : 54.

சாலிம்[1] cālim இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*சாலிம்* உதவும் அவ்வாதும்

புதுகுஷ்ஷாம் : 32 : 19.

சாலிம்[2] cālim, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

மற்கொண்ட திண்டோள்து வைபீன்ற

சேய்வென்றி வாள்*சாலிமை*

புதுகுஷ்ஷாம் : 31 : 8.

சாலீம் cālīm, இ. பெ. குஜாயத் கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

...............திறம்சேர் குஜாயத் தெனும் கிளையில்

வென்றி உறும்*சாலீம்* தவத்தால்

பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம் : 22 : 5 (835).

சாலிஹீன் calihīṉ, பெ. <sālihīṉ صالحين >

மனிதப் புனிதர்; நல்லடியார்கள்.

தருந்தகைப் பெருமுல மாக்கள் *சாலிஹீன்*

வருந்திலா மனத்தின்நல் வாழ்க்கை மல்குவார்

சாதுலிநாயகம் : 4 : 14.

**சாவி** cāvi, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

நாவினின் மறைதவழ் மிறுமாத்து நன்மகனுர் *சாவி* என்பார்

புதுகுஷ்ஷாம் : 19 : 53.

**சாவியத்** caviyat பெ. <zāviyāt زاوية> மதகூடம்.

அறஞ்செய் நாதர் *சாவியத்* திக்குறு மணிகொள்வார்

சாதுலிநாயகம் : 19 : 27.

**சாவியா** cāviyā பெ. பார். சாவியத்.

துறக்க நிகர்த்த *சாவியா* முற்றும் தொழுவாரே

சாதுலிநாயகம் : 19 : 29.

**சாறு**[1] cāṟā, இ. பெ. இபுறுகீம் நபி அவர்களின் மனைவியார்.

தென்மனங் கொண்டு நின்ருர் திருமயில் *சாறு*

திருமணிமாலை : 24 : 2.

**சாறு**[2] cārā இ. பெ. ஓர் அடிமையின் பெயர்.

கொண்டவிலை அடிமைகளில் *சாறு*என் பவள்உரிமை
கூறப்பெற்ருள்

பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 23 : 4 (879).

**சாறூகு** cāṟūku, இ. பெ. ருகுவா என்பவரின் புதல்வர்.

வாரணி முரச மிடியெனக் கறங்கும்
வாயிலான் ருகுவா மதலை
தாரணி தருவா யுதித்த *சா றூகு*

சீறுப்புராணம் : 4 : 49.

**சாறுசு** cāṟācu, இ. பெ. ஒரு பெண்ணின் பெயர்.

அரிவை *சாறுசு*

பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 24 : 123 (1028).

**சிஃர்** ciḵr பெ. பார். சிகுறன்.

தீதுமேவுஞ் *சிஃர்*வலை பூட்டியே

இரவுசுல்கூல் படைபபோர் : 38 : 21.

**சிஃறன்** ciḵṟaṉ, பெ. பார். சிகுறன்.

தேட்டமான *சிஃறன்* மறையவர்

இரவுசுல்கூல் படைப்போர் : 38 : 20.

**சிக்கந்தர்** cikkantar (பாரசீகம்) இ. பெ. மகா அலெக்ஸாண்டரைக் குறிக்கும். பொதுவாக அரசரைக் குறிக்கவும் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

வீசு தெண்டிரைக் கடன்மலை யடங்கவென் குடைக்கீ
ழாசி லாதசிங் காசனத் திருந்த *சிக்கந்தர்*

சீறுப்புராணம் : 5 : 14.

**சிகாபுத்தீன்** cikāputtīṉ, <śihabuddeen شهاب الدين >
ஒரு முஸ்லிம் பெரியார்.
*இற்குயின் மொழிக்குவந் தெழிற்சி காபுத்தீன் நற்குணர்...*
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்): 10 : 2.

**சிகுறன்** cikuṟaṉ, பெ. பார். சிகுறு.
இச்சொல், அறபுச் சொல் 'சிகுறு' என்ற வடிவமும் தமிழ் ஆண் பால் விகுதி 'அன்' என்பதும் இணைந்த வடிவமாகும். சூனியக் காரன் என்று பொருள்படும்.
கிருபைமேவிய கீர்த்தி கொண் மன்னனே செருநனை *சிகுறன்*
இரவுசுல்கூல் படைப்போர்: 18 : 67.

**சிகுறுன** cikuṟāṉa, இட. பெ. ஓர் இடம்.
*சிகுறுன* தெனும்தல மீதிடை சேர்ந்து
பனியகுமது மரைககாயா: சீறுப்புராணம்: 28 : 4 (1184).

**சிகுறுனத்து** cikuṟāṉattu, இட. பெ. ஓர் இடம்.
மணிக்குலம் கனுலும் மறுகுடைச் *சிகுறு*
*னத்து* எனும் தலத்தில் வந்து இறுத்தார்
பனியகுமது மரைக்காயர்: சீறுப்புராணம்: 28 : 39 (1219).

**சிகுறு** cikuṟu, பெ. <sihr سحر > சூனியம்,
*சிகுறு* செய் யகுமதின் துணைவன்
இறவுசுல்கூல் படைப்போர்: 9 : 26.

**சித்தீக்** cittīk பெ. <siddiq صديق >
மிகவும் உண்மையுள்ளவர் என்று பொருள்படும் பெயர்.
தீனுறை வித்தவாகைத் திறல்புனை *சித்தீ*கென்பார்
ஆரிபுநாயகம்: 11 : 54.

**சித்தீக்** cittīk, இ. பெ. <śiddik. صديق >
உண்மை பேசுபவர்; முதல் கலீபாவான அபூபக்கரின் சிறப்புப் பெயர்.
கொடுத்திடும் *சித்தீக்* என்றும் குறுகும்...
பனியகுமது மரைக்காயர்: சீறுப்புராணம்: 39 : 21 (1658).

**சித்றத்துல் முந்தஹா** citṟattul muntahā பெ.
<sidrat al-muntaha سدرة المنتهى > விண்ணுலக மரம்.
மூதிருள் கடியுங் காந்தி *சிதுறத்துல் முன்த ஹாவென்*
ரோதிய தரு
சீறுப்புராணம்: 60 : 188.

**சிதுறத்துல் முன்தஹா** citurattul muntahā
பார். சித்றத்துல் முந்தஹா.

காணுர் *சிதுறத் துல்முன் தஹா*
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 39 : 113 (1750).

**சிபத்து** cipattu, பெ. <sifat صفة > பண்பு.

என்ஞெரு தாத்துங் காணு மியல் பெறு *சிபத்துந்* தம் முன்
முன்னுறு தோற்றங்கொண்ட முதுபுகழ்த்தினத் திஞனே
ஆரிபு நாயகம் : 6 : 21.

**சிபுரியில்** cipuriyil, பெ. பார். ஜிபுறயீல்.
உறுதி தரும் நசுறுன்மினல் லாகியொ பத்துகுன்கரீ பெனவே
பொறிகொடி கைக் கொளுஞ் *சிபுரியில்* செப்பினர்
இரவுசுல்கூல் படைப்போர் : 6 : 17.

**சிபுரியீல்** cipuriyīl, பார். ஜிபுறயீல்.
நள்ளநோக் குற்றுனந்த நனிதருஞ் *சிபுரியீலும்*
வள்ளனேக் குற்றுர்கொண்ட சோபன வரிசை யோடே
திருமணிமாலை : 24 : 17.

**சிபுரீல்** cipurīl இ. பெ. பார். ஜிபுறயீல்
விழியாமுனஞ் *சிபுரீல*வண் விரைவெய்தின ரன்றே
திருமணிமாலை : 28 : 21.

**சியாது** ciyātu, இ. பெ. ஒரு ஆணின் பெயர்.
வன் கரத்து ஐயில் *சியாது*
புதுகுஷ்ஷாம் : 23 : 114.

**சியாறத்** ciyārat, பெ. <ziyārat زيارة >
தரிசிக்கச் செல்லுதல்.
திசைபுகழ் முகம்மது இன்பத் திகழ்றவு லாவின் எய்தி
நசைபுகழ் *சியாறத்* செய்து
புதுகுஷ்ஷாம் : 45 : 27.

**சியாறு** ciyārā, பெ. பார். சியாறத்.
முச்சகம் விளங்கு மக்கா முதுநகர் மதீஞ வேகிக்
கச்சொடு *சியா றுச்*செய்து காட்சி களிரிய கண்டு
திருக்காரணப்புராணம் : 11 : 20.

**சிர்று** cirṟu, பெ. பார். சிற்று.
அழகுறுஞ் *சிர்றி*ஞல் அகத்துள்
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 54 : 16.

**சிருபு** cirupu < ṡirfu صرف > கலப்பின்மை.
பார். மகுலியத்து.

**சில்சிலத்து** cilcilattu, தொ. <silsilat. سلسلة >
மரபுவழிச் சங்கிலித் தொடர்.
திங்கள் வதனஞ் சிறந்த அப்துல் காதிறுலி
தங்களுக்கு முன்னிலை யார்சங்கையுறும் பீரொலிமார்
அங்கத் தலைமுறையும் அவர்பெயருந் தான் வரைந்து
துங்கமுறும் *சில்சிலத்துப்* பட்டையமும் தொகுத்தளித்தார்
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 69 : 47.

**சிற்று** ciṟṟu, பெ. <sirr. سرّ > இரகசியம்.
பொதுவறப் படைத்த குணக்கொடு குடக்கும்
புவியொடு வானமற் றெவையும்
இதமுறும் இறையோன் *சிற்றுகள்* அனைத்தும்
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 54 : 15.

**சிற்றுல் அகாயிக்** ciṟṟul akāyik, பெ.
<sirrul haqāiq سرالحقائق > உண்மையின் இரகசியங்கள்.
சீரொடு நின்ற தன்மை தெளிவி னுட்படு மெய்ஞ்ஞான
வாருதி யாய *சிற்றுல் அகா யிக்*கும் வகுத்தா ரன்றே
திருக்காரணப்புராணம் : 11 : 14.

**சிறுத்** ciṟāt, பெ. <sirāt صراط >
நரகத்திற்கு மேல் உள்ள பாலம்.
வேங்கைநே ரலியுல்லா விரி *சிறுத்*தினில்
தாங்கு நன் நபியுல்லா தகைமை சாற்றுவார்.
இரவுசுல்கூல் படைப்போர் : 16 : 37.

**சிறுத்தல்லதீன** ciṟāttallatīṉa, தொ.
<sirātallazīna صراطالذين >
(எவர்களுக்கு நீ அருள் புரிந்தாயோ) அவ்வழி.
இரங்கி *சிறுத் தல்லதீன* வென்ற ருளு மெய்ஞ்ஞானம்
ஞானப்புகழ்ச்சி : 673.

**சிறுக்கு** ciṟukku பெ. <ṡirk شرك >
அல்லாஹ்வுக்கு இணை வைத்தல்.
உருக்க முடனுன்னை யுகந்தறியா மூடர்
*சிறுக்கு* நரகமதிற் சேர்வார்
ஞானப்பூட்டு : 28.

**சிறுவால்** ciṟuvāl பெ. பார். சறுபால்.
ஈரம் புலர்த்தி மென்று கிலா
விருவான் மதியை யடுத்த மின்னற்
சேரும் படிக்குச் *சிறுவாலுஞ்*
சேற்றி யரையிற் கீன்காப்பு
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 20 : 79.

**சின்** ciṉ, பெ. பார். ஜின்.
ஊனகு பூதஞ் *சின்க* ளொன்றும்
புதுகுஷ்ஷாம் : 45 : 26.

**சிஜ்ஜீன்** cijjīṉ. பெ. <sijjīn. سجين > ஒரு நரகின் பெயர்.
ஏகனைக் கருதா திறந்ததோ கதியெய் *திடுசிஜ்ஜீன்*
தாறுல் பஞ மேய்
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) 8 : 55.

**சீது** cītu, இ. பெ. ஒரு நபியின் பெயர்.
நீடிய வொளிவு சிறந்தொரு சூலி
னிலமிசை *சீது*தித் தனரே
சீறுப்புராணம் : 4 : 36.

**சீமியா** cīmiyā பெ. இந்திரஜாலம்.
...............மறை யுணருஞ் *சீமியா*வுடனும்
திருக்காரணப்புராணம் : 33 : 34.

**சீறா** cīṟā, பெ. வாழ்க்கை வரலாறு என்பது இச்சொல்லின் பொருள். இங்கே உமறுப்புலவர் இயற்றிய சீறுப்புராணத்தைக் குறிக்கின்றது.
*சீறு* வியற்று முமறையுணர் திகழும் காசிம் புலவர் தம்மை
சாதுலிநாயகம் : : 1 : 27.

**சீன்**[1] cīṉ, பெ. <sīn س >
அறபு அரிச்சுவடியில் ஓர் எழுத்து.
*சீனே* நானே தெரியா தெமக்கும்
ஞானப்புகழ்ச்சி 339.

**சீன்**[2] cīṉ, இட. பெ. <ṣīn. صين > சீன தேசம்.
பலபல திசையுந் தேடிச் *சீனெ*னும் பதியிற்
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 17 : 26.

**சுஅயீல்** cuayīl, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவர்.
அம்றுசேய் *சுஅயீல்* தானும்
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 24 : 104 (1009).

**சுக்குர்** cukkur, பெ. பார். சுக்று.

புல்லிக் கொடுபெண் பெற்றவர் பொறுமை சுக்குர் செய்தால்
நல்கப் படுமல ருக்கிறை நன்மைப் பொருளென்றே

மிகுருசு மாலை : 667.

**சுக்கூர்** cukkūr பெ. பார். சுக்று.

நிறையொடுஞ் சுக்கூர் செய்தவிட நீந்திமெய்
குறையிலாத் தமதிடங் கூட்டி வந்தனர்

பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 28 : 229.

**சுக்கூறு** cukkūṟū, இ. பெ. < sakūr. شكور >

நன்றி உடையவன். அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். ருபிகு.

இராஜநாயகம் : 36 : 38.

**சுக்கூன்** cukkūṉ, பெ. < sukūn سكون >

அறபு மொழியில் ஒற்றெழுத்துக்களைக் குறிக்க அவ்வெழுத்துக் களின்மேலே இடப்படும் ஒரு குறி.

நல்ல திப்படி நாட்டுஞ் சுக்கூன் நடு

பீர்முகம்மது சாகிபு : ஞானக்குறம் : றப்பில் ஆலமீன்பதிகம் : 8.

**சுக்று**[1] cukṟu, பெ. < śukr. شكر > நன்றி.

இன்னலங் கனியு மியான்றரும் வரிசை
யியைநிகு மத்துகட் கெல்லா
நன்னயம் பெற்றீர் சுக்று செய்வீரேல்
நாடொறும் அதிகம் எய்திடலாம்

புதுகுஷ்ஷாம் : 46 : 156.

**சுக்று**[2] cukru < sukr سكر >

ஆன்மிகப் பயணத்தில் ஒருநிலை.

நீங்காது இருக்கும் சுக்றென்னும் வாயினிலையின் விட்டதுவே

சேகுனைப்புலவர் : குத்புநாயகம் : 17 : 89.

**சுகதா** cukatā, பெ. < śuhada شهداء > உயிர்த்தியாகி.

மேதகு நபிமார்க்கெல்லாம் மேவுநாளினின் மன்றுடல்
போதகு சுகதாக் கெல்லாப் பொழுதுமே யாகு மென்றால்

புதுகுஷ்ஷாம் : 17 : 36.

**சுகுதான்** cukutāṉ, இ. பெ. ஒரு ஆணின் பெயர்; கைருன் என்ப வரின் மகன்.

நன்னிதி நிருபந் தன்னை யப்துல்லா கரத்தி னல்கிச்
சொன்னிதி கைருன் றேன்ற லறிவெழு சுகுதா னேடே
சென்னிதி பணியீய்ந் திட்டார்

புதுகுஷ்ஷாம் : 51 : 83.

சுகுப் cukup, பெ. < suhuf صُحُف > கட்டளை.

தெரிமறை ஆத மக்களிற் சிறந்த
சீதுவினி டத்திருந் ததனுற்
புரிவுறு நபிப்பட் டமும்வரப் பெற்றுப்
பல்கலைக் குரிசிலென் றேத்த
வரியவன் கொடுத்த வரிசைக ணிறைந்த
ஐம்பது சுகுபிறங் கியதே
சீறாப்புராணம் : 4 : 37.

சுகுல் cukul < śukul شُغل > மார்க்க அறிவுகள் எல்லாம்.

இன்னமு ஞான மார்க்கவகை சுகுலெவையும் தந்து
வண்ணக் களஞ்சியப் புலவர் : குத்பு நாயகம் : 12 : 21.

சுகூது cukūtu, பெ. < śuhūd شُهود > கடவுள் தரிசனை.

காக்குங் கருணை நிறைந்ததலம்
காணும் சுகூதை விளக்குந்தலம்
சாதுலிநாயகம் : 25 : 3.

சுகைத் cukait, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

எண்ணமுல் சுகைதின் யூகத்
திழிந்தனர் அளவி லொன்னூர்
புதுகுஷ்ஷாம் : 45 : 5.

சுகைநாக் cukainak, பெ ஒரு கோத்திரத்தின் பெயர்.

தன்பதி நீந்தி அல்லில் தடமதீனாவில் முன்னம்
அன்பனும் சுகைநாக் கூட்டத்து ஒருவர் உண்டு அவர் இல் புக்கார்
பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம் : 30 : 14 (1299).

சுகைல் cukail இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

வேகவெம் பரிவினை யாட்டின் வீரரோ
டேகிய அம்று சேய் சுகைல் என்போர்
புதுகுஷ்ஷாம் : 28 : 80.

சுசு cucu பெ. < juzu جزْ >

அல்குர்ஆன் முப்பது பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியும் ஒரு சுசு (ஜுஸு—ஒரு பாகம்) என அழைக்கப்படும்.

சீர்வளர் முகியித்தீன் குறுஆன் சுசுமுப் பதிற்று
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 4 : 36.

சுசூது cucūtu, பெ. பார். சுஜூது.

ஆதர உளத்தின் சுசூதிடப் பணிந்தான்
புதுகுஷ்ஷாம் : 30 : 96.

**சுத்து** cuttu, இ. பெ. ஓர் இடத்தின் பெயர்.

செழும்தண் சோலை *சுத்து* என்னும்
தலம்சென்று அவணில் கூடாரம்

பனியகுமது மரைக்காயர் : *சீறப்புராணம்* : 12 : 115 (359).

**சுதாம்** cutām, இ. பெ. ஓர் ஊரின் பெயர்

தோட்டலர் கமல வாவிச் *சுதாம்* எனுமூரில்

பனியகுமது மரைக்காயர் : *சீறப்புராணம்* : 16 : 2 (460).

**சுதுஅம்** cutuam, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

கருணை *சுதுஅம்*

புதுகுஷ்ஷாம் : 37 : 3.

**சுந்தபு** cuntapu இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

நெக்குபன் ரெுடர் நல்வினை நிதியினருமறு
மிக்குவந்த *சுந்தபு* வரவுண்மையின் வேந்த
ரக்கணத் தெதிர் பொருந்தினர்

புதுகுஷ்ஷாம் : 33 : 77.

**சுந்துசு** cuntucu பெ. <sundus. سندس >

தங்கம் அல்லது வெள்ளி இழையோடப்பட்ட ஒரு வகைப் பட்டு. விண்ணுலக ஆடையைக் குறிக்கின்றது இச்சொல்.

மொய்த்தொளிர் *சுந்துசி* ஞன்மணி வாய்துடை முதிர்காம்போடு

புதுகுஷ்ஷாம் : 13 : 39.

**சுப்புரு** cuppuṟa பெ. பார். சுப்ரு.

அமர்வதற்காகப் பாய் முதலியவற்றின் மீது விரிக்கப்படும் வெள்ளைப் புடவை போன்றவை.

இன்னுரை *சுப்புரு* விரித்தி னிதுறு
நன்னய வகையெலா நனியியற் றுவான்

நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 7 : 57.

**சுப்ரு** cupṟā பெ. < sufrat سفرة >

அமர்வதற்காகப் பாய் முதலியவற்றின் மீது விரிக்கப்படும் வெள்ளைப் புடவை முதலியவை.

விரித்தனன் *சுப்ருத்* தன்னை மேன்மையோ டிருவருக்குங்

பத்றுத்தீன் புலவர் : முகியிததீன் புராணம் : 34 : 23.

**சுபகு** cupaku, பெ. பார். சுபுகு.

அரிய பேர்களு மாதியை நற்*சுபகு*
உரிமையாக வணங்கி

இரவுசுல்கூல் படைப்போா : 38 : 15.

**சுபுகானல்லாஹ்** cupukāṉallah, பார். தஸ்பீஹ்.

உடன்*சுபு கானல்லாஹ்*என் ரெுலியுல்லா வோதி வாழ்த்தி

நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 27 : 65.

**சுபுகானியத்து** cupukāṉiyattu, பெ. மிகுபுகழ் நிலை (இறைநிலை).

*பறுதானியத்திலோ சுபு கானி யத்தென.*

மஸ்தான் சாகிபு பாடல்: வஸ்துதயத்திருனந்தம்.

**சுபுகு** cupuku பெ. < subh صبح >

சூரியன் உதிக்கும் முன் அதிகாலையில் நிறைவேற்றப்படவேண்டிய தொழுகை.

*சுபுகெனுந் தொழுகையைத் தொழுது*

வண்ணக்களஞ்சியப் புலவர்: குத்புநாயகம்: 18 : 22.

**சுபுறு** cupuṟā பெ. பார். சுப்ரு.

*பந்தியின் சுபுறு விரித்துணு ஒழுங்கின்*
*பாத்திரங் களினனி பரப்பி*

நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) 29 : 9.

**சுபுஹானி மஹ்பூபு சுல்த்தானி** cupuhāṉi mahpūpu culttāṉi, தொ. < subhani mahbub sultani سبحانی محبوب سلطانی >

மேலான அன்பர் அரசர்; முகியித்தீன் ஆண்டகை அவர்களைக் குறிக்கின்றது.

*தொட்டே கலைசேர்க்கும் - சுபு*
*ஹானி மஹ்பூபு சுல்த்தானி*

பீர்முகம்மதுசாகிபு: ஞானக்குறம்: கைக்குறிகூறல்.

**சுபையிறு**[1] cupaiyiṟu, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவர்.

*அலிதல்கா சுபையிறு உம்மாறு அவர்மறுதா*
*மிகுதாது என்று இவர்கள் ஆறு*

பனியகுமது மரைக்காயர்: சீறுப்புராணம்: 23 : 15 (890).

**சுபையிறு**[3] cupaiyiṟu இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*உரத்தால் தாக்கும் சுபையி றெனும்*
*உரவர் எதிர்த்து மறித்துடன்றார்*

பனியகுமது மரைக்காயர்: சீறுப்புராணம்: 12 : 90 (334).

**சுபைறு** cupaiṟu, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவரின் பெயர்.

*அமைதரு சுபைறு...*

புதுகுஷ்ஷாம்: 36 : 41.

**சுபைனு** cupaiṉā, இ. பெ. ஏவலாளருள் ஒருவர்.

*உவணையும் உலகும் போற்றும்*
*உடையவன் தூதர் ஏவல்*
*தவணை என்றின்றிச் செய்யும்*
*தாசரில் சுபைனு என்போர்*

பனியகுமது மரைக்காயர்: சீறுப்புராணம்: 21 : 139 (872).

**சும்ஆ** cumā, பார். ஜும்ஆ.
ஓதின் முன்னுண் டதனி லோங்கு சகுபானன்
மாத மிருவேழ் திகதி வண்மை பெறுசும்ஆ
வேத மறுநா ளதனி லேரணி சல்காமின்
மோது மமரின் சரிதைப் பாடன் முற்றுமாமீன்
இரவுசுல்கூல் படைப்போர் : 45 : 62.

**சுயூது** cuyūtu, பார். சுஜூது.
அழுத்துந் தொழுகை யதாவாக
நபியுமலியுஞ் *சுயூது* தனில்
விழுந்து தறையி னெற்றி பட
மேலோன் தன்னைப் பரவியபின்
பனியகுமது மரைககாயர் : சீருப்புராணம் : 12 : 19 (363).

**சுரியத்** curiyat, பெ. < surrīya سرية >
அபிமானப் பெண்டிர்.
கன்னல் மொழியார் பிராட்டி கொல்லோ
காதல் *சுரியத்* இனம் கொல்லோ
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 12 : 135 (379).

**சுல்தான்** cultāṉ, பெ. < sultān سلطان > அரசன்.
தொகுத்திடற் கரிய *சுல்தான்* றனமெனக் கென்றுஞ் சொன்னார்
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 21 : 57.

**சுல்தானுல் அவுலியா** cultāṉul avuliyā, பெ.
இறை நேசற்கு அரசர்.
அணிகளின் உயர் *சுல்தானுல்லவுலியா* முகியித்தீனே
வண்ணக்களஞ்சியப புலவர் : குத்பு நாயகம் : 6 : 2.

**சுல்தானுல் லாரிபீன்** cultāṉul lāripiṉ, பெ.
ஞானிகளுக்கு அரசர்.
தாயையுந் தமது பாலில் வருகெனச் சாற்றிக் கூட்டி
பாயுமன்புயர் *சுல்தானுல் லாரிபீன்* ஆங்கு நின்று
வண்ணக் களஞ்சியப் புலவர் : குத்புநாயகம் : 6 : 21.

**சுல்பி** culpi, பெ.
*சுல்பி*யென் றுரைத்து நின்ற
தொடுகுறி ரண்டு தன்னில்
பீர்முகம்மது சாகிபு : ஞானமுச்சுடர்பபதிகங்கள்: ஓர்மைப்பதிகம் : 10.

**சுல்லாம்** cullām, இட. பெ. ஒரு மலையின் பெயர்.
*சுல்லாம்* எனும் எகுதிப் பொருப்பு
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 12 : 105 (349).

**சுலந்தா** culantā, இ. பெ. உம்மான் நாட்டு அரசன்.
வரம்தரும் இராஜ வாழ்க்கை மாண்புறு *சுலந்தா* வுக்கும்
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 8 : 2 (195).

**சுலாலத்** culālat, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.
*சுலாலத்* தானும் கொளவளைந்தார்
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 12 : 34 (278)

**சுலுத்தானி** culuttāṉi, பெ. ஒரு திரை.
வலுத் தாரு கின்ற வவ்வவண் ணத்திரை யினின்று
*சுலுத்தானி* யெய்தினர் சூழ்ந்து
மிகுருசு மாலை : 562.

**சுலைம்** culaim, இ. பெ. ஒரு கோத்திரத்தின் பெயர்.
*சுலைமெ*னும் கிளையி ளுமி றுதவிய தோன்றல்
புதுகுஷ்ஷாம் : 28 : 5.

**சுலைமான்நபி**[1] culaimāṉnabi, இ. பெ. ஒரு நபியின் பெயர்.
*உயிர்பல போற்ற வாய்ந்த*
*உயர்நபி சுலைமான் செய்த*
புதுகுஷ்ஷாம் : 30 : 120.

**சுலைமான்**[2] culaimāṉ, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.
கதிரழற்று நெடுந்துதிவேல் *சுலைமானற்* றந்தையரே...
புதுகுஷ்ஷாம் : 28 : 65.

**சுலையுமான்**[3] culaiyumāṉ, இ. பெ.
அரசனுக்கு அரசன் என்று வர்ணிக்கப்பட்ட ஒரு நபியின் பெயர்.
துதி நபி *சுலையுமான்* ராஜநாயகத்தை
இராஜநாயகம் : 1 : 26.

**சுவாகு** cuvāku, இ. பெ. ஒரு சிலையின் பெயர்.
வணங்கி ஏத்திய *சுவாகெ*னும் புத்தினை மாய்க்க
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 29 : 4 (1262).

**சுவால்** cuvāl, பெ. <su'āl سؤال> வினா.
திருந்தவே *சுவால்*செய் தீரோ செப்பும்...
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 49 : 23.

**சுவைத்** cuvait, இ. பெ. யாபித் என்பவரின் புதல்வன்.
குணதிசை யாளுங் கோமான் இயாபிது குமரன் வன்மை
நிணதிசை *சுவைதின்* றேன்ற னெடுமுடி சவுக றென்போன்
திருமணிமாலை : 4 : 60.

**சுருக்கத்** curākkat, இ. பெ. நபிகள் நாயகம் (சல்) அவர்கள் மக்காவை விட்டு மதீனுவுக்குச் சென்றபொழுது அவர்களைப் பிடிப் பவருக்குக் குறைசி மக்கள் வழங்க இருந்த பரிசிலைப் பெறுவதற் காக அவர்களைப் பின்தொடர்ந்த குறைஷித் தலைவர்களுள் ஒருவர்.

புருக்கத் தும்பருந் துயவும்பா சடைத்தருப் பொரிய
மருக்க திர்க்கதி ரவன்சுடு நெடுஞ்சுர வழியி
னுருக்க டும்விசைக் குசைப்பரி கடிதிற்கொண் டோடிச்
சுருக்கத் தென்பவன் களிப்பொடு மடுத்தனன் ருெடர்ந்தான்

சீருப்புராணம் : 50 : 26.

**சுருகு** curāku, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

ஞாய விந்தையன் என்றனர் சுருகருள் நாதர்

புதுகுஷ்ஷாம் : 29 : 20.

**சுறுமா** curumā, பெ. < surmā سرمه >

கண்ணில் பூசும் ஒரு வகை மை.

கடைக்கணி தரச்சுறுமாக்க ணீவினுர்

இரவுசுல்கூல் படைப்போர் : 17 : 50.

**சுறைகு** curaiku, இ. பெ.

எகிப்திய மன்னன் முகவ்விக்கீசின் தந்தை.

அரண்துடைத்தவன் சுறைகுஎனும் பெயரினன்

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 5 : 3 (160).

**சுன்துபு** cuntupu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

...............மூரி மதமாச் சுன்துபுவும்

புதுகுஷ்ஷாம் : 32 : 19.

**சுன்னத்¹** cunnat, பெ. < sunna سنة >

மரபு. நிறைவேற்றிஞல் நற் பயனுண்டு எனப்படும் கருமங்களை யும் இச்சொல் குறிக்கும்.

............சுன்னத்
தோதிய தெவையும் பேதகப் படுத்தார்
உண்மையால் வென்றிகள் புனைந்தார்

புதுகுஷ்ஷாம் : 39 : 13.

**சுன்னத்²** cunnat, பெ. பார். சுன்னத்¹.

ஆண்பிள்ளைகளுக்கான ஒருவகை மதச் சடங்கு; சில இடங்களில் இது மார்க்கக் கலியாணம் என அழைக்கப்படுகிறது.

மருவு சுன்னத்துஞ் செய்யலாய்

சீருப்புராணம் : 5 : 88.

**சுன்னத்து ஜமாஅத்** cuṉṉattujamāat, தொ. <sunnat jamā'at سنة جماعة > நபிகள் நாயகம் முகம்மது (சல்) அவர்களின் வழி முறையைப் பின்பற்றுபவர்கள்.

நன்னெறி முறைவ ழாசுன் *னத்துஜமாஅத்* தாகி
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 35 : 85.

**சுனனுல் முசுத்தபா** cuṉaṉul mucuttapā, பெ. ஒரு நூலின் பெயர்.

..............மெயப்
பவனின் லதாயி புல்மினன் *சுனனுல் முசுத்தபா*...
நவமணிமாலை (முகியத்தீன் புராணம்) : 1 : 35.

**சுஜூது** cujūtu, பெ. < sujūd سجود >
தொழுகையில் ஒரு நிலை; முழங்காலில் அமர்ந்து நெற்றி நிலத்தைத் தொட இருக்கும் ஒரு தொழுகை நிலை.

அடலுறு மக்கட் கெல்லா மதிபதி யாதத் துக்கே
இடமுறும் அமரர் யாரும் *சுஜூது* செய் திடுக வென்றான்
சீறுப்புராணம் : 4 : 14.

**சூசாம்** cūcām, பெ. ஓர் இடத்தின் பெயர்.

அருமையும் பொறையு முள்ள வப்துல்கா திறுவே நீரு
மருவழாச் *சூசா* மென்னும் வாயிலின் வாரு மென்று
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 14 : 22.

**சூபி** cūpi, பெ. < sūfī صوفي > மெய்ஞ்ஞானி.

தேறு நாளின் முன்சூ *பியாக்* கலின்வழி தெருண்டு
சாதுலி நாயகம் : 15 : 12.

**சூமர்** cūmar, பெ. பன். பார். சூமன்.

சொல்லொ ணுப் பெரும் பாதகம் விளைத்திடுஞ் *சூமர்*
சீறுப்புராணம் : 41 : 47.

**சூமன்** cūmaṉ, பெ. < 'sūm شوم >
(அறபி) sūm+an (தமிழ்)
துர்அதிருஷ்டசாலி. இப்லீசைக் குறிக்க இச்சொல் உபயோகப் படுத்தப்பட்டுள்ளது. இச்சொல் அறபியும், தமிழும் கலந்த வடிவ மாகும். அறபுச்சொல், ஆண்பால் 'அன்' விகுதி பெற்றுள்ளது.

கள்ளமுங் கொலையும் பொய்யு நிந்தையுங் கள்ளு நீங்கா
துள்ளகத் திருத்தி வாழு முயிர்த்துணை யாகக் கொண்டோன்
வள்ளனந் நபிதந் நாமம் வழுத்திய மாந்தர்க் கெல்லா
மெள்ளள விரக்க மில்லா திடும்புகள் விளைத்த *சூமன்*
சீறுப்புராணம் : 69 : 2.

**சூல்கு** cūlku, பெ. பார். சுல்கு.

கதிதரு முஷாகி தத்துக் கடுத்திடும் **சூல்கு** என்னும்
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 56 : 7.

**சூறத்** cūṟat, பெ. < sūrāt سورة > குர்ஆனின் அத்தியாயம்.

நிலஞ்சூழ் பரவைப் புறப்புவியு
மிறைஞ்ச நெடியோன் றிருவருளாற்
சொலும் **சூறத்தில்** முஸம்மிலெனுஞ்
சுருதி வசன மிறங்கினவே
சீறப்புராணம் : 26 : 36.

**சூறத்துல் எமின** cūṟattul emiṉā, இ. பெ.
எமன் நாட்டு அழகி.

சந்ததி நாமம் பல்கீசெனத் தந்தை தாயாரிட்டார்
சுந்தரநோக்கி மேலோர் **சூறத்துல் எமின** வென்றே
புந்தியாய் தொடுபே ரிட்டா ரதன் பொருளெமன்றே யத்துக்
கிந்தவான் மயிலோர் திவ்விய மலரென விசைப்பதாமே
இராஜநாயகம : 29 : 62.

**சூறத்துல் பத்கு** cūṟattul patku, பெ. <sūratul fatah سورة الفتح >

அல்குர்ஆனில் உள்ள நாற்பத்தெட்டாவது அத்தியாயத்தின் பெயர்.
'பத்ஹ்' என்றல் வெற்றி என்பதாகும்.

வண்மையம் கரத்தின் முகம்மதுநையினர் வாகினின்
இயல்புணர் அறிவில்
திண்மையின் முதியோர் **சூறத்துல் பத்கு** சிறப்பி
னேடு ஓதிக்கொண்டு வர
புதுகுஷ்ஷாம் : 61 : 27.

**சூறு** cūṟu, பெ. <sūr صور >

ஊது குழல்; இறுதி நாளன்று ஊதப்படுவது.

ஈறினில் இரும்பு முதல்ஊது எவையும்
இமைக்குமுன் சூர்ப்பெனப் பறக்கச்
**சூறு**எடுத்து ஊதும் அரசுடன் எழுப
தாயிரம் சுரர்களும் மொய்ப்ப
பனியகுமது மரைக்காயர் : சீறுபபுராணம : 39 : 179 (1816).

**செபல்** cepal இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

நலனு றத்திருத் திடுமெனச் *செபலவர்* நல்கும்
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 29 : 11 (1269).

**செபுறயீல்** cepuṟayil, பார். ஜிபுறயீல்.

செல்வமுட னபியுமவர் சேனைகளுஞ்
சூழ்ந்திருப்பச் *செபுற யீலும்*
வல்விரைவி னுடனெழுந்து வந்து சலாஞ்
சொலி வணங்கி
சீறுப்புராணம் : 83 : 53.

**செய்ககுமது** ceykakumatu, இ. பெ.
ஜீலானில் வாழ்ந்த ஒரு முதியவர்.
திருநக ரெனுஞ்ஜை லானி வாழறிவு
தெளிவுறும் *செய்ககு மதுவாம்*
ஒருநல முதியோர்...
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 5 : 70.

**செய்கபுல்காசிம்** ceykapul kācim, இ. பெ.
ஒரு முஸ்லிம் பெரியார்.
கனதியின் *செய்கபுல் காசிம்*என்பவர்
நவமணிமாலை (முகியிதத்தீன புராணம்) : 7 : 52.

**செய்கப்துல்லாகில் கசனி** ceykaptullākil kacaṉi, இ. பெ.
ஒரு முஸ்லிம் பெரியாரின் பெயர்.
நேர்முகம் மதுமக னெறியபு லப்பா
சேர்மக *னப்துல்லா கில்கசனி*யின்
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்): 18 : 2.

**செய்கபுதுல்லாகில் யாபியி** ceykaputūllākil yāpiyi, இ. பெ. < shaik abdullāhil yafiyi
ஒரு முஸ்லிம் பெரியார்.
சோபிதஇமாஞ்சு குண*செய் கபுதுல் லாகில்*
*யாபியி* யவர் செய் யிறுசாதல் யாபி யிக்கித்
தாபினி னுரைத்தனர்
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 7 : 2.

**செய்கலி** ceykali, இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியாரின் பெயர்.
மத்த கக்கரி யொத்தவ ரத்திறல்
உத்த ம*ச்செய்க லிக்*கொலி நாயகர்
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 27 : 1.

**செய்கு** ceyku, பெ. < šaiḫ شيخ > ஆன்மிக வழிகாட்டி.
மறையுல மாக்கள் *செய்கு*கள் வகுப்புற
தீன் விளக்கம் : 15 : 13.

**செய்கு அதிய்யு** ceyku atiyyu, இ. பெ.
ஒரு முஸ்லிம் பெரியாரின் பெயர்.
ஆதி நாயகன் வரமுறு *செய்கு அதிய்யு*
மோதி னர்மது ரசத்தணை...
நவமணிமாலை (முகியித்தீன புராணம்) : 22 : 2.

**செய்கு அலமத்துல்லா** ceyku alamatullā,
ஒரு முஸ்லிம் பெரியாரின் பெயர்.
கருதக *செய்கு அலமத்துல்லா*
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 29 : 1.

**செய்கு கம்மாது** ceyku kammātu, பெ. முகியித்தீன் ஆண்டவர் அவர்களின் ஆசிரியருள் ஒருவர்.

ஒன்றியா ரீக்கத்தின் ஓங்கு நூல்பல
நன்றியின் *செய்குகம் மாதி* னண்பினுல்

சேகுனுப்புலவர் : குத்புநாயகம் : 11 : 18.

**செய்கு காலி இமாது அலவிய்யி** ceyku kāli imātu alaviyyi, பெ. ஒரு முஸ்லிம் பெரியாரின் பெயர்.

கருதக *செய்கு காலி இமாது அலவிய்யி* தருதவ...

நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 29 : 1.

**செய்கு சஃதுல்லா** ceyku caktullā, இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியாரின் பெயர்.

அவருமுன் *செய்கு சஃதுல்லா* விடத்துள்
ளகத்துணர் வொடுமிசு லாமாய்

நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 29 : 19.

**செய்கு நிலாமிபுன் ஜாகு சைகு அலவி** ceyku nilāmipun jāku caiku alavi, ஒரு முஸ்லிம் பெரியாரின் பெயர்.

தருதவ *செய்கு நிலாமிபுன் ஜாகு*
*சைகு அலவியும்* சொலல் கௌதால்

நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 29 : 1.

**செய்கு பக்கா** ceyku pakkā, இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியார்.

அன்ன காலையின் *செய்குபக் காமனை* யதம்போய்

நவமணிமாலை (முகியித்தீன் புராணம) : 12 : 14.

**செய்கு மகுறூப்** ceyku mukurūp, இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியாரின் பெயர்.

மாவினம் பெறு *செய்குமகுறூ பீரபு*
நாவினம் நம்பிக்கையினுளும் போற்றுவாம்

ஆரிபுநாயகம் : 1 : 18.

**செய்கு முஅம்மறு** ceyku muammaru, இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியாரின் பெயர்.

மாநல னுறுஞ்*செய்கு முஅம்மறு* வகுத்தார்

நவமணிமாலை (முகியித்தீன புராணம்) : 23 : 7.

**செய்கு முகம்மதாமிபுனு வசீஹில் ஹக்கி யொத்தீன்** ceyku mukammatāmipunu vacīhil hakki yottīn, இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியாரின் பெயர்.

ஒருதல *செய்கு முகம்மதாமிபுனு*
*வசீஹில் ஹக்கி யொத்தீன்*

நவமணிமாலை (முகியித்தீன் புராணம) 29 : 1.

**செய்குல் லிசுலாம்** ceykul liculām, பெ. < śaih al-islam شيخ الاسلام > இஸ்லாமிய மார்க்க அதிபர்.

*இன்ன தன்மையி னியலறி புணர்செய்குல் லிசுலாம்*
சாதுலிநாயகம் : 15 : 14.

**செய்கு றகுமகுல்லா** ceyku ṟakumakullā, இ. பெ.
ஒரு முஸ்லிம் பெரியார்.

*மறுத்து நீசெய்கு றகுமகுல் லாவைக் காண்குவையே*
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்): 12 : 22.

**செய்கு ஜக்கா** ceyku jakkā, இ. பெ.
ஒரு முஸ்லிம் பெரியார்.

*ஒருவர நவசெய்கு ஜக்கா வாகு மொலியெனு*
*முதியவர் உரைத்தார்*
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) 7 : 7.

**செய்யது** ceyyatu, இ. பெ. < zayd زيد >
ஒரு நபித்தோழரின் பெயர்.

*மரகதக் கரிஉடை வள்ளலாம் செய்யதும்*
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 17 : 13 (477).

**செய்யித்** ceyyit, பெ. < sayyid سيد > தலைவர்.

*தெரியவுளத்தின் பொருத்தங்கொல் லென்றூர்*
*செய்யித் இறசூலே*
புதுகுஷ்ஷாம் : 9 : 16.

**செய்யிது அப்துல் காதிறு மீறான் சுல்தான் ஷாகுல் கமீது** ceyyitu aptul kātiṟu mīṟāṉ cultāṉ ṣākul kamītu, இ. பெ.
ஒரு முஸ்லிம் மெய்ஞானியின் பெயர். இவர் நாகூரில் அடங்கி யுள்ளார்.

*...............குத்புமாரினனி சிறந்தார்*
*சேருன் குதிக்குந் தடநாகூர் செய்யிதப்துல் காதிறு*
*மீறுன் சுல்தான் ஷாகுல் கமீது பெருமான் பதம் பணிவாம்*
ஆரிபு நாயகம் : 1 : 23.

**செய்யிது நூறுத்தீன்** ceyyitu nūṟuttiṉ, இ. பெ.
ஒரு முஸ்லிம் பெரியார்.

*திருவினுக்கொரு செய்யிது நூறுத்தீன்*
*குருவினுக் குளங் கொண்டது தொண்டரோ*
ஆரிபுநாயகம் : 1 : 29.

**செய்யிது முகம்மது யூசுபு சாகிபு** ceyyitu mukammatu yūcupu cākipu, இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியாரின் பெயர்; நாகூர் ஆண்டகையின் மகனார்.

வேசுபு புரந்த *செய்யிது முகம்மது*
*யூசுபு சாகிபை* யுளங்கொண் டேத்துவாம்
ஆரிபுநாயகம் : 1 : 25.

**செய்யிதுல் அம்பியா** ceyyitul ambiyā, பெ. பார். செய்யித்; அன்பியா. நபிமார்களின் தலைவர்.

மம்மரை மனத்து ளோரை வருத்திய தாலே யன்றோ
செம்மலாங் கபீபு கேட்பச் *செய்யிதுல் அம்பியா*வு
மம்மலை யிடத்தி லுன்னை யழைத்திரு பிளப்புச் செய்த
திம்மையின் மறந்திட் டாயோ வேந்திளஞ் சசியே யென்றார்
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 28 : 90.

**செயினபு** ceyiṉapu, இ. பெ. < zainab زينب >
முகம்மது நபி (சல்) அவர்களின் மனைவியருள் ஒருவர்.

அன்பெனும் விதத்திற் றோன்றி யறமெனுஞ் சடைகள் விட்டுத்
தன்புகழ் தழைத்துக் கற்பாந் தனிமலர் செறிந்து நாளு
மின்பமாங் காய்கள் காய்த்திட் டிறையருள் பழுத்த கொம்பே
தென்பயில் சகுசு பெற்ற *செயினபு* நாச்சி யாரே
சீறாப்புராணம் : 85 : 4.

**செயினம்பு** ceyiṉampu, இ. பெ. ஓர் எகுதிப் பெண். சுவலாம் என்பவனின் மனைவி. நபிகள் நாயகம் (சல்) அவர்களுக்கு நஞ்சு கலந்த உணவைப் பரிமாற முயன்றவள். முயற்சி பலனளிக்க வில்லை.

பொருந்தும் மான் அனகண்
வெய்ய *செயினம்பு* எனும் மடவாள்
பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம : 12 : 105 (349).

**செயினுலாபுதீன்** ceyiṉulāputiṉ, இ. பெ.
ஒரு முஸ்லிம் பெரியார்.

அலகில்பதி னுலு ஞான வாரி
நுகருமிபு ருகி மான மேக
மருள்*செயினு லாபி தீன* னோர்நல் கியஆலிம்
காசிம் திருப்புகழ் : 141.

**சென்னத்** ceṉṉat, பெ. < jannat جنة > சொர்க்கம்.

*சென்னத்* தென்பதைத் தருதேவரீர்
வண்ணக்களஞ்சியப் புலவர் : குத்பு நாயகம் : 18 : 15.

**சென்னத்துல் மவுவா** cennattul mavuvā, பெ. <jannat mawuwā
جنة المأوى > சொர்க்கத்தின் பெயர்.

காவினிற் கதிபெருஞ் *சென்னத்துல் மவு*
*வா* வினில் சிறப்பொடு மல்குவீரரோ
புதுகுஷ்ஷாம் : 10 : 50.

**சேர்** cēr, பெ. 'இ' உச்சரிப்பைப் பெறுவதற்காக அறபு எழுத்துக்களின் கீழ் இடப்படும் குறியீடு, இது அறபு மொழியில் 'கஸ்றத்' என வழங்கப்படும்.

வாவினுக் கிருந்த *சேரை* மாற்றிய தெவர்கொ லென்ன
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 16 : 18.

**சைய்கலி யிபுனுகீத்தி** caiykali yipuṉukītti,
முகியித்தீன் ஆண்டவர் காலத்தில் வாழ்ந்த ஓர் அறிஞர்.

வரிசைக் கிளருஞ் *சைய்கலி யிபுனுகீத்தி*யும்
சேகுனுப்புலவர் : குத்புநாயகம் : 21 : 10.

**சைகு** caiku, பெ. < šaiḫ شيخ >
ஆன்மிக வழிகாட்டி (தலைவர்).

ஓதிய *சைகு* தங்கள் உயர்நிலை நல்கி னூரால்
சேகுனுப்புலவர் : குத்புநாயகம் : 18 : 6.

**சைகு அதிய்யி** caiku atiyyi, பெ. ஓர் அறிஞர்.

சிரசினைத் தடியும் தெளிவெனும் படையின்
திறத்தினர் *சைகு அதிய்*யென்று
சேகுனுப்புலவர் : குத்புநாயகம் : 13 : 10.

**சைய்கு பகா** caiyku pakā, இ. பெ.
முகியித்தீன் ஆண்டவர் காலத்தில் வாழ்ந்த ஓர் அறிஞர்.

வளரு மேன்மையின் *சைய்குப காவொ*டு வரிசை
சேகுனுப்புலவர் : குத்புநாயகம் : 21 : 10.

**சைய்கு மாஜிது** caiyku mājitu, முகியித்தீன் ஆண்டவர் காலத்தில் வாழ்ந்த ஓர் அறிஞர்.

கறுதிய்யாங் கிளையின் ஓங்கிய *சைய்கு மாஜிது*
சேகுனுப்புலவர் : குத்புநாயகம் : 21 : 10.

**சைய்கு யூசுப்** caiyku yūcup முகியித்தீன் ஆண்டவர் காலத்தில் வாழ்ந்த ஓர் அறிஞர்.

நேரறிஞர் கம்தானி நகரினுள ரந்நாளில் நிகழு மூரில்
பாரறியும் தொழின்முறை யானுறுஞ்*சைய்கு யூசு*பெனும்
பண்புள்ளாரை
சேகுனுப்புலவர் : குத்புநாயகம் : 24 : 50.

**சைகுறிலா** caikuṟilā, இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியார்.
*சதுவிகுத் தஞ்சொல் குருவெனும் சைகுறி லாவே*
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 12 : 23.

**சைத்** cait, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.
*நவமணி சைதின் தோன்றல்*
*நவின்றனர் குறிப்பினன்றே*
புதுகுஷ்ஷாம் : 33 : 117.

**சைத்தூன்** caittūṉ, இட. பெ. ஒரு நகரின் பெயர்.
*நவமுறு சைத்தூன் என்றோர் நகர்*
இராஜநாயகம் : 35 : 6.

**சைது** caitu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.
*சைது அருளும் சகீதும்*
புதுகுஷ்ஷாம் : 22 : 41.

**சைத்தான்** cayttāṉ, பெ. < 'saitān شيطان > சாத்தான்.
*எஞ்சிடத்தி னழற்று விப்பான் சைத்தான்றன்*
*னியலுணரா திழிவு கொண்டாய்*
புதுகுஷ்ஷாம் : 36 : 79.

**சைபுல்கலா** caipulkalā, பெ. < saiful kalā. سيف القضاء > வாள்.
*அறுத்தோட்டும் வாளாம் சைபுல் கலாநா னென்று*
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 6 : 84.

**சைமா** caimā, இ. பெ. அலிமா என்பவரின் புதல்வி.
*...............கருணை*
*குடியுறும் அலிமா பெறும்மகள் சைமா*
*எனும்திருப் பேர் கொளும் மாதும்*
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 28 : 47 (1227).

**சைய்கு உதுமான்** caiyku utumāṉ, பெ. ஓர் அறிஞர்.
*நன்னகர் சரீபின் றன்னி ஞதரா முறுறத் என்போர்*
*இன்னருள் கனிந்த தோன்றல் எழில்சைய்கு உதுமா னன்றே*
சேகுனுப்புலவர் : குத்பு நாயகம் : 28 : 2.

**சையது** caiyatu, இ. பெ. முகம்மது நபி (சல்) அவர்களின் தோழர்களில் ஒருவர்.
*...............மலர்ச்*
*சினைத்தரு அனையகைச் சையதை அரசுஎன*
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 17 : 1 (465).

**சைலூன்** cailūṉ, இ. பெ. ஒரு சிலையின் பெயர்.
*திருந்தவச் சைலூன் என்னுஞ் சிலை*
திருமணிமாலை : 8 : 31.

**தஉபா** taupā, பெ. பார். தௌபா.

இறைபாலின்
அழுதுபல மறவிரவு *தஉபா* வழங்கிலனே
காசிம் திருப்புகழ்: 98.

**தக்கீபு** takkīpu, இ. பெ. ஓர் ஆணின் பெயர். பனீகிலால் கோத்திரத்தைச் சேர்ந்தவர்.

தடம்புயத் *தக்கீபு*
பனியகுமது மரைக்காயர்: சீறப்புராணம்: 27 : 2 (1084).

**தக்குப்பீறு** takkuppīṟu, பெ. பார். தக்பீர்.

கையில் லாதவர் கட்டு *தக்குபீறும்*
ஞானக்குறம்: நாட்டுவளங்கூறுதல்: 13.

**தக்குபீர்** takkupīr, பெ. < takbir تكبير >

'அல்லாகு அக்பர்' என்ற சொற்றொடரை உச்சரித்தல்.

..............பெரியோன் ஆதி தனைப் புகழ்ந்து
மீறுங் களிப்பா நந்தமன
விழைவாற் *தக்குபீர்* உரைத்தார்
சீறப்புராணம்: 28 : 91.

**தக்பீறு** takpīṟu, பெ. பார். தக்குபீர்.

விறல்பெறு *தக்பீரே*டு
ஆரிபுநாயகம்: 6 : 28.

**தக்வா** takvā, < taqwā تقوى > அடைக்கலம்.

துவ்வித *தக்வா* மிக்க
வுறகொடு சுகுது நோன்பு
வண்ணக் களஞ்சியப் புலவர்: குத்பு நாயகம்: 12 : 27.

**தக்குவா** takkuvā, பெ. < taqwa تقوى >

புனிதத் தன்மை (சில வணக்கத்திலிருந்து தவிர்த்தல்).

*தக்குவாவு*க்குத் தவஞ்செயு மூமினோர் தமக்கும்
ஞானமணிமாலை: 79.

**தகச்சுதி** takaccuti, பார். தகச்சுது.

வான்குபே ரனுவந் தடிப்பணிந் தேத்து முகம்மது
நபிகிசு றத்தார்
நான்கு நூற்றெழு பத்தொன் றினிற்புவி யினவன்
பெறுகுர மதிறம்ளான்
தான்கு லாவுற வந்துதித் தமுற்றேதி
*தகச்சுதி* வருத்து வெள்ளியிராத்
தீன்குலா வுறவே செய்தருண் முகியத்
தீனெலி நாயகர் பிறந்தார்
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்): 5 : 59.

**தகச்சுது** takaccutu, பெ. < tahajjud تهجد >

இரவு உறங்கியபின் விழித்தெழுந்து நள்ளிரவுக்குப்பின்னர் நிறைவேற்றப்படும் விருப்பத்திற்குரிய ஒரு தொழுகை.

..............மெய்வீறு பெற்றுப்பின்
*தகச்சுதிற்* கடைந்தனர் தவத்தின் வள்ளலே
திருக்காரணப்புராணம் : 42 : 76.

**தகிய்யத்**[1] takiyyat, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

மருமலி மரப மாலை *தகியத்தின்* வசத்தில் ஈந்தார்
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 16 : 5 (462).

**தகியத்து**[2] takiyattu, இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியார்.

இறக்கிலாத் *தகியத்து* என்னும்
ஏந்தல்தன் கரத்தில் ஈய்ந்தார்
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 2 : 5 (18).

**தகிய்யத்**[3] takiyyat, இ. பெ. ஒரு ஆணின் பெயர்.

போரெழில் கலீபா தோன்றல் புனிதவான் *தகிய்யத்* தண்ணல்
வாரெழில் கரத்தினல்கி முகம்மத ரனுப்பினுரால்
புதுகுஷஷாம் : 5 : 4.

**தகுமீது** takumītu, பெ. <tahmīd تحميد >

எல்லாப் புகழும் அல்லாவுக்கே என்று பொருள்படும் 'அல்ஹம்து லில்லாஹ்' என்னும் அறபுச் சொற்றொடரை உச்சரித்தல்.

வருந் *தகுமீதொடு* மல்கு மாமறை
புதுகுஷ்ஷாம் : 46 : 178.

**தகுலபா** takulapā, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

மெய்ப்புள கெறிக்கும் தீந்தேன் விழைகனி யெமனின் உண்மை
தைப்புள காரீதீன்ற *தகுலபா* தோன்றல் கைசு
புதுகுஷ்ஷாம : 29 : 45.

**தகுலீல்** takulīl, பெ. < tahlīl تهليل >

அல்லாவன்றி வேறு தெய்வமில்லை என்று பொருள்படும் 'லாயிலாக இல்லல்லாஹ்' என்னும் அறபுச் சொற்றொடரை உச்சரித்தல்.

துளக்கிய திக்கெலாம் வாடை யார்த்தன வண்தகு *லீலரோ*
புதுகுஷ்ஷாம் : 42 : 118.

**தகுவா** takuvā, < taqwā تقوى > அல்லாஹ்வுக்கு அஞ்சுதல்.

பெருகும் புகழ்பெற் றதவத் துறையின்
மருவுந் *தகுவா* வெனுமன் னுநிலை
ஆரிபுநாயகம் : 11 : 10.

**தகுவில்** takuvil, இட. பெ. ஓர் இடம்.
விரித்த பைம் பொன்னும் யிமனியும் விளையும்
வெற்புடைத் *தகுவில்* வந்தார்
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 28 : 11 (1191).

**தசா** tacā, பெ. பார். குபைல். ஒரு சிலையின் பெயர்.
தஞ்ச மாம்குபல் நாயிலைத் *தசா* எனத் தரும்பேர்
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 29 : 7 (1265).

**தசுபீகு**[1] tacupiku, பெ. < tasbih تسبيح > அல்லாஹ்வைப் புகழுதல். தூய்மையான அல்லாஹ்வே என்று பொருள்படும் 'சுப்ஹானல்லா' என்ற அறபுச் சொற்றொடரை உச்சரித்தல்.
அருமறை முழக்க மணியணியோங்கு மகலிய பயத் *தசுபீகும்*
புதுகுஷ்ஷாம் : 40 : 22.

**தசுபீகு**[2] tacupiku, பெ. < tasbih تسبيح >
இது நூறுமணிகளைக் கொண்டது. அல்லாஹ் என்பதையும் அல்லாஹ்வின் அழகிய திருநாமங்கள் 99-யும் நினைவுகூர்வதற்கும் அல்லது தசுபீகையும், தகுமீதையும், தக்பீரையும் உச்சரிப்பதற்கும் அல்லது இறைபக்தியுடைய எந்த ஒரு சொல்லையும் உச்சரிப்பதற்கும் பயன்படுத்தப்படுவது.
நிறத்தரு மணியின் செய்த நெடுந் *தசபீகு* தன்னை
மறுத்திலா தெடுத்துக் கொண்டார்
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 11 : 41.

**தசுலியா** taculiyā, பெ. பார். தஜல்லியத்.
முந்திய *தசுலியா* முருகும் போதிலே
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 59 : 29.

**தசுவீகு** tacuviku, பெ. பார். தசுபீகு.
தத்துமணிக்கட லொலியிற்ற *சுவீகு*ந்தகுலீலுஞ்
சலவாத் தோடும்
புதுகுஷ்ஷாம் : 4 : 17.

**ததுக்கிறத்துலௌலியா** tatukkiṟatulauliyā, பெ. ஒரு நூலின் பெயர்.
உவமையில் வானின் ஞான
உணர்வுகொள் *ததுக்கிறத்துல்*
*ஔலியா* வென்றும் நூலுண்டாகிடு மகானுகி
கௌது நாயகர் காரணப் புராணம் : 20 : 35.

**தப்ஸீர்** tapsir, பெ. <tafsir تفسير >விரிவுரை. இஃது சிறப்பாக அல்குர்ஆனுக்கு எழுதும் விரிவுரையைக் குறிக்கின்றது.
புரக்கும் வல்லவன் சொல்லிய மறையெனும் புறுகான்
கரக்கு முள்ளுறை யகப்பொருள் புறப்பொருள் கல்லிப்
பரக்கும் பல்வழிக் கருத்தொடு விருத்தியாய்ப் பகைமை
சிரக்குமாறியற் றெண்ணிறந்தான *தப்ஸீறும்*.
ஆரிபுநாயகம் : 8 : 19.

**தபாயிகா** tapāyikā, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.
அடலணி *தபாயிகா* என்பவர்
புதுதுஷ்ஷாம் : 57 : 60.

**தபீறு** tapīṟu மீனாவில் உள்ள ஒரு குன்றின் பெயர்.
துன்னு கின்றமி னாவெனு மிடத்தருந் துதிசேர்
இன்ன னீங்குத *பீறு*எனும் இறும்ப ருகுற்றார்
திருமணிமாலை : 29 : 76.

**தபூக்** tapūk. இட. பெயர். ஓர் இடத்தின் பெயர்.
புகர்அரும் *தபூக்*குஎன் றோதும் தலம்புகுந்து
பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம் : 33 : 41 (1403).

**தமீம்** tamīm, இ. பெ. ஒரு கோத்திரத்தின் பெயர்.
*தமீம்* கிளையில்வந்த ஆசிம் ருபிஆவும்
புதுகுஷ்ஷாம் : 37 : 6.

**தமீன்** tamīṉ, இ. பெ. ஒரு கோத்திரத்தின் பெயர்.
சிந்தை தெளிந்த நேர்த *மீன்*கிளை யாரால்
பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம : 32 : 2 (1336).

**தமூதி** tamūti, பெ. அல்லாவின் சாபத்துக்கு இலக்கானவர்கள். பண்டு அறபுநாட்டின் ஒரு பிரதேசத்தில் வாழ்ந்தோர்.
தக்கவன் முனிவு பெற்ற *தமூதிகள்* குடியாய் முன்னாள்
பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம் : 33 : 40 (1402).

**தமூது** tamūtu பெ. பார். தமூதி.
நந்த வொன்பதுத *மூதிக*டொ டர்ந்த நபி
காசிம திருப்புகழ் : 44.

**தயமும்** tayamum, பெ. < tayammum تيمم >
ஒலுச் செய்வதற்குத் தண்ணீர் இல்லாதபோது பரிசுத்தமான மண்ணைக்கொண்டு முகம், கைகளை துடைத்துக் கொள்ளுதல்.
நெஞ்சா குலம் அறநீரக மில்லாவிட நியமந்
துஞ்சாவகை *தயமுஞ்*செய்து தொழமேலவன் விதி
சீறாப்புராணம் : 80 : 39.

**தரீப்** tarīp, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.
நல்லுணர் *தரீபின்* மக்களுரிமைநாட் டடுமையோனே
புதுகுஷ்ஷாம் : 52 : 65.

**தயிறகு** tayiṟaku, இ. பெ. அஃறுபு என்பவரின் புதல்வர்.
கடல் கிளர்ந்த தனைய தானையஃறுபுதங்
கண்மணி *தயிறகு* என்போர்
சீறாப்புராணம் : 4 : 54.

**தரீக்** tarīk, பெ. < tariq طريق > ஞானிகள் பாதை.

*சரீகத் தோடு தரீகத்தும்*

பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 16 : 8.

**தரீகத்** tarīkat, பெ. பார். தரீக்.
சூபிமார்க்கங்களுள் ஒன்று.

*சரீகத் தோடு தரீகத்தும்*

பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 16 : 8.

**தல்கா**[1] talkā, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவர்.

*அலி தல்கா சுபையிறு உம்மாறு*
*அவர்மறுதா மிகுதாது என்று இவர்கள் ஆறு*

பனியகுமது மரைக்காயர் : சீறப்புராணம் : 23 : 15 (890).

**தல்கா**[2] talkā, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவர்.

*தல்கா தலத்தின் வரும்உதுமான் சைபா*

பனியகுமது மரைக்காயர் : சீறப்புராணம் : 24 : 144 (1049).

**தல்கா**[3] talkā, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவர்.

*உமறுடன் உதுமான் வெற்றி உயர்அலி அப்பா சூக்க*
*மமைதரு சுபைறு தல்கா வாண்டகை*

புதுகுஷ்ஷாம் : 36 : 41.

**தல்குலா** talkulā, இ. பெ. நபி முகம்மது (சல்) அவர்களது காலத்தில் எமன் நாட்டை ஆண்ட அரசன்.

*...........எமன் என்னும் நாட்டின் கண்ணே*
*மன்னவன் தல்கு லாவும்*

பனியகுமது மரைக்காயர் : சீறப்புராணம் : 36 : 15 (1567).

**தல்பியத்** talpiyat, பெ. < talbiyat تلبية >
ஹஜ்ஜுப் பயணத்தின்போது கூறப்படுவது. லப்பைக்க என்று ஆரம்பமாகும் கூற்று. பார். லப்பைக்க.

*தக்குபீர் தசுபீ கொடுதகு மீதுந் தகுந்தகு லீலுந் தல்பியத்தும்*

நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 35 : 9.

**தலாக்** talāk, பெ. < talāq طلاق > விவாகரத்து.

*ஓதிய தலாக் கினுக்கு அடிமை ஒன்றுண்டு*

பனியகுமது மரைக்காயர் : சீறப்புராணம் : 34 : 17 (1487).

**தலில்** talil, பெ. < dalīl. دليل > விளக்கம்.

*இன்ன நாளுரைத்த வாய்மை*
*இவைக்குறுந் தலிலும் சொல்லிப்*
*பின்னறு மதியிற் சொற்ற*
*ஹதிதொடு தலிலும் சொல்வார்*

பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 61 : 37.

**தலீக்கத்** talīkkat, இ. பெ. ஓர் அரசன்.
பனிமை தாங்கிய மன்னவன் தலீக்கத்தைப் பார்த்தான்
புதுகுஷ்ஷாம் : 58 : 48.

**தவ்கீது** tavkītu, பெ. < tavhid توحيد >
அல்லாஹ்வின் ஏகத்துவம்.
களங்கரும் தவுகீதென்னும் கதிரொளி தெளிவு காட்டும்
துலங்கரும் ஈமான் என்னும் சுடர்மறை பொருளைக் காட்டும்
புதுகுஷ்ஷாம் : 59 : 83.

**தவ்பா** tavpā, பெ. < taubat توبة > பாவமன்னிப்பு.
ஆதியே ஹக்கா றப்பனு விறையே
யழிவிலாப் பேரின்ப வாழ்வே
நீதியே யெனவும் பலதரந் தவுபா
நிகழ்த்தியுந் துன்பம்விட் டொழிய
சீறாப்புராணம் : 4 : 34.

**தவ்வாப்** tavvāp, இ. பெ. < tauwāb تواب >
பாவமன்னிப்பு மன்றாட்டத்துக்குச் செவி சாய்ப்பவன். அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். ஸாகிர்.
இராஜநாயகம் : 36 : 40.

**தவ்வாப்** tavvāp, பெ. பார். தவாபு.
அன்று மேலவ னண்டரைக் கூவிநீர்
சென்று செய்யுந் தவ் வாபெனச் செப்பவே
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 13 : 29.

**தவ்றாத்** tavṟāt, பெ. < taurāt. توراة >
அல்லாஹ்வால் மூசா நபி (அலை)க்கு அருளப்பட்ட வேதம்.
என வெடுத் தருமறை தவுறாத் தினினியங்கு
நனி கொளாண்டகை முகம்மதி னியல்பெலா நவிற்றி
புதுகுஷ்ஷாம் : 48 : 38.

**தவறாயீல்** tavaṟāyīl, இ. பெ.
ஒரு மலக்கின் (வானவரின்) பெயர்.
......முப்பதோ
டாறும் படிமிதித்தா ரண்டர் தவறுயிலங்கே
வீறுக வந்தார் விரைந்து
மிகுறுசு மாலை : 241.

**தவா** tavā, பெ. < da'wa دعوة > மதப்பிரச்சாரம்.
பிந்தவா துறுகலந் தப்பெருவார் மனைமுன்வாயில்
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) 18 : 46.

**தவாதிரு** tavātiru, பெ. ஒரு மரத்தின் பெயர்.

தான்குடி இருக்கும் தலத்திடை நின்ற
தவாதிரு எனும்தரு நிழல்கீழ்
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 28 : 12 (1192).

**தவாப்** tavāp, பெ. பார். தவாபு.

அம்மொழி செவியில் கேட்டே
அருள்நபி தவாபை ஒல்லை
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 18 : 41 (552).

**தவாபு** tavāpu, பெ. < tawaf. طواف >

புனித கஃபாவை சுற்றி வருதல்.

மின்னவி ரொளிவிற் பூத்து விளங்கிய பைத்துல் லாவி
னன்னயத் தவாபு செய்யு நடையினென் காற் கொளீஇவன்
புதுகுஷ்ஷாம் : 28 : 20.

**தவுசு** tavucu, பெ. ஒரு கூட்டத்தினரின் பெயர்.

காதிய வேலினபுகுறை ருவரு காய்சின மீறியுறுஞ்
சாதியர் சூழ்தவுசார்
புதுகுஷ்ஷாம் : 40 : 113.

**தவுமத்து** tavumattu, பெ. ஒரு கோட்டையின் பெயர்.

வயங்கும் எழில் தவுமத்து இஞ்சிக்கு
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 33 : 47 (1409).

**தவுலத்** tavulat, பெ. < dawlat دولت > செல்வம்.

மாபுயத்தின் மேவு மவுத்தும் தவுலத்தும்
ஆபியத்து மூவருமேயாம்
மிகுருசுமாலை : 148.

**தவுறு** tavuṟu, பெ. மக்காவில் உள்ள மலைக்குகை. நபிகள் நாயகம் முகம்மது (சல்) அவர்களும் அவர்கள் தம் தோழர் அபூ பக்கர் (றலி) அவர்களும் மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்றத் பயணத்தை மேற்கொண்டபொழுது மறைந்திருந்த குகை இது வாகும்.

சிலம்பி வந்திட வண்டச மென்சுவ
டவண்க ரந்திட வண்புயல் கண்டுயில்
சிறந்திடுந்தவுறு என்றொரு குன்றுறை இறசூலே
காசிம் திருப்புகழ் : 23.

**தறசாத்** taṟacāt, பெ. < darajāt درجة > நற்பலன்.

பழுதறு தறசாத்தோங்கு பயனெலாம் பெறுவர்
வண்ணக்களஞ்சியப் புலவர் : குத்பு நாயகம் : 6 : 4.

**தறஜாத்** taṟajāt, பெ. பார். தறசாத்.

*மேதகு தறஜாத் தோங்கி வியன்பெறும் சதக்கத் துல்லா*

தீன் விளக்கம் : 1 : 22.

**தறுதாயீல்** taṟutāyīl, இ. பெ. ஒரு வானவரின் பெயர்.

*இவனுறுந் தகையார் மகிமையின் மீக்கா யீலிவர் திறத்திசுருபீ*
*லவனுறு மன்னோ ரணிதறுதாயீ லணித்துறுஞ்*
*சிபுரியீல் யானே.*

திருமணிமாலை : 27 : 31.

**தனயா** taṉāyā, இட. பெ. ஓர் இடம்.

*தண்டலைத்தன யா எனும் பதிசெலும்*

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 27 : 63 (1145).

**தனிய்யா** taṉiyyā, இட. பெ. ஓர் மலையின் பெயர்.

*...............நபியும் படையும் பயம்*
*இன்றியே தனிய்யா மலைக்கெய் தினர்*

சீருப்புராணம் : 90 : 23.

**தஸ்தக்கீர்** tastakkīr, இ. பெ. <dast gīr دستگیر> (Persian) கரம் பிடித்துக் காப்பவர். முகியித்தீன் ஆண்டகையின் சிறப்புப் பெயர்களுள் ஒன்று.

*சவரென மறுத்துஞ் சொல்லத் தஸ்தக்கீர் தெளிவிலாது*

பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 16 : 23.

**தஸ்பீகு** taspīku, பெ. பார். தசுபீகு.

*தக்கு றுதஸ்பீ கோடும்*

ஆரிபுநாயகம் : 6 : 28.

**தஸ்லீம்** taslīm, பெ. < taslīm تسلیم >

முகமன் கூறல். 'அல்லாஹ்வின் சமாதானமும் கருணையும் உம்மீது உண்டாவதாகுக' எனப் பொருள்படும் 'அஸ்ஸலாமு அலைக்கும் வறஹ்மத்துல்லா' என்ற அறபுச் சொற்றொடரைக் கூறுதல்.

*முகியித்தின் பேரைக்கேட்ட முதலவன் பரியை விட்டுத்*
*திகையுட னிறங்கிப் பூவைத் திருக்கரந் தொட்டு முத்தி*
*வகையுடன் தஸ்லீம் பண்ணி வணங்கிவாய் புதைத்துப் போற்றி*

பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 17 : 22.

**தஸவ்வபு** tasavvapu, பெ. <tasawwuf>
மெய்ஞானம், (சூபித்துவம்).

*மீட்சிகொண்டமர் கரும்பொனே கனலெனும் விதத்தி*
*னுட்சிகொண்டொரு தனிமுதலுடைக்குண மடைவான்*
*காட்சிகொண்டகந் தெளிவருதன்மையிற் கன்ம*
*மாட்சிகொண்டதா மொழு கலாறெனுந் தஸவ்வபுவும்*

ஆரிபுநாயகம் : 8 : 23.

**தஹ்மீது** tahmītu, பெ. பார். தகுமீது.

*தக்குறு தஸ்பீகோடுந் தவம்புனை தஹ்மீதோடும்*
*மிக்குறு தஹ்லீலோடும் விறல் பெறு தக்பீரேடுந்*
*தொக்குறு மகுசூக் குல்லா தோன்றினர்*
ஆரிபு நாயகம் : 6 : 28.

**தஹ்லீல்** tahlīl, பெ. <tahlīl تهليل> பார். தகுலீல்.

*தக்குறு தஸ்பீகோடுந் தவம்புனை தஹ்மீதோடும்*
*மிக்குறு தஹ்லீலோடும் விறல்பெறு தக்பீரேடுந்*
*தொக்குறு மகுசூக்குல்லா தோன்றினர்*
ஆரிபுநாயகம் : 6 : 28.

**தஜ்ரீது** tajrītu, பெ. < tajrīd تجريد > துறவறம்.

*ஊறுமின் சுனைநதிக் கரைவ தீந் துநம் முரவர்*
*மாறு ருத்தஜ் ரீதுடை நிய்யத்தின் மருவி*
சாதுலிநாயகம் : 8 : 12.

**தஜல்லி** tajalli, பெ. < tajalli تجلي > மேலானது.

*அளவத தஜல்லியு ளாகில் யாயெனன்*
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 8 : 10.

**தாசிம்** tācim, பெ. பெருமானார் பெயர்களுள் ஒன்று.

*தாசிமாகிய யாஸீன் முழக்கம்.*
ஞானக்குறம் : காட்டுவளங்கூறுதல் : 20.

**தாசு** tācu, பெ. < tāj تاج > மகுடம்.

*எய்திய மணியும் தாசு மிலங்கு வெள்ளை யிறும் தோன்ற*
வண்ணக்களஞ்சியப் புலவர் : குத்பு நாயகம் : 24 : 8.

**தாசுல் ஆரிபீன்** tācul āripīṉ, பெ. <tājul ārifīn تاج العارفين >
ஆரிபீன் என்னும் ஆத்மஞானிகளுக்கு மகுடம் ஆனவர்.

*பொங்கிய நகரில் தாசுல் லாரிபீன் புகழ் பெற்றோங்கும்*
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன புராணம் : 11 : 12.

**தண்டல்** taṇṭal, பெ. < tandel, உர்தூ தலைவன்.

*சந்திர சூரிய ஞற்சே னும்பரி னைவர்தமைச்சீர்*
*பெரியோரே தண்டலி னேவல் பணித்தாள்*
காசிம் திருப்புகழ் : 138.

**தாத்து[1]** tāttu, பெ. < zāt ذات > தத்சொரூபம்.

*ஏத்து நாடி யிரங்குறு நின்னெரு*
*தாத்து நாடிய தக்கவ னிக்கரு*
*மாத்து நாடி மதிப்பினி யற்றவன்*
*பூத்து நாடின வன்னது போற்றுமால்*
ஆரிபுநாயகம் : 10 : 31.

**தாத்து²** tāttu, பெ. <zāt ذات> சத்து; தற்சொரூபம். பார். மகுலியத்து.

மஸ்தான் சாகிபு பாடல் : வஸ்துதயத்தினுாந்தம்.

**தாத்துல்கிபுரியா** tāttulkipuriyā, தொ. < zāt ul kibriya ذات الكبرياء >

மகத்துவத்தின் தத் சொரூபம். மகத்துவத்தின் சத்து பார். மகுலியத்து.

மஸ்தான் சாகிபு பாடல் : வஸ்துதயத்தினுாந்தம்.

**தாதா** tātā, பெ. < dādā دادا > (Persian) தந்தை.

நாளுமிக நெறிதீனைத் தழைக்க வைக்கு
நாதர் குத்புல குத்தா பனைதா தாவைத்
தோளுமு டல்களும் புளகம் பூப்பக் கூட்டி...

நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 4 : 246.

**தாத்துற்றகாகு** tātturrakāku, பெ. ஒரு நகரின் பெயர்.

வதுவையில் கொடையில் போரில் மலிந்தமும் முரச மாரு
ததிர்தரு மதீனமுதூ ரண்ணல் தாத்துற் றகாகுப்
பதியினில்

சீறுப்புராணம் : 78 : 1.

**தாபித்** tāpit, இ. பெ. ஒரு பெரியார்.

வாழிய கவிதை வல்லான் மதிமிகு தாபித் ஈன்ற
பாழியந் தடந்தோள் அச்சான் பாவல னறித லுண்டோ

புதுகுஷ்ஷாம் : 29 : 53.

**தாபித்து¹** tāpittu, இ. பெ.
இஸ்மாயீல் நபி அவர்களின் புதல்வர்.

மன்னவ ரிசுமா யீல்தரு மதலை
மணிவிளக் கனையதாபித்து

சீறுப்புராணம் : 4 : 53.

**தாபித்து²** tāpittu, இ. பெ. ஒரு கவிஞன்.

அவரோடும் தாபித்து உடனும்
மறனுற இகலி வாதினல் கவிதை
மழைஎனப் பொழிந்தனர் அன்றே

பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 32 : 3 (1337).

**தாபிது** tāpitu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

யாபிது பேரன் பானின் றெய்திய வோலை யோர்ந்து
தாபிது நன்று நின்றன் றவத்தொடு

திருமணிமாலை : 4 : 63.

**தாபியித்தாபியீன்** tāpiyittāpiyīṉ, தொ. < tābiūt tābi'in تابع التابعين > கண்டாரைக் கண்டாரைக் கண்டார். முகம்மது நபி (சல்) அவர்களின் தோழர்களைக் கண்டு உரையாடியவர்களைக் கண்டு உரையாடியவர்கள்.

தருமம் ஆர் தாபியீனைத் *தாபியித்தாபியீனை*

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 1 : 5 (5).

**தாபியீன்** tāpiyīṉ, பெ. < tabi'in تابعين > கண்டாரைக் கண்டார். முகம்மது நபி (சல்) அவர்களின் தோழர்களைக் கண்டு உரையாடியவர்கள்.

தருமம் ஆர் *தாபி யீனை*

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 1 : 5 (5).

**தாமீம்** tāmīm, பெ.

*தாமீம்* என்ற தலைவட்டத்துள்

பீர்முகம்மது சாகிபு: ஞானமுச்சுடர்ப் பதிகங்கள்: ஹக்குமுருதுப் பதிகம்: 1.

**தாரிக்** tārik, இ. பெ. ஒரு ஆணின் பெயர்.

உள்ளக் கவலை பூண்டிருந்த *தாரிக்* என்பா னுடன் எறுழின்

புதுகுஷ்ஷாம் : 53 : 91.

**தாயி** tāyi, இ. பெ. ஒரு கிளையின் பெயர்.

*தாயி*யென்றொரு கிளையினர்

புதுகுஷ்ஷாம் : 13 : 35.

**தாயித்** tāyit, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

மகுசனு வென்னுந் *தாயித்* தென்றுமே

இராஜநாயகம் : 21 : 4.

**தாயிப்** tāyip, இட. பெ. மக்காவிற்கு அருகில் உள்ள ஓர் இடத்தின் பெயர்.

சவிகொள் வெண்சுதை மாமதிள் *தாயிபி*ல்

சீருப்புராணம் : 41 : 5.

**தாயுபு** tāyup, இட. பெ. பார். தாயிப்.

இனைய வாசக முரைத்தவ னிருப்பநம் மிறசூல்
வினைய முற்றதிவ் விடத்தெனத் *தாயுபை* விடுத்து

சீருப்புராணம் : 41 : 13.

**தார்** tār, பெ. < dār. دار > வாழுமிடம்.

தத்வ முற்றுமித் *தாரி*னுள் ளேழுநாட்
கத்வி யத்தொடு காவல னேவலாய்ச்
சித்தியும் முற்றிச் சேனுல கெய்தினர்

பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 42 : 54.

**தால்** tāl, பெ < dāl د > அறபு அரிச்சுவடியில் ஓர் எழுத்து.

இந்தக் குழி யிறையோன் லாமு மீமு *தால்* றேயும்
ஞானப்பூட்டு : 28.

**தாலூத்** tālūt, இ. பெ. பண்டைக் காலத்தில் வாழ்ந்த ஒரு மன்னன். முஸ்லிம்கள் பிற்காலத்தில் தாம் ஈடுபட்ட தற்காப்புப் போர்களில் தம்மைவிடத் தமது எதிர்ப் படைகள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்த சந்தர்ப்பங்களில் தாலூத் மன்னனுக்கு அளித்த அதே வெற்றியை தமக்கும் அளிக்குமாறு துஆவினை இறைஞ்சினார்கள். காரணம் தாலூத் மன்னன் குறைந்த படைகளை கொண்டிருந்த போதிலும் அல்லாஹ்விடம் நம்பிக்கையுடன் இருந்ததால் வெற்றிகண்டார்.

வல்ல நாத னேவும் மாண்பின் வாழிநற் பொருத்தமேற்
செல்க நாடி முன்னுளோர்தஞ் செய்ய பாதையுய் கநீள்
வில்லினண் ணல்*தாலூ* த்தன்பின் மிக்க சேனை யோதல்போற்
சொல்க நன்மை யருள் வனாதி துணையு மென்றுணர்த் தினர்
புதுகுஷ்ஷாம் : 19 : 89.

**தாவுசு** tāvucu, பெ. < tāwūs طاؤس > மயில்.

முழங்கி யெழுந்த முஹம்மது வெனும்பேர்
முழங்கிய *தாவுசு* மயிலே
பீர்முகம்மதுசாகிபு: ஞானமுச்சுடர்ப்பதிகங்கள்: மயில வலம்புரிப்பதிகம்: 8

**தாவூது**[1] tāvūt, இ. பெ. < dāwūd داؤد >

இவர் ஒரு நபி. சபூர் வேதம் அல்லாஹ்வால் இவருக்கு அருளப்பட்டது.

............அரிய *தா வூது* வல் லிரும்பை
உருகு மென்மெழு காக்கினர் செறுநர் நெஞ்சுருக
சீறாப்புராணம் : 32 : 100.

**தாவூத்**[2] tāvūt, இ. பெ. முகியித்தீன் ஆண்டவரின் மூதாதையருள் ஒருவர்.

தவறுறு விரதம் பெற்ற *தாவூதைப்* பெற்றாரென்றே
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 4 : 9.

**தாறமுபுனுபையால்** tāṟamupuṉupaiyāl, ஓர் ஆணின் பெயர்.

*தாறமுபுனு பையாலும்*
புதுகுஷ்ஷாம் : 32 : 20.

**தாறுல் சகா** tāṟul cakā, பெ. < sakar سقر >

ஒரு நரகின் பெயர்.

இரிதல் நன்மைக்கு அகல்தல் பவ
மெடுத்தற் கிடந்தீ வினைவீடிப்
பிரிவில் *தாறுல் சகா*வினெனப்
பகர்ந்தார் வள்ளல் இகழ்ந்தாரே
புதுகுஷ்ஷாம் : 29 : 94.

**தாறுல் பகா** tāṟul pakā, பெ. < tār-al-baqa' دارالبقاء >
நிலையான வாழ்வு.

தெரியும் பெருமை யொடு சிறப்புஞ்
சிறந்த துயர்ந்து நிறையழியா
தரிய *தாறுல் பகா*யிடத்தி
லாமா றியன்றுர்க் காமஃதே
புதுகுஷ்ஷாம் : 29 : 94.

**தாஸீன்** tāsin, பெ. < tāsin طس > அல்குர்ஆனின் 27வது அத்தியாயம் இவ்வெழுத்துக்களைக் கொண்டு ஆரம்பிக்கிறது.

தருமநினைவைத் துணையாக்கித்
*தாஸீன்* தாஹா செய்காறுல்
பீர்முகம்மது சாகிபுப் புலவர் : ஞானக்குறம் : கஃபத்துல்லாப்பதிகம் : 9.

**தாஜுல் ஒளலியா** tājulauliyā, பெ. < tajulauliya. تاج الاولياء >
இறைநேசர்க்கெல்லாம் கிரீடம் போன்றவர்.

வள்ளலார் *தாஜுலௌலியா*வென்றும் அவர்க்கு நீவிர்
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 4 : 33.

**தாஹா** tāhā, பெ. < tāhā طه > அல்குர்ஆனின் 20-வது அத்தியாயம் இவ்விரண்டு அறபு எழுத்துக்களையும் கொண்டு ஆரம்பிக்கிறது. நபிகள் நாயகம் முகம்மது (சல்) அவர்களும் இச்சொல்லால் அழைக்கப்படுவதுண்டு.

வாழுமொரு *தாஹா* விதிவரியதில் குன்யாஸீனென
ஞானக்குறம் : மலைவளங்கூறுதல்.

**திக்கிர்** tikkir, பெ. பார். திக்று.

பனித்தவ ணிருப்ப வகோரமாய் *திக்கிர்*
பாய்ந்தது ஞானக்கண் டிறந்தே
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 28 : 205.

**திக்கிறு** tikkiṟu, பெ. பார். திக்று.

சிந்திடாம லேகநாயகன் *திக்கிறோ*ட லற்றபின்
ஞானமணிமாலை : 215.

**திக்குறு** tikkuṟu, பெ. பார். திக்று.

நன்னிய *திக்குறு* நயம்பெற நாளுமுடிப்பாரே
சாதுலிநாயகம் : 19 : 28.

**திக்று** tikṟu, பெ. < zikr. ذكر >
அல்லாஹ்வைத் தியானித்தல்.

நினைவினில் அவனை யன்றிப் பிறபொருள் நினையலீர்நா
நினைவினில் *திக்றல்* லாது வேறு சொல் நவிறலீர்
புதுகுஷ்ஷாம் : 40 : 46.

**திக்றுல்யகீன்** tikrul yakin, தொ. < zikrul yaqin ذكراليقين >
நினைவுகூர்தலினால் பெறப்படும் அறிவு.

*திக்றுல்யகீன்*
ஒர்பங் கணுகியற வோசையதற் கப்பால்நின்று
ஞானப்புகழ்ச்சி : 641.

**திம்மி** timmi, < zimm ذم >
முஸ்லிம் நாட்டில் சிறுபான்மையினர்.

செவ்வழிக் குரிய *திம்மியன்* அகன்றான்
சிலபொழுது துற்றவை பெற்று
புதுகுஷ்ஷாம் : 27 : 45.

**திமசுக்** timacuk, இட. பெ. இப்போதைய சிரியா நாட்டின் தலை நகரான டமஸ்கஸ் அறபு மொழியில் திமஷ்க் (Dimashq) என வழங்கப்பட்டது.

உயர்பதி *திமசுக்* காளு நூறுத்தீன் உவந்து அழைத்து
சேகுனாப்புலவர் : குதபுநாயகம் : 12 : 30.

**திமிஷ்கு** timisku, இட. பெ. சிரியாவின் தலைநகரான டமஸ்கஸைக் குறிக்கும் அறபுச்சொல். சிலசமயங்களில் சிறியாவைக் குறிக்கவும் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

என்றும் பூமகள் பொருந்திய *திமிஷ்கினை* யெதிர்ந்தான்
சீறாப்புராணம் : 31 : 43.

**திரகம்** tirakam, பெ. < diraham درهم >
வெள்ளி நாணயம்.

வரைசெறி மக்கமா நகரின் மாற்றலர்
*திரகமும்* அணிகளுஞ் செம்பொ னுடையும்
சீறாப்புராணம் : 63 : 2.

**தில்மீது** tilmitu, பெ. < tilmiz تلميذ > சீடன்.

கமைதரும் *தில்மீதுகள்* கலீ பாக்கள்
கனதிறற் கிதுமத்தோர்...
நவமணிமாலை (முகியித்தீன புராணம்) : 35 : 5.

**தின்னூறைன்** tinnūrain, பெ. < zinnūrain ذىالنورين >
இரண்டு ஒளிகளைப் பெற்றவர். முகம்மது நபி (சல்) அவர்களின் இரண்டு புதல்வியரை ஒருவர்பின் ஒருவராக மணந்த மூன்றாங் கலிபா உதுமானிப்னு அப்பான் (றலி) அவர்கள் இவ்வாறு அழைக்கப்பட்டார்.

மங்கையர் கடங்களை மணம்புரி *தின்னூ றைன்*
நன்கதி மேவிய மூன்று வதுக லீபா...
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 11 : 59.

**திஜ்லா** tijlā, பெ. < dijlāh دجله >
இருக் நாட்டில் உள்ள ஒரு நதியின் பெயர்.
பேற்றிடை யிருக்கு மன்ன பெரும்புனல் *திஜ்லா* வென்னும்
யாற்றிடை யருமை மேன்மை யாவரே யறைதற் பாலார்
ஆரிபுநாயகம் : 3 : 20.

**தீமியா** tīmiyā, பெ. சிந்தையைத் தரித்தல்.
*தீமியா* வுடனும் பஃறெுழி லுரைத்து
நேர்பெற மதிபல அறைந்தார்
திருககாரணப்புராணம் : 34 : 33.

**தீதாறு** tītāṟu, < dīdār ديدار > (Persian)
தரிசனம்.
முன்னவன் *தீதாறு* எய்து
முகம்மது நபியும் காப்பார்
வண்ணக் களஞ்சியப் புலவர் : குத்பு நாயகம் : 12 : 25.

**தீய்வா** tīyvā, இட. பெ. ஒரு நகரின் பெயர்.
ஒரு பதி *தீய்வா* வென்ன
பனியகுமது மரைககாயர் : சீருப்புராணம் : 33 : 87 (1449).

**தீன்** tīṉ, பெ. < dīn دين > இஸ்லாம் மார்க்கம்.
*தீன்* எனும் பயிர்க்கோர் செழுமழை யெனலாய்
சீருப்புராணம் : 5 : 29.

**துஆ**[1] tuā, பெ. < du'ā دعاء > பிரார்த்தனை வேண்டுகோள்.
உலகி னிற்கரு தலர்க்கட லரியும றினைக்கொண்
டலத பூஜகி லினைக்கொடு தீனிலை யதனைப்
பெலனு றும்படி யெனக்கருள் பிறிதிலை யெனவே
நலனெ டுந்துஆச் செய்தனர் முகம்மது நபியே
சீருப்புராணம் : 28 : 3.

**துஆ**[2] tuā, பெ. < duā دعاء > ஒரு குறிக்கோளை அடையும் பொருட்டு அறபு எழுத்துக்களால் ஒரு தட்டிலோ, கடதாசியிலோ எழுதப்படும் ஒரு பிரார்த்தனை.
தம்மது கையால் வரிசை தங்கு நகுஷாமோர்
அம்முறு *துஆ* வெழுதி அட்சர மிதைத்தாம்
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 11 : 43.

**துகைப்** tukaip, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.
மற்கொண்ட திண்டோள் *துகைபீன்ற*
செய்வென்றிவாள் சாலிமை
புதுகுஷ்ஷாம் : 31 : 8.

**துசும** tucuma, பெ. < dushman. دشمن > (Persian)

சாத்தனுடைய
பசுபதியுங் கடந்து *துசும* வினையுங் தீரவேதான்
ஞானப்பூட்டு : கீர்த்தனை : 3.

**துப்பாக்** tuppāk, பெ. ஒரு பழவர்க்கம்.
மேதினி யிடத்தில் இந்த வேனலில் எவர்க்குங் கிட்டாப்
போதுகு *துப்பாக்* கென்னும் புதுக்கனி அழைத்துத் தந்தால்
போதும்என் றுரைத்தார் நல்ல புத்தியின் றிறத்தின் மிக்கார்
பத்றுததீன புலவா : முகியிததீன் புராணம் : 71 : 29.

**துபைல்** tupail, இ பெ. ஒரு ஆணின் பெயர்.
பகுத்தொரு பகுப்பிடை பதித்தனர் *துபைலின்*
அகத்தவ மகக்குரிசி லாமிறினை யன்றே
புதுகுஷ்ஷாம் : 38 : 13.

**துல்ககுதா** tulkakutā, பெ. < zulqi'da. ذوالقعدة >
பதினொருவது இஸ்லாமிய மாதம்.
நன்னபி கிசுறத் தோர்பன் ஞன்கில் *துல் ககுதா* திங்கள்
புதுகுஷ்ஷாம் : 28 : 41.

**துல்கச்சி** tul kacci, பெ. < zul hajj ذوالحج >
பன்னிரண்டாவது இஸ்லாமிய மாதம்.
மாதமோ அரிய வரிசையும் சிறப்பும்
மல்கிய *துல்கச்சி* மாதம்.
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 38 : 42 (1629).

**துல் கயிதா** tul kayitā, பெ. பார். துல் ககுதா.
சாற்று *துல்கயி* தாவெனு
மேற்ற மாதமா மேல்வையில்
சீருப்புராணம் : 76 : 1.

**துல்கலசத்து** tulkalacattu, பெ. ஒரு சிலையின் பெயர்.
பூவின் நாறிய *துல்கல சத்*தெனும் புத்தை
பனியகுமது மரைக்காயா : சீருப்புராணம் : 29 : 8 (1266).

**துல்கிலாகு** tulkilāku, இ. பெ. ஒரு அரசனது பெயர்.
கேசரியாம் *துல்கிலாகு* என்னும் மன்னர்
புதுகுஷ்ஷாம் : 40 : 112.

**துல்கிலாகு** tulkilāku, இ. பெ. ஒரு கூட்டத்தார் பெயர்.
கூர்வேல் *துல்கிலா*கொடு கிம்யரிய் யாளர்
சீர்வேல் அல்பத்து கல்பத்து கென்றே செருகுற்றூர்
புதுகுஷ்ஷாம் : 40 : 230.

துல்குலைபா tulkulaipā, இ. பெ. மதீனாவிலிருந்து செல்லும் ஹஜ் பிரயாணிகள் இஹ்ரும் கட்டுவதற்குத் தங்கவேண்டிய இடம். மக்காவுக்கருகாமையில் உள்ளது.

மதுமலர்த் தடம்சூழ் *துல்குலை* பாவென்
வயின்உறைந் திறுத்தனர் அன்றே
பனியகுமது மரைக்காயா : சீருப்புராணம் : 38 : 15 (1602).

துல் துல் tul tul, பெ. < dul dul دلدل >

முன்னுக்கும் பின்னுக்கும் பாய்தல், இது கலிபா அலி (றலி) அவர்களின் குதிரையின் பெயர்.

பண்ணி ருத்திய *துல்துலம்* பரிமிசை கொண்டார்
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 35 : 17 (1528).

துல்புக்காறு tulpukkāṟu, பெ. <zulfiqār. ذوالفقار >

நபிகள் நாயகம் (சல்) அவர்கள் தமது மருமகன் அலி (றலி) அவர்களுக்கு வழங்கிய வாளின் பெயர்.

கதிர்கொளுந் *துல்புக் காறெனும்* வாளைக்
கரதலத்து எழில்தர வேந்தி
சீருப்புராணம் : 65 : 242.

துல்ஹச்சு tulhaccu, பெ. பார். துல்கச்சி.
பன்னிரெண்டாவது இஸ்லாமிய மாதம்.

கருதிய திங்கள்*துல் ஹச்சு* மேன்மையின்
வருபதின் றெய்தியிவ் வரிசை காண்டலும்
திருமணிமாலை : 29 : 20.

துல்ககிதா tulkakitā, பெ. பார். 'துல்ககுதா.

விலங்கு *துல்ககிதா*தெய்தி யிருபத்து மூன்றில்
தீன் விளககம் : 20 : 102.

துல்கறு நயின் tulkaṟunayiṉ, இ. பெ. இப்ருகீம் நபி (அலை) அவர்களின் சமகாலத்தவர் என்று கூறப்படுபவர். மகா அலெக்சாந்தர் என்றும் கருதப்படுபவர்.

தந்திரத் தரசரியாருந் தாழ்தர அடக்கி எய்தா
மந்தர மெவைக்குந் தாரைப் பல்விதத் தியற்றி மாக்கள்
புந்தியி னடங்கா மாண்பின் புதுமை மிக்காக்கி வல்லோ
னந்தலி னிட்ட நாமத் *துல்கறுநயி*னென் றேற்றுர்
புதுகுஷ்ஷாம் : 57 : 62.

துல்ஜலாலி வல் இக்ரும் tuljalāli val ikṟām, பெ. <zu'l jalāli wa'l ikrām ذوالجلال والاكرام > மாண்பும் தாராளத் தன்மையும் உள்ள அதிபதி. அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களில் ஒன்று. பார். ளாகிர்.

இராஜநாயகம் : 36 : 40.

**துலக்கா¹** tulakkā, பெ. ஒரு கூட்டத்தின் பெயர்.
பொருளணி துலக்காக் களும்புடை பரந்த புரத்தினர்
புதுகுஷ்ஷாம் : 46 : 120.

**துலக்கா²** tulakkā, பெ. விடுவிக்கப்பட்ட அடிமைகளைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்ட பெயர்.
இன்றுதொட்டு உரிமை உங்கட்கு
இடும்பெயர் துலக்கா உள்ளம்
பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம் : (1061).

**துலக்கா³** tulakkā, பெ. ஒரு கூட்டத்தாரின் பெயர்.
துய்யநன் மக்க நகர்க்கிறை அபுத்தா
வுடன்துலக் காக்களும் உவந்தே
பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம் : 38 : 21 (1608).

**துலுக்கன்** tulukkan̲, பெ. முஸ்லிம்களை அழைக்க பிற மதத்தவர் உபயோகிக்கும் ஒரு சொல்.
துலுக்கனுர் தமிழ்ப் பாண்டிய னிலந்துலுக் கனுக்கு நிலைக்குமோ
தீன் விளக்கம : 7 : 52.

**துவா** tuvā, பெ. பார். துஆ.
உறுதி நாயக ஓதும் இரப்பைக்கொண்டு
அறுதிபோல் அருள் ஆண்டவனே எனப்
பெறுதி ருக்கரம் ஏந்தி பெருந் துவாப்
பொறுதி யோடு உயர் நோக்கிப் புகன்றனர்
புதுகுஷ்ஷாம் · 40 : 88.

**துவைபா** tuvaipā, இ. பெ. நபிகள் நாயகம் (சல்) அவர்கள் பிறந்த ஏழு நாட்களுக்குப் பின்னர் அவர்களுக்கு முலை ஊட்டியவர்.
இன்புற வபூல கபுதிரு மனையி
னிருந்தவோர் படக்கொடி துவைபா
மன்பெரும் புகழார் முகம்மது நபிக்கு
மனமகிழ் வொடுமுலை கொடுத்து
சீறாப்புராணம் : 5 : 1125.

**துவைபு** tuvaipu, இ. பெ. செவிலித்தாய் அலிமாவின் தந்தையார்.
அறிவுரை துவைபெனுந் தந்தை யாகிய மறையவன்
சீறாபபுராணம : 6 : 22.

**துற்றத்துல் பைலா** tur̲r̲attul pailā, தொ. < durratul baidā درة البيضاء > ''ஒளியின் முத்து''. உயிரினங்களைப் படைப்பதற்கு முன்னர் படைக்கப்பட்ட புத்தி என முஸ்லிம் மெய்ஞ்ஞானிகள் கருதுவர்.
அந்தத் துற்றத் துல்பைலா வாந்தல நின்றுஞ் சோடு
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 6 : 79.

**துருக்கி(கள்)** turukki (kal), பெ. ப.
துருக்கி நாட்டைச் சேர்ந்தவர்கள்.
ஓடும் தன்மையில் காட்டினம் *துருக்கிக* ளோட்டினம் மிஃதாமால்
புதுகுஷ்ஷாம் : 34 : 16.

**துனியா** tuṉiyā, பெ. < dunyā دنيا > உலகம்.
கண்டனன் *துனியா* வென்னக் கருத்தினி லிருத்தி
பத்றுத்தீன் புலவா : முகியித்தீன் புராணம் : 14 : 12.

**துரிசினா** turiciṉā, பெ. பார். தூறுசினா.
*துரிசினா* மலையின் றன்னிற் சொற்புகழ் மூசா தம்மை
பெரிய நாயகன் அழைத்துப் பேசினான்...
மிகுறுசுமாலை : 87.

**தூறுசீனா** tūṟuciṉā, இட. பெ. சினாய் மலையைக் குறிக்கிறது.
பெருமுகத் தொளிவினாற் பேறுபூத்தலர்
தருமலைத் *தூறு சீனா*வின் றன்சிலை
திருமணிமாலை : 31 : 93.

**தையூப்** taiyūp, பெ. < tayyūb طيب > நல்லவற்றை.
தானவரும் வானவரும் *தையூபை*ச் சொல்பவரும்
ஞானக்குறம் : வாசல் வளங்கூறுதல்.

**தௌசிய்யர்** tevciyyar, பெ. ஒரு கூட்டத்தார்.
விளியாமுன்
நாமமுறும் *தௌசிய்யர்* துபைலின் நல் தோன்றல்
ஆமிறு எழுந்தார்
புதுகுஷ்ஷாம் : 40 : 192.

**தோபா** tōpā, பெ. பார். தவ்பா.
*தோபா*வைச் செய்து தொழுவோம்
மிகுறுசு மாலை : 659.

**தௌபா** taupā, இ. பெ. பார். தவ்பா.
உத்தமத் திசுலா மென்னு மொழுங்கினை விடுத்துக்காய
முற்றிய *தௌபா* தன்னை முயலுமென் றுரைப்பக் கேட்டு
பத்றுத்தீன புலவா : முகியித்தீன் புராணம் : 28 : 111.

**தௌறு** tauṟu, இ. பெ. ஒரு மலைக்குகை மக்காவுக்கு அண்மையில் உள்ளது. முகம்மது நபி (சல்) அவர்களும் அவர்கள் தோழர் அபூபக்கர் அவர்களும் மக்காவை விட்டு மதீனாவுக்கு ஹிஜ்றத் சென்றபொழுது ஒளிந்திருந்த குகை.
முருகு துளிக்கும் *தௌறு*மலைப் பொதும்பிற்
றினமுன் றகன்ற தன்பின்
சீறப்புராணம் : 48 : 87.

**நக்** nak, இ. பெ. ஒரு முதியவரின் பெயர்.

முரண்மிகு காரீது உதவிய நக்கென்று
உரைத்திடும் முதியரும்
பனியகுமது மரைக்காயர்: சீறப்புராணம்: 28 : 34 (1214).

**நகிய்** nakiy, வி. < nahiy نهي > தப்பாது ஓதுதல்.

நகுவொடு சறுபினுலு நல்லமா நகியினுலும்
பத்றுத்தீன் புலவர்: முகியித்தீன் புராணம்: 16 : 25.

**நகீம்** nakīm, பெ. < naīm نعيم >
ஒரு சொர்க்கத்தின் பெயர்.

...............இறை சார்பினில் வாழ்கவன
மீதிய லேறு நகீமிடை நீள்விழி மேதகை மாதரினே
டாதகை மேல்விரை வீரென வோதுமு னைசக ளாடினவால்
புதுகுஷ்ஷாம்: 40 : 113.

**நகுசியத்து** nakuciyattu, பெ. < nahsiyyat نحسية >
துன்பம். பார். மகுலியத்து.
மஸ்தான் சாகிபு பாடல்: வஸ்துதயத்திறுநந்தம்.

**நகுசியத்** nakuciyat, பெ. < nahsiyyat نحسية >
இடுக்கண். பார். மகுலியத்.
மஸ்தான் சாகிபு பாடல்: வஸ்துதயத்திறுநந்தம்.

**நகுதா** nakutā, பெ. < nāhudā ناخدا > கப்பலின் தலைவன்.

சேமக லாசுகள் சீர்நகு தாமீ
காமர் கருத்தர் கணக்கரி னத்தர்
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்): 32 : 53.

**நகுவு** nakuvu, பெ. < nahw نحو >
உருபனியல் இலக்கணம்.

பெயர்வினை யிடையுரி பிரிவின் வேற்றுமை
யியறரு தொகைதொகா நிலைக ளேற்பன
வயல்வழு வின்ன வளைத்துஞ் சொல்லிய
முயறரு நகுவென மொழியு நூல்களும்
சேகுனாபுலவர்: குத்புநாயகம்: 11 : 7.

**நகுமான்** nakumān, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவர்.

வானுந்திய நபிநாயகர் மகிழ்மேன் மையின் முந்திர்
கோனுந்திய மகனுர் நகுமான் என்றெ றுழ்கொண்டார்
புதுகுஷ்ஷாம்: 44 : 58.

**நகுலத்து** nakulattu, இ. பெ. ஓர் இடம்.
சரத்தின் முன்னுறு *நகுலத்* என்று ஓதிய தலத்து
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம : 27 : 61 (1143).

**நகுலா** nakulā, இ. பெ. ஒரு நகரத்தின் பெயர்.
நந்து லாம்தடம் திகழ்*நகு லா*எனும் நகரில்
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 29 : 2 (1260).

**நசாயிக்** nacāyik, இ. பெ. ஒரு பெண்ணின் பெயர்.
தவத்தால்
வருகுலக்கொடி *நசாயிக்* வெனும் பெயர் மயிலே
இராஜநாயகம் : 5 : 16.

**நசாறு** nacāṟā, பெ. பார். நசுருனி.
கோத றத்தெளிந் தார்*நசா ருக்*கடங் குலத்தோர்
சீருப்புராணம் : 9 : 41.

**நசிகத்** nacikat, பெ. < nasīhat نصيحت >
நேர்மையான அறிவுரைகள்.
மன்னிய *நசிகத்*துப் பெற்றிடு மெனமவுன்ருர்
வண்ணக் களஞ்சியப் புலவர் : குத்புநாயகம் : 8 : 54.

**நசிகு** naciku, பெ. ஒரு கூட்டத்தார்.
மருவும் *நசிகெ*ன் றுசொல்மண் டலத்தார்
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 28 : 7 (1187).

**நசீபு** nacīpu, பெ. < nasīb نصيب > விதி.
அன்னவர்க் குன்*ன சீபி* தென்றப் பேழையோடு
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 21 : 73.

**நசீஅத்** naciat, பெ. பார். நசிகத்.
தெளிவுற *நசீஅத்*தை அருளிச் செய்ததண்
ணளிமிகுங் குதுபைநீங் காதுற் றஞ்சி நின்று
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 14 : 20.

**நசீறு** nacīṟu, இ. பெ. ஒரு சிலையின் பெயர்.
கெடுந *சீறெ*னும் புத்திளை
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 29 : 6 (1264).

**நசுகர்** nacukar, இ. பெ. ஒரு ஆணின் பெயர்.
சகீது மகனார் *நசுகர்*
புதுகுஷ்ஷாம் : 22 : 41.

**நசுருன்** nacuṟāṉ, பெ. ஒரு நகரின் பெயர்.
போந்தான் *நசுருன்* எனும்பதியில்
பனியகுமது மரைககாயர் : சீருப்புராணம் : 32 : 20 (1354).

**நசுருனி** nacurāṉi, பெ. nasrānī < نصراني > கிறித்தவர்.

தாம வொண்புயத் தினர் நசுருனிகள் தடஞ்சூழ்
பூம லர்ப்பொழில் குனையின்வந் தடைந்தனர் புதிதாய்
சீருப்புராணம் : 7 : 48.

**நசுறுன் மினல்லாகி யொபத்தகுன் கரீப்** nacurun miṉallāki yopattukuṉ karīb, தொ. < nasrun minallāhi wo fathun qarīb نصر من الله وفتح قريب அல்குர்ஆனில் உள்ள ஒரு வாக்கியத்தின் பகுதி (61:13) அல்லாஹ்வுடைய உதவியும் துரித வெற்றியும்.

உறுதி தரும் நசுறுன்மினல் லாகி யொபத்துகுன் கரீபெனவே
பொறிகொடி கைக்கொளுஞ் சிபுரியில் செப்பினர்
இரவுசுல்கூல் படைப்போர் : 6 : 17.

**நத்தறு சாகிபு ஆலிம்** nattāṟu cākipu ālim, இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியாரின் பெயர்.

தேனலஞ் செறிந்தவாயின் செய்யிது காமிதென்று
மானநத் தறுசாகிபு ஆலிமிவ் வுரை செய்தாரால்
திருமணிமாலை : 1 : 23.

**நதையில்** nataiyil, இ. பெ. ஒரு கோத்திரத்தின் பெயர்.

நாவின் மறைநேர் பகர்ந்த றியா
நதையில் கிளையார் உறை பதியில்
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 32 : 20 (1354).

**நபஹாத்** napahāt, பெ. நஃபஹாத்துல் அன்பர் என்னும் நூலினைக் குறிப்பது.

வாகுயர் நபஹாத் தென்னும் வரிசையின் கிதாபிற் போந்த
சாதுலிநாயகம் : 2 : 2.

**நபி** napi, பெ. < nabiyy نبی > தீர்க்கதரிசி.

நம்பெறும் பேறென நபியைப் பொன்னுல
கம்பொனீ ராட்டிநல் லமுத மூட்டியே
சீருப்புராணம் : 6 : 2.

**நபி சல்லல்லாகு அலைகி வசல்லம்** napi callallāku alaiki vacallam, தொ. <nabi sallallāhu alaihi vasallam نبی صلی الله علیه وسلم > நபி மீது அல்லாஹ்வின் சாந்தி உண்டாவதாக.

எல்லை யுற்ற யெகீன்மரத் தார்நபி
சல்லல் லாகு அலைகிவ சல்லமே
பத்றுத்தீன் புலவா : முகியித்தீன் புராணம் : 19 : 8.

**நபியுல்லா** napiyullā, இ. பெ. அல்லாவின் நபி.
முப்படி நாளும் போற்றும் முத்திசேர் *நபியுல்லாவும்*
பனியகுமது மரைக்காயர்: சீறப்புராணம்: 4 : 45 (154)

**நபிறு** nabiṟu, இ. பெ. ஒரு ஆணின் பெயர்.
*நபிறு* உதவும் குபைரீது
பனியகுமது மரைக்காயர்: சீறப்புராணம்: 24 : 123 (1028).

**நபுசு** napucu, பெ. <nafs نفس> ஆசை.
வினைத்திற *நபுசை* நீங்கி விளங்கிய மணங்கு மாசை
பத்றுத்தீன் புலவர்: முகியித்தீன புராணம்: 15 : 65.

**நபுசு அம்மாறு** napucu ammāṟā, பெ.
<nafs ammārāh نفس أمارة> பாவம் செய்யும்படி தூண்டக் கூடிய மனம்.
*நபுசுஅம் மாறு* காபு நடக்கும்
பீர்முகம்மது சாகிபு: ஞானமுச்சுடர்ப்பதிகங்கள்: ஓர்மைப்பதிகம்: 8.

**நமிறத்து** namiṟattu, இ. பெ. ஓர் இடத்தின் பெயர்.
இதமுற ஏகிப் பிறக்கத்து *நமிறத்து*
என்னுமத் தலத்தினில் இறுத்தார்
பனியகுமது மரைக்காயர்: சீறப்புராணம்: 38 : 31 (1618).

**நவுபல்** navupal, இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியார்.
இயாது *நவுபலுவும்*
அருணக் கைசும் சல்மானிவ் வ்சுகா பிகள்மெய்யுடை நிலைமைத்
தருணம் பூண்டார்
புதுகுஷ்ஷாம்: 37 : 3.

**நஸ்ரு** nasrā, பெ. ஒரு குலத்தின் பெயர்.
வன்மன *நஸ்ரு* வென்ன வருபெரும் குலத்தில் தோன்றிப்
சீறப்புராணம்: 10 : 29.

**நஸீப்** nasip, பெ. <nasib نصيب> பாக்கியம்.
நல்ல *நஸீப்* இல்லாதால் நாட்டமது தவறி
பீர்முகம்மது சாகிபு: பிஸ்மில்குறம: 149.

**நஸீஹத்** nasihat, பெ. பார். நசிகத்.
உன்கை பிடித்தே ஓதுந *ஸீஹத்தை*
பீர்முகம்மது புலவர்: ஞானநடனம்: 9.

**நஜாசா** najācā, இ. பெ. அபிசீனிய நாட்டு மன்னர் இவ்வாறு அழைக்கப்பட்டனர். ஆங்கிலத்தில் negus என அழைக்கப்பட்டனர்.
நறைதரு துருக்க மாலை நரபதி *நஜாசா* என்போற்கு
பனியகுமது மரைக்காயர்: சீறப்புராணம்: 4 : 1 (110).

**நஜாசி** najāci, இ. பெ. நபிகள் நாயகம் (சல்) அவர்களின் காலத்து அபிசீனிய நாட்டு மன்னன்.

*உற்ற நும்மனத் துடன்பட வுறைபவ ருடனும்*
*வெற்றி மன்னஜாசிய்யுறை திருநகர் மேவி*
சீறாப்புராணம் : 35 : 6.

**நஹிமா** nahimā, பெ. < nahma نهمة >

ஆழமாக மூச்சுவிடல்.

*நவ்விலிருந்த நஹிமாவை நாட்டம் புரிந்தான்*
பீர்முகம்மது சாகிபு: ஞானமுச்சுடர்ப் பதிகங்கள்: ஹக்குமுருதுப் பதிகம்: 1.

**நஹூவு** nahūvu, பெ. பார். நகுவு.

*ஈட்டுமாமொழி யிரண்டு மற்றிரண்டினு மியையக்*
*கூட்டுறுந்திணை பாவிடந்தொகை வழுக் குறிய*
*காட்டுகாலமே யேனைய விதியின கலந்து*
*நாட்டுமாம் பொருள் விளங்கிய விளக்குறு நஹூவும்*
ஆரிபுநாயகம் : 8 : 11.

**நாகூறு** nākuṟu, இ. பெ. சாறூகு என்பவரின் புதல்வர்.

*மேதினிக் கரசென விளங்குந்*
*திண்டிறற் றகூறுதவிய மதலை*
சீறாப்புராணம் : 4 : 50.

**நாசூத்** nācūt, பெ. < nāsūt ناسوت >

மனிதத்தன்மை; சட உலகம்.

*வியம்பிடும் நாசூத் தென்று*
பீர்முகம்மது சாகிபு: ஞானமுச்சுடர்ப்பதிகங்கள்: ஓர்மைப்பதிகம் : 2.

**நாசூத்து** nācūttu, பெ. < nāsūt ناسوت >

மெய்ஞ்ஞான வழியில் புகுமுன் ஒவ்வொரு மனிதனினதும் தன்மை.

*வரிசை நிலைத்த நாசூத்தில் வளர்ந்த நிலையாம் மலக்கூத்தில்*
சாதுலிநாயகம் : 20 : 5.

**நாபிகு** nāpiku, இ. பெ. < nāfi' نافع >

அருள் சொரிபவன். அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். ளாகிர்.

இராஜநாயகம் : 36 : 40.

**நாம்** nām, இட. பெ. ஓர் இடத்தின் (கோட்டையின்) பெயர்.

*நாம் எனப்பேர்*
*செப்பும் எயில்மேல் ஏணிவைத்தேறும்போது*
பனியகுமது டிரைக்காயர் : சீறாப்புராணம் : 12 : 25 (269).

**நாமுசு** nāmūcu, இ.பெ. <nāmūs (nāmūs akbar) ناموس >
தூதர் ஜிபுறீல் (அலை) அவர்களின் மற்றொரு பெயர்.

தாவில் *நாமுசு* ஏகுமட்டும்
சற்றே பொறுமென் றேமென்றார்

பனியகுமது மரைக்காயர் : சீறப்புராணம் : 39 : 85 (1722).

**நாயில்** nāyil, பெ. பார். குபைல்.
ஒரு சிலையின் பெயர்.

தஞ்சமாம் குபல் *நாயிலைத்* தசாவெனத் தரும்பேர்

பனியகுமது மரைக்காயர் : சீறப்புராணம் : 29 : 6 (1265).

**நாருசா** nārucā, பெ. பிரசாதத்தைக் குறிக்கும் பார்சி சொல். இது முஸ்லிம் புனித தலங்களில் நடைபெறும் அன்னதான விழாக் களில் மக்களிடையே பகிர்ந்தளிக்கப்படும்.

இந்த வேலையிலே நல்ல விபுருஹீம் சாகிபென்னு
மந்தரா சலப்பு யத்தார் *நாருசா* வழங்கலுற்றார்

தீன் விளக்கம் : 22 : 13.

**நாலிறு** nāliṟu, பெ. < nālir ناظر >
பார்த்துக் கொண்டிருப்பவர்.

அன்பு கொண்டுள்ள காலிறு *நாலிறு*

ஞானக்குறம் : நாட்டுவளங்கூறுதல் : 36.

**நிக்காகு** nikkāku, பெ. <nikāh نكاح > திருமணம்.

இருமுது குரவர் தாமும் இலங்குமொர் மனத்தராகி
யருமறை விதித்த வா மற்றறுவரோ டருமை சான்ற
விருவரு மெனு மிரண்டா மெண் மரு மின்ப மெய்த்த்
திருமண முயர் *நிக்காகு* செய்தனருவப் பினன்றே

நாகூர்ப்புராணம் : 8 : 120.

**நிகுமத்** nikumat, பெ. < ni'mat نعمة > அருட்கொடை.

இன்னலங் கனியு மியான்றரும் வரிசை
யிவை *நிகுமத்துகட்* கெல்லாம்

புதுகுஷ்ஷாம் : 46 : 156.

**நிகுமத்து** nikumattu, பெ. பார். நிகுமத். பேறு.

செல்லா *நிகுமத்து* மீடேற்றமும்

ஞானப்புகழ்ச்சி : 131.

**நிகுமத்து லில்லாகி வல்லலமத்து லில்லாகி** nikumattu lillāki vallalamattu lillāki, தொ. அல்லாஹ்வின் அருள்

மன்னெனன் *னிகுமத்து லில்லாகி வல்லல மத்துலில் லாகி*

நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 18 : 44.

**நிசாறு** nicāṟu, இ. பெ. உதது என்பவரின் புதல்வர். நபிகள் நாயகம் (சல்) அவர்களின் மூதாதையர்.

புண்ணிய பொருளா யுருவெடுத் துலகம்
புரந்த*நிசாறு* இடத் துறைந்த
சீறுப்புராணம் : 4 : 57.

**நிசான்** nicān, இ. பெ. < nishān نشان > (Persian) கொடி.

முற்றும் அமைத்து வெற்றி *நிசான்* நுடங்கமுன்னில்
நிறுத்தி னரால்
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 12 : 35 (279).

**நிமாசு** nimācu, தெ. < namaz نماز > (Persian)
தொழுகை.

நிறைந்திடுமாறு மதிதனி லொருநா
ளிஷாவினின் *நிமாசு* செய்க வென
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 5 : 18.

**நிய்யத்** niyyat, பெ. பார். நிய்யத்து.

மேவிய கச்சு செய்யும் *நிய்யத்தை*
விருப்பொடும் செய்து
பனியகுமது மரைககாயர் : சீறுப்புராணம் : 38 : 16 (1603).

**நிய்யத்து** niyyattu, பெ. < nīyat نيت >
எண்ணம் வைத்தல்.

பின்னிலை யெய்த அன்னோர் *நிய்யத்திற்* பிரிதல் கொண்டே
சீறுப்புராணம் : 78 : 23.

**நிஃமத்து** nixmattu, பெ. பார். நிகுமத்து.

நெட்டை நெடிய பல *நிஃமத்துறு* மேலவனே
ஞானப்புகழ்ச்சி 275.

**நிஜார்** nijār, பெ. காற்சட்டை.

நிலவெனத் திகழ்மோ லிகஞ்சுகி *நிஜார்* பலவும்
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 25 : 8 (1519).

**நீயத்** niyat, பார். நிய்யத்.

வைத்த *நீயத்* தின்முற் கலிமத் தாந்திக்
றத்துய்ய லாஇலாகா இல்லல்லா குவை
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 8 : 6.

**நீல்** nil, பெ. எகிப்தில் உள்ள நைல் நதி.

மேலாம் ஹவுலல்கவுதர் மெய்யாரென் ருமிசுறில்
*நீலா*ரென் றென்றுரைத்தார் நின்று.
மிகுருசு மாலை : 535.

**நீனவா** nīnavā, இட. பெ. ஓர் ஊரின் பெயர்.

நள்ளென வுலகினுாழின் வருநசுருனி மார்க்கத்
துள்ளவ னீன வாவெஸ் ரோதிய வூரி னுள்ளோன்
சீறாப்புராணம் : 42:6.

**நுக்கத்** nukkat, பெ. < nuqt. نقط >

புள்ளி. (அறபு எழுத்துக்களுக்கு மேலிடப்பட்டுள்ள புள்ளி).

நுக்கத்து மங்கோ ரலிபாக நின்ற பின்னுமிறை யோன்
ஞானமணிமாலை : 136.

**நுக்தா** nukta, பெ. < nuqtā نقطة > புள்ளி; மூலாதாரமையம்.

தமிழில் மெய்யெழுத்து உச்சரிப்பைப் பெறவே இது பயன்படுத்தப்படுகிறது.

அரிதான தாத்திலோ அலிபெனும் சுகவாரி
யாகும் நுக்தா வதனிலோ
மஸ்தான் சாகிபு பாடல் : வஸ்துதயத்திறனந்தம்.

**நுகபா** nukapā, பெ. ஒரு கூட்டத்தினரின் பெயர்.

அருள் அணி நுசபாக்களின் உளர் மேன்மை அமை
நுகபாக்களின் உளரும்
புதுகுஷ்ஷாம் : 46 : 120.

**நுகுமான்** nukumāṉ, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

துலக்கிய நுகுமான் கைவாட்
டுய்த்தலி ஹலி யீய்ந்தான்
புதுகுஷ்ஷாம் : 45 : 8.

**நுசபா** nucapā, பெ. ஒரு கூட்டத்தினரின் பெயர்.

அருள் அணி நுசபாக்களின் உளர்
புதுகுஷ்ஷாம் : 46 : 120.

**நுசூல்** nucūl, தொ. பெ. < nuzūl نزول > இறங்குதல்.

இற்று ருதுவிட் டிறங்குது சூல தால்
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 8 : 18.

**நுபுவ்வத்** nupuvvat, பெ. < nubuwwat نبوّة >

நபித்துவம்.

பல்லுயி ரளிக்கும் வல்லவன் கருணை
பாத்திய நுபுவத்தி னௌிவு
புதுகுஷ்ஷாம் : 27 : 40.

நுமுறூது numurūtu, இ. பெ. < nimrod. namrūd نمرود >
இவன் கன்ஞன் என்பவரின் புதல்வன். இவன் இபுருகீம் நபியின் பரம விரோதியாக இருந்தவன். இபுருகீம் நபியவர்களைத் தீக்குழி யில் எறிந்தவன்.

மன்னியபுன்மை மலிநுமுறூது மருங்கினர் விளத்துநஞ் சிறையிற்
திருமணிமாலை : 17 : 24.

நுமைறு numairu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.
எரிவே னுமைறு திருமகவே
இசைத்தீர் உண்மை என்னையெனல்
புதுகுஷ்ஷாம் : 29 : 126.

நுலறு nularu, இ. பெ. நபிகள் நாயகம் (சல்) அவர்களின் மூதா தையர் கஞை என்பவரின் புதல்வர்.
மடங்கலே றனைய தளபதி கஞை
மகிபதி தவத்துறு மதலை
நுடங்கிடை மடவார் கருத்தினைக் கவரு
நுலறு எனு மழகுறு மரசன்
சீறுப்புராணம் : 4 : 61.

நுஜூம் nujum, பெ. < nujūm வானவியல்.
கால மூன்றையு மறிகுநர்
கடற்புவி கணக்கிடு நுஜூமாளர்
சாதுலிநாயகம் : : 19 : 16.

நூகு nūku, இ. பெ. ஒரு நபியின் பெயர்.
பிறந்த பல்லுயி ரனைத்துமுற் பிரளய மதனி
லிறந்தி டாவகை நூகுநன் னபியினி தளித்தார்
நிறந்த மீஇபு ருஹி நன் னபி பெரு நெருப்பைச்
சிறந்த மென்மலர் வாவியிற் குளிர்தரச் செய்தார்
சீறுப்புராணம் : 32 : 99.

நூசு nūcu, இ. பெ. ஓர் அரசன்.
மெழிலாருட லதினூ செனு மியன் மீறிய வரசன்
திருமணிமாலை : 5 : 67.

நூறுயில் nūrāyil, இ. பெ. ஒரு மலக்கின் (வானவரின்) பெயர்.
பனியகுமது மரைக்காயர்: சீருப்புராணம்: 24 : 37 (942).

**மரீகத்து** marīkattu, பெ.

*மரீகத்து* அசுஹாபாவும்

பீர்முகம்மது சாகிபு: ஞானமுச்சுடர்பபதிகங்கள்: ஓர்மைப்பதிகம்: 2.

**மலக்கல் மவுத்** malakkal mavuth, பெ. பார். இஸ்ருயீல்.

*மலக்கல் மவுத்*திடத் துயிர்கண்
மீட்டி வித்தவரலாற்றை வழுத்துவாம்

நவமணிமாலை (முகியித்தீன் புராணம்): 26 : 1.

**மலக்கு** malakku, பெ. < malak ملك > விண்ணவர்.

தொழுமிறை யவன்றன் *மலக்கு* களெவர்க்குஞ்
சோபன மகிழ்வுகள் உதிக்க
வண்ணக்களஞ்சியப் புலவர் : குத்பு நாயகம் : 5 : 25.

**மலக்கூத்** malakkūth, பெ. < malakūt ملكوت >
மலக்குகளின் (வானவரின்) தன்மை.

வில்வகை *மலக்கூத்* தினெய்தும் ஆண்டகை
சாதுலிநாயகம் : : 16 : 16.

**மலக்கூத்து** malakkūthu, பெ. < malakūt ملكوت >
வானவரின் தானம்.

காசின் *மலக்கூத்* தாகுந் தலம்.
சாதுலிநாயகம் : 20 : 1.

**மலிக்** malik, இ. பெ. < malik ملك > அரசன்.
அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். யாறகுமான்.
இராஜநாயகம் : 36 : 37.

**மலுக்கர்** malukkar, இ. பெ.
பீர்முகம்மது அப்பா அவர்களின் தந்தை.

துதியும் பெருஞ்சிறு *மலுக்கர்* பாலன்
ஞானப்புகழ்ச்சி : 20.

**மலுகறு** malukaṟu, பெ. < mazhar مظهر > வெளிப்பாடு.

தெரியு நல*மலுகறெ*னும்
ஞானப்புகழ்ச்சி : 382.

**மலுகறுல் விலாயத்** malukaṟul vilāyat, தொ. < mazharul wilāyat مظهر الولاية > சிறப்பாற்றல் தோன்றும் இடம்.

கன்மமாகிய *மலுகறுல் விலாயத்*தின் கண்டிறந்த தையன்றே
ஆரிபுநாயகம் : 10 : 4.

**மலுஹறு** maluhaṟu, பெ. < mazhar مظهر >
ஏதாவதொன்று தோன்றும், நிகழும் இடம்.

கருத்தனின் *மலுஹறில்* காணல் ஒட்டிடா
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 7 : 49.

**மவ்லூத்** mavlūt, பெ. < maulūd مولود >
பிறப்பு நாள். பெரியார்களை நினைவு கூர்தல். சிறப்பாக முகம்மது நபி (சல்) அவர்களின்பேரில் புகழ்பாடி விருந்தளிப்பதையும் இச்சொல்லால் அழைப்பர். இத்தகைய ஓதுதலை மவ்லூது ஓதுதல் என்பர்.

வளர்இலப்பை நயினுன் மனையில்மவு *லூ*தோதும்
மறையோர் கண்ட

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 15 : 3 (451)

**மவுத்** mavt, பெ. < maut موت > இறப்பு.

கடந்து *மவுத்*தாக்கிய விறையோன் கயாத்
தாக்குவனு மவனெனவே

வணணக்களஞ்சியப புலவர் : குத்பு நாயகம் : 14 : 18.

**மவுத்து** mavuttu, பெ. பார். மௌத். மரணம்

வந்துமை கொடுபோ *மவுத்தினை* மறந்தீர்

இராஜநாயகம் : 17 : 101.

**மவுலூது** mavulūtu, பெ. < moulid مولد >
முஸ்லிம் பெரியார்களின் பிறந்த நாளைக் கொண்டாடும் பொழுது அவர்கள் புகழ்பாடு முகமாகக் கொண்டாடப்படும் விழாக்கள்.

வேத வோசை *மவுலூ* திஞைசைநலன்
மேவலோது திக்கு ரோசை

நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 25 : 3.

**மவுவா** mavuvā, பெ. ஒரு சுவர்க்கம்.

மாதர் மாம *வுவா* என்ன வழங்கிய சுவர்க்க வீடும்

பனியகுமது மரைக்காயா : சீருப்புராணம் : 39 : 52 (1689).

**மவுஜூது** mavujūtu, பெ. < mawjūd موجود >
உள்ளமை. பார். மகுலியத்.

மஸ்தான் சாகிபு பாடல் : வஸ்துதயததிஞநந்தம்.

**மறியம்** mariyam, இ. பெ.
ஈசா நபி (அலை) அவர்களின் தாயார்.

மானமும் கற்பும் ஒன்ருய் வரும்எழில் *மறியம்* ஈன்ற
கோன்நபி ஈசா

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 26 : 9 (1080).

**மறியம்** maṟiyam, பெ. தலைசிறந்த பெண்கள் நால்வருள் ஒருவராகக் கருதப்படுவர். முகம்மது நபி (ஸல்) அவர்களின் பிரசவத்தின் போது உதவியவர்.

மவ்வலங் குழலார் *மறியமென்* றுரைக்கு

சீருப்புராணம் : 5 : 81.

**மறியம்** mariyam, இ. பெ. ஈசா நபி அவர்களின் தாயார்.

திரத்தி னபியே *மறியம*ருள் செல்வக் குரிசில்
புதுகுஷ்ஷாம்: 46 : 81.

**மறுகப்** marukap, இ பெ. ஒரு தலைவன்.

ககனம் அளக்க வளர்ந்த மதில்
காக்கும் அரையன் *மறுகப்* என்போன்
பனியகுமது மரைக்காயர்: சீறப்புராணம்: 12 : 74 (318).

**மறுகசு** marukacu, பெ. < markaz مركز > மத்தியம்.

வதினொருவாயில் *மறுகசு* என்றுரைத்தார்
அவணமர் நடித்தில வடைத்தே
புதுகுஷ்ஷாம்: 23 : 9.

**மறுத்தபத்** maruttapat, பெ. < martabā مرتبة > பதவி.

ஒக்க லாமே *மறுத்தபத்* தினையுற்றெ றென்றும்
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்): 8 : 98.

**மறுதா** marutā, இ. பெ ஒரு முஸ்லிம் தலைவர்.

அலிதல்கா சுபையிறு உம்மாறு அவர்*மறுதா*
மிகுதாது என்று இவர்கள் ஆறு
பனியகுமது மரைக்காயர்: சீறப்புராணம்: 23 : 15 (890).

**மறுயாயீல்** maruyāyil, இ. பெ.
ஒரு மலக்கின் (வானவரின்) பெயர்.

..............மலக்கா *மறுயாயீல்*
சென்றூர் இவர் யார் மழைகாற்றவை சேர்த்துக்கொடு வருவார்
மிகுறுசு மாலை: 274.

**மறுவா** maruvā, மக்காவில் உள்ள ஒரு குன்று. சபாவுக்கும் மறுவாவுக்கும் இடையில் ஹஜ்ஜின்போது தொங்கோட்டம் என்னும் ஸஈ நிறைவேற்றுவர்.

*மறுவா*வென்னு மிம்மலைக்கு
திருமணிமாலை: 28 : 58.

**மறுவாசபா** maruvācapā, பெ. மக்காவில் உள்ள இரண்டு குன்றுகள். குன்றுகளுக்கிடையே 'ஹஜ்' கடமையை நிறைவேற்றச் செல்வோர் ஓடுதல் வேண்டும். இது 'ஸயீ' என அழைக்கப் படுகிறது.

பாங்கின் நீள்*மறுவாசபா* மலைகளும் கண்டார்
பனியகுமது மரைக்காயர்: சீறப்புராணம்: 35 : 25.

**மறுஹபா** maruhapā, பெ. < marhabā مرحبا > பாராட்டு.

உந்தி தரும்
*மறுஹபா* வுன்னை உண ராவன் பிழை
ஞானப்புகழ்ச்சி 686.

மன்சாயில் maṉcāyil, இ பெ.
ஒரு மலக்கின் (வானவர்) பெயர்.
மல்லவிழ் *மன்சாயில்* தமைவாய் மொழியாய்க் கூவவந்து
மிகுறுசு மாலை : 179.

மன்ஷூக் mansūk, பெ. அன்பு.
மச்சமா ஷிக்கு மதையன்பு மன்ஷூக்கென்
றிச்சை யிஷூக் காக நின்ற ஏகனே
ஞானப்புகழ்ச்சி : 590.

மன்சூர் mancūr, பெ. < mansūr منصور > உதவிபுரிபவன்.
யாமுகம்மதென் ஞெலித்தி யாமன்சூ றென் ருர்த்தரோ
புதுகுஷ்ஷாம் : 40 : 141.

மன்சூறபுல் முலப்பறு mancūṟapul mulappaṟu, இ. பெ.
ஒரு முஸ்லிம் பெரியாரின் பெயர்.
ஆனபேர் விளங்க *மன்சூ றபுல்முலப் பறு*வென் றோங்கும்
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 23 : 7.

மன்சூறு mancūru, இ பெ. ஆரிபுநாயகம் அவர்களின் தாயாரின் சகோதரர்.
கந்தடு கதத்து நால்வாய்க் களிறுறழ் *மன்சூ*றென்பார்
ஆரிபுநாயகம் : 7 : 24.

மன்திக் maṉtik, பெ. < mantiq منطق >
தருக்க சாத்திரம்.
காரண மியலினிற் கலந்த பல்நலங்
காரணங் காரியந் தோற்றக் காட்சியும்
பூரணக் கருத்துமாப் பொருளும் வாய்ப்பதோர்
தாரண *மன்திகா*ஞ் சார்ந்த நூல்களும்
சேகுனைப்புலவர் : குத்புநாயகம் : 11 : 12.

மன்திக் maṉtik, பெ. < mantiq منطق > தர்க்கவியல்.
நலனுறு மரபின் மிக்க நகுவொடு சறுபறூலு
மலிவுறுகா பியாம ஆனி *மந்திகு* பதீகு
புலனுறு லுகத் தென்றேது பொருவறு கல்வியெல்லாம்
பலனுறு செக்கரியாபாற் படித்தனர் சிலநாள் வைகி
வண்ணக்களஞ்சியப புலவர் : குதபு நாயகம : 8 : 58.

மன்ஸாயிலு maṉsāyilu, இ. பெ.
ஒரு மலக்கின் (வானவரின்) பெயர்.
மருவா னவர் சேனைக் கொடுமன் *ஸாயிலு* வந்தார்
மிகுறுசுமாலை : 203.

**மனாசிப்** manācip, இ. பெ. ஒரு ஆணின் பெயர்.
எசுகபீன்ற
*விரைசெறி புயத்து மன்னர் மனாசிபென்றியம் பூமிக்கார்*
புதுகுஷ்ஷாம் : 57 : 66.

**மனாத்து** manāttu, இ. பெ. ஒரு சிலையின் பெயர்.
*நடும னாத்தெனும் புத்தினை ககீதெனும் நட்டோர்*
*தொடுகடற் புவிதனில் நிதம்தொழு திறைஞ்சி னரால்*
பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம் : 29 : 6 (1264).

**மனாம்** manām, பெ. < manām منام > கனவு.
*மன்னியல் முகம்மதின்ப மனாம் இயலோடும் பூண்ட*
புதுகுஷ்ஷாம் : 53 : 45.

**மனாரா** manārā, பெ. < manārat منارة >
பள்ளிவாசலின் உயர்ந்த கோபுரம்.
*நிலைத்த பன் மனாரா எங்கு நிறுத்தினர்*
புதுகுஷ்ஷாம் : 57 : 64.

**மஃரிப்** maxrip, பெ. பார். மகுறிபு.
*இருளில் பகலுச்சி மஃரிபெ ஷாவே வருமளவும்*
ஞானமணிமாலை : 236.

**மஃறிபத்** maxrifat, பெ. < ma'arifa معرفة >
மெய்ஞ்ஞானம்.
*மறிந்தெழு மஃறிபத்தின் வழிதனை உணரும்போது*
ஞானப்பால் : 31.

**மஸ்அலா** masalā, பெ. பார். மசாலா.
*நேர்தரு மஸ்அலா வெத்தனை*
*நிகழ்த்தினும் செயித்தற்கு*
சாதுலிநாயகம் : 10 : 36.

**மஸ்கூத்** maskūt, பெ. எ. < maskūt مسكوت >
மௌனமான. பார். மகுலியத்து.
மஸ்தான் சாகிபு பாடல் : வஸ துதயத்தினானந்தம்.

**மஸ்கூத்து அன்கு** maskūttu anku, < maskūt 'anhu مسكوت عنه >
சொல்லொணாத அதைப்பற்றி. பார். மகுலியத்து.
மஸ்தான் சாகிபு பாடல் : வஸ்துதயத்தினானந்தம்.

**மஸ்து** mastu, பெ. மதுவினால் மயக்கமுறல்.

அறந்தயங்கவ் வமுறு படுத்திரு
புறந் திரும்பிப் புரண்டு *மஸ்* தாற்றனே
மறந்து றங்கு நர்

இரவுசுல்கூல் படைப்போர் : 31 : 50.

**மஸ்ஜாயாயீல்** masjāyāyil, இ. பெ.
ஒரு மலக்கின் (வானவரின்) பெயர்.

..............அன்பார்
தருந்தலைவர் ஆகு*மஸ் ஜாயாயீல்* மலக்குப்
பரிந்திலங்க வந்தார் பணிந்து

மிகுருசுமாலை : 291.

**மஜ்லீஸ்** majlis, பெ. < majlis مجلس > கூட்டம்.

கலியென மனத்தி னுற்றுக் கலைந்தனர் *மஜ்லீ* சோரே

பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 11 : 34.

**மஜானூன்** majunūn, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

வங்காம் வரிச்சிர சில்வன் காதல் *மஜானூ* னையுன்
வாசறை திறப்ப ரெவரோ

பீர்முகம்மது சாகிபு : அறைதிறப்புபபதிகம் : 6.

**மஷரிக்கு** masarikku, பெ. பார். மசுரிக்.

வண்டரு *சிறகி ரண்டு மஷரிக்கு* மகரி பெட்டும்

மிகுருசுமாலை : 537.

**மஹ்பூப்** mahpūp, இ. பெ. <mahbūb محبوب > அன்பர்.

எனக்குறு *மஹ்பூ* பான வேந்தலே முகியித்தீனே

பதறுததீன் புலவா : முகியித்தீன புராணம் : 16 : 50.

**மஹரிப்** maharip, பெ. பார். மகுறிப்.

இசையுறு *மஹரி* பென்னு நேரத்தின் இரையை நோக்கி

கனகாபிஷேகமாலை : 27 : 58.

**மாசீது** mācitu, இ. பெ. < mājid ماجد >

ஆட்சியும் அதிகாரமும் ஒருங்கே அமைந்த கண்ணியமுடையவன், அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். மசீது.

இராஜநாயகம : 36 : 39.

**மாபிதிர்** mapitir இ. பெ. தாபிது என்பவன் மகன்.

தாபிது நன்று நின்றன் றவத்தொடு மரிதிற் பெற்ற
*மாபிதிர்* மகவையென்பான்

திருமணிமாலை : 4 : 63.

**மாபு** māpu, இட. பெ. ஓர் இடத்தின் பெயர்.

*கண்அகன் மாபு என்று ஓதும் தானம்*

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 21 : 33 (716).

**மாரியத்து** māriyattu, இ. பெ.

இவர் ஒரு கிப்திப் பெண்மணி. சம்ஊன் என்பவரின் புதல்வி. இவர்களை எகிப்து மன்னர் முகௌவுக்கீசு என்பவர் நபிகள் பெருமானருக்கு அன்பளிப்புச் செய்தார்.

*மட்டிலாப் புகழ்வளர் சம்ஊன் தவத்து உதித்த*
*வட்டபால் மொழி மாரியத்து அணங்கு*

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 5 : 16 (173).

**மாலிக்கி யௌமித்தீன்** mālikki evmittīṉ, தொ. < mālik yawmiddīn مالك يوم الدين > தீர்ப்பு நாளின் அதிபதி.

*ஏவலுறு மாலிக்கி யௌமித்தீனென்றடியார்க்கு*

ஞானப்புகழ்ச்சி : 669.

**மாலிக்குல் முல்க்** mālikkul mulk, சி. பெ. < māliku'lmulk مالك الملك > அரசின் அதிபதி.

அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். ளாகிர்.

இராஜநாயகம் : 36 : 40.

**மாலிக்குல் லுகத்துரிய்** mālikkul lucut turiy, இ. பெ.

ஓர் ஆணின் பெயர்.

*மானவேல் கறுபுசேயு மாலிக்குல் லுகத்துரிய்யும்*

புதுகுஷ்ஷாம் : 24 : 141.

**மாலிக்குல்லுஸ்தர்** mālikkullustar, பெ. ஒரு ஆணின் பெயர்.

*மாலிக்குல் லுஸ்த ரெனப் பெயர் பெற்றுர்*

புதுகுஷ்ஷாம் : 42 : 108.

**மஷாயிகீன்** mashāyikīṉ, பெ. < mashāyikīn مشائخين >

பார். மசாயிகு.

*............திகழ்தரு மஷாயிகீன்*

சாதுலிநாயகம் : 6 : 17.

**மால்** māl, பெ. < ma'al مال > நிதி.

*கெடிகொளுன்னியினிறபியங் கிளைக்கு மாலளித்தப்*
*படைதிரட்டிக் கொண்டமர் பொரப் பரிவினிங் கடைவேன்*

இரவுசுல்கூல் படைப்போர் : 39 : 6.

**மாலம்யகுலம்** mālamyahulam, தொ. <mālamyalam مالم يعلم >
அறியாதவைகளையெல்லாம். முகம்மது நபி (ஸல்) அவர்களுக்கு முதன்முதல் அருளப்பட்ட ஐந்து திரு வசனங்களுள் கடைசித் திரு வசனத்தின் இறுதிப் பகுதியாகும் இது.

இக்கறவு வெனும்சூ றத்தி லிருந்தைந் தாயத் தின்ப
மெய்குற *மாலம் யஃலு* மெனுமட்டும் விளம்புவீர்
சீறுப்புராணம : 25 : 27.

**மாலிக்** mālik, இ பெ. ஒரு முஸ்லிம் தலைவர்.
*மாலிக்* கென்னும் சுத்துரியும்
புதுகுஷ்ஷாம் : 32 : 19.

**மாலிக்கு** mālikku, இ. பெ.
நரகத்திற்குப் பொறுப்பாயுள்ள மலக்கு (வானவர்).
மழைபோ லருள்கர ரேயுயர் *மாலிக்* கிவரென்றார்
மிகுருசு மாலை : 410.

**மாலிக்கு** mālikku, இ. பெ. நபிகள் நாயகம் (சல்) அவர்களின் மூதாதையர் நுலறு என்பவரின் புதல்வர்.
முடங்குளைப் பகுவாய் மடங்கலங் கொடியார்
மோலிமா *லிக்கு* சார் பிருந்த
சீறுப்புராணம் : 4 : 61.

**மாலிக்குன்னகயி** mālikkuṉṉakayi, இ. பெ.
ஒரு முஸ்லிம் தலைவர்.
...............உயர்
மாற்செலு *மாலிக்கின் னகயி* யாண்டகை
புதுகுஷ்ஷாம் : 42 : 74.

**மாலில்** malil, இ. பெ. ஒரு மலக்கின் (வானவரின்) பெயர்.
சென்னிக்குள் மொய்த்த சிறைவைத்த வானவர்
திருநாம *மாலி* லெனவே
மிகுருசுமாலை : 303.

**மாலீக்கு**[1] mālīkku, இ. பெ. ஒரு மன்னன்.
ஆதிதூதை
நம்பும் *மாலீக்கு* வேந்தன்
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 17 : 31 (495).

**மாலீக்கு**[2] mālīkku, இ. பெ. ஒரு ஆணின் பெயர்.
கடும்களிறு தனைநிகர்க்கும் *மாலீக்குச்*
செய்தவத்தால் கனல்கண் சிந்தும்
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 27 : 2 (1084).

**மானியு** māṉiyu, இ. பெ. < māni مانع > தடுத்து வைப்பவன். அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். ளாகிர்.
இராஜநாயகம் : 36 : 40.

**மிக்குவம்** mikkuvam, இ. பெ. நாகூறு என்பவர் புதல்வர்.
மைந்தர்மிக் குவந்தம் மிடத்துறைந் திருந்து
மாட்சி பெற் றிலங்கிய தன்றே
சீருப்புராணம் : 4 : 55.

**மிகுசபு** mikucapu, இ. பெ. ஒரு ஆணின் பெயர்.
எறும் *மிகுசபுக்கு*
புதுகுஷ்ஷாம் : 29 : 10.

**மிகுசபுபுனு மகாரிபுல் பசக்கரி** mikucapupuṉu makāripul pacakkari, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.
*மிசுக புபுனு மகா ரிபுல்பசக் கரியின்* வீசும் எரிவாளே
புதுகுஷ்ஷாம் : 29 : 120.

**மிகுதாது**[1] mikutātu, இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியார்.
தாரணி லஃகாக்கு *மிகுத்தாது*
புதுகுஷ்ஷாம் : 38 : 7.

**மிகுதாது**[2] mikutātu, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவர்.
அலிதல்கா சுபையிறு உம்மாறுஅவர் மறுதா
*மிகுதாது* என்று இவர்கள் ஆறு
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 23 : 15 (890).

**மிகுருசு** mikuṟācu, பெ. < mi'rāj معراج >
*விண்ணுல யாத்திரை.*
இருண்டது புவியும் வானு மெழினபி *மிகுறு* சேகத்
திரண்டது போலக் கங்கு நிமிரமெத் திசையுங் காட்ட
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 6 : 6.

**மிகுருப்** mikuṟāp, பெ. < mihrāb محراب >
பள்ளிவாசலில் இமாம் தொழுகை நடத்துவதற்கென ஒதுக்கப்பட்ட இடம்.
தாவூது
நபி*மிகுருபில்* வந்திருந்து
இராஜநாயகம் : 14 : 1.

**மிகுருப்** mikuṟāp, பெ. பார். மிஹ்ராப்.
மணி *மிகு ருபொடு* மற்று மின்பரு
மணி பெற
புதுகுஷ்ஷாம் : 47 : 51.

**மிசிக்கீன்** micikkiṉ, பெ. < miskīn مسكين > ஏழை.

ஆசைகளறுமிசிக் கீனீ யாரிவண் வந்தவாறைப்
பேசுகவெனு லுமாதி பேரினிற் கிருபையின்றி
மாசிலான் றகுமத்தாசை வைத்திடார் *மிசிக்கீ* னுகுங்
காசிலாச் சுபையி றென்பேர் காணெனக்
கழறிச் சொல்வார்

இராவுசுலகூல் படைப்போர் : 9 : 33.

**மிசுவாக்** micuvāk, பெ. < miswak مسواك >
பல் துலக்கும் குச்சி.

திண்மையின் *மிசுவாக்கோடு* திருமனை யடைய வள்ளல்

புதுகுஷ்ஷாம் : 10 : 4.

**மிசுறியர்** micuṟiyar, பெ. எகிப்து நாட்டினர்; மிசுறு என்னும் அறபுச் சொல்லோடு தமிழ் விகுதி இயர் வந்துள்ளது.

சீர்புனை யாண்டகை யபு வுபை தாமுன்
னெழுந்து நின்றனர் *மிசுறியர்* சிலர்

புதுகுஷ்ஷாம் : 35 : 19.

**மிசுறு** micuṟu, பெ. < misr مصر > எகிப்து.

தடம்உடுத்தபல் வளம்தரு *மிசுறு* எனும் தலமும்.

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 5 : 2 (159).

**மிறுக்கால்** miṟukkāl, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவர்.

வெல்லும் கதிர்வேல் *மிறுக்காலும்*

புதுகுஷ்ஷாம் : 32 : 18.

**மிறுத்தாசு** miṟuttācu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

எரியிடை ஊழும் மூழ்கி எரிந்திடும் *மிறுத்தாசு* என்போன்

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 26 : 1 (1072)

**மிறுமாத்து** miṟumāttu, பெ. ஒரு ஆணின் பெயர்.

நாவினின் மறைதவழ் *மிறுமாத்து* நன்மகனுர்

புதுகுஷ்ஷாம் : 19 : 53.

**மின்பர்** miṉpar, பெ < minbar منبر >

ஏறிநின்று பிரசங்கம் பண்ணுவதற்காகத் தொழுகை நடத்தும் இடத்திற்கு அணித்ததாகப் பள்ளிவாசலில் அமைக்கப்பட்டுள்ள சிறு மேடை.

நன்னிலை கொள்ளு நபி முகம்மதனுர்
நனிசல வாத்தெடுத் தோதிப்
பின்னிலை கொள்ளு *மின்பர்விட்* டிறங்கிப்
பிரியமுற் றிருந்தனர் வள்ளல்

புதுகுஷ்ஷாம் : 46 : 159.

**மின்பறு** minparu, பெ. பார் மின்பர்.

ஏவலும் விலகல் மற்றும் இயம்பிடு மறையின் தீஞ்சொல்
மேவிய குதுபா ஓத *மின்ப* றென்று இழைத்தல் சொல்வாம்
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 20 : 1 (650).

**மினா** mina, இட. பெ. < mina مِنیٰ >

நன்னயந் தரும் அகவொடு நாயகர் நவங்க
டுன்னுகின்ற *மினா*வெனு மிடத்தருந் துதிசேர்
திருமணிமாலை : 29 : 76.

**மினாகு** minaku, இட. பெ. ஒரு இடத்தின் பெயர்.

வன்றிறற் சேனையாவும் வளைவித்து *மினாகி*ன்மைந்த
னன்றவன் பாலுமோலை யனுப்பித்தான் மன்ன னன்றே
திருமணிமாலை : 4 : 93.

**மீக்காயீல்** mikkāyil, இ. பெ. < mikail ميكائيل >

ஒரு வானவரின் பெயர். மலை முதலானவற்றிற்கு பொறுப்பாக இருப்பவர்.

இவணுறுந் தகையார் மகிமையின் *மீக்காயீல்* இவர்
திருமணிமாலை : 27 : 31.

**மீம்** mim, பெ. < mim م >

அறபு அரிச்சுவடியில் உள்ள ஓர் எழுத்து.

ஈந்தலிபு லாமுடனே *மீமும்*
ஞானப்பூட்டு : 10.

**மீனா** minā, இட. பெ. பார். மினா.

மக்காவுக்கும் அறபாவிற்கும் இடையில் உள்ள ஓர் இடம். ஹஜ் கடமையை நிறைவேற்றச் செல்லும் பயணிகள் இங்கு தங்கிக் கல்லெறிவர்.

உறைந்திடும் *மீனா* எனுந்தலம் போந்து
ஒகுத்துடன் லுகர்முதல் மறுநாள்
சிறந்திடும் சுபுகோடு இவைகளைந் தொகுத்தும்
திடத்துடன் தொழுதிருந் தனரால்
பனியகுமது மரைக்காயா : சீருப்புராணம் : 37 : 30 (1617).

**முஅத்தீன்** muattin, பெ. < mu'azzin مؤذن >

முஸ்லிம்களை தொழுகைக்கு அழைப்பவர்.

இருபுய மலைகள் புளகமுற் றிருந்தா ரிரவிரு ளகன்ற
பின் *முஅத்தீன்*
விரைவினில் வாங்கு புகன்றிட வெவரு மேவின
ரிமாமொடு தொழுதார்
தீன் விளக்கம் : 5 : 27.

**முஅத்து** muattu, இ. பெ. அதுனுன் என்பவரின் புதல்வர்; நபிகள் நாயகம் (சல்) அவர்களின் மூதாதையர்.

கண்ணின்மா மணியா யுதித்திடு முஅத்து
கவின்பெற விருந்தவ ரிடத்தில்
எண்ணிலா வரச ரடிபணிந் திறைஞ்ச
வியற்றிய பேரொளி *முஅத்து*
சீருப்புராணம் : 4 : 57.

**முஆது** muātu, இ. பெ. அபியத் என்பவரின் புதல்வர்.

நனைத்தொடை *முஆது*என் றேதும் நாமநற்குரிசில்
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 33 : 71 (1433).

**முஆபியத்** muāpiyat, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

...*முஆபியத்* தென்று இசைத்திடும் செய்யோர் ஈன்ற
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 33 : 71 (1433).

**முஆயினு** muāyiṉā, < mu'āyana معاينة >

சொந்தக் கண்ணுல் பார்த்தல். முஸ்லிம் மெய்ஞ்ஞானிகள் வழக்கு.

............*முஆயினு*வும்
இன்னமு ஞான மார்க்கவகை...
வண்ணக் களஞ்சியப் புலவர் : குத்புநாயகம் : 12 : 21.

**முஈஸ்** muis, இ. பெ. < mu'izz. معز >

கௌரமும் வலுவும் நல்குபவன்.
அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். ருபிகு.
இராஜநாயகம் : 36 : 38.

**முக்கீம்** mukkim, பெ. < muqīm مقيم > தரித்திருப்பவன்.

வரத்த ராகுமு சாபி ரானவர் *முக்கீமாக*
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 13 : 23.

**முக்குசித்து** mukkucittu, இ. பெ. < muqsit مقسط >

நீதியாளன்.
அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். ளாகிர்.
இராஜநாயகம் : 36 : 40.

**முக்ததிர்** muktatir, இ. பெ. < muqtadir مقتدر >

எல்லாம் வல்லவன்.
அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். மசீது.
இராஜநாயகம் : 36 : 39.

**முகத்திம்** mukattim, பெ. < muqaddim مقدم >
தான் விரும்புபவர்களைத் தன்பால் அணைத்து ஏனையோரை ஒதுக்கித் தள்ளுபவன்.
அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். மசீது.
இராஜநாயகம் : 36 : 39.

**முகத்தீன்** mukattīṉ, பெ. பார் முஅத்தின்.
*முகத்தீன்*கள் வாங்கு முயன்று சொலுமஃது
மிகுருசு மாலை : 621.

**முகம்மதிய்யா** mukammatiyyā, பெ. ஓர் ஒளியின் பெயர்.
வடிவைமு *கம்மதிய்யா* வெனவகுத் துவந்து நோக்கி
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 4 : 5.

**முகம்மது** mukammatu, இ. பெ.
முகியித்தீன் ஆண்டவரின் மூதாதையருள் ஒருவர்.
முறைவழி சிதகாத் தருங்கர தலரா
*முகம்மதெ*ன் றுரைக்கு மாதவரே
பத்றுத்தீன புலவர் : முகியித்தீன் புராணம் : 4 : 11.

**முகம்மது கவுது** mukammatu kavutu, இ. பெ.
பார். முகம்மது ஹவ்து. ஒரு முஸ்லிம் பெரியாரின் பெயர்.
மூத்தவர் புணர்த்தக் கொண்ட *முகம்மது கவுது* எங்கோமான்
காத்தமர் கமலமன்ன கழற்றுணை கருத்துட் கொள்வாம்
ஆரிபுநாயகம் : 1 : 22.

**முகம்மது காசீம்** mukammatu kācīm, இ. பெ.
ஒரு முஸ்லிம் பெரியார்.
காநகர் *முகம்மது காசிம்* வள்ளறம்
பூநிகர் கருணையம் பொலிபு போன்மென
ஆரிபுநாயகம் : 3 : 43.

**முகம்மதுல்லா** mukammatullā, அல்லாவின் முகம்மது என்பது பொருள். முகம்மது நபி (சல்) அவர்களைக் குறிக்கிறது.
நெருப்புகழ் கும்பிக் கிரையாஞ் சுமையிகணேம நிட்டை
கருப்புகழ் கேட்கவும் வேண்டும்கொல்லோ கனகாம் புயத்தால்
பொருப்புகள் சாய்க்கு *முகம்மதுல்லா*தமைப் போற்றி செய்யும்
திருப்புகழ் கேட்டபின் தீனோர்கள் தங்கள் திருச்செவியே
காசிம் திருப்புகழ் : காப்பு.

**முகம்மது லெப்பை** mukammatu leppai, இ. பெ.
ஒரு முஸ்லிம் பெரியார்.
புகழ் *முகம்மது லெப்பை* மரைக்காயன்
பாக்கியப்பா வென்னும்
ஆரிபுநாயகம் : 2 : 17.

**முகம்மது ஹவ்து** mukammatu havtu, இ. பெ.
வட இந்தியாவில் குவாலியரில் வாழ்ந்த ஒரு முஸ்லிம் ஆத்மஞானி. நாகூர் ஆண்டகையின் குருநாதர்.

கோன்மகத் துவரா யுற்ற *முகம்மது ஹவ்து*குவாலீர்
கௌது நாயகர் காரணப் புராணம் : 20 : 34.

**முகல்கில்** mukalkil, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

குதிபுனை *முகல்கி* லீன்ற
புதுகுஷ்ஷாம் : 46 : 12.

**முகல்லம்** mukallam, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

பழுதுறுங் கசட்டு அழுக்கரு *முகல்லம்* என்பவன்
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 31 : 1 (1317).

**முகற்றப்** mukarrap, பெ. < muqarrab مقرب > நெருங்கியவர்.

சுரர்களுக் கரசு *முகற்றபா*னவரும்
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன புராணம் : 54 : 18.

**முகற்றம்** mukarrm, பெ. பார். முஹறம்.

ஏதம் அகல வரும்கி சுறத்து
ஏழின் *முகற்ற* மாதமதில்
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 12 : 3 (247).

**முகவ்விக்கீசு** mukavvikkicu, இ. பெ. நபிகள் நாயகம் (சல்) அவர்கள் காலத்தில் எகிப்தை ஆண்ட மன்னனின் பெயர். இந்த மன்னனுக்கு நபிகள் நாயகம் (சல்) அவர்கள் கடிதம் அனுப்பினார்கள்.

திரண்ட மொய்ம்பன் *முகவ்விக் கீசு*எனும் ஒரு செம்மல்
பனியகுமது மரைக்காயர் : சீறுப்புராணம் : 5 : 3 (160).

**முகறுயாயீல்** mukaruyāyil, இ. பெ.
ஒரு மலக்கின் (வானவரின்) பெயர்.

முந்திக் கறுக்காயில் *முகறுயாயீல்*தமையே
மிகுருசுமாலை : 181.

**முகாசிபா** mukacifa, < mukāsafā مكاشفة >
இரகசியங்கள் திறக்கப்படுதல் என்னும் ஆன்மிக அனுபவம்.

முன்னிய முருக்கபாவு *முகாசிபா* முஆயினவும்
வண்ணக்களஞ்சியப்புலவர் : குத்புநாயகம் : 12 : 21.

**முகாசிரீன்** mukāciriṉ, பெ. < muhājir مهاجر
பிறந்த இடத்தை துறந்து செல்பவர்கள்; நபிகள் நாயகத்துடன் மக்காவிலிருந்து சென்ற தோழர்களைக் குறிக்கின்றது.

காரண நிறையின் *முகாசிரின்* அவரு
மாரண நிறையினன் சாரிக ளெவரும்
புதுகுஷ்ஷாம் : 25 : 8.

**முகியித்தீனறபி** mukiyittīṉaṟapi, இ. பெ. < muhiyyud dīn ibn arabi محي الدين بن عربي > ஒரு தத்துவஞானி.

மங்குருச் சாளரவாய லென்பவை
யங்கெலா *முகியித்தீனறபியாகியே*

வண்ணக்களஞ்சியப்புலவர் : குத்புநாயகம் : 31 : 110.

**முகீத்து** mukīttu, இ. பெ. < muqīt مقيت >

விதியை நிர்ணயிப்பவன்.

அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று பார். ருபிகு.

இராஜநாயகம் : 36 : 38.

**முகுசீ** mukucī, இ. பெ. < muhsi محصي >

கணக்கிட்டு அனைத்தையும் அறிகின்றவன்.

அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். மசீது.

இராஜநாயகம் : 36 : 39.

**முகுத்தி** mukutti, இ. பெ. < muxti معطي >

வழங்குகிறவன்.

அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். ளாகிர்.

இராஜநாயகம் : 36 : 40.

**முகுனிய்யு** mukuṉiyyu, இ. பெ. < muqni مغني >

வளமாக்குபவன்.

அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். ளாகிர்.

இராஜநாயகம் : 36 : 40.

**முகைறத்** mukaiṟat, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

வெற்றி *முகைறத்தும்*

புதுகுஷ்ஷாம் : 47 : 33.

**முகைறா** mukaiṟā, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

தவமிக் குயர்ந்த சகீதுமபு சுபியான் *முகைறுச்* சகீதருளு
நவமிக் கிருசி தென்பவர் மெய் நூலியாய்
புகைறுபோல் மேன்மைத்
துவமிக் குடையார்

புதுகுஷ்ஷாம : 41 : 156.

**முங்கற் நக்கீர்** munkaṟ nakkīr, பார். முன்கர் நக்கீர்.

மொழிபெற வெருவி நிற்கும்
*முங்கற் நக்கீரை* நோக்கி

வண்ணக்களஞ்சியப்புலவர் : குத்புநாயகம் : 28 : 26.

**முசல்லா** mucallā, பெ. பார். முஸல்லா.

முறையொடுந்தவம் புரிந்திடு மொரு *முசல்லாவும்*

பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 11 : 32.

முசல்லி mucalli, < salāt صلوة >

தொழுகையை நிறைவேற்றுகிறவன்.

தெள்ளி தாகிய *முசல்லிக*
ளொலிகுலத் தினராம்
வண்ணக்களஞ்சியப் புலவர்: குத்புநாயகம் 34 : 20.

முசவ்விர் mucavvir, இ. பெ. < mus'awwir مصور >

உரு அமைப்பவன்.

அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். யாறகுமான்.
இராஜநாயகம் : 36 : 37.

முசன்னிபீன் mucaṉṉipīṉ, பெ. < musannifīn مصنفين >

ஆசிரியர்கள்.

*முஸ்தகீனுங்*
கங்கிலொலி மார்*மு சன்னி பீனுங்*
கவிவலை யிமாங்களும் உரைத்தார்
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 8 : 63.

முசாகதா mucākatā, < mušāhadat مشاهدة >

காட்சி. முஸ்லிம் மெய்ஞ்ஞானிகள் வழக்கு.

பொன்னணி யாடை யீய்ந்து
பொருந்திய *முசாகதா*வும்
வண்ணக்களஞ்சியப் புலவர் : குத்புநாயகம் : 12 : 21.

முசாபர் mucāpar, பெ. < mujāwar مجاور >

பரிபாலகர்கள்.

அம்மனையா யிருந்ததனை யவர்தம்பால ராகிவளர்
*முசாபிர்*களாய்த் தோன்றி னேர்கள்
தீன் விளக்கம் : 1 : 25.

முசாயிரா mucāyirā, பெ. < muṣa'irā مشاهرة >

பிரபலம்.

வரத்த நாடு*மு சாயிரா* னவர் முக்கீமாக
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 13 : 23.

முசீபத் mucipat, பெ < musibat مصيبة > கெடுதி.

முகியித்தீனென்று கூற முன்னவன் கருணையுண்டா
முகியித்தீனென்று கூற *முசீபத்*தும் பலாயு நீங்கு
முகியித்தீனென்று கூற முத்தொகை யுலகும் வாழ்த்து
முகியித்தீனென்று கூற முடிவிலாப் பதவியுண்டே
வண்ணக்களஞ்சியப் புலவர் : குத்புநாயகம் : 8 : 69.

முசீபத்து mucipattu, பெ. < musibat. مصيبت > கேடு
எல்லா வினைகளு *முசீபத்தும்* வந்
தென்னை யணுகாமல் காத்தருள்வாய்
ஞானப்புகழ்ச்சி : 102.

முசீபு mucipu, இ. பெ. < mujib. مجيب >
இறைஞ்சுதலுக்குச் செவிசாய்ப்பவன்.
அல்லாஹ்வின் அழகிய திருநாமங்களுள் ஒன்று. பார். ருபிகு.
இராஜநாயகம் : 36 : 38.

முசுயிபு mucuyipu, இ. பெ ஓர் ஆணின் பெயர்.
மூதுரை மறையின் தீஞ்சொல் *முசுயிபு* ஆண்டு
உரைப்பக்கேட்டு
சீருபபுராணம் : 46 : 30.

முசுலிம் muculim, பெ. < muslim مسلم >
இஸ்லாத்தைப் பின்பற்றுபவர்.
ஒருதருள்மதலா யிங்க ணுரைத்தவை *முசுலி* மானோர்
புதுகுஷ்ஷாம் : 36 : 99.

முசுலிமீன் muculimīṉ, பெ. முசுலிம் என்பதன் பன்மை.
அஞ்சலி செய்வ ராக *முசுலிமீன்* அவர்கள் யாரும்
புதுகுஷஷாம : 26 : 38.

முசுறிக் mucurik, பெ. < muśrik مشرك >
பல தெய்வ வழிபாடு செய்பவர்.
தொடர் நசுருனியன்று துயருறு *முசுறிக்* அன்று
நடைதரு நேர்மையற்று நயனுடை முசுலி மென்ன
புதுகுஷஷாம் : 48 : 43.

முசை mucai, இ. பெ. ஒரு ஆணின் பெயர்.
உகைத்த வாம் பரி *முசை* அடையிடப் புறம் முறுத்தி
புதுகுஷஷாம் : 18 : 49.

முசையிபு mucaiyipu, பெ. ஓர் ஆணின் பெயர்.
தாக்கினர் வீர *முசையிபு* வள்ளல்
புதுகுஷஷாம் : 27 : 96.

முசையிபுபுனு தகிய்யத்துல் பசாரி mucaiyipupuṉu takiyyattul pacāri, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவர்.
இசையிற் பறப்ப எத்திசையும் வேகப்பரியோ டாடிவரு
*முசையி புபுனு தக்கியத்துல் பசாரி* முரணு நிசாரியரே
புதுகுஷஷாம் : 29 : 119.

**முத்தஆலி** muttaāli, இ. பெ. < muta'āli. متعالى >
மிகவும் உயர்ந்தவன்.
அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். ளாகிர்.
இராஜநாயகம் : 36 : 40.

**முத்தலக்** muttalak, பெ.
ஒரு பேசு முத்தலக் எழுதி
பீர்முகம்மது ச ாகிபு: ஞானமுச்சுடர்ப்பதிகங்கள்: மயில் வலம்புரிப்பதிகம்: 2

**முத்தலிபு** muttalipu, பெ. ஒரு கோத்திரத்தின் பெயர்.
சூடும் உயர்முத் தலிபுக் கிளையிலுள மைந்தரொடும்
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 23 : 10 (885).

**முதகப்பிர்** mutakappir, இ. பெ. < mutakabbir متكبر >
பெருமையாளன்.
அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். யாறகுமான்.
இராஜநாயகம : 36 : 37.

**முதில்லு** mutillu, இ. பெ. < muzil مظل >
தாழ்த்துகிறவன்.
அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். ருபிகு.
இராஜநாயகம் : 36 : 38.

**முதுறக்கத்** muturakkat, இ. பெ.
இல்யாசு நபியின் புதல்வர்.

துறவலர்க் கரசா யிருந்த இல்யாசு
புத்திரர் பவுத்தெலா நிறைந்த
மறுமனர் குலக்கோ ளரியெனப் பிறந்த
மாமணி முதுறக்கத் தெனுமால்
சீருபபுராணம் : 4 : 59.

**முந்தஹா** muntahā, பெ. பார். சிதுறத்துல் முந்தகா.
சுந்தரம் சேர் விதி மொழியாள்
சொற்கு முந்த ஹாவை யெட்டி
ஞானக்குறம் : வாசல்வளங்கூறுதல் :

**முந்திறு[1]** muntiru, இ. பெ. பசுறு நாட்டு மன்னர்.
முடிமணி அரசர் ஏத்தும் முந்திறு என்பவர்க்கு
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 9 : 2 (205).

**முந்திறு[2]** muntiru, இ. பெ. ஒரு வர்த்தகர்.
அவுதற் கய்சுஎன்று அறையும் அக்கூட்டத்தில்
எவரும் இன்புறு முந்திறுஎன் போர்
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம : 19 : 1 (594).

**முந்திர்**[3] **muntir,** இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவர்.

வானுந் தியநபி நாயகர் மகிழ்மேன்
மையின் *முந்திர்*
புதுகுஷ்ஷாம் : 44 : 58.

**முபஸ்ஸல்** **mupassal,** பெ. < mufassal مفصل > இறுதி.

*வீறின் முபஸ்ஸ லாக*
ஹாகூத்தின் உலகந் தன்னில்
கௌதுநாயகர் காரணப்புராணப் புராணம்: 8 : 17.

**முபாறக்காத்** muparakkāṯ, பெ. < mubarakāt مباركات >
பொலிய.

முத்தி சேரியல் *முபாறக் காத்தின்*
புத்திகொடும் பொருள் பொலிவுகள் பலவும்
மிகுருசுமாலை : 593.

**முபுத்தி** muputti, பெ. < muftī مفتي > பத்துவா என்னும் அதிகார பூர்வமான கட்டளை வழங்கும் அதிகாரம் பெற்றவர்.

இன்னன பயனி னுட்ப மியற்றிய *முபுத்தி* தம்மொடு
என்னையு மொருநற் ருனத்த திருக்கையிற் சந்திப் பெய்து
சாதுலிநாயகம்: 12 : 13.

**முமீத்து** mumittu, இ. பெ. < mumit مميت >
மரணத்தைப் படைத்தவன்.
அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். மசீது.
இராஜநாயகம் : 36 : 39.

**முயீத்** muyit, இ பெ. < mu'id. معيد >
படைப்புகள் அழிந்தபின்னர் அவற்றை மீளச்செய்பவன்.
அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். மசீது.
இராஜநாயகம் : 36 : 39.

**முரீது** muritu, < murid مريد > செய்கு என்னும் தலைவரைப் பின்பற்றும் ஒருவன். அத்தகையவனுக்குக் கூறும் உபதேசம்.

முத்தியுமுருக் கொண்டார்க்கு
*முரீது* பதேசம் செய்தார்
வண்ணக்களஞ்சியப் புலவர் : குதபு நாயகம் : 12 : 20.

**முல்லா** mullā, பெ. < mulla ملا > அறிஞன்.

முகையான பகையாகி எதிர்வாய் உடல்சிரசு
*முல்லா* வென்றே குமனமே
பீர்முகம்மது சாகிபு: ஞானமுச்சுடர்ப்பதிகங்கள்: மனபபதிகம் : 3.

**முல்ஹிமா** mulhimā, பெ. < mulhima ملهمة >

நன்மை தீமை இரண்டும் உள்ள மனம்.

தவுசுடன் *முல்ஹிம்* *மா*வைத் தரிபட

பீர்முகம்மது சாகிபு : ஞானமுச்சுடர்ப்பதிகங்கள் : ஓர்மைப்பதிகம் : 8.

**முலறு**[1] mularu, இ. பெ. ஒரு நபி. நிசாறென்பவரின் புதல்வர்.

வருமுகின் *முலறு* நபியிடத் துறைந்து
மகிதலம் புகழ்ந்திட விருந்த

சீருப்புராணம் : 4 : 58.

**முலறு**[2] mularu, பெ. ஒரு கோத்திரம்.

உன்னில் தாரையில் ஒன்னலராம் *முலறு*
என்னும் கூட்டம்.

பனியகுமது மரைக்காயர் : சீருபபுராணம் : 19 : 36 (629).

**முலப்பறு** mulapparu, இ. பெ. குலாமின் (ஊழியனின்) பெயர்.

பாவள ரவர்கு லாமு லப்பறும் பரிவின் வீட்டின்

நவமணிமாலை (முகியித்தீன புராணம) : 20 : 33.

**முவஃகிர்** muvahkir, இ. பெ. < muahhir. مؤخر >

பிற்படுத்துபவன்.

அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். மசீது.

இராஜநாயகம் : 36 : 39.

**முறத்** murat, இ. பெ. நபிகள் நாயகம் (சல்) அவர்களின் மூதாதையர் கருபு என்பவர் புதல்வர்.

சூன்முதிர் மழைக்கை கருபுகண் மணியாய்த்
தோன்றிய *முறத்*திடத் துறைந்த
சேனமுங் கொடியுந் தொடர் கதிர் வடிவேற்
செம்மலென் றுயர்ச்சி பெற்றிருந்தார்

சீருப்புராணம் : 4 : 64.

**முருக்கபா** murākkapā, < murāqabāt مراقبة >

ஆழ்ந்த சிந்தனை; முஸ்லிம் மெய்ஞ்ஞானிகள் வழக்கு; தியானம்.

முன்னிய *முருக்கபா*வும்

வண்ணக்களஞ்சியப்புலவா : குத்புநாயகம் : 12 : 21.

**முருத்** murāt, பெ. < murād مراد > நாடப்படும் பொருள்.

இது இயற்பெயராக அமையும் சந்தர்ப்பங்களும் உண்டு.

எவ்வகைப் பொருளேயீவ தெனமுருத் என்னலுற்றுஞ்

தீன் விளக்கம் : 21 : 30.

முருதி murāti, இ. பெ. ஒரு கோத்திரத்தின் பெயர்.
தொடர்பு *முருதி* அதிபதியும்
புதுகுஷ்ஷாம் : 32 : 18.

முருது[1] murātu, பெ. ஒரு கூட்டத்தார்
பொருத்து எகூ திணைமு ருது மித்திரர் நிதம்பு கழ்ந்தார்
பனியகுமது மரைக்காயா : *சீருப்புராணம் :* 29 : 5 (1263).

முருது[2] murātu, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.
காவென உதவும் செங்கைக் கஃபுடன் கிலா*முருது*இம் மூவரும்
பனியகுமது மரைக்காயா : *சீருப்புராணம் :* 33 : 99 (1461).

முருது[3] murātu, இ. பெ. ஒரு கூட்டத்தாரின் பெயர்.
*முருதியர்க்* கதிபர் கைசு முன்னவர்
புதுகுஷஷாம் : 38 : 112.

முருது[4] murātu, பெ. நினைவுபடுத்து.
முதல்வா வென்றனிய்யத்தை *முருது*செய்
ஞானப்புகழ்ச்சி : 139.

முருருத் murārat, இ. பெ. ஒரு முஸ்லிம் பெரியார். இவர் மிக்கோராயிருந்தும் பெருமானாருடன் போர்க்களம் புகாது பின் தங்கிவிட்டனர் இதனால் இறைவன் கட்டளைக்கும் இறசூலின் கட்டளைக்கும் மாறு செய்துவிட்ட தம் பெரும் பிழையை உணர்ந்து வருந்தியவர்.

மாரு
நற்றவர் *முருருத்* தென்னும் நரபதி தாமும்
புதுகுஷ்ஷாம் : 8 : 8.

முறுசல் murucal, பெ. < mursal مرسل > தூதுவர். நபிமார்களைக் குறிக்க உபயோகிக்கப்படும் சொல். இங்கே தூதராக அனுப்பப்பட்ட இபுருகிம் என்பவரை இச்சொல் குறிக்கிறது.
முப்புவி துதிக்கு நிதி *முறுசலி*பு ருஹீம்
தீன விளக்கம் : 21 : 10.

முறுசல் நபி murucal napi, தொ. பார். முறுசலீன்.
*முறுசல் நபி* மார்களார்வமோடு
பரவரிய ஞான பாதை தேடும்
காசிம திருப்புகழ் : 141.

முறுசலீன் murucalin, பெ. < mursalin مرسلين >
தூதர்கள்.
முதறிவுடைய ரான *முறுசலீன்* களையெந் நாளும்
போதர வுடனே போற்றிப் புந்தியின் மகிழ்ச்சி செய்வாம்
சீருப்புராணம் : 1 : 7.

**முறுத்தலா** muṟuttalā, பெ. < murtadā مرتضى >

ஏற்றுக்கொள்ளக்கூடியவர். அலி (றலி) அவர்களுக்குரிய ஒரு சிறப்புப் பெயர்.

கன்னல் மொழிநந் நபிநா லாவது கலிபா
முன்னிலே அமீ றல்மு மினீன் *முறுத்த* லாவா
மன்னலி யிபுனு அபீத் தாலிபெனும் வள்ளல்

நவமணிமாலே (முகியித்தீன் புராணம்): 11 : 63.

**முன்கர் நக்கீர்** munkar nakīr, < munkar nakīr منكر نكير >

ஒருவன் மரணமடைந்து நல்லடக்கம் செய்யப்பட்ட பின்னர் அவனிடம் நன்மைதீமை பற்றிக் கேட்பதற்குப் புதைகுழிக்கு வரும் இரண்டு வானவர்கள்.

இலக்கிய *முன்கர் நக்கீர்*
கேள்வியும் எளிதாம் தானே

வண்ணக்களஞ்சியப்புலவா: குதபுநாயகம்: 12 : 25.

**முன்கறும் வநக்கீரும்** munkaṟum va nakkirum, பார். முன்கர் நக்கீர். முன்கர் வநக்கீர் என்னும் இரண்டு மலக்குகள் (வானவர்).

நைதலின்றவ ரேகமுன் *கறும்வ நக்கீறும்*
மெய்திக் கேள்விகள் ஒன்ரெுன் ருயெழும் பச்செய் தெறுழின்

நவமணிமாலே (முகியிததீன் புராணம்): 17 : 16.

**முன்தகிம்** muṉtakim, இ. பெ. < muntāqim منتقم >

பழி தீர்த்துக்கொள்பவன்.
அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். ஸாகிர்.

இராஜநாயகம: 36 : 40.

**முனபிக்** muṉāpik, பெ. < munafīq منافق > நயவஞ்சகர்கள்.

மிக்கமுன *பிக்குகளு* மேயிவர் தமக்குத் தக்க துணே

சீருப்புராணம்: 75 : 12.

**முனஜாத்** muṉājāt, பெ. < munajāt مناجات >

குறை இரங்கல். இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் இப்பெயரால் ஒரு இலக்கிய வடிவம் உள்ளது.

இரந்த *முனஜாத்* தின்கண்ணிப்படி அப்துல் காதிர்

நவமணிமாலே (முகியிததீன புராணம்): 4 : 172.

**முஸ்தகபு** mustakapu, பெ. < mustahabb مستحب >

விருப்பத்துக்குரியது.

நவமா மிசுலா மினேநண் ணிமனச்
சுவையா மதிலுற் றதொழும் பறுலும்
தவமான சுன்னத் தொடு*முஸ் தகபும்*
இவையா வையுமறிந் தனனின் புடனே

பத்றுத்தீன புலவர்: முகியித்தீன் புராணம்: 52 : 30.

**முஸ்த்தலிபா** musttalipā, இட. பெ. ஹஜ் பிரயாணிகள் அறபா வில் தங்கிவிட்டு முஸ்த்தலிபா என்னும் இடத்தில் மஃறிப், இசா இரண்டையும் ஒன்ருகத் தொழுது பின்னர், மினுவில் எறிவதற்கான கற்களைப் பொறுக்குவர்.

போதவுள் மகிழ்ந்து *முஸ்த்தலி* பாவில்
பொருப்பை விட்டு இழிந்து வந்தனரால்
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 38 : 36 (1623).

**முஸ்தபா** mustapā, இ. பெ.
பெயர். நபிகள் நாயகத்திற்குரிய ஒரு பெயர்.

மூங்கை யுடனே வேகம் *முஸ்த* பாநன் னபியே
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 39 : 133 (1770).

**முஸ்லீம்** muslīm, பெ. < muslim مسلم >

இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றும் ஒருவர் இவ்வாறு அழைக்கப் படுவார்.

நிறைதரு கபசி நாட்டில் நிலைபெறும் *முசலீம்* ஆன
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 4 : 1 (110).

**முஹ்யீ** muhyi, இ. பெ. <muhyi محيي >

உயிரைப் படைத்தவன்.
அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். மசீது.
இராஜநாயகம் : 36 : 39.

**முஹறம்** muharam, பெ. < muharram محرم >

முதலாவது இஸ்லாமிய மாதம்.

பரிவுறு நபியென்னும் பட்ட மாகிய
வருடமே மினிற்றின *முஹற* மாத்தையிற்
சீருப்புராணம் : 38 : 1.

**முஹைமின்** muhaimin, இ. பெ. < muhaimin مهيمن >

எச்சரிக்கையுடன் அனைத்தையும் பாதுகாத்துக்கொண்டிருப்பவன்.
அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். யாறகுமான்.
இராஜநாயகம் : 36 : 37.

**முஸம்மில்** musammil, பெ. < muzzammil مزمل >

அல்குர்ஆனில் உள்ள 73-வது சூருவின் பெயர். போர்வையை போர்த்திக்கொண்டிருப்பவர் என்பது இதன் பொருள்.

நிலஞ் சூழ் பரவைப் புறப்புவியு
மிறைஞ்ச நெடியோன் திருவருளாற்
சொலும் சூறத்தில் *முஸம்மில்* எனுஞ்
சுருதி வசன மிறங்கினவே
சீருப்புராணம் : 26 : 36.

**முஸல்லா** musallā, பெ. < musallā مصلى >
தொழுகை நடத்தும் இடம். தொழுகை விரிப்பையும் இது குறிக்கின்றது.

முறை யொ டுந்தவம் புரிந்திடு மொரு முசல்லாவும்
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 11 : 82.

**முஹப்பத்** muhappat, பெ. < muhabbat محبة > அன்பு.

என்னகத்தி லுறுநாட்ட மிறையவன்றன்
முஹப்பத்தெனு மின்ப வாரி
தன்னகத்தின் முங்கிடவே
பத்றுதீன புலவா : முகியித்தீன புராணம் : 44 : 89.

**முஹாஜிரீன்** mukājirin, பெ. பார். முகாசிரின்.
இடாறுத் தடைந்த முஹாஜி ரீன்களும்
சீருப்புராணம : 52 : 22.

**முஷாகிதா** musākitā, பெ. < musāhidat مشاهدة > காட்சி.

கோல முடனே இரண்டெ முத்தில்
குறித்த பெரியோன் இடநாடி
யோல முடனே முஷாகிதத்தில்
இருந்தார் ஒலிகள் சிகாமணியே
பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன் புராணம் : 46 : 26.

**மூசா¹** mūcā, இ. பெ. < mūsū موسى >
இவர் ஒரு நபியாகும். இவருக்கு பத்து சுஃபுகளும், தவ்ருத் வேதமும் அல்லாஹ்வால் அருளப்பட்டன

முரணி டும்பிரு வூன்முன மறைநபி மூசா
கரத லத்துறை கோறனைப் பெருமலை கடுப்ப
வரவ மாக்கினர்
சீருப்புராணம : 32 : 100.

**மூசா²** mūcā, இ. பெ.
முகியித்தீன் ஆண்டவரின் மூதாதையருள் ஒருவர்.
திவளொளி வதனம் பூத்த செவ்வியர் மூசா வென்போர்
பத்றுத்தீன புலவர் : முகியிததீன் புராணம் : 4 : 10.

**மூசா³** mūcā, இ. பெ. முஸ்லிம் தலைவர்களுள் ஒருவர்.
இன்சொல்
தருமவான் மூசா என்னும் தலைவர்.
பனியகுமது மரைக்காயா : சீருப்புராணம் : 10 : 2 (215).

**மூசா கலீமுல்லா** mūcā kalīmullā, தொ. < mūsā kalīmullah' موسى كليم الله > இறைவனோடு வசனித்த மூசா. மூசா நபி (அலை) அவர்களுக்குரிய சிறப்புப் பெயர் கலீமுல்லா என்பதாகும்.

...இம்ருன் செல்வர் *மூசாக் கலீ முல்லா*

நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 6 : 66.

**மூத்தா** mūttā, இட. பெ. சாம் (சிறியா) நாட்டில் ஒரு பட்டணம். முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் அல்லாதாருக்கும் இடையே ஒரு பெரும் போர் இங்கு நிகழ்ந்தது.

சோமன் நாள்தொறும் தவழ்சுதை மாடங்கள் செறிந்த
சாமன னும்திரு நாட்டின் *மூத்தா* வெனும் தலத்தில்

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 21 : 1 (684).

**மூமறுயாயீல்** mūmaruyāyil, இ. பெ.
ஒரு மலக்கின் (வானவரின்) பெயர்.

*மூமறுயாயீல்* மலக்கு முன்னில் வந்தார்

மிகுருசுமாலை : 214.

**மூமின்** mūmin, இ பெ. < mu'min مومن >
நம்பிக்கைகொள்ளப்படுபவன்.
அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். யாறகுமான்.

இராஜநாயகம் : 36 : 37.

**மூமின்** mūmin, பெ. < mu'min مومن >
நம்பிக்கை கொண்டோர்.

ஆளுநாயகற் கொழுகு *மூமின்*கள் பால்

புதுகுஷ்ஷாம் : 48 : 34.

**மைசரு** maicarā, இ. பெ. கதீஜா அம்மையாரின் ஏவலாளர். கதீஜா அம்மையாரின் வியாபாரப் பிரதிநிதியாக சிறியா சென்ற பொழுது நபிகள் நாயகம் அவர்களுடன் சென்றவர்.

இவையெலா நபிக் களித்த பினேவலி
னியலுறு *மைசருவை*
நவைய றத்தம தருகினி விருத்தி வெண்
ணகை மலர் முக நோக்கி

சீருப்புராணம் : 10 : 67.

**மைசரு** maicarā, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.

*சகீது மன் மைசரு*

புதுகுஷ்ஷாம் : 33 : 15.

**மைமூன்** maimūn, இ. பெ. நபிகள் நாயகம் முகம்மது (சல்) அவர்களின் மனைவியருள் ஒருவர்.

மருந்ததில் இனிய தீஞ்சொல் மழலைவாய் *மைமூன்* என்ப

பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 18 : 11 (522).

**மையத்து** maiyattu, பெ. < maiyit ميت > சடலம்.

ஆதரத் துடனே *மையத்து*
அதைத்தொழு விக்க என்றூர்
பனியகுமது மரைக்காயர் : சீருப்புராணம் : 33 : 73 (1435).

**மோதீன்** mōtīṉ, பெ. பார். முஅத்தின்.

பள்ளியின் *மோதீன்* வந்தே யிருந்திவை பகர லுற்றுன்
இராஜநாயகம் : 9 : 39.

**மௌசலி** moucali, பெ. ஒரு கோத்திரத்தின் பெயர்.

*மௌசலிக்* கிளைவரும் வள்ள லாகிய
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 18 : 4.

**மௌமூம்** moumūm, பெ. பார். மகுமூன்.

மேயவ ரோடு *மௌமூ* மொலிய வொலியுல் லாவை
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 18 : 21.

**மௌமூம்** moumūm, பெ. பார். மகுமூன்.
தொழுகையைப் பின்பற்றுபவர்.

ஒன்னலர்க் கெதிரோர் கூட்டமுற மற்ருேர் கூட்ட *மௌமூம்*
சீருப்புராணம் : 78 : 23.

**யஃகூபு** ya:kupu, இ. பெ. நபிமாருள் ஒருவர்.

மைப் பெருங்கை *யஃகூபு* நன்னபி
இராஜநாயகம் : 4 : 7.

**யா** yā, < yā يا > விளிச்சொல்.

*யா*நசுறல்லா கின்சில் எனக் கடலெதிர் குற்ருர்
புதுகுஷஷாம் : 40 : 231.

**யாசீன்** yacīṉ, பெ. < yāsīn يس > அறபு அரிச்சுவடியில் இரண்டு எழுத்துக்களைக் கொண்டது. அல்குர் ஆனின் 36-வது அத்தியாயம் இவ்விரண்டு எழுத்துக்களாலும் ஆரம்பிக்கப்படுகிறது. முகம்மது நபி (சல்) அவர்களின் சிறப்புப் பெயராகவும் கொள்ளப் படுகிறது.

அறுகிடைந்தெழு *யாசீனே*
காசிம் திருப்புகழ் : 24.

**யாபிது** yāpitu, இ. பெ.
நூகு நபியின் மூன்று புதல்வர்களுள் ஒருவர்.

வருவதிற் கிழக்கிற் றுறுக்கிக ளத்தன் வலிதரும்
*இயாபிதுக்* களித்தார்
திருமணிமாலை : 4 : 3.

**யா அறுகமற் றுகிமீன்** yā aṟuka maṟṟākimīṉ, தொ.
< ya arha marrāhimin يا ارحم الراحمين >
அதிகமான கிருபை செய்யும் ஏற்றமுள்ளவனே.
விழைவொடு அவர் இவ்வாறு மேன்மையர்க் கியற்றுந்தோறு
மொழிகுவர் யாகியாதல் முஸ்த்தகீம் தீனேயென்று
மழகுறு மதற்பின்னே *யா அறுகமற்றுகி மீனெ*ன்
இரவுசுல்கூல் படைப்போர் : 9 : 50.

**யாகியாதல் முஸ்த்தகீம்** yakiyatal musttakīm, தொ.
உதவிகள் கேட்போருக்கு எல்லாம் உதவி செய்பவனே
விழைவொடு அவர் இவ்வாறு மேன்மையர்க் கியற்றுந் தோறு
மொழிகுவர் *யாகியாதல் முஸ்த்தகீம்* தீனே யென்று
இரவுசுல்கூல் படைப்போர் : 9 : 50.

**யா முகம்மத்** yā mukammat, பெ.
முகம்மதே என அழைத்தல்.
*யாமுகம்ம* தென்றெலித்தி யாமன்சூறென் றுர்த்தரோ
புதுகுஷ்ஷாம் : 40 : 141.

**யா முகியித்தீன்** yā mukiyittīn, தொ.
முகியித்தீனே என அழைத்தல்.
பாவி யேனெனச் சொல்லின ரும்பர்நின் புடைவர்
தேவி ஞவுபோ தென்னையா *முகியித்தீன்* னென்றே
கூவி முன்மவுத் துற்றமைந்தெனின்...
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 17 : 33.

**யாயுவல் லதீனவா மனூ** yāyuval latīṉa vāmaṉū, தொ.
< ya ayyuhal lazīna āmanū يا ايها الذين آمنو >
விசுவாசிகளே.
நாயகர் பொற்பத நாடிச் செல்கையில்
தாயகம் எனச்சிறு தந்தை யானவர்
தூயவன் அருளிய சுருதி ஆயத்து
*யாயுவல் லதீனவா மனூ*வென் றுனதே
பத்றுத்தீன புலவா : முகியித்தீன் புராணம் : 62 : 7.

**யார்** yār, பெ. < yār يار > பாரசீகம்.
நபிகள் நாயகம் முகம்மது (சல்) அவர்களைத் தொடர்ந்து இஸ்லாமிய ஆட்சியை வழிநடாத்திய நான்கு கலிபாக்களைக் குறித்து நிற்கிறது.
இறையவன் தூதருமியார்கள் நால்வரும்
மறைவழி பெருக்கிய மன்னரி யாவரும்
சீறுப்புராணம் : 61 : 1.

**யாறகுமான்** yāṟakumāṉ, இ. பெ. < yārahmān يارحمن >
அருளாளனே. அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று.

நவந்தரு கருணை *யாறகு மானே*
யாறகீ மலிக்குல் குத்தூசே
கவின்கொளு மூமின் முஹைமினுஸ் ஸலாமே
காலிக்குல் ஜப்பார் முதக்கப்பிர்
உவந்தருள் பாரி அசீசுமு சவ்விர்
கப்பார் கஹ்ஹார் வஹ்ஹாப்
மவுன றஸ்ஸாக்கு பத்தாகு அலீமு
பாசிது காபிலு அதலே
இராஜநாயகம் : 36 : 37.

**யாறகீம்** yāṟakim, இ. பெ. < yārahim يارحيم >
அன்புடையோனே.
அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். யாறகுமான்.
இராஜநாயகம் : 36 : 37.

**யா றகீம்** yā ṟakim, < yā rahim يا رحيم >
அன்புடையோனே.

தீதகல் பெம்மான் செய்யி தபுல்கசன் பொருட்டாச் செய்து
மாதரத் தளித்த பாவிக் கருள்செய் வாய்*யா றகீமே*
சாதுலிநாயகம் : : 20 : 14.

**யானுசு** yānucu, இ. பெ.
நூகு நபி பரம்பரையில் உள்ள ஒருவரின் பெயர்.

மாதவர் கமல வதன*யா னுசுதம்*
வயினுறைந் திருந்தணி சிறந்து
சீறப்புராணம் : 4 : 38.

**யாஸீன்** yācin, பெ. < yāsin يس >
அல்குர் ஆனின் 36-வது அத்தியாயம் இவ்வாறு ஆரம்பிக்கிறது.

லாமுமொரு தாஹா விதிவரிய தில் குன் *யாஸீன்* என
ஞானக்குறம் : மலைவளங்கூறுதல்.

**யாஹப்பாறற்றஹீமே** yahappāraṟṟahimē,
பார். ஹப்பார், யாறஹீம்.

ஏகனே முதலே நயறகுமானே
*யாஹப்பா றற்றஹீமே* என்று
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 15 : 46.

**யாஹூ** yāhu, பெ. < yāhū ياهو >
அல்லாஹ்வை அழைக்கும் ஒரு பெயர்.

இசுமாவியானதும் *யாஹூவே*
ஞானக்குறம் : 1.

**யாஹூஹா** yāhūhā, தொ. < yahūhā يا هو ها >
எனது அவன் என பொருள்பட்டு அல்லாஹ்வைக் குறிக்கிறது.
வாசி *யாஹூஹா*வென் ருேதி மலரும் வாயுவானதை
ஞானமணிமாலை : 124.

**யூனூசு** yūṉūcu, இ. பெ. ஒரு நபி.
விரிந்த முன் மறைக டேர்ந்து மெய்ந்நெறி முறைமை நாளும்
பிரிந்திடா துறை*யூனூசு* நபியெனும் பெயரின் வள்ள
லிருந்தவூ ரவனே வென்றார்
சீறாப்புராணம் : 42 : 7.

**யூஸ்பு** yūspu, பெ. < yūsuf يوسف > ஒரு நபி.
ஏது மனுகா*யூஸ்பு* நபிக்களித்த
ஞானப்புகழ்ச்சி : 103.

**யெகுலா** yekulā, இ. பெ. ஒரு ஆணின் பெயர்.
செல்வராம் *யெகுலா* வென்போர்
புதுகுஷ்ஷாம் : 57 : 67.

**யெகுகூபுநபி** yekukūpunabi, இ. பெ.
ஒரு நபி. பார். யஃகூப்.
நன்னபி இபுருகீமு *நபியெகு கூப்பு*ந் தந்து
மன்னணி மக்கட் கோதி வகுத்தனர் ஒசியத் தன்றே
புதுகுஷ்ஷாம் : 48 : 42.

**யெளமல் கியாமத்** yaumal kiyāmat, பெ. < yaumul qiyāmā يوم القيامة > மறுமை நாள்.
எங்கு முழங்கு மேக மதா *யெளமல் கியாமத்* திறகூலே
பீர்முக்ம்மது சாகிபுப் புலவர் : ஞானக்குறம்: கஃபத்துல்லாப்பதிகம் : 57.

**ரிசுக்கு** ricukku, பெ. பார். றிஸ்க். உணவு.
ஆரா கினுமே ஹக்கைமறந் தவணிக் குடிப்புகளைக் குடித்துத்
தாரா நின்ற *ரிசுக்கு*களைத் தாந்தின்றே கொண்டவன்
நவமணிமாலை : (முகியிததீன் புராணம்): 8 : 74.

**லஃகாக்** lahkāk, இ. பெ. ஓர் ஆணின் பெயர்.
இவ்வாறு இயலு நாளினினம் மிறைவர் *லஃகாக்* கருள் மகனார்
புதுகுஷ்ஷாம : 51 : 16.

**லகமி** lakami, இ. பெ. ஒரு கோத்திரத்தின் பெயர்.
மாறுடை *லகமி*க் கிளையினன் வந்து வகுத்தனன்
புதுகுஷ்ஷாம் : 42 : 24.

**லகுனத்** lakuṉat, பெ. < la'nat لعنة > சாபம்.
பறைதரு கொடிய *லகுனத்*தாம்
இராஜநாயகம் : 17 : 106.

**லத்திபு** lattipu, இ. பெ. < latif لطيف >
உள்ளன்புடையவன்.
அல்லாஹ்வின் அழகுத் திருநாமங்களுள் ஒன்று. பார். ருபிகு.
இராஜநாயகம் : 36 : 38.

**லதாயிபுல் மினன்** lataāyipul minan, பெ.
ஒரு நூலின் பெயர்.
...........மெய்ப்
பலனின் *லதாயிபுல் மினன்*...
நவமணிமாலை : (முகியித்தீன் புராணம்): 1 : 35.

**லமுறத்** lamurat, இ. பெ. ஒரு ஆணின் பெயர்.
காய் அலழ் என்னும் வேகக் கருத்தினர் *லமுறத்* ஈன்ற
புதுகுஷ்ஷாம் : 23 : 178.

**லமுறத்து** lamurattu, இ. பெ.
செவிலித்தாய் அலிமாவின் புதல்வர்களுள் ஒருவர்.
வற்றித் தூங்கிய *லமுறத்து* வெனுந்த மதலை
சீறாப்புராணம : 6 : 51.

**லவ்கு** lavku, பெ. < lauh لوح >
மேலே எழுதுவதற்காக பயன்படுத்தப்படும் பலகை. இது ஆத்மீகத் துறையில் உபயோகிக்கப்படுகிறது.
அறுசொடு குறுசும் போற்றும் அழகிய கலமும் *லவுகும்*
புதுகுஷ்ஷாம் : 11 : 41.

**லவாகிஹ்** lavākih, பெ. ஒரு நூலின் பெயர்.
அந்த மேவிய *லவாக்கிஹாம்* அருங் கிதா பறைந்த
சாதுலிநாயகம் : 18 : 6.

**லாகவுல** lākavula, பெ. பார். லாகௌலவ லாகுவ்வத்த.
நன்னலம் புரிய
இறையினைக் கொண்டல்லால் இயையா
என்ன *லாகவுல* வோதினர் செவியின்
இயைந்தன வள்ளலுக் கன்றே
புதுகுஷ்ஷாம் : 35 : 69.

**லாகிறு** lākiru, பெ. < lahir ظاهر > வெளி.
வெளியெனும் *லாகிறி*ன் படிக்கம ரர்மே மென
நவமணிமாலை : (முகியித்தீன புராணம்): 8 : 36.

**லாம்**[1] lām, பெ. < lām ل > அறபு அரிச்சுவடியில் ஓர் எழுத்து.
*லாமுடனே*
ஞானப்பூட்டு : 12.

**லாம்²** lām, பெ. ஒரு நகரின் பெயர்.

*லாமெனும் பதியெ மத்தில் மதான்மிசை யணி கொண் டோங்கும்*
இராஜநாயகம் : 35 : 2.

**லாமலிப்** lāmalip, பெ. < lāmalif لا >
அறபு அரிச்சுவடியில் இடம்பெற்றுள்ள ஓர் எழுத்து.

*விந்தையாகிய லாமலிப் ஆனதை விரும்பி*
ஞானப்பூட்டு : 1.

**லாயகுசூனல் லாகதர் பத அயின்** lāyaku cūṉal lākatar pata ayin, அல்லாஹுத் தஆலா ஒருபட்சமாக நடப்பதில்லை.

*இப்படி அறிஞர் லாயகு சூனல் லாகதர் பதஅயினெனவே*
நவமணிமாலை : (முகியிததீன் புராணம) : 18 : 79.

**லாயிலாஹ யில்லல்லாஹு முஹம்மதுற்ற சூலுல்லா** lāyilāha yillallāhu muhammaaturra cūlullā, தொ. < lāilāha illāllahu muhammadurrasūlullāh لا اله الا الله محمد الرسول الله >
அல்லாஹ் அன்றி வேறு நாயன் இல்லை. முஹம்மது அல்லாஹ் வின் திருத்தூதர்.

*லாயிலாஹ யில்லல்லாஹு முஹம்மதுற்ற சூலுல்லா வென்று*
*ஓய்விலாமல் ஓதடா உவந்து சொர்க்கம் புகுதலாம்*
ஞானமணிமாலை : 210.

**லாயிலாஹா** lāyilāhā, தொ. < lailāha لا اله >
(அல்லாஹ்வன்றி) வேறு நாயன் இல்லை.

கலிமாத் தன்னில்
*லாயிலா ஹாவை நீக்கி நாலிலொன்றறிந்து கொள்ளே*
ஞானமணிமாலை : 36.

**லாயெத்த ஹற்றக்க தற்றத்துன் னில்லா பியிதினில்லாஹி** layetta harrakka tarrattun nilla piyiti nillahi, வா. < lāyata harraka darratun illā biyidi nillahi لا يتحرك ذرة الا باذن الله >
அணுவும் அசைகிறதேயில்லை இறைவனுடைய அனுமதி கொண் டன்றி.

அதன்த லீல்நபி யிதற்குத்
*துன்றுமி லாயெத்த ஹற்றக்க தற்றத்துன் னில்லா பியிதினில்லாஹி*
என்றதா மோரார்ப் பதுமசை கிறதே யிலையிறை யுடையவுத்
தரங்கொண்
டன்றியே யொழிய என்பதாம்...
நவமணிமாலை (முகியித்தீன புராணம்) : 8 : 43.

**லாஹ்** lāh, பெ. < lāh لہ >
லாம் ஹா என்னும் இரண்டு அறபு எழுத்துக்களாலானது. அல்லாஹ்வைக் குறிக்கிறது.

*லாஹிரண்டெழுத்திலும்*

ஞானமணிமாலை : 194.

**லாஹவுல வலாகுவ்வத இல்லா பில்லாகில் அலியுல் அலீம்** lahavula valākuvvata illā pillakil aliyul alīm, < لا حول ولا قوة إلا بالله العلى العظيم >

பார். லாகவுலா என ஆரம்பிக்கும் சொற்றொடர்.

*என்றுலா ஹவுலா வலாகுவ் வத்தயில் லாபில் லாகில்*
*வான்றரு மலியுல் அலீமு வசமுட ஞேதிக் கொண்டு*

பத்றுத்தீன் புலவர் : முகியித்தீன புராணம் : 15 : 32.

**லாகவுல வொலா** lākavula volā, தொ.
பார். லாகௌல ஒலாகுவ்வத்த.

*ஓர்ந்து மீட்டும் லாகவுல வொலாமுழு தோதி*

இராஜநாயகம் : 12 : 26.

**லாகிர்** lākir, < zāhir ظاهر > வெளித் தோற்றம்.

*சித்தின் வித்தை கற்றுநயஞ் சேரும் லாகிர்*
*பாத்திரையும்*

சாதுலிநாயகம் : 20 : 4.

**லாகூத்து** lākūttu. பெ. < lāhūt لاهوت > இறைநிலை.

*பேணும் தவமாம் லாகூத்தில்*

சாதுலிநாயகம் : 20 : 5.

**லாகௌல ஒலாக்குவ்வத்த இல்லாபில் லாகில்லலீ யுல்லலீம்** lakevla olākkuvvatta illāpil lākillalī yullalīm, வா.
முஸ்லிம்கள் உச்சரிக்க வேண்டிய கலிமா தம்ஜீத் புகழ்ச்சி இதுவாகும். இவ்வாக்கியத்தின் பொருள் 'மிக உயர்ந்தவனும் மிகப் பெரியவனும் ஆகிய அல்லாவன்றி ஆற்றலோ சக்தியோ இல்லை' என்பதாகும்.

*அல்லாவை நாளும் புகழ்நாவினலா கௌல ஒலாக்குவ்வத்த*
*இல்லாபில் லாகில்லலீ யுல்லலீமென் றிறசூல் சிந்தோதினர்*

இரவுசுல்கூல் படைபபோர் : 6 : 3.

**லா கௌல வொலாக் குவ்வத்த** lā kevle velāk kuvvatta, தொ.
பார். லாகவுல. பார். லாகௌல ஒலாகுவ்வத்த இல்லாபில் லாகில்லலீ யுல்லலீம்.

*கனதிலா கௌல வொலாக் குவ்வத்த*
*வெனு மொழியானதை யிரைப்பி ஞேதியே*

இரவுசுலகூல படைப்போா : 37 : 49.

**லாமக்கு** lāmakku, இ. பெ. இதுரீசு நபியினுடைய பேரனும் மத்தூ சல்குதம் என்பவரின் மகனுமாவார்.

*மத்தூ சல்குதம் மைந்தர்*
*மடந்தையர் மடலெடுத் தேந்தச்*
*சித்திரக் கவின் பெற்றிருந் தலா மக்கு*
*வயின்சிறந் திலங்குமவ் வொளியே*
சீருப்புராணம் : 4 : 43.

**லாயிலாக இல்லா அந்த** lāyilāka illā anta, தொ.
< lāilaha illā anta لا إله إلا أنت >
நீ அல்லாமல் வேறு பொருளில்லை.

*நாம் கருணை எய்தும் லாயிலாக இல்லா அந்த*
புதுகுஷ்ஷாம : 17 : 95.

*நின்னை யலது யில்லை பொருள் நேர்வன எனத் தீம்*
*கன்னல் மொழி*
புதுகுஷ்ஷாம் : 17 : 97.

**லாயிலாக யில்லல்லாகு** lāyilāka yillallāku, தொ.
< lāilāha illallāhu لا إله إلا الله >
வணக்கத்திற்குரியவன் அல்லாவின்றி வேறு யாருமில்லை.

*தந்தக்கோல் வாங்கி மூரல் தன்னிடம் தேய்ப்பர் பக்கத்*
*தந்தக்கால் கிண்ணத் தூய்நீர் அருங்கரம் தோய்த்துச் சோதி*
*சந்தக்கால் அமுதவட்ட முகத்தினில் தடவி வள்ளல்*
*பிந்தக் கால் லாயிலாக யில்லல்லாவென்னும் பேசி*
புதுகுஷ்ஷாம் : 10 : 8.

**லிகா** likā, பெ. < liqā لقاء > தரிசனம்.

*வலியவன் லிகாவைக் கண்டு மகிழ்ந்திடும் திறத்தின் மிக்கார்*
பத்றுத்தீன் புலவா : முகியித்தீன புராணம : 49 : 5.

**லிக்கா** likkā, பெ. < liqā لقاء > சந்திப்பு.

*தங்கிநம் மிறைலிக் காவைத் தரிசனை செய்து தாழா*
நவமணிமாலை (முகியித்தீன் புராணம்) : 27 : 72.

**லிபாஹாக்** lipahāk, பெ. ஒரு திரை.

*............லிபாஹாக்*
*திரை யதனிற் சென்றுர் தெரிந்து*
மிகுறுசுமாலை : 561.

**லிபாவுல் கம்த்** lipāvul kamt, தொ. <liwa'ulhamd لواء الحمد>
ஒரு கொடியின் பெயர்.
கடையுக நாளில் அருளொடுங் கவுலல் கவுதறின்
கரையினி லிலங்குங்
கொடிலிபா வுல்கம் துற்றிடுங் கரரே கோக்கடா
மணிசிர சணியே
இரவுசுல்கூல் படைப்போர : 13 : 7.

**லிமாறு** limāṟu, பெ. ஒரு சிலையின் பெயர்.
உருஅமை *லிமாறு* என்று ஓதும் புத்திலை உவந்து செந்தேன்
பனியகுமது மரைக்காயர் : சீறாப்புராணம். 26 : 1 (1072).

**லிவா** livā, பெ. < liwā لواء > கொடி.
விரைந்த ழைத்தெலை மேவுலிவா வெனு
நுடங்கு பொற்கொடி நீழலின் வாழ்வுற
விசும்பி னிற்கடை நாளினி வாழ்வது கடனுமே
காசிம் திருப்புகழ : 70.

**லிவாவுல் ஹம்த்** livāvul hamtu, பெ. < liwawul hamd. لواء الحمد > இறுதிநாளில் முகம்மது நபி (சல்) அவர்களால் பிடிக்கப்படும் புகழ்ச்சிக்குரிய கொடி எனப்பொருள்படும் கொடி.
*லிவாவுல் ஹம்து* கொடியே
பீர்முகம்மது சாகிபு : ஞானமுச்சுடாப்பதிகங்கள் : காப்புப்பதிகம் : 12.

**லிறாறு** liṟāṟu, இ. பெ. ஒரு முஸ்லிம் தலைவர்.
ஆரும் *லிறாறுக்* கோராறு கொடுத்தார்
புதுகுஷ்ஷாம் : 27 : 100.

**லுகத்** lukat, பெ. < lugāt لغات > அகராதி இயல்.
ஒருபொருட் பலபெய ரொன்று பல்பொரு
டருபொருள் விகற்பமு மரபுஞ் சார்புமாய்
வருபொரு ளிலக்கிய வகையெ லாம்பயின்
றிரு பொருள் லுகத் தென வியம்பு நூல்களும்
சேகுனுப்புலவர் : குத்புநாயகம் : 11 : 13.

**லுகறு** lukaṟu, பெ. < zuhr ظهر > நண்பகல் தொழுகை.
பணிகொண்ட வள்ளியாரும் பண்புற வணக்கம் பூண்டு
